உ

பரமபதி துணை.

தேவரிஷி முனி சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய வாத யோக

ஞானசாஸ்திர திரட்டு

மூன்றும்பாகப் புஸ்தகம்.

M.A.

இஃது

மதுரை வித்வான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனார்


அவர்களாற்மது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமசந்திர விலாச அச்சியந்திரசாலையிற்,

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1929 [ரூபாய் 2



உ

கடவுள் துணை.

மூன்றாவது பாகம்

போக முனி சாஸ்திரத் திரட்டு

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்களுக்கும், புஸ்தக வியாபாரிகளுக்கும், இன்னும் மற்றுமுள்ள மகான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த "போக முனி சாஸ்திரத் திரட்டு" என்னும் புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கிற சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற ஒவ்வொரு மகான்களிடத்திலும் முன் ஏட்டுப் பிரதிகளைச் சகல அதிகாரத்துடன் பெற்று, என் மூதாதைகள் கையாண்டுவந்த ஒலையேட்டுச் சாஸ்திரங்களையுஞ் சேர்த்து, இந்நூலுக்குப் போதுமான திரவியத்தைச் செலவுசெய்து என்னால் (கெவர்ன்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்தர் செய்திருப்பதால் இச்சாஸ்திரங்களைப் பிறர் எவ்விதத்திலும் அச்சிடக்கூடாதென்பதை இதன்மூலமாய்த் தெரிவித்துக்கொண்டேன்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

உ

கடவுள் துணை.

முகவுரை.

உலகின்கண் சர்வேஸ்வரனால் உற்பத்தியாக்கப்பட்டபலவுயி களிலும், சுவேதஜம்-அண்டஜம்-உற்பீசம்-சராயுஜமாகிய நால்வ யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்கு லட்சம் ஜீவரா களிற் சிரேஷ்டமானது இம்மானிடப்பிறவியேயாம்; இதில்ஜெனி கும்சிசுக்கள்-பாலர்-குமாரர்-யௌவனர் விருத்தர்களாகிய ஆண்பெ ணினங்களுக்குரிய சகலசுகதுக்கங்களையும், தர்மார்த்த காமமோக மர்மங்களையும், இகபர சாதனங்கட்குரிய இயல்பினையும், எண்ண லாப் பிறவித் துன்பங்களையும், இஷ்ட காமியார்த்த இன்பரச களையும் எடுத்துக்கூறிய நூல்கள் பலவாயினும், அவற்றினை இனி விளங்கக் கூறுவன: அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவாயுஞ் சின்மய சொரூப நிலையைப்பெற்ற தேவ, ரிஷி, முனி, சித்தர்க திருவாய் மலர்ந்தருளிய யோக ஞான சாஸ்திரங்களேயாம்.

இவ்வித சாஸ்திரங்களை வெளியிடாது நமது முன்னோர்கள் தொன்றுதொட்டு ஓலையேடுகளிலெழுதி, வீடுகளில் காலைமாலை பூஜை யில் வைத்துப் பூசித்து வாசித்து வருவது யாவருக்குந் தெரிந் விஷயமே. அப்படிப்பட்ட அரிய சாஸ்திரங்கள் நமது நண்ப இ. ராம. குருசாமிக்கோனார் மூதாதைகள் கையாண்டுவந்த ஓலை ஏடுப்பிரதிகள் பலவாம். அவற்றுட்சிலவற்றையும், கனம் ந. ராம கணபதியாபிள்ளையவர்களிடத்திலும், என்னிடத்திலும் கைவசமா யிருந்த ஓலைச்சுவடிகளையும் ஒருங்கே திரட்டிப் பார்க்கையில், பதி னெண் சித்தர்கள் பாடல்களிற் சில இருக்கும் சில இல்லாதிருக் கவே அதையுஞ் சேர்த்து அச்சிடக்கருதி "சொல்லும் பொருளுஞ் சுவையுங் கனியும், எள்ளும் ஒளியும் இருப்பது போல, என்பாற் பிரியாதெழில் நட்பதனை, அன்பாற் கொண்ட அருமை நண்பர்" இ. ராம. குருசாமிக்கோனாரிடம் வெளியிட, அவரு மதற்கிணங்கி பல தேயங்களிற்சென்று சில ஏடுகளைச் சேகரித்துக் கொண்டு வந் தனர். அச்சமயம் தெய்வ கடாக்ஷத்தால் திருப்பழனியின்கண் வசிக்கும் ஸ்ரீ கைலாச போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகா கைலாச பரம்பரை 225-வது பட்டம் ஸ்ரீ கைலாச தெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்கள் தமது ஆச்சிரமத்

ற் கையாண்டுவந்த பலசாஸ்திரங்களடங்கிய ஏட்டுச் சுவடிகளை
ரப்பிரசாதத்துடன் கொடுத்து, அச்சிடும்படிக்கு உதவி புரிந்தனர்
ரேள்.

எல்லாச் சுவடிகளையும் காயிதத்தில் எடுத்தெழுதிப் பார்க்கை
ல் அதிற் சில சாஸ்திரங்களில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு
செய்யுட்களில் இரண்டு வரியும் மூன்று வரியுமாக இருந்ததுடன்,
சிலபாக்களில் எதுகை மோனைகளேதுமில்லா திருந்தன. அவை
களைப் பூர்த்தி செய்யவேண்டி, இப்புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கும்
ஒவ்வொரு சாஸ்திரங்களின் முடிவிற் கண்டிருக்கிற நமது ஆத்ம
நண்பர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு பிரதிக்கு நாலு ஐந்தேட்
டுப் பிரதிகளைப் பெற்று அவற்றன் வரைந்துள்ள லிகிதப்பிரகாரம்
அனேக மகான்களின் உதவியைக்கொண்டு என் சிற்றறிவுக் கெட்
டியவாறு சீர்திருத்தஞ் செய்ததுமன்றி, இதற்கு தேவ ரிஷி முனி
சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய "யோகஞான சாஸ்திரத்திரட்டு"
எனத் திருநாமஞ் சூட்டிப் பன்னிரண்டு பாகங்களாக அச்சிட்
டிருக்கின்றனன்.

இச்சாஸ்திரங்களை யெல்லாந் திரட்டி ஒன்றுசேர்த்து அச்
சிடுவதற்காகப் பொருட்செலவும், தேகப்பிரயாசையும் எடுத்துக்
கொண்டு சதா அனுகூலமாயிருந்த மதுரை புதுமண்டபம்
புஸ்தக வியாபாரியும், ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ் சொந்தக்
காரருமாகிய நமது நேயர் இ. ராம. குருசாமிக் கோனாரவர்களது
நன்றியும், தாலபத்திர சாஸ்திரச் சுவடிகளுதவிய ஏனைய நண்பர்க
ளது நன்றியும் யான் என்றும் மறக்கத்தக்கனவன்று.

இவ்விதம் பன்னிரண்டு பாகமாய் அச்சிட்டிருக்கிற இவ்வரிய
பெரிய சாஸ்திரங்கள் ஒரு புஸ்தகத்திலிருப்பது மற்றொரு புஸ்த
கத்திலில்லாதிருப்பதால், பன்னிரண்டு வாலியத்தையும் பார்ப்பது
அவசியம். ஆகையால் ஒவ்வொருவரும் இதனை வாங்கிக் கையாண்டு
வருவீர்களென நம்புகின்றனன்.

இங்ஙனம்,
த. குப்புசாமி நாயுடு,
மதுரை.

உ

கணபதிதுணை.

மூன்றாவது புஸ்தகம்.

தேவ ரிஷி முனி சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

யோகஞான சாஸ்திரத் திரட்டின்

அட்டவணை.

குருவே துணை.

தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

யாக ஞான சாஸ்திரத் திரட்டின்

நான்காம் பாகத்தில் சொல்லியிருக்கிற

முக்கிய விஷயங்கள்.



...யா! இதற்கடுத்த நான்காம்பாகத்தில் மச்சமுனி. வேதமுனி, ...சமுனி, ரூகிமுனி. வசிஷ்டமாமுனி, பாம்பாட்டிச்சித்தர், ...ச்சித்தர், காப்பிரமரிஷி, சுர்மானந்தர், சூரியானந்தர், கண்ணு..., அசுவினிதேவர், பராசர், தேரையர் முதலிய மேலான தேவ...ரால் சொல்லப்பெற்ற அருமையான இருபத்தைந்து சாஸ்...ள் அடங்கியுள்ள விஷயங்களை இதனடியிற் காணலாம்.

அவையாவன:

முதலாவது மச்சமுனிவர் ஆலஞானம் பத்தில், இடகலை பிங்...சுழிமுனைக்குரிய வாசியோகசாதனை கேசரி மார்க்க முதலிய ...ங்களையும்,

2-வது மச்சமுனிவர் சூட்சமஞானம் பத்தில், கற்பமுறையுப் ...ாகி அனுஷ்டிக்க வேண்டிய குளிகைகளும்; ஞானசோதி...யும். சமாதி தசதீட்சை முதலிய விபரங்களையும்,

3-வது மச்சமுனிவர் காரணஞானம் பத்தில், நான்குவேத பிர...முடிவையும், ரவிமதி சுடர் கேசரி தெரிசனமும், அஷ்டாங்க ...சித்தியின் விபரங்களையும்,

4-வது மச்சமுனிவர் தீட்சைஞானம் ஐம்பத்தைந்தில், பஞ்ச...தவனையும், பானுபிறை அக்கினியென்ற நாடியும், பத்துவாயு ...சுகருதற்கரிய நந்திதெரிசன விபரங்களையும்,

5-வது மச்சமுனிவர் ஞானதண்டகம் தொண்ணூற்றேழில் ...டமாசித்தி கருக்குரு கற்பம் வாதம் மை மெழுகு மூலிகை ...ரேசக பூரக கும்பக மூலாட்சர யோக ஞான சாதன விபரங்...யும்,

6-வது மச்சமுனிவர் ஞானதீட்சாவிதி நூறில், கந்தி தெ மும், குண்டலிசத்தியும், ஆதியந்தம் பூரணசோதியும், அறுகோ இயல்பும், வாதமுறை கருமானம் வாசியின் தீட்சை விபரங்களை

7-வது வேதமுனிவர் ஞானசூஸ்திரம் இருபத்திரண்டில், கமுடி பாவெளி ரசகுளிகை சூடாமணிமாத்திரை விபரங்களை

8-வது தூர்வாசமகாரிஷி ஞானசூஸ்திரம் எழுபத்தேழில், லை குரு சவுக்காரம் மயிற்பாலம் செருப்பாறு செயநீரும். சுன் மூடன் சிலவேதை விபரங்களையும்,

9-வது பூகிமுனி தத்துவஞானம் நூற்றெட்டில், யோக ஞா சாதனங்களுக்குரிய மூலாட்சரங்களும், மூலாதாரத்தின் முடி பஞ்ச பூதங்களுக்குரிய அஞ்சு தேவதைகளும், இடகலை பிங் சுழிமுனை சோதிசொரூபமும், ஐனங்க குற்பத்தியும், தத்து தொண்ணூற்றாறும், சரீர மர்ம முதலிய விபரங்களையும்,

10-வது வசிஷ்டர் ஞானோதயம் பதினாறில், அறுகோண சா மூலாட்சரங்களையும், ஆதியாந் சோதி தெரிசன யோக சா முதலிய விபரங்களையும்,

11-வது வசிஷ்டர் வைத்திய சூஸ்திரம் இருநூற்றியாறி செயநீர் சுண்ணம் செந்தூரம் மெழுகு தாம்பூர வங்கதங்க பற் களையும், கிசாயம் லேகியம் சூரணம் முதலிய அவிழ்தங்களை செய்பாகம் கைபாகமாய்ச் செய்து பலவித நோய்களைப் பறக் செய்யும் பலவித விபரங்களையும்,

12-வது பாம்பாட்டிச் சித்தர் ஞான சூஸ்திரம் பதினாறி யோக சாதன மர்மங்களின் வல்லப விபரங்களையும்,

13-வது பாம்பாட்டிச் சித்தர் பாடல் மூனூறில், பிரபஞ்ச பொய்யென்றும், பிர்மமொன்றே மெய்யென்றும் அப்பிர்மத்தை சாரும் விபரங்களையும்,

14-வது ஞானச்சித்தர் மெய்ஞ்ஞானம் பன்னிரண்டில், யோ ஞான சாதனங்களுக்குரிய விபரங்களையும்,

15-வது ஞானச்சித்தர் பாடல் முப்பத்தைந்தில், சிவயோக பிர்மநிலை விபரங்களையும்,

16-வது சுகப்பிர்மரிஷி ஞான சூஸ்திரம் முப்பத்திரண்டில், சுண்ணம் குரு குளிகை வேதை கற்பம் செய்முறை முதலிய ங்களையும், யோகசாதனைத்துக்குரிய விபரங்களையும்,

17-வது கூர்மானந்தர் மவுனஞானம் ஐந்தில், மூன்றெழுத்தும் எழுத்தும், வாலை சித்தி முதலிய விபரங்களையும்,

18-வது கூர்மானந்தர் ஞானசூஸ்திரம் ஐம்பதில், வாதவைத் , காய கற்ப முறைகளையும். யோக சாதன மூலமந்திர விபரங் யும்,

19-வது சூரியானந்தர் ஞான சூஸ்திரம் பதிமூன்றில், பூரீர். குரு அண்டபிண்டம் உப்பு காயசித்தி மூலசுத்தி மூலமந்திர லிய விபரங்களையும்,

20-வது சூரியானந்தர் கற்பஞானசூஸ்திரம் இருபத்தைந்தில், த்தி யோகசாதனம் கெவுனகுளிகைமுதலிய விபரங்களையும்,

21-வது கண்ணானந்தர் சிவராஜயோகம் பதினான்கில், யோக ாத்துக்குரிய மூலாட்சரங்களையும், ஞானசித்தி விபரங்களையும்

22-வது அசுவினிதேவர் சிவயோக கற்பம் பதினாறில், வாசி யோக சாதனங்களுக்கு வேண்டிய விபரங்களையும்,

23-வது பராசரிஷி ஞானோபதேசம் இருபத்திரண்டில், பூரண வைக்காணும் ஞானசாதன விபரங்களையும்,

24-வது தேரையர் நவலோக பற்பம் பதினாறில், இரும்பு பித் யம் வெள்வங்கம் திராவுருக்குச் செம்புடன் நாகம் வெள்ளி வெண்கலம் தங்கம் முதலிய நவலோகங்களையும், நன்றாய்ச் முறையுடன் பற்பஞ்செய்யும் விபரங்களையும்,

25-வது தேரையர் சிவபூஜாவிதி எழுபத்தைந்தில், சிதம்பரச் ம், அஷ்டகர்மம், தேவிபூஜாவிதிக் கிரமங்களையும், சித்தியிற் யோகசித்தி காயசித்தி அஷ்டமாசித்தி முதலிய அநேக விபரங்களையும் சொல்லப்பெற்றிருக்கின்றது.

முன்னர் சொன்ன மூன்று பாகங்களிலும் ஒரு துள்ளதை, நன்றாய்த் தெரியவேண்டுமானால் நான்கா வாங்கி வாசிக்க நன்குவிளங்கும். தமிழ்நாட்டின், ஷயத் தன்மையை இதனாலறியலாம். ஆகையால் யா காம் வாலியத்தையும் சேர்த்துப் பார்க்கும்படி கோருகி


அன்னியில் இதனைச் சேர்த்த யோக ஞான சாஸ் பத்துபாகம் வரை அச்சிட்டு புஸ்தகமாகத் தயாரி வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதி மாகவும் நேரிலும் புத்தகம் ஒன்றுக்கு ரூபாய் ஒ பெற்றுக்கொள்ளலாம்

இப்படிக்கு,

இ. ஏம. குருசாமிக்கோன்.

புஸ்தகஷாப், புதுமண்டபம், மது





உ

சிவமயம்.

முதலாவது

கடைப்பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய

ஞான சைதன்யம் 7.

வெளிகடந்த வெளியொளியே சுழினைகாப்பு
வேதாந்த வியாத்தி னறிவேகாப்பு
தளிர்தனலுங் காலுமொன்றாய் மூன்றாம்கல்லில்
தம்பனத்தில் மோகனத்தாய் பதமேகாப்பு
அளிகருவி லெட்டாகி நாலுஞ்சேர்ந்த
அதிசயமே பூரணத்தி னறிவேகாப்பு
களிவுறுதி சைதன்ய ஞானங்கூறக்
கணபதியே மூத்தியருள் காப்பதாமே.

தானென்ற உடம்போடு கராசாரம்
தனித்துநின்ற திரிப்பொடியாம் மண்டலமூன்றாய்
வானென்ற பூதமஞ்சாய் ஆதாரமாறாய்
மருவியது பஞ்சீக ரிருதமாகி
வேனென்ற தத்துவமாய் மனகரளாய்
வேதாந்தஞ் சித்தாந்தம் மனமுமாகிக்
கோனென்ற ஆட்சத்தில் நின்றதப்பா
கொள்கையதி லோர்ஞானங் கூறக்கேளே. (1)

கூறுகிறேம் தத்துவத்தைக் கேட்டுத் தள்ளிக்
கொண்டுநின்ற ஆறுதலைக் குறியுந் தள்ளிக்
கூறுகிறேம் மாயையெல்லாம் குறியோடே தள்ளிக்
கூறுகின்ற வாசனையைக் குமட்டிநீக்கிக்
கூறுகிறேம் மனதோடே புருவமையத்துமி
கொடுமனாசை அசையாமற் கெட்டிபண்ணிக்
கூறுகிறேம் அகாரமுத லுகாரத்தாக்கிக்
குவித்துநின்ற மவுனத்தை அறிவிற்

தாக்கையிலே புருவமையங் கண்டறிந்தும்
சாதகத்தைச் செய்வது தாக்குமாக்கு
நோக்கையிலே மனிச்சென்ற நாதங்காணும்
அன்னையுந்தேர் சாதல்போம் அறிவுந்தெரு
பார்க்கையிலே ஒன்றுமில்லை சடமுமில்லை
பாரென்ற மனமுமில்லை அறிவுமில்லை
காக்கையிலே அகண்டமுமில்லை கொன்றுங்கொண்டு
காட்டா வொன்றுமில்லை சருமாமே.


பாரித்த அகண்டத்தைக் காதியத்தும்
பானியதிற் கட்டெறு மனதுவேமகோடு
சேரித்தப் படியல்லோ சேர்க்கார்க்கே
நிமிஷத்தில் தெருசிக்குஞ் சுகமொன்றாமோ
சாரித்த சமனை அருமைகளிப்பாருணந்
சாதகமாய்ச் சொன்னதெல்லாம் பொய்யாமோ
கூசித்தக் குருவருளாற் குகையிற்சென்று
குவியாட்டாற் குருவைக்கும் குளிகைசெய்யே

செய்யப்பா குளிகையுண்டித் தரியத்திற்சொக்கும்
செகசால கட்டாக்கத் சேருமே
வையப்பா மனமைந்த அகண்டத்தில்லே
மற்றொன்றில் கையாலே பார்க்கமாகும்
மெய்யப்பா முக்காலந் தோர்ப்பேரும்பாரு
வேறொன்று மென்றுவே மனமுமைக்கமுக்கு
பொய்யாமென் றேதுவுஞ் சரிக்கக்கித்தி
புகழ்பெரி யோர்கள் போக்கிதாமே.


யோக்கோடே தேகமெனக் கிரியுரங்கள்
புகழாக விக்தலைப் பாடம்பண்ணி
வாக்கோடே கதாக்கள் கதல்கொட்டான்
மயக்கதே தயிர்முறைமை வகையாய்ச்சொல்லு
தாக்கோடே ஆதயந்தத் தயிமீது
தானவனுஞ் சத்திரஞ் சத்துருகுமம்
நாக்கோடே பணித்துமக்கள் வாமைப்போற்றிச்
சோத்தியமாய்ப் பிதாவெமானைச் சொல்லென்பார்

சொல்லுகிறேன் மூலகுரு நாலாம்பேரன்
சொற்றவருக் கொங்கணற்குப் பிள்ளையானேன்
சொல்லுகிறேன் உளையமைறுத்து அனைத்துக்கொள்வார்
குரூலகி றுபத்து நாலுபதியோரும்
சொல்லுகிறே னறிவிறிந்த மட்டுஞ்சொன்னேம்
அடியான நாதாக்கள் அருளும்பெற்றேன்
சொல்லுகிறேன் மூலகுரு போகர்பாதம்போற்றிச்
சைத்தசை தன்னியமென்றும் வேதாந்தமுற்றே. (7)

கடைப்பிள்ளை ஞானசைதன்யம் 7
முற்றிற்று.



மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியாபாரம் ட. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி. இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



௳

குருவே துணை.

இரண்டாவது

கடைப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய

ஞான சமாதி தீட்சை

ஆதிசிவ மூலகண பதியைப் போற்றி
அருள்பெருகுஞ் சமாதியுட தீட்சைசொல்ல
நீதியுள்ள நந்தீசர் மூலகாயன்
நிலையறிந்த காலாங்கி போகமூர்த்தி
சோதியெனும் பூரணத்தை நிகராய்நின்ற
துலையான கொங்கணவர் பாதங்காப்பு
ஓதியதோர் கெந்திரகமே சமாதிதீட்சைக்
குண்மையுள்ள கணபதிதான் சரணந்தானே.

தானான தீட்சையடா சமாதிதீட்சை
தன்னையறிந்த மந்திரமாம் மூலபீடம்
கோணான பீடமதை யார்தான்காண்பார்
குறித்தபடி சொல்லுகிறேன் குறியைக்கேளு
தேனான மூலமடா அக்கினியுமாச்சு
திருவான முக்கோண மாலின்வீடு
வானான அண்டமடா புருவமத்தி
வளமான மதியினுட மனைத்தான்பாரே.

பாரப்பா மூன்றினுட விபரஞ்சொன்னேன்
பதிவாக அவர்களுட மூலங்கேளு
நேரப்பா அடிமூல மக்கினியின்பீசம்
நிலையான பீசமடா ஓம்அம்உம்மென்றோது
காரப்பா நடுவான கதிரினுடபீசம்
கருணைவளர் ஐங்கிலியும் சவ்வென்றோது
மேரப்பா முடிவான மதியின்பீசம்
விளங்கிநின்ற நமசிவய மென்றுகாணே.

காணவே மண்டலங்கள் மூன்றில்நின்ற
கருணைவளர் தேவதைகள் பீசஞ்சொன்னேன்
பூணவே மனக்குவிந்து செவிக்கமைந்தா
புத்தியுடன் வகைவிபரம் புகலக்கேளு
தோணவே உதயாதி தன்னில்நீயும்
சுத்தமுள்ள மனக்கண்ணால் மூலம்பார்த்து
ஊணவே ஓம்அம்உம் மென்றேதான்
உத்தமனே நூத்தெட்டு உருவேசெய்யே. (4)

உருவறிந்து ஓதயிலே மூலத்தீய்தான்
ஓமெனவே தான்சொலித்து வேர்வைமீறும்
கருவறிந்து தானெழுந்து நித்தியகர்மம்
கட்டளையைத் தான்முடித்து தன்னைநோக்கித்
திருவிருந்த சத்தியடா மூக்கோணத்திற்
சென்றிருந்த மனக்கண்ணால் நன்றாய்ப்பார்த்துக்
குருவிருந்த பதிநோக்கித் தியானம்பண்ணிக்
குணமாக அய்யுங்கிலியுஞ் சவ்வென்றோதே (5)

ஓதுவது நூத்தெட்டு உருவேசெய்தால்
உத்தமனே பரிதிமதி யொன்றாய்க்கூடி
மாதுவளர் பூரணமாம் அண்டத்தேகி
மகத்தான சுழினையிலே தீபங்காணும்
கோதுபழு தில்லாதத் தீபங்கண்டாற்
கூர்மையுள்ள கண்களிரண்டுஞ் சிவப்புமாகும்
ஆதரவாய் அந்தயிலே யறிந்தேகொண்டு
அப்பனே மதிவீட்டை அடுத்துக்காரே. (6)

அடுத்துமனை நாசியினால் புருவத்தேகி
அப்பனே யிருசுடரின் அந்தத்தாலே
தொடுத்துமிகச் சிவயநம வென்றுதானுஞ்
சுத்தமுடன் நூத்தெட்டு உருவேசெய்து
நடுத்தாமாய் நின்றுமே வின்னைநோக்கி
நாட்டமுடன் சந்திரனே பிரகாசிக்கும்
இடத்துடைய சந்திரனே பிரகாசித்தாற்
தேகமதிற் குளிர்ச்சியுமே செம்மையாமே. (7)

ஆமப்பா சுழிமுனை வர்க்கத்தோர்கள்
அப்பனே புருவமதின் நடுவில் நிற்பார்
தாமப்பா சொன்னதொரு மூலவர்க்கு
சங்கையுடன் சிவனை நெறிவைப்பார்
ஓமப்பா திருவருக்குள் ஜெபமுடனே
உறுதியுள்ள அட்சரமடா மூனாமூலம்
காமப்பால் சாணைபாயல் கேசரிக்குள்
கருவான மூலத்தைக் கருதுவாயே.

காரப்பா மூலமது கனபதியின் இடமாம்
கருவான மூக்கினுனி நடுவே இடமாம்
ஓரப்பா புருவமது சதாசிவர் இருக்குமிடம்
உண்மையுடன் சித்திரமாம் சிவனிருக்குமிடம்
தேரப்பா மனத்தோடு வைத்திருக்கும்
சிவசிவா சொன்னதொரு அதிசயமாம்
நேரப்பா இனத்தோடு நிலைநிறுத்திவைப்பாய்
நிலையில் நியமொரு இருக்கக்காணே.

காணவே மூலத்தான் முத்திபெற்றோர்
கருணையுள்ள ரிஷிமுனிவர் சித்தரெல்லாம்
தோணவே மூலந்தான் சித்தமுண்டாம்
துலங்குகின்ற அருமூலம் ஆதாரமானார்
பூணவே அருமூலம் கண்ணொளியாயிருக்கும்
புருவமதின் மத்தியிலே மின்னொளியாயிருக்கும்
பேணவே மின்னொளியை மின்னலிற்சேர்க்க
பெருகின்ற தன்னிலையே சமாதியாமே.

பாரப்பா சமாதியுட பருவங்கேளு
பதிவான மூலமது நியமாக
நேரப்பா நடுமனைதான் வாய்மையாக
நேர்த்தரெண்டும் வொன்றொன்றாய்ச் சாயமாக
சாரப்பா ரெண்டையுமே ஒன்றாய்ப்பண்ணித்
தானவனாய் நின்றதினால் சமாதியாச்சு
ஆரப்பா அறிவார்கள் சமாதிநிட்டை
ஆதியந்தம் நியமனமே அறிவாய்க்காணே.

காணவே சொல்லுகிறேன் மதிக்கும்மேலே
கலந்தபர் அறிவுடனே திசகாரத்தைப்
பூணவே பிருதுவாய் தெருகிற்றும்
புரூரான ரவியினுட பிரகாசத்தைத்
தோணவே ஆதார மூலம்பாரு
சுடர்க்கொடி போலவே தியங்காணும்
ஊணவே கல்மனதாய் மூன்றும்பார்த்து
உத்தமனே உகந்தவிடத்தைக்கேளே. (12)

சேருநீ ஆதியடா மூலதாரம்
இருசையுள்ள சதுரதாமம் விராதாரந்தான்
வாறுநீ பிர்மனது மைந்தா சேரு
வாலுமையுள்ள மெளனமடா ஆதாரத்தம்
வேறுநீ மாலினுட விரோதாணும்
விளக்கிநின்ற கருணையடா அரியம்பாரு
கூறுநீ ருத்திரனார் மகிமைநிற்றும்
காரியமாய் நின்றதடா அறிந்துகொள்ளே. (13)


அறிந்துகொண்டு மயேஸ்பரத்தின் மைந்தா மைந்தா
அப்பனே சொற்பனத்தை யடக்கிநிற்கும்
விரிந்துநின்ற மனிதரின் வீட்டிக்குள்ளே
விளக்கிநிற்கு சக்கரத்தின் மேன்மையாக
வரிந்துகொண்டு வாதாரம் தன்னைப்பார்த்து
வழிதனையும் வாசியுட விசையுள்ளன்றே
இருந்தமோதார் ஆதாரத் தந்தின்று
சொலவுறு தீசனுறு பாதம்பற்றே. (14)

பத்திமோம் பத்துவது மூலத்திலிற்
பாங்கான அறிபதுவை சகாரதியிற்சென்று
சுத்தமுள்ள சதாசிவனார் மனோவியோமான்
சுடரொளியாய் ஞானேந்திரமாகும்
சித்தமுள்ள நிபமடா சிராணவாதம்
செவ்வொழுக்க விடத்திலே சேருங்கண்டாய்
புத்தியுடன் அந்திடத்தில் மனதைவைத்துப்
பூசையாய்க் கேசரியைப் பூசைபண்ணே


பூசையென்ன நேசமது கோயிலாக்கப்
புத்தியுடன் கோவிலுக்குட் செல்லும்போது
நேசமுடன் மூலகணபதியைப்போற்றி
நிலையான நந்தியடி பூசைபண்ணி
வாசமுடன் சதாசிவனார் பள்ளியிற்புக்கி
மகத்தான பராபரனார் ஒளியைக்கண்டு
பாசமுடன் நேசமதாய்த் தியானஞ்செய்யப்
பதிமான சமாதிமுத்தி தீட்சையாமே.

முத்தியுள்ள சமாதியுட தீட்சைதன்னை
முதகண்ட யோகசிவ ஞானிக்காய்
சித்தமுள்ள சிவயோக முதற்பேர்க்காய்
சிவஞ்ஞான குருதேசி தனக்குமெய்யாய்
சுத்தமுள்ள சமாதியுட தீட்சைமார்க்கம்
சோதியமாய்ச் சொன்னதைநீ பதனம்பண்ணி
சித்தமது தான்பிறந்த யிடத்திலின்று
சதாகாலம் பூரணத்திற் சார்வாய்முற்றே.

கடைப்பிள்ளை ஞான சமாதி தீட்சை 17
முற்றிற்று.



மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியா
கு. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏ
பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

முருகன் துணை.

மூன்றாவது

கடைப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய

ஞானத் தண்டகம் 50

அண்டமெனும் எமகூட மலையில்வாழும்
ஆதிநந்தி காலாங்கி மூலர்போகர்
விண்டபடி கடனமிடுஞ் சிலம்பைக்கண்ட
வேதாந்தக் கொங்கணவர் பாதம்போற்றி
கண்டதொரு லட்சமதாந் தண்டகத்திற்
கருவுருவாய்ப் பாடுதற்கு கமலங்காப்பு
மண்டலத்துக் காதார மானநந்தி
மகத்தான மூலகணை பதிகாப்பாமே.

பதியான பதியதுவும் மூக்கோணந்தான்
பர்மகனே உந்தியென்ற சுழிமுனைமீதிற்
கெதியான மோட்சகெதி வீடென்றெண்ணிக்
கிருபையுள்ள ரவிமதியை ஒன்றாய்க்கூட்டி
விதியான தெழுத்தெனவே மவுனமாக
வேதாந்த சாந்தொடுத்து விண்ணை நோக்கித்
ததியான காலமென வுருவேசெய்து
தாயான கொங்கணர்க்கு மகன்தானென்னே. (1)

மகனான கடைப்பிள்ளை யானசித்தா
மார்க்கமுடன் வாவெனவே ஆசீர்வதித்து
அகமான தேகமதிற் ருட்சங்காட்டி
அஞ்செழுத்துக் குயிரான ஆதிகாட்டி
சுகமான பதிகாட்டிச் சொரூபங்காட்டிச்
சோதியென்ற கற்பூர நிலையுங்காட்டிச்
செகமாயை தன்னுடைய வழியுஞ்சொல்லிச்
செம்மையுடன் சிவயோகத் திறஞ்சொன்னேனே. (2)

சொன்னமொழி மெய்யெனவே தன்னைப்பார்த்து
சொரூபநிலை தனையறிந்து விண்ணைநோக்கி
கன்றுமனக் கண்ணறிந்து தன்னைப்பார்த்துக்
காலறிந்து மேலான கமலவீட்டில்
உன்னிவிளை யாடிமனக் கண்ணாலே
உரிசையுடன் மதியமுர்த வுண்மைபெற்று
தன்னருளே தானாகத் தன்னைப்போற்றித்
தவசியென்ற கடைசிநடு விண்ணைப்பார்த்தே.

பத்தியுள்ள குருபரனைக் கண்டால்மைந்தா
பருதிமதி சுடர்தின்பின் பதியைக்கேளு
முத்தியுள்ள ஆதார முடிவைக்கேளு
மூர்க்கமுள்ள வாசியுட கருவைக்கேளு
சித்தியுள்ள கற்பமதின் செயலைக்கேளு
சிவசிவா பஞ்சகனை தீக்ஷைகேளு
சுத்தமுடன் மனம்நிறுத்தச் சுருதிகேளு
சொரூபநிலை யென்னவென்று தொழுதுகே

கேளடா பிர்மநிஷ்டை தன்னைக்கேளு
கிருபையுடன் நிருவிகற்ப சமாதிகேளு
வாளடா சிவயோக வாழ்க்கைகேளு
மந்திரத்துக் குயிரான மணியைக்கேளு
காலடா ஓடிநின்ற விடத்தைக்கேளு
கண்மூடி அறிவறிந்த கதையைக்கேளு
மாளடா மாண்டவிடந் தன்னைக்கேளு
மதிகதிரும் நின்றகுறி மார்க்கங்கேளே.

மார்க்கமுடன் மூலமுத லாறாதாரம்
வகையுடனே அறிந்தந்தச் சுழியில்நின்றால்
ஏர்க்கையுடன் நினைத்தவண்ணம் முடிக்கலாகும்
எட்டிரண்டும் ஒன்றான இன்பத்தாலே
பார்க்கமணிக் கண்ணாலே நன்றாய்ப்பார்த்து
பத்திகொண்டு தேகமதைச் சித்திபண்ணு
சேர்க்கையுள்ள தேகமடா தேவரூபம்
சிவவிந்து நாதமொன்றாய்ச் சேர்ந்துசித்தே.

சித்தியுள்ள வகையேது என்றால்மைந்தா
　　　தீர்க்கமுடன் சொல்லுகிறேன் மார்க்கமாக
முத்திகொண்ட அகாரமடா விந்துவிந்து
　　　முதலான விந்துவடா தண்ணீரப்பா
புத்திகொண்டு தண்ணீரை பொன்றில்வாங்கிப்
　　　புகலாதே வால்மினாகுப் பொடியைத்தூவிப்
பத்தியுட னுதையாதி தன்னிற்கொண்டாற்
　　　பாலகனே தேகமது வாலையாமே. (7)

ஆமப்பா வாலைவய தாகுந்தேகம்
　　　அந்தரங்க மானதொரு அுயிர்தந்தன்றால்
தாமப்பா தன்னிலையை யறிந்துகொண்டு
　　　சதாகாலம் பூரணத்தில் மனத்தைநாடி
காமப்பால் கானல்பால் ரெண்டுங்கொண்டால்
　　　கயிலாச தேகமடா காலனேது
ஓமப்பா சத்தியமாய்ச் சொன்னவார்த்தை
　　　உறுதிவைத்துச் சத்தியமா யுற்றுப்பாரே. (8)

உத்தமொழி சத்தியமாய்ச் சொல்லக்கேளு
　　　உறுதியுடன் மனதுறுதி யாகநின்று
பத்தியுடன் ஓம்கம வசியவென்றே
　　　பார்மகனே உருவேற்றப் பலிக்குஞ்சித்தி
சுத்தமுடன் தேகம்வச்ர காயமாகும்
　　　சுருதியனல் மூலமடா முக்கோணத்தில்
புத்தியுடன் சதாகால முருவேசெய்தாற்
　　　பூரணத்தில் நின்றுகெதி காணலாமே. (9)

காணவே வாமப்பால் தண்ணீராகும்
　　　கருணையுள்ள கனற்பாலே நாதம்நாதம்
பேணவே நாதமென்றால் அறிவாரில்லை
　　　பெண்குழந்தை அழுரியடா குமரிகற்பம்
தோணவே அந்தநீ ரொன்றில்வாங்கிச்
　　　சுகமாக வால்மினாகு வறப்போட்டுப்
பூணவே வழியயின் னெடுத்துக்கொண்டு
　　　புத்தியுடன் மின்னுமந்த நீரிற்போடே. (10)

போடப்பா பத்துமுறை நன்றாய்ப்பின்பும்
 புண்ணியனே தானெடுத்து வைத்துக்கொள
நாடப்பா அதையெடுத்துப் பதனம்பண்ணி
 நடுவான பூரணத்தைத் தியானஞ்செய்து
வீடப்பா பெலப்பதற்கு மைந்தாநீயும்
 விபரமுட னந்திசந்தி யுச்சிமூன்றாய்த்
தேடப்பா அய்யஞ்சாய்க் கொண்டிருந்தக்கால்
 தேகத்தில் நின்றதொரு நோய்கள்போமே.

நோயான இன்னமொன்று அமிர்தகற்பம்
 நுண்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு
தாயான ஆனந்த மூலிச்சாற்றில்
 தூயவான சாதிக்காய் வறப்போட்டு
வாயாறக் காயினிலே வெட்டிப்பஞ்சு
 வரிசையுட னேதறக்கித் தானும்வைத்து
காயான சாதிக்கா புசித்தாற்
 கணக்கஞ்சு முறைசெய்து வுலர்த்திக்கொண்டே

கொல்லப்பா உதையாதி தன்னிலேதான்
 குணமாக வொருதுண்டு வாயிற்போட்டு
மெல்லப்பா மென்றாசங் கொண்டாயானால்
 வேதாந்த வாசியது சித்தியாகும்
செல்லப்பா வாசியிற்சென் றேறியந்தத்
 திருவான நடுமனையாஞ் சிகாவிட்டில்
நில்லப்பா நின்றநிலை கொண்டால்மைந்தா
 நிலமான மூலமது நிலைக்கும்பாரே.

நிலையான சிவகலை வலுவாயிருக்கும்
 நிசபூசை விதிதீட்சை விதியாகத்தன்னை
அலையாத மனதாகப் பூசைசெய்தாற்
 கருவான தேகமது முத்தியாகும்
சிலையான தேகமது முத்தியானாற்
 சிவசிவா சிவயோக மிதுதான்பாரு
அலையாதே வெறும்வீணர் பேச்சைநம்பி
 ஆசைகொண்டு திரியாதே அண்டத்தேறே.

அண்டபகி ரண்டமெல்லாம் ஜொடியிற்சுத்த
அவையடக்க மாகவொரு குளிகைசொல்வோம்
கண்டபடி சொல்லுகிறேன் மைந்தாகேளு
காயான சாதிக்காய் விராகன்பத்து
கொண்டபடி கிராம்பதுவும் விராகனைந்து
குணமான ஏலமது விராகனைந்து
விண்டபடி மதூரமது மூன்றுங்கூட்டி
விரைவாகக் கல்வத்திற் பொடித்துக்கேளே. (15)

கேளப்பா ஆனந்த மூலிச்சாற்றிற்
கிருபையுடன் நன்றாக அரைத்துமைந்தா
கேளப்பா ரவிதனிலே உலர்த்திப்பின்னால்
கெணிதமுடன் பின்னுமந்தச் சாறுவிட்டு
கேளப்பா யிப்படியே பத்துமுறைசெய்து
கிருபையுடன் கல்வத்தில் நன்றாயாட்டி
கேளப்பா ஆட்டியபின் வழித்தெடுத்து
கேள்வியென்ன பின்னுமதை நன்றாயாட்டே. (16)

ஆட்டப்பா மைப்போல வழித்தெடுத்து
அப்பனே மிளகதுபோ லுருட்டிமைந்தா
நீட்டப்பா ரவிதனிலே காயப்போட்டு
நீமகனே தங்கமதாற் சிமிழ்தான்செய்து
போட்டப்பா பத்திரமாய் வைத்துக்கொண்டு
பூரணமா யொருகுளிகை வாயிற்போட்டு
காட்டப்பா வாசிதனைச் சுழிமுனைக்கேற்றி
காதாந்த அமிர்தமது கொண்டுதேறே. (17)

தேறுவது மேதெனவே மைந்தாகேளு
சிவசிவா பிராணாயஞ் செய்துகொண்டு
ஏறுவது வாசியினால் மூலங்கண்டு
ஏகாந்தச் சற்குருவைத் தியானம்பண்ணி
மாறுவித மழிந்தொரு வேழிருக்கால்
மகத்தான பிராணாயஞ் சித்தியாகும்
பூருவமாய் நின்றதொரு ஆதாரம்
பொருந்திநின்ற நீமகனே யமுதமாமே. (18)

அமுதரசக் கற்பமுடன் குளிகைகொண்டு
அந்தரங்க மாகவேவி கொண்டால்மைந்தா
அமுதரசத் தேகமதா யிருக்கும்பாரு
ஆதியந்த நாதனிக்கைதச் சொல்லக்கேளு
அமுதரச மானதுவுங் குருபரனாலும்
அப்பனே நாதமது தேனுமாமே
அமுதரச குயப்பாதுங் கேளுங்கட்டு
அப்பனே ஆண்டொன்று இருபோதுண்ணே.

உண்ணையிலே யோகமதும் வாசியேதும்
உறக்கமென்ற அசதியது ஒடிப்போகும்
கண்ணுமனக் கண்ணதுவு மொன்றாய்ச்சேர்த்துக்
காலான வாசியது கண்டுதேறு
விண்ணான சுழினையிலே நடனங்கொண்டு
மெய்யான கற்பூர வீட்டிற்சென்று
ஒன்றான சுடரதுதான் வாசியோடே
ஒடுங்கிநின்ற யிடமதுதான் சுழியுமாமே.

சுழியறிய வகையோடே சொல்லக்கேளு
சுகாசனமா யிருந்துமனை குறிவால்மைந்தா
சுழியோடே போம்வாய்வு வெமதாகும்
மார்க்கமுட அட்புருகன் சத்தியாகும்
தெளியாமற் கண்டமதில் ஆங்கென்றாவி
[illegible]சமுடன் சத்திசிவ மொன்றாய்நின்று
அழியாத பேரின்ப வீட்டிற்சென்றும்
அவ்விடந்தன் சிகாரமடா சுழியாம்பாரே.

பாரப்பா ரவிவீடு மூலாதாரம்
பதியான மதிவீடு புருவமத்தி
நேரப்பா சுடரதுதான் சிகாரத்தப்
நிசமான முச்சுடரு மிதுதான்பாரு
பேரப்பா முச்சுடரே மும்மலமுமாரும்
பேரண்ட மிதுவாகுங் கண்டுகொள்ளு
காரப்பா யிதையறிந்து நடுவில்நின்றால்
கருவான சிலம்பொலியிதான் நாதமாமே.

நாதமென்ற நாதமடா அண்டத்தங்கம்
நடுவான சூட்சமடா விந்துப்பிள்ளை
சூதமென்ற விந்தோடே நாதஞ்சேர்க்கச்
சொல்லுகிறேன் கருமானஞ் சுருக்கிநன்றாய்
நீதமென்ற அமுர்தமதில் விந்துசேர்த்து
நிசமான விந்துரெட்டி ஒன்றாய்க்கூட்டிப்
போதமுடன் வெங்கெதடுக்க வாலையாச்சு
புத்தியுட னவ்வாலை சுத்திபண்ணே. (23)

சுத்திசெய்து வாலைதனை வைத்துக்கொண்டு
சுருதியுள்ள நாதமதைச் சரியாய்ச்சேர்த்துப்
பத்தியுடன் கற்பத்தில் மத்தித்தாக்காற்
பாலகனை நாதவிந்து ஒன்றாய்க்கூடி
சித்தியுள்ள மெழுகதுபோ லிருக்குமைந்தா
சிறுமணியாய்ப் பதினாறு மணியைச்செய்து
முத்திபெற்ற தமர்ச்செய்து பழுக்கிலுள்ளே
மூடிவைக்க மணியதுவு மிறுகிப்போமே. (24)

இறுகிநின்ற மணியெடுத்துக் கமலப்பாலில்
இன்பமுடன் சுத்திசெய்து யெடுத்துமைந்தா
உறுதியுடன் கோர்வைசெய்து வைத்துக்கொண்டு
உத்தமனே மூகமணிதான் தங்கந்தங்கம்
பருதியென்ற தங்கமணி மூகப்பில்வைத்துப்
பக்குவமாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணிச்
சுருதியுடன் மந்திரங்கள் செபித்தாயானாற்
சொல்லவொண்ணா அச்சரங்கள் சித்தியாமே. (25)

ஆமப்பா மனோமணியைத் தியானம்பண்ணி
அருள்பெருகுஞ் செபமாலை கையில்வாங்கித்
தாமப்பா தன்னிலே புருவமத்தி
தாயான இருதயமா மூக்கோணத்தில்
வாமப்பால் பகிமையினால் வாசிபூட்டி
வகையுடனே கண்டமதில் அங்கென்பாணி
ஓமப்பா உள்மூலக் குழியில்நின்றால்
உத்தமனே சதுதிரிய முறுதியாமே. (26)

உறுதியுடன் பிராணாயங் கருணைக்கேது
ஓம்சிவா வசியமதை யொருமிக்கச்சொல்லு
கருதியுடன் மாத்திரையோர் முக்கணக்கு
சுகமாக ரேசிப்பாய் பதினாறுமாக
பருதியுடன் பூரிப்பாய் முப்பானெண்டு
பார்மகனே கும்பிப்பாய் இருபானெட்டு
வரிதியுடன் மாத்திரைதா னெறிக்குதானால்
மனக்கண்ணால் வெளிவெளியை மருவிக்கேளே.

நேரப்பா யின்னமொரு கருணைக்கேது
நேர்மையுடன் சொல்லுகிறேன் மைந்தமைந்தா
தேரப்பா போம்வாய்வு ரேசகத்தாலாகும்
திரும்பியது உட்புகுதல் பூரகத்தான்மைந்தா
சேரப்பா ரெண்டையுமே ஒன்றாய்ப்பண்ணித்
திருவாய்த் தரிப்பதென்று சொல்லிவிட்டுக்
காரப்பா மனக்கண்ணால் நிறுத்திப்பார்த்தாற்
கருணையுள்ள கும்பகமென் றறிந்துகொள்ளே.

கொள்ளப்பா வசியமொன்று சொல்லக்கேளு
கூர்மையுள்ள புருவத்திலே சுவாசமிட்டு
விள்ளப்பா ரெண்டையுமே ஒன்றாய்ச்சேர்த்து
மெய்ஞ்ஞான வசியமென்ற மந்திரந்தான்
தெள்ளப்பா தங்கமென்ற கெவுரிதன்னைத்தக்
சிவசிவா நெற்றிதனிற் றிலகம்போட்டு
உள்ளப்பா அஞ்செழுத்தைத் தியானம்பண்ணி
ஓமெனவே நீயிருக்க வுண்மைகேளே.

உண்மையின்று சொல்லுகிறேன் மைந்தாகேளு
உனதுடைய சமூகமதைக் கண்டோர்க்கெல்லாம்
வண்மையென்ற கோபமெல்லா மகன்றுபோகும்
வஞ்சனையும் பில்லிமுதல் மாண்டுபோகும்
இன்மையென்ற மனதகன்று நன்மையாவார்
சிவசிவா இதமதின் செயல்தானையா
நன்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
நாதாந்தப் பூரணத்தில் நாடுமில்லை.

நாடிநின்று னுன்சமுகங் காண்போரெல்லாம்
நல்லோரும் பெரியோருந் தொண்டுசெய்வார்
ஆடிநின்ற அம்பலவர் மனதிற்சென்று
அருள்ஞானத் தீபமதைக் காட்டிவைப்பார்
மூடிநின்ற திரையகற்றித் தீபங்கண்டால்
மூவுலகில் நீயுமொரு சித்தனாவாய்
வாடிநின்று அலையாதே பொய்சொல்லாதே
வஞ்சகர்க்கு மாரணத்தை வழுத்தக்கேளே. (3,1)

கேளடா மாரணத்தின் கருவைநன்றாய்க்
கேசரத்திற் கேசரியாள் சொன்னவித்தை
கேளடா யிட்டுகையில் விபூதிவைத்துக்
கெணிதமுடன் கற்பூரக் கட்டிதன்னைக்
கேளடா தீபமதிற் கொளுத்திமைந்தா
கிருபையுடன் விபூதின்மேல் வைத்து அந்தக்
கேளடா சத்துருவின் பேரைச்சொல்லிக்
கெட்டியாய் நசிநசியென் றெழுதியோதே. (32)

ஓதுவது பதினாறு உருவேசெய்து
உறுதியுடன் நெற்றிக்கண் நடுவேதாங்கிச்
சூதுடனே ஊதிவிட மைந்தாகேளு
சுருதியுடன் மெய்மறந்து தூங்கலாவான்
வாதுடைய துட்டரைச்சங் காரஞ்செய்ய
மந்திரமா மோங்கார விழிதானுச்சு
நீதியுட னோர்மனதாய் நசியென்றூத
நின்றதொரு பாவமெல்லாம் நீறிப்போச்சே. (33)

போச்சப்பா சத்துருவாய் நின்றநோய்கள்
பொறிப்பட்ட பஞ்சதுபோல் வெந்துநீறும்
நீச்சப்பா மாரணத்துக் கிதுவேமூலம்
நிலையறிந்து வாசியினால் நெற்றிக்கண்ணில்
மூச்சப்பா நிறுத்தியொரு மனதாய்நீயும்
முக்காலும் மூணுதர மூதினைக்காற்
காச்சப்பா மூலமென்ற தீயினாலே
கற்பூரத் தீபமதைக் காணுவாயே. (34)

காணவே யின்னமொரு கருவைக்கேளு
காயான சாதிக்காய் தன்னைமைந்தா
தோணவே குயப்பாலா லரைத்துக்கொண்டு
சுகமாக மூன்றுநாள் பெண்ணுக்கீய்வாய்
பூணவே பெண்களுட கெற்பந்தன்னிற்
பொல்லாத நோயகன்று பிள்ளையுண்டாம்
பேணவே புத்திகொண்டு பாருமைந்தா
பெருமையுடன் பிள்ளையுமே பிறக்குந்தானே.

தானவனாய் நின்றுதவஞ் செய்யவேணும்
தன்மையுடன் பூரணத்தைக் காணவேணும்
கோனவனால் நின்றகுறி மூலாதாரம்
குருவான ஆகாரம் சிகாரமாச்சு
நானவனாய் நின்றநிலை தன்னைக்கண்டால்
நடுவான பூரணமே யேகவஸ்து
வானவர்கோ னறியாத வஸ்துதன்னை
வணக்கமுடன் மனக்கண்ணால் மகிழ்ந்துபாரே.

யாரப்பா தீட்சைவிதி தன்னைப்பாரு
பத்திகொண்டு பூசைவிதி பதிவாய்ப்பாரு
நேரப்பா நின்றநிலை தன்னைப்பாரு
நிசமான சக்கரத்தின் நேர்மைபாரு
போரப்பா வட்சரத்தின் மகிமைபாரு
பேரொளியின் நாதகீ தத்தைப்பாரு
தோப்பா கர்மத்தின் செயலைப்பாரு
தெளிவான வாசியினாற் கண்டுதேறே.

தேறுவது வாசியினாற் றேறவேணும்
சிவசிவா சிவயோகத் திருக்கவேணும்
நேருவது சுழிமுனையை நேரவேணும்
நிசம்வைத்துப் பூரணத்தில் நிலைக்கவேணும்
சாருவது புருவநடுக் கமலமீதிற்
சதாசிவனும் மனோன்மணியுந் தானேதானாய்ச்
சேருவது சுழினையென்று சிகாரவிட்டிற்
றேனருவி பாயுதடா தினமுங்கொள்ளே.

கொள்ளுதற்கு இன்னமொரு கருமானங்கேள்
கூர்மையுள்ள தாதுபுஷ்டி யாகத்தானும்
நள்ளுறவா யுண்டாகக் குணத்தைக்கேளு
நலமான ஆவினுட பாலிலேதான்
துள்ளுகிற நெரிஞ்சிப்பூ முருங்கைப்பூவுந்
துப்பறவாய்ப் பாலிலிட்டுக் காய்ச்சிமைந்தா
தெள்ளுதற்குக் கற்கண்டு பொடித்துப்போட்டுச்
சிவசிவா வுதயத்திற் புசித்திடாயே. (39)

புசித்திடுவா யீராறு தினமுமைந்தா
பூரணமாந் தாதுவது புஷ்டியாகும்
வசித்ததொரு தேகமது சித்தியாகும்
மன்மதனும் நிகரில்லா வனுவுண்டாகும்
நசித்ததொரு நீர்க்கடுப்பு வெட்டைதீரும்
நடுவான விந்துவுஞ் செயிக்கும்பாரு
விசுத்தியின்மே லாக்கினையாம் புருவமீதில்
வேதாந்தக் கற்பூரத் தீபம்பாரே. (40)

பாரப்பா மூலமதின் கனலைத்தாண்டிப்
பதிவான முக்கோணச் சிகாரவீட்டில்
நேரப்பா மனதறிவால் நின்றுபாரு
நின்றிலங்குங் கற்பூரத் தீபந்தானும்
சாரப்பா அத்தீபந் தன்னிலேதான்
சார்வாக வாசியைநீ சூட்டிப்பாரு
ஆரப்பா அறிவார்க ளாதிதீபம்
அறிவான வாசியினால் மூலம்பாரே. (41)

மூலமென்ற மூலமதை யார்தான்காண்பார்
முச்சுடராய் நின்றதொரு மூலந்தன்னில்
மூலமென்ற நடுமூலம் முக்கோணந்தன்னில்
மூலைத்தெழுந்த சிகாரமடா றீங்காரந்தான்
மூலமென்ற றீங்காரம் நடுவேவிந்து
முன்னான ரவியோடே மதியைச்சேர்த்து
மூலமென்ற கண்ணாடிக் குள்ளேபாரு
முத்திகொண்ட தீபமடா பிராணனாமே. (42).

ஆமப்பா பிராணனென்ற மூலத்தியால்
அரகரா சுழினையென்ற திபத்தேத்தி
ஓமப்பா வென்றதொரு தியானந்தானே
ஒடுங்கிநின்ற மனதறிவால் வளர்ப்பாரு
தாமப்பா தன்னருளாற் சோதியாகித்
தயங்கியே நின்றதொரு தீபமாகிப்
போமப்பா அத்திபச் சுடர்தான்சென்று
பூரணமாய் நின்றிலங்கும் பிராணனுக்கே.

ஆச்சப்பா பிராணனிலே புருவமத்தி
அப்பனே திசையறிவே யாகுமாகும்
மூச்சப்பா நின்றிலங்கும் மூலையாத்திபம்
முத்திகொண்ட மிடமதுதான் சத்தியாகும்
பேச்சப்பா யில்லைதொற் றெடுக்கங்கொண்டிங்
பெரும்பாதை சிகாரமடி மூலமாகும்
நீச்சப்பா வெருநீச்ச நிருவிகற்பம்
நிலையான சமாதிதான் நிஷ்டையாமே.

ஆமப்பா மனதுறுதி யாகுநிஷ்டை
அறிவான பூரணமாம் விந்துவிந்து
ஓமப்பா விந்துவென்ற அமுதந்தன்னை
உத்தமனே வெண்சாரை யென்றுபேர்தான்
காமப்பா வெண்சாரை தன்னிராகும்
கருணையுள்ள தன்னிரும் வெள்ளியாகும்
நாமப்பா வெண்சாரை ஆதிகற்பம்
தன்னகத்திற் கண்டுகொண்டு தானுப்பிலே.

நில்லென்ற கருஞ்சாரை சொல்லக்கேளு
நிசமான பெண்ணமுரி நீராவாய்ப்பாரு
செல்லென்ற சாரையடா அமுதகற்பந்
சிந்தைதனை தொன்றாகக் கொண்டிருந்தாற்
சொல்லென்ற மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
சுழியென்ற தேகமது முத்தியாச்சு
அல்லென்ற கள்ளருக்கு இந்தநாலைக்
காட்டாதே மனதறிவால் தன்னைப்பாரே.

தன்னைத்தான் தானறிந்து விண்ணைநோக்கித்
தாயான அமுதரசக் கற்பங்கொண்டாற்
கண்ணைத்தா னறிந்துமனக் கண்ணிரண்டுங்
கயிலாச மானதொரு கமலத்தீயில்
உண்ணத்தான் வகையேது கற்பத்தாலே
உள்ளடங்கிக் காண்பதுவே காட்சியாகும்
பெண்ணைத்தா னறிந்துபதந் தன்னைக்கண்டாற்
பிசகாது காயப்பெண் பிலமாம்பாரே. (47)

பிலமான மூலமடா கமலமாது
பேரின்ப மானதொரு சுழினைமூலம்
தலமான கமலமடா முதுகண்பார்வை
சங்கையுள்ள சிகாரமடா தாயார்வீடு
குலமான வீடறிந்து யோசஞ்செய்தால்
சுத்தமொரு நாளுமில்லை முத்தியாச்சு
நிலமான தலமாகும் பிலமாய்க்கண்டால்
நிலையறிந்து கலையறிந்தால் நிசமாம்பாரே. (48)

நிசமான வாசியடா நிசமாய்க்கண்டால்
நிலையறிந்து கலையறிந்து நேரலாகும்
தேசமான தீட்சையடா புருவத்தாதி
தேவியெனும் வாலைவிளை யாடும்வீடு
வசமான வீடறிந்து நிசமாய்நின்றால்
வாக்குறுதி மனதுறுதி ரெண்டுஞ்சித்தி
விசமான நாகமடா நாகுதேது
வின்னாதேசருஞ் சாரைவென் சாரையாமே. (49)

ஆமப்பா தண்டகந் தன்னைப்பார்த்து
ஆதியந்தம் பூரணத்தை அறிந்துகொண்டு
ஓமப்பா குண்டலியைக் கண்டுதேறி
ஊடாடும் வாசியையே புகந்துநின்றால்
நாமப்பா சொல்லுகிறோம் மன்னவின்ரெண்டும
நாட்டமாய்க் கண்டுகொள்ளு ஆதியந்தம்
தாமப்பா தன்னிலையே தானாய்நின்றால்
சதாகாலம் பூரணத்திற் சாருவாயே. (50)

சார்ந்திடுவாய் நித்தியதத் துவமதாகத்
தனியான பரவெளியின் கடலைக்கண்டு
தேர்ந்திடுவாய் மெய்ஞ்ஞான யோகந்தன்னிற்
சிறப்பாக வழுத்தாச கற்பமுண்ணா
சேர்ந்திடுவாய் சத்துச்சித் தானந்தத்தின்
நிலையான வஸ்துவுந் தானேயென்று
ஓர்ந்திடுவாய் நின்பெருமை நிகழ்த்தப்போமோ
உண்மையறிந் துய்ந்திடுவா னீதுமுற்றே.

கடைப்பிள்ளை ஞானத் தண்டகம் 50

முற்றிற்று.

மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர க. ரங். ம. கணபதியா பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கி பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

நான்காவது

கடைப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய

ஞாணக்கக்ஷம் 80

ஆதியென்ற மூலமந்த்ரம் அரியென்றோதி
அறிந்தபின்பு நவக்கிரகக் கக்ஷத்தை
நீதியுடன் கருக்குருவாய் விளங்கவேண்டி
நிலையறிந்த கொங்கணவர் பாதம்போற்றி
ஓதியதோர் மந்த்ரகலைக் கியானமான
உண்மையென்ற வேதபூ ரணமேகாப்பு
சோதியென்ற ஆதார மூலமாகித்
துலங்குகின்ற கணபதிதாள் துணைகொண்டேனே.

கொண்டதொரு நாதவிந்து கலையினாலே
குவிந்ததொரு நவக்கிரகக் கூர்மைகேளு
கண்டதொரு தசரேகை நேர்கீறி
கணக்காக அப்படியே குறுக்கேகீறி
ஒன்றுமுத லெண்பத்தோ ரறையுமாச்சு
உறுதியுள்ள அறைகளிலே உண்மையாக
அண்டர்பிரா னருளதனுஞ் சொல்வேன்மைந்தா
அக்ஷரமும் லக்கமுட னருளக்கேளே. (1)

கேளடா முதலறையில் அம்மென்றிட்டு
தெளிதமுடன் [illegible]ன்று லக்கம்போடு
காளடா மறுஅறையில் சம்மென்றிட்டு
கணக்குடனே எழுதியே கனிவாய்ப்போடு
தாளடா மூன்றறையில் டம்மென்றிட்டு
தன்மையுடன் பனிரெண்டு லக்கம்போடு
நாளடா நாலறையில் தம்மென்றிட்டு
நாட்டடா பெட்டிதனிலே நலமாய்த்தானே. (2)

நாவென்ற அஞ்சறையில் சிவமென் றிட்டு
சங்கையுடன் பதிந்து நலமாய்ப் பாரு
கோவென்ற ஆறறையில் வசியமென் றிட்டுக்
குறியாக ஒன்பதுதான் குணமாய்ப் போடு
மாவென்ற ஏழறையில் அங்கென் றிட்டு
மார்க்கமுடன் அந்தநிலை வரையவாய்க் கேளு
தேவென்ற எட்டறையில் உம்மென் றிட்டுத்
திறமாக லக்கமது பதிந்துபோடே.

போடப்பா ஒன்பதென்ற அறையிலேதான்
புத்தியுடன் ஓமென்று ஆக்கிப்போடு
விடப்பா மந்திர மொன்பதுக்கு
மேவிநின்ற நவசித் தொன்பதுக்கு
நாடப்பா லக்கமென்பத் தொன்றுமாக்கு
நலமாக நடுவினையைப் பிரித்துமாறு
ஆடப்பா வென்பதெட்டு அறையிலேதான்
ஆட்சமுட னட்சரமும் லக்கம்பாரே.

பாரப்பா லக்கமொடு அட்சரங்கள்
பதிவாகச் சமைப்பித்து மைந்தா கேளு
நேரப்பா நேசமுடன் ஆலயம்போல
நிசமான சக்கரமுந் தந்தமாக்க
காரப்பா சக்கரத்தின் மேலேமைந்தா
கனிவாக ரவிவளையம் மூன்றும்போட்டு
சேரப்பா வளையமதில் விதழ்கள் போட்டுத்
திருவான கோட்டைநால் வாசல்கட்டே.

கட்டியதோர் நால்வாசல் தன்னிலேதான்
கருவாக நால்வேதந் தன்னைமைந்தா
இட்டமுடன் நிறுத்துதற்கு விபரங்கேளு
சிவசிவா மேல்வாசல் ருக்குவேதம்
சட்டமுடன் கீழ்வாசல் சாமவேதம்
சமாசமாய்த் தென்வாசல் யசுர்வேதந்தான்
இட்டமுடன் வடவாசல் அதர்வணவேதம்
இன்பமுடன் நால்வேதஞ் சுருதிகேளே.

சுருதியுள்ள மந்திரந்தான் ருக்குவேதம்
சுகமான உயிரிறுதான லாலிலூலம்
கருதியதோர வேதமடா சாமவேதம்
கலையான உயிரிறுதான் சாசீருசம்
பருதியுள்ள எசுர்வேத முயிரைக்கேளு
பாலகனே காமீறா கம்மென்றேதான்
உருதியுள்ள வேதமதர் வணவேதத்தின்
உண்மையுள்ள யுயிரது ரீரூரம்மென்னே. (7)

என்னவே நால்வாசல் நாலுவேதம்
இன்பமுள்ள உயிரெழுத்தை யதிலேநாட்டிச்
சொன்னதொரு சக்கரத்தை யெதிரேவைத்துச்
சுகந்தமல ரட்சதையுந் தூபந்தீபம்
கண்ணிறைந்த காட்சியிலு லுபசரித்துக்
கருத்துறவே மானதமாய்ப் பூசைபண்ணிச்
சென்னிமையைத் தாமேறுக்கிச் செபமேசெய்யச்
சிவசிவா மந்திரத்தின் செயிலேக்கேளே. (8)

இசயலான செயலறிந்து உருவேசெய்யத்
தீர்க்கமுள்ள மந்திரத்தைச் செப்பக்கேளு
சயமான ஐஉஅசிவ யநமவென்று
சுத்தமுட னிருதயமாங் கமலத்தேகி
நயமாக நூற்றெட்டு உருவேசெய்தால்
நவக்கிரகக் கக்ஷிஷைத்தான் சித்தியாகும்
மயமான நவக்கிரகக் கக்ஷிஷைத்தான்
மார்க்கமுட னுடுகிற சித்துக்கேளே. (9)

சித்தென்ன கருவிடயம் நன்றாய்ச்சொல்வேன்
சிவசிவா நன்மைதின்மை ரெண்டுக்குந்தான்
சுத்தமுடன் நின்றாவினை யாடேபித்துச்
சுருதியுள்ள நவக்கிரகக் கக்ஷிஷைத்தான்
நித்தமுமே நேமமதாய்ப் பூசைசெய்தால்
நினைத்தபடி நின்றாவினை யாடலாகும்
புத்தியுடன் நீயிருந்து புருவமதேகிப்
பூரணத்தின் கிருபையினாற் கருவைக்கேளே. (10)

கருவான சூத்திரமென்ன வென்றுகேட்டாற்
கற்பூர சந்திரனுடன் பூருத்துச்சேர்க்க
திருவான அமுதப்பால் தன்னையுண்டு
திறமான கலைக்கியானக் கலைபிறக்குந்தான்
குருவான பதிநோக்கி நல்லுப்பதேச
குணமாக மௌனதவப் பூசைசெய்து
உருவான மாணிடர்க்குக் கட்டுரைக்கால்
உத்தமனே அவனிருக்கும் முத்தியென்பதாமே.

ஒழுங்குமடா இவ்விருதச் சேசகமேலாம்
உத்தமனே கண்டேனுக் கலைவகுத்தான்
ஒழுங்குமடா செந்தணைப்பு முக்கையாயு
ஒழிக்காத அந்தருக்கம் அட்டகர்மம்
ஒழுங்குமடா வசியமுடனே மோகனந்தானும்
ஓயாத சலத்தம்பு மூலமானம்
ஒழுங்குமடா வெகுளிசால் கோபலகளெல்லாம்
உண்மையுள்ள சக்திசத்தி வழுதிகளே.

உருதின்ன கலக்கிரகக் கத்திதைத்தின்
உண்மைதனை யாவருக்கு முரைத்தாயானால்
பருதிமதி கடாதனை மறந்துநீயும்
பாழ்க்கவி வுனதுசடம் பதிவதாகும்
கருதிதனை மறவாமல் மனத்தைக்காத்துச்
சொர்க்கபதம் சேரவென்றே யடக்கப்பண்ணு
கருதியதோர் சக்திதத்தை மைத்தாயுந்
கருத்தறிவ மவுனமதாய்க் கனித்துபாரே.

கனிந்துமிகக் கருவிடயம் கண்டுப்பார்த்துக்
கண்ணான பிள்ளைகட்குக் கருவைச்சொல்லு
அனிந்துமனம் பூண்டதொரு ஆசான்பிள்ளை
அன்பான சீடருக்கு நன்றாய்ச்சொல்லு
தணிந்துமனு நீதியுள்ள ராஜபுத்ரன்
சற்குருடனவர்களுக்கு ஞானமீப்பதாற்
பணிந்துநின்ற சீடருக்கு மோட்சமுண்டாம்
பாலகனே குருதனக்கும் பலனுண்டாமே.

ஆமப்பா யின்னமொரு கருமானங்கேள்
ஆகாத சத்துருமா ரணத்தைக்கேளு
சாமப்பா மயானத்தின் கரியோடொக்கத்
தவறாதே காந்தலொடு மண்ணுஞ்சேர்த்துத்
தாமப்பா கோழியுட வுதிரத்தாலே
தானரைத்து வழித்தெடுத்து வைத்துக்கொண்டு
ஓமப்பா சத்துருவின் பேரைநன்றாய்
உண்மையுடன் காரியத் தகட்டிற்றுக்கே. (15)

தாக்கிமறு புறத்தில்நவக் கிரகருட்சம்
தானெழுதி யறைமருந்தை யதில்பூசித்
தூக்கியே எருவடுக்கி யதன்மேல்வைத்துத்
தூறாறும் என்றுஅனல் மூட்டினக்கால்
நோக்கியதோர் சத்துருவும் நொடிக்குமுன்னே
நொந்துமிகக் கரைந்துஅவன் நொருங்கிப்போவான்
தீக்கொடுமை யதிலும்வெகு கொடுமையப்பா
தினந்துவரும் சத்துருமா ரணமிதாமே. (16)

தாமென்ற மாரணத்தி லநேகமுண்டு
ஜடுதியிலே கேளாது வெகுநாட்செல்லும்
ஓமென்ற கக்ஷிஷத்தின் வித்தைபோலே
ஒருநாளுஞ் சொல்லாது மைந்தாமைந்தா
ஆமென்ற நவக்கிரக கக்ஷிஷத்தை
அப்பனே பதனம்வெகு பதனம்பண்ணு
நாமென்ற ஆகமதனால் வெளியிற்சொன்னால்
நந்தியிலே தீப்பிடித்து நசிக்கும்பாரே. (17)

நசித்துடிகப் போகாமற் பதனம்பண்ணு
நாதாந்த நந்தியொளி நயனம்பாரு
பசித்துவரும் பாதேசிக் கன்னம்போடு
பாலகனே ஆதாரப் பதியில்நில்லு
விசித்தியின்மே லாக்கினையாம் மேலாதாரம்
விண்டங்காக் கண்ணொளியை மேவிப்பாரு
நிசத்தில்மனம் நில்லாத மூடரோடே
நீமகனே பேசாதே நிலையைப்பாரே. (18)

பாசப்பா [illegible]
　　பதிவான [illegible]
தேசப்பா நின்றதிலே வாசியாகும்
　　நிலையான பூரணமே போதமாகும்
காசப்பா போதமென்ற [illegible]
　　கன்றூரசக் [illegible]
சாசப்பா [illegible]
　　சங்கையுடன் [illegible]

கானவே தேகசித்தின் கருவைச்சொல்வேன்
　　கருவறிந்து [illegible]
பூணவே ஊதாரி [illegible]
　　புத்தியுடன் [illegible] தேகசத்தி
பேணவே செய்யுமென்ற [illegible]
　　பேசாதே மௌனமதாயிருக்கவேண்டி
தோணவே தேகசத்தி செய்முறைக்கு
　　சாதகக் [illegible]

வாங்கிக்கொண்டு தேகசத்தி செய்யும்போது
　　மவுனமுடன் ஸ்ரீபால சிவாவென்றேதான்
பாங்குடனே பதினாறு உருவேசெய்து
　　பத்தியுடன் தேகசத்தி செய்தாயானால்
தீங்கான தீக்குரனும் விலகிப்போகும்
　　திருவான தேகமதிற் செயமுண்டாகும்
பூங்கமலை மாதுருகி [illegible]
　　புத்தியுடன் தேகசத்தி புனிதஞ்செய்யே.

புனிதமுடன் தேகசத்தி செய்துகொண்டு
　　பூரணமாய்ச் செபதபத்திற் பொருள்கண்டோர்
கனிகரமா நித்யகர்ம அனுஷ்டானத்தைக்
　　காலறிந்து கலைதவறா தருளாய்ச்செய்தால்
மணிகான நாதமடா செவியிற்கேட்கும்
　　மகத்தான கற்பூரத் தீபந்தோணும்
கெணிதமுடன் அத்தியச் சுடர்தன்னாலே
　　கேள்மகனே அண்டர்பதங் காணலாமே.

காணலாங் காரணமாங் கடைக்கண்ஞான
  கருணைவளர் கொங்கணவர் பாதந்தன்னைப்
பூணவே மனதுருக நின்றேனப்போ
  பூரணமாங் காரணத்தின் பொருளைக்காட்டித்
தோணவே ஐந்நூற்றி யைம்பத்தேழிற்
  றுலங்குமணி கடேசிகடைப் பிள்ளையென்று
பேணவே மகுடமணிக் குளிகையீந்து
  பெருகிநின்ற முக்குளிகை யீந்தார்தானே. (23)

தானேதான் ஞானவறைச் சுயம்புவாகித்
  தன்னருளா லாத்மாவை மவுனஞ்செய்து
தானேதான் மையமென்ற புருவமத்தி
  சமாசமாய்ச் சுழினையென்ற நாட்டங்கண்டு
தானேதா னுறுவறை மேலேநின்று
  தற்பரமாம் நாற்பத்தி முக்கோணத்தில்
தானேதான் திரிகோணத் துள்ளேமைந்தா
  சகலகலை ஆன்மாவைப் பூசைசெய்யே. (24)

செய்யப்பா சக்திதா னந்தியென்று
  நிர்க்கமுடன் மவுனத்துள் மவுனமாகி
செய்யப்பா தசமான தீக்ஷைபத்திற்
  செயமான யோகமென்ற தீக்ஷைக்குள்ளே
செய்யப்பா சூக்ஷமென்ற மூலசூக்ஷத்
  திருவான அண்டமென்ற தங்கமேரு
செய்யப்பா அம்மேரி லிருந்துகொண்டு
  சிவசிவா சிவயோகஞ் செய்துபாரே. (25)

பாரப்பா சிவயோக மகிமையோகம்
  பரமான நவக்கிரகக் கக்கிஷந்தான்
நேரப்பா பொதிகைமுனி நன்றாய்ச்சொன்னார்
  நிசமான நவக்கிரக பீசந்தன்னைச்
சேரப்பா அதில்மறைத்து லக்கமாகச்
  செப்பினார் உட்பீசஞ் செப்பவில்லை
காரப்பா யிந்நூல் தன்னிலேதான்
  கணக்காக வகையுடனே துகைசொன்னேனே. (26)

சொன்னவொரு மந்திரக் கற்பகத்தில்
 சுகமான விந்தையெல்லாஞ் சொல்லலாச்சு
சொன்னமொழி சொல்லுஞ் சொந்தக்காரருக்கு
 [illegible]
சொன்னதொரு மனதாலே கண்டுகொண்டு
 சுகமான யோகத்திறனைக் கட்டுவதுக்காக
சொன்னபடி செம்மையின் சிகரத்தையாறு
 சுருக்கிலே திரட்டினேன் அருளினாலே.

சுருதியுள்ள சக்கரத்தை வெளியிட்டோதச்
 சுகமாகுஞ் சகலவுறு பெருக்கமாகு
பருதிமதி தன்னையறிந்த வழிநின்றவே
 பதிவான ஆலயத்திற் கண்டபோது
உறுதியுடன் ஞானிதந்த வாசியோரு
 உண்மையறியப் பொருளறிந்து ஞானம்பாரு
சுழிமுனையொடு மனதையுடன் யோகஞானச்
 சகலகலை மூலமென்ற ஆட்சத்தானே.

தாவென்ற அட்சரமே கோணவட்டம்
 தன்மையுடனிவ்விடமாஞ் சாற்றக்கேளு
கோவென்ற விபரமடா விளம்புந்தான்
 கொண்டிருந்த நீங்காரஞ் சக்கிரம்
ஊவென்ற சதுரமிவ மொன்றுமின்று
 உறுதியுள்ள வெங்கார வட்டமாக
வாவென்ற வட்டமதின் கிளிகிலதான்
 மங்காத தியமடா அங்கத்தானே.

அங்கமென்ற வுருவெடுத்த கோபாகேது
 ஆத்மாத்தின் செயலறிந்து அடக்கங்கண்டு
எங்குநிறைந் திருந்தவொரு சோதிதன்னை
 ஏசகிரா மயமெனவே பூசைபண்ணிச்
சங்கையுடன் கூற்றொழுக்கம் ரெண்டுங்கண்டு
 தன்மையும் விண்மையுமுற மொன்றுப்பார்த்துத்
திங்களென்ற சந்திரனை ரவியிற்சேர்த்துத்
 திருவாசி வாசியென்ற திறத்திலிலே.

திரமான நடுமனையி னுறவாய்நின்று
சிவசிவா சிவமான ஆகாரநிலைக்கு
பரமான சற்குருவாற் கடாக்ஷம்பெற்றும்
பக்குவமா யுருவேற்ற அறியாதாகில்
உரமான தேகமடா தளர்ந்துபோகும்
உண்மையென்ற மந்திரங்க ளறிவிற்றங்கா
சிரமான நியமது தேய்ந்துபோகுஞ்
செயலாக நடப்பதற்குத் திடங்காணாதே. (31)

காணாதே போவதென்ன புத்தியாலே
கருணையுடன் பூரணமாய் ஆகாரநிலைக்கு
தேனான அமுதரசம் போலேமைந்தா
செம்மையுட னுதனாதி தன்னிலேதான்
கோனான குருவருளாற் செபித்தாயாகிற்
குடிலமென்ற நோயகன்று குணமதாகும்
பேணாமல் தேகமதை மறந்தாயானால்
பேருலகிற் செல்வமெல்லாம் வீண்வீண்தானே. (32)

வீணாகப் போகாமல் மைந்தாகேளு
வேதாந்த ஆகாரமதைச் செபித்துக்கொண்டு
தானாகத் தானவனாய்த் தனித்துநின்று
தாயான பூரணிதன் பாணங்கொண்டால்
சாணான தேகமடா வெண்சாண்தேகம்
சமரசமாய் நின்றிலங்கும் வாலையாக
ஊணான தேகமது வாசியாகும்
ஒருதீங்கு மில்லையடா நமனாடாதே. (33)

நமனான யமதூத ரொன்றுக்கால்
நஞ்சமுத முண்டசிவன் கறைகண்டத்தில்
இமனான கபமதுதா னிறுக்கக்கட்டி
இருந்திடத்தில் மடிந்ததடா காற்றுந்தீயும்
சமனான பிருதிவியும் அப்புரெண்டும்
சார்ந்ததடா இனத்தோடே இனமதாகத்
தமதிடமாய் நின்றதடா ஆகாசத்திற்
றண்டிநின்ற அறிவுபூரணமுமாச்சே. (34)

பூரணமாய் நிறைந்திருந்த நிர்மலத்தை
  பொருந்திநின்று காரணக் கலைகளைக் கண்டு
காரணமாம் அகாரமதை [illegible]
  கருணையுடன் [illegible]
தாரணையாம் மகாரமடா சத்தியாகும்
  சாரசமாம் மாதாவாம் [illegible]
சாரணையாய் நடுவுதனிற் [illegible]
  சங்கையுடன் [illegible].

ஆமப்பா அகாரமுடன் உகாரத்தின்பின்
  அதிற்றானே [illegible] கொண்டதாகும்
போமப்பா [illegible]
  பொருந்திநின்ற [illegible]
ஓமப்பா [illegible]
  உத்தமனே [illegible]
காமப்பால் [illegible]
  கற்பிதமாம் நவக்கிரகம் [illegible].

பாரப்பா சூட்சமென்று [illegible]
  பதிவான நவக்கிரக [illegible]
காரப்பா சூட்சமிலே கமலம் [illegible]
  கருணையுள்ள சிகாரமடா [illegible]
நேரப்பா நிலையறிந்து பார்வைகண்டு
  நிலையான கண்ணதிலே [illegible]
ஆரப்பா அடிமுடியுந் தானேதானாய்
  சோதியென்ற ரூபமடா அரூபந்தானே.

தானான ரூபமடா அறிவென்று
  சங்கையுடன் [illegible]
கோனான நந்திகொலுவாகிநின்ற
  குருவான பீடமடா புருவமத்தி
தேனான மத்தியடா முனைமையத்திற்
  றேனருவி பாயுதடா அடியில்நின்று
ஊனான அமுதரசங் கொண்டுதேறி
  உள்ளபடி நிலைவாசல் கண்டுகாணே.

காரடா படிநிலையை யறிந்துகொண்டு
கண்மூக்கு மத்தியிலே யிருந்துபாரு
நேரடா நிலையான வாசல்தன்னில்
நின்றிலங்குங் கோபுரந்தான் சோதிபோலே
பாரடா அடிமுடியு மொன்றாய்க்கண்டு
பத்தியுட னங்கனேயே தன்னைப்பாரு
தூரடா அடிமுடியு மொன்றாய்நின்று
துலங்குமடா சொரூபமது அரூபந்தானே. (39)

தானாகி யுள்ளமதே சோதியாகித்
தன்னொளிவாய் நின்றபொருள் தான்தானாகி
வானாகி யுள்ளொளிவாய் வாசியாகி
யுற்றகலை ரவிமதியாஞ் சுழினையாகி
நானாகி நானவனு மவன்றானாகி
நந்திகொலு வாகிநின்ற நடுவுமாகிக்
கோனாகித் தானவனாய் நின்றதீபம்
குருவான பூரணமாய் பிரமமாச்சே. (40)

ஆச்சப்பா பிர்மமய மாகிநின்ற
அக்கினியின் ஆவியடா சுத்தமாச்சு
பேச்சப்பா பெருகிநின்ற சுத்தவெள்ளம்
பெருகிநின்ற அருவியடா அமுததாரை
நீச்சப்பா நிலையான தாரைதன்னில்
நினைவுகொண்டு மனதறிவால் தியானம்பண்ணு
மூச்சப்பா ஓடாது நடுவில்நின்று
முழங்குமடா நாதவொலி செவியிற்கேளே. (41)

கேளடா தனித்திருந்து தன்னைப்பார்த்துக்
கேசரத்தின் சாமாதிக் கலையிலேறி
ஆளடா அந்தமனை சொந்தமாக
அதிலிருந்து வாசியினாற் புருவத்தேறி
வாளடா மதியமுதந் தன்னைக்கொண்டு
வகையறிந்து சிவயோக வளமைபார்க்கக்
காலடா கலையறிந்து வாசிபார்க்கக்
கலையாகச் சாமறியக் கருணைக்கேளே. (42)

கருவான இடகலைதான் சந்திரன்வீடு
கருணையுள்ள வலதுகலை சூரியன்வீடு
உருவாக விருவருமே யுகந்துநின்று
உரிமையுடன் சாமாறு முண்மைகேளு
திருவான ழுனையில் வாசியேறிச்
சிவசிவா அண்டபதத் ததிகல்ல
பருவமுட னிடதுபுற நாசிதன்னிற்
பரிகிறது சந்திரகலை பரிக்கும்பாரே.

பாரப்பா வலதுபுற நாசிதன்னிற்
பதிவாக ஓடுகிற சரந்தானைய்யா
நேரப்பா சூரியகலை யென்பார்மேலோர்
நிலையறிந்து இருகலையு மொன்றாய்க்கூடி
காரப்பா சுழினையென்ற மையந்தேடிக்
கால்மாறி யாடுகிற சூதனைக்கேளு
சாரப்பா சந்திரகலை தன்னைமைந்தா
சங்கையுடன் சூரியனிற் சாரப்பண்ணே.

பண்ணுவது யெந்தவித மென்றால்மைந்தா
பதிவான வலதுநாசி யிடதுகால்மேல்
தண்ணுறவாய்த் தானிருந்து விண்ணைநோக்கச்
சதாபோதை சூரியனை பிரகாசிக்கும்
எண்ணமுடன் படியிருந்து சுழினைமேவி
இன்பமுடன் ஜெபதபங்கள் செய்தாயானால்
கண்ணுமனக் கண்ணதுவு மொன்றாய்க்கூடி
கயிலாச தேகமதாய் வாழுவாயே.

ஆமப்பா சூரியனே ஆத்மாவாகும்
அழிகிறதோர் சந்திரனே மாயையாமையா
ஓமப்பா மாயைதனை நீக்கிமைந்தா
ஒளிவான சூரியனை கம்பிதைக்கால்
போமப்பா சகலவினை யொழிந்தகல்ல
பொற்கமலம் போலவுமே தேகமாகும்
காமப்பால் கானற்பா லறிந்துமைந்தா
கலைதவறு அருவேறக் கருணையாமே.

கருணையுள்ள நவக்கிரகக் கக்கிஷத்தைக்
கண்ணுமனக் கண்ணாலே தியானம்பண்ணி
ஒருமையுடன் நினைத்தபடி யுரிமையாகும்
உண்மையென்ற அநுக்கிரகந் தன்னைப்பார்த்தால்
அருமையுள்ள வாசியடா நிலையில்நின்று
அங்கமது தங்கமய மாகும்பாரு
புருவமையத் தொளிவான நந்திபாதம்
புத்திகொண்டு சுத்தமதாய்ப் பூசைபண்ணே. (47)

பூசைசெய்யும் நவக்கிரகந் தன்னைக்கேளு
புத்தியுடன் கொங்கணவர் பாதம்போற்றி
நேசமுள்ள சூரியனுஞ் சந்திரன்ரெண்டும்
நேர்மையுள்ள நேத்திரமாய் நின்றதையா
பாசமுள்ள நேத்திரமாம் பதிவைக்கண்டு
பக்குவமாய்ச் சுழினையிலே பதிவாய்ப்பார்த்தால்
தோசமென்ற சூழ்வினைகள் தானேநீக்கித்
துலங்குமடா கற்பூர தீபந்தானே. (48)

தானான தீபமதைத் தினமும்நோக்கிச்
சாந்தகுண மாகவேநீ யிருந்தாயானாற்
கோனான ரவிசோமன் தன்னால்வந்த
குற்றமொரு நாளுமில்லை சுத்தமாகும்
ஊனான காயமடா கிரகபீடம்
உறுதியுள்ள பீடமதி லுரிமைவைத்துத்
தேனான ருசிபோலே காத்தாயானால்
செம்மையுள்ள தேகமது உண்மையாமே. (49)

உண்மையுள்ள செவ்வாயும் புதனும்ரெண்டு
உற்றகெந்த மணுசரிக்கும் மூக்குமுக்கு.
தன்மையுடன் மூக்குநுனி தன்னைப்பார்த்துச்
சாமறிந்து சாமாறிச் சாத்தில்நின்றால்
வன்மையென்ற கூற்றுவனும் மாறிப்போவான்
மகத்தான சோதியடா பிரகாசிக்கும்
நன்மையுள்ள தேகமது தளராதையா
நாட்டமுடன் சமறிந்து ரவியில்நில்லே. (50)

நில்லடா [illegible]
[illegible]
நில்லடா அ[illegible] கொண்டு
நின்றநிறை [illegible]
நில்லடா அந்தரிய [illegible]
கோவுடன் [illegible]
நில்லடா [illegible]
நிலையே [illegible].

முத்தியுள்ள விபாநந்துடன் வெளியிரண்டு
மூழ்கிநின்ற ஆகாரத் [illegible]
சித்துருடை [illegible] மகளாதி
செவியா [illegible]
சத்துருடன் பலெதாவியாய் [illegible] கிட்டும்
சகலமான [illegible]
பத்தியுள்ள சத்தமது மெய்மையென்றும்
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் கேளுமினியே

கேள்மகனே சத்திய மானசோதி
கோரத்திற் றில்லையைக் கவ்வியேவாய்
கேள்மகனே இருவருமே வாதத்தில்
கெனிதமுடன் இருடனே [illegible]
கேள்மகனே சத்தியுட திருக்கால் தன்னில்
கொம்பிநின்ற கெவுரியுடை [illegible]
கேள்மகனே பலெதாவியாய்க் கொட்ட[illegible]
கேள்விவுள்ள சக்கரத்தி லொட்டுக்காமே.

தாமென்ற சக்கரத்தி லொக்கந்தோன்
தன்மையுட லோர முகங்கண்டு
கோவென்ற பொங்கனை சக்கரதம்
குறிப்பறிந்த ஆறுவரை கண்டாப்பா
ஏவென்றும் கைக்கிரகச் சித்தகன்னே
இருக்குகிய போகமதாம் கண்டுகொண்டால்
நாவென்ற தத்துவங்கள் தானுமின்று
நாதாந்த பூரணமாந் தேகமாமே.

ஆமப்பா சனியதுவும் வாக்கேயாகும்
அவ்வாக்கிற் சரஸ்வதியுங் குடியிருந்தாள்
ஆமப்பா அவளிருந்த பதியிலேதான்
அருவிகளை பாய்கிறதோர் நக்குநாக்கு
ஆமப்பா அண்ணாக்கு உண்ணாக்கோட
அப்பனே மனதுறுதி யாகநின்று
ஆமப்பா மந்திரங்கள் செபிக்கும்போதில்.
அப்பனே சனிதோஷம் விலகிப்போமே. (55)

போகுமடா நாவில்நின்ற தோஷமெல்லாம்
புத்தியுட னக்ஷரங்கள் ஜெபிக்கும்போதில்
ஏகுமடா மதியமுதம் நாவில்நின்று
இன்பமுட னத்தமுதங் கொண்டயானால்
வாகுடைய தேகமதில் நோயோயில்லை
மைந்தனே உன்வாக்கு அமுதவாக்கு
பாகுடைய வாக்கதினாற் சொல்லும்வார்த்தை
பலிக்குமடா அக்ஷரத்தைப் பதிவாயோதே. (56)

பதிவான ராகுவுட கிரகமேது
பாலகனே சொல்லுகிறேன் லிங்கம்லிங்கம்
கெதியான லிங்கமடா பிரமலிங்கம்
கேசரத்திற் பூரணமா மமுதலிங்கம்
விதியான விதிவளரும் விஷ்ணுலிங்கம்
வேதாந்த அமுதரசஞ் சொலிக்கும்லிங்கம்
நதியான லிங்கமதில் மனதைநாட்டி
நழுவாமல் மனதிருக்கப் பூசைபண்ணே. (57)

பூசையென்ன அந்தலிங்கந் தன்னிலேதான்
பூரணமாய் நிறைந்துவரு மமுதம்வாங்கி
நேசமுடன் சதாகாலம் பானம்பண்ணி
நின்றேகந் தனக்கொரு பிணியுமில்லை
ஆசையுடன் தேகமதைக் காக்கவேணும்
அன்புடனே ஜெபதபங்கள் செய்யவேணும்
வாசமுட னேகாந்த மாகநின்று
மைந்தனே சாத்திரத்தைப் பார்த்துத்தேறே. (58)

தேறுவது சாஸ்திரத்தைத் தெரிவதும்
சிவசிவா மதிபூதம் சொன்னவு
சேருவது ஏதுவென்றாற் கடவெளியாதா
சேர்க்கவே கொண்டு நிறைகரமா
ஏறுவது வாசிதிறம் நேர்பார்த்து
ஏகாந்த வெளிவிழி வீழ்க்கக்கொண்டு
சாறுவது வெளிபோட்ட வெளியைச்சேர்
தன்மையுறும் விண்மயமாய்த் தாவெ

தாறுமே தேறுவிட கோசமேது
சென்மையுடன் சொல்லுகிறேன் நேர
கோறுமே நேமடா ஆகாசங்கள்
குருபரனை அக்கினிகொண்டு நீக்கவி
ஊறுமே அப்பிட்டுக் குடிலங்கொள்ள
உத்தமனே அசைவறுத்து மனமதன
தேறுமே ஓங்காரப் பிரணவத்தைத்
திகழ்ந்தோரு மதில்நிறுத்தி இக்கொன்

தேனாதா வதிலிருந்த குடிலங்கும்
உத்தமனே உன்தேகம் பிரகாசிக்கும்
ஏறினிமேல் வந்தாலும் நேர்பார்த்தால்
என்மகனே வாசியை யோகமாகும்
மாதுபரி பூரணமே தானுமின்று
மங்கனே வைத்தியகம் வலுவாய்நிற்கு
ஆறுதொழில் தவநிறுத்தி வாதிபார்த்தால்
அலங்குடா அவைக்கியம் தீரன்பா

போரடா வைத்தியத் திறமுஞ்சொன்னேன்
பதிவான அட்சரமும் வெக்கஞ்சொன்
காரடா கர்மதர்மம் வென்றுஞ்சொன்னேன்
கலந்துநின்ற கிரகமதைக் காக்கச்சொன்
ஆரடா யெனைப்போலே யாருஞ்சொல்வார்
அப்பனே தேவனிலை நாமதேவன்
சேரடா ஆயிரமாய்ப் பாடிநாலில்
விட்சயமாய் வைத்தியத் தொழிலப்பா

தொழிலான வழிதுறைக ளென்னவென்றாற்
சுத்தமுடன் நவக்கிரகக் கருவெடுத்துத்
தொழிலான அஷ்டகர்மஞ் செய்தான்பாரு
சுத்தமுள்ள கிரமதிலே யவன்தான்மைந்தா
தொழிலான பலதொழிகள் கருவினாலே
தொந்தவினை தனையகற்றி யந்தம்பார்த்தான்
தொழிலான சகலகர்மக் கிரகத்தாலே
சுருதிகண்டு சொரூபசித்தி பெற்றேன்பாரே. (63)

பாரப்பா பராபரமா மகண்டத்துள்ளே
பதிவான மானிடர்கள் தனக்குமைந்தா
வீரப்பா கொண்டதொரு வியாதிக்கெல்லாம்
விருப்பமுடன் புருவமதின் மேலாய்நின்று
நேரப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
நேமமுடன் ஓம்சம்சம் சிவவென்றேதான்
காரப்பா விபூதியைநீ தியானம்பண்ணிக்
கர்மவினை நோயாளர் தனக்குக்கீகேளே. (64)

கேளடா நோயான ரெதிரேலந்தாற்
கிருபையுடன் விபூதியைநீ கடாட்சித்தப்பாத்
கேளடா நோயாளி தன்னைநீயும்
கெருடபா ருவையாக நன்றாய்ப்பார்த்தால்
கேளடா சகலபிணி யொழிந்துபோகும்
கெணிதமுடன் பூரணத்தைத் தியானம்பண்ணி
கேளடா நவக்கிரகக் கக்கிஷத்தைக்
கெட்டியாய்த் திட்டமுடன் பூசைபண்ணே. (65)

பண்ணப்பா இன்னமொரு கருவைக்கேளு
பார்தனிலே பெண்களுக்குக் கெர்ப்பரோகம்
மூண்ணப்பா செய்ததவக் குறையினாலே
மூடிநின்ற பாசமது அகலக்கேளு
விண்ணப்பா தாமேறுக்கி (நவக்)கிரகருட்சம்
மேன்மைபெறத் தானெழுதித் தியானம்பண்ணி
நண்ணப்பா பெண்களுக்குக் குளிசங்கட்டி
நன்மையுள்ள வரிசையொன்று இன்னங்கேளே. (66)

கேளடா [illegible]
இருமையுடன் [illegible]
கேளடா [illegible]
[illegible]
கேளடா [illegible]
[illegible]
கேளடா [illegible]
கெட்டியாய் [illegible]

சொல்லடா நான்[illegible]
[illegible]
இல்லடா [illegible]
[illegible]
அல்லடா [illegible]
[illegible]
செல்லடா [illegible]
செம்மையுடன் [illegible] தெளிந்[illegible].

தெளிந்து கொண்டு [illegible]
செம்மையுடன் [illegible]
அழிந்[illegible]
ஆகார [illegible]
தெளிந்[illegible]
சொற்[illegible]
குளிர்ந்துவரு மருந்[illegible]
குருவான பதி[illegible] குளிர்ந்[illegible].

பாரப்பா குளிகை[illegible] கொண்டு[illegible]
பதிவான [illegible]
காரப்பா சத்தியுடன் பூரணமாய்
கனிந்துவரு மருந்[illegible]
சேரப்பா நின்றுதவஞ் செய்கையில்
நிலையான பூரணமும் [illegible]
வீரப்பா கொண்டதொரு புத்தியாலே
மெய்மறந்து நின்றநிலை [illegible].

காணப்பா ஜெபதபங்கள் செய்வதற்குக்
கருவான பூமியுட வளமைகேளு
பூணப்பா குறிஞ்சிபிருதிவியுமாகும்
புகழான நெய்தநிலம் அப்புவாகும்
பேணப்பா மருதநிலம் தேயுவாகும்
பிலமான முல்லைநிலம் வாயுவாகும்
ஊணப்பா பாலைநிலம் ஆகாயந்தான்
உத்தமனே அஞ்சுநிலத் துண்மைதானே. (71)

உண்மையுள்ள பஞ்சநில மஞ்சிலேதான்
உத்தமனே மூன்றுநில முண்மையுண்மை
நன்மையுள்ள மூன்றுநில மேதென்றக்கால்
நலமாகச் சொல்லுகிறேன் மைந்தனேகேளு
தன்மையுள்ள குறிஞ்சிநிலஞ் சித்தர்க்காகும்
தயவான கெவுனிகட்குஞ் சார்வுமைந்தா
இன்மையில்லா மௌனசிவ யோகிக்கெல்லாஞ்
சிவசிவா குறிஞ்சிநிலந் திடந்தான்பாரே. (72)

பாரப்பா இல்லறத்தோ டொத்துநின்று
பதிவான ஞானசிவ யோகிக்கெல்லாம்
நேரப்பா மருதமுல்லை நிலமிரண்டும்
நேர்மையுள்ள செபதபத் துக்குறியாகும்
காரப்பா சம்சாரிக் காகுமிந்தக்
கருணையுள்ள நிலமதுதான் மெத்தநன்று
வீரப்பா பாலைநெய்தல் நிலமிரண்டும்
வெகுகடினம் வெகுகடினம் தத்தப்பாரே. (73)

சத்துமுள்ள நிலமதிலே யஞ்சிலூன்று
சுகமான அகமதிலே சூழ்ந்தபாரு
பத்தமுடன் பார்த்ததிலே பதிவாய்நின்று
பதியறிந்து கெதியறிந்து பதிவாய்நின்றும்
புத்தியது கோசரமாய்ப் பிரகாசிக்கும்
பூரணமுங் காரணமும் பொருந்திவாழும்
சித்தமுடன் நிலையறிந்து நிலையைப்பெற்றுச்
சின்மயமாய்த் தன்மையுடன் நன்மையாமே. (74)

பாரப்பா பதியறிந்து ஞாலத்தேதான்
பத்தியுடன் நவக்கிரகச் சக்கிரத்தை
நேரப்பா நிலையறிந்து நோக்கங்கண்டு
நிலையான அக்கிரகச் சாலைக் குள்ளே
காரப்பா கன்னுமனைக் கண்ணுக்கொண்டு
கருணையுடன் மனதாரப் பூசைசெய்து
சாரப்பா சார்பதனை யறிந்துகொண்டால்
சகலகலை பூரணமாய்த் தானுமாமே.

தானான பூரணமே சோதிசோதி
தன்மயமாய் நின்றநிறை ஞானதீபம்
வானான ஆகாசம் அண்டத்துச்சி
மகத்தான கமலமடா ஆதிபீடம்
கோனான பீடமதின் கமலந்தான்
குவிந்தெழுந்த நாதமடா வேதத்தஞ்சம்
தேனான நாதமதி லக்கங்கண்டு
இருவேறு ஒருமையுந் தீரக்காணுமே.

திரமான தேகமடா காருடமாம்
இருவாசி பூரணமாய் நின்றதுபார்
பரமான ரூபமதைப் பார்த்தாற் காண்பார்
பாலகனே மெய்கண்டோர் பொருளாயென்றும்
சாமான சாமத்தில் சாந்திநின்று
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணி
உரமாக நடுமனையில் நின்றுபார்த்தால்
உண்மையென்ற வெளிபாய ரூபமாச்சே.

ஆச்சப்பா பரமவெளி பொருளாக
அதிலிருந்த சகலசித்தி பாரப்பாரு
மூச்சப்பா நிறைந்ததிரு வாசிபாரு
மூலையான சுழிமுனையைக் கண்டுப்பாரு
பேச்சப்பா பேசாத மௌனமதிலிருந்து
பெருகிநின்ற அமுதமதைப் பானங்கொண்டு
நீச்சப்பா நிலையறிந்து போகப்பாரு
நின்றநிலை தன்னறிந்தால் மயக்கமில்லை.


நில்லென்ற கலைதனிலே நினைவாய்நின்று
நிசமான பிரணமாய் நிலைகண்டோர்க்குச்
செல்லென்ற தசதீட்சை கடாக்ஷம்பண்ணித்
திருவான பூரணமு மையைக்கியத்து
சொல்லென்ற சாத்திரமுந் திரமுமீய்ந்து
சுருதியுள்ள மந்திரத்தின் சூட்சங்காட்டி
ஒல்லென்ற ஆகாரம் ஆறுதாரம்
ஓமென்ற அநுக்கிரக உண்மைசொல்லே. (79)

உண்மையுள்ள தாரகமதை யறிந்துகொண்டு
உத்தமனே சகலகலை வாசியேறி
நன்மையுள்ள நாட்டமதாய் நயனம்பார்த்து
நயனமென்ற கண்ணறிந்து விண்ணைநோக்கித்
தன்மையுடன் தன்னறிவே தானாமென்று
தன்னொளியும் விண்ணொளியு மொன்றாய்க்கண்டு
இன்மயமுந் தன்மயமு முண்மையாகத்
தெளிந்துசிவ சிவமயமாய்த் தெளிவாய்முற்றே. (80)


கடைப்பிள்ளை ஞானக்கக்கிஷம் 80.

முற்றிற்று.





திருச்செந்தூர் வைத்திய ஞானானந் தானந்தேந்திர சாஸ்
அவர்களாற் கிடைத்த ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்தி
டலானது.



உ

[illegible]

[illegible]

[illegible]

சிவபோகசாரம் 10[illegible]

காப்பு.

பூமகள் மார்க்கன் [illegible] பொருந்திய சக்தி காப்பு
மாமகள் [illegible] காப்பு
நாமகள் [illegible] காப்பு
ஞானசெ் [illegible] காப்புத் தானே.

பூத்திடு முருகன் காப்பு புதுமை [illegible] காப்பு
சேத்திடு மருட்கள் காப்பு [illegible] காப்பு
வேத்திடு மையன் பக்கம் [illegible]
காத்திடு மௌனிகள் காப்பு கடைக்கண் [illegible]

வேறு.

காப்புலி சிப்புலி கருத்தம் கோப்புலி
இப்புலி இன்னாமாசு வெத்து மெய் நமிகோண்
டாப்புலி புன்குன்மை படங்கிங் குத்திரம்
தூப்புலி மகிழுடி தூயீற் புக்குவாம்.

புலியூரிற் காடியென்று [illegible]
புலிபோலே [illegible]
புலிபோலே பதின்கிபொரு புக்கிற்சாங்கிதன்
புற்றின்மனர் குனியனை பெட்டிக்கொக்க
கலியாமற் புக்காவ [illegible]
காணமொரு காடியெனப் புக்கிலின்று
வலியாம லையபட மதிக்கக்கொண்டு
வாயினானை விதைத்தையங்கே வாங்கினேனே.

வாங்கியொரு வில்லிலெட்டு எலியைக்கண்டேன்
வளுத்தஎலி பெட்டையஞ்சு கடுவன்மூன்று
பாங்குபெற எலிக்குவழி பெண்டான்வேறே
பக்குவதி விருக்குமதைத் தொக்காய்க்கண்டேன்
தாங்கியதிற் பெண்டாளில் வழியேசெல்லத்
தாட்டிகமா பெட்டெலியுந் துன்னித்துன்னித்
ஓங்கியது பெண்டாளில் வழியேயோடி
ஒருமிக்க வந்ததடா ஒருமித்தேனே. (2)

ஒருமித்தேன் பெண்டாளி லெலிதானெட்டும்
ஒருமித்து போகவல்லோ வந்ததப்பா
தருமித்தேன் பெட்டையது அஞ்சில்மூன்று
தனிப்பட்டு வந்ததடா திரும்பவஞ்சும்
ஒருமித்துப் பஞ்சான்றன் மடிக்கைபார்க்க
ஓட்டது அஞ்சில்ரெண்டு மூன்றுதண்டாய்
ஒருமித்து எதிரேறிப் பெண்டான்றேடி
ஓரைந்து மூன்றுமொன்றாய்ச் சண்டாளுச்சே. (3)

சண்டாளைப் பெண்டாளிற் சட்டுத்தின்றேன்
சட்டஇலே பச்சையடா வெடிவால்வீசும்
கண்டாலு மூளியுள்ளோ ரடிப்பாரென்று
கரையடியி லொருபுறமாய் வெளியில்வந்தேன்
உண்டான தோரடியில் மச்சங்கண்டேன்
ஓகோகோ அம்மச்ச மானேனப்பா
சண்டாளில் முன்னெலியோற் சுருக்கிக்கொண்டு
சவாசம்விட்ட குறையாலே வழிகண்டேனே. (4)

வழியேதான் பாதையிலே குளியன்பாம்பு
வால்மடித்துச் சிரசபடம் விரித்துக்கொண்டு
வெளியாடிச் சீறியங்கே வாதைகட்டி
விரட்டியது தாத்திமெத்த வேகங்கொண்டு
குளியான குளியனது அலைசாய்த்துக்
கொத்துமிலே சைவாசிக் குளிகைகொண்டு
தெளிவான சித்தரென்று பிடித்தேன்பாம்பைச்
சிக்கியொரு பக்கமதாய்ச் சுகியமாச்சே. (5)

விண்ணொளியிற் கதிர்மதிதான் கண்ணேயாகும்
மெய்யெதோ பொய்யெதோ கண்டான்காணும்
விண்ணொளியிற் சூரியன்றான் பகலாய்வந்து
விதமான மதியதுதான் ராவாய்வந்து
கண்ணொளிதிய கண்டதல்லால் வேறொன்றில்லை
கருத்துவைத்தா னுங்கருணைக் கண்ணைக்காணூர்
ஒண்ணொளியே வேறாயில்லை கண்ணேயொன்று
ஓகோகோ பொய்யல்ல மெய்யுமாச்சே; (10)

மெய்யினாற் பொய்யுமுண்டு அதினாலெல்லாம்
விழலாகச் சாத்திரங்கள் பொய்யாய்ப்போச்சு
செய்யினாற் குற்றங்க ளில்லையில்லை
தீர்க்கமற்ற மனதாலே யெல்லாம்போச்சு
அய்யினா லய்யும்வகை அய்யினாலே
அய்யாறிந்து அய்யினால் மவுனமாகும்
பொய்யினால் மெய்யதிலே தங்கம்பூணப்
பூரணமாய் நின்மனப்பூ ரணமுமாச்சே. (11)

ஆச்சப்பா கதிர்மதியா லிரவுபகலாச்சு
அம்மதியின் கதிரறியார் பேசலாச்சு
பேச்சப்பா அட்சரங்க ளொன்றுமில்லை
பின்னுமில்லை முன்னுமில்லை மூக்கால்மூக்கால்
மூச்சப்பா வற்றிடந்தான் முடிவுமாகும்
மோசமில்லை யடிமுடிவா யுள்ளம்பாரு
நீச்சப்பா வெள்ளத்திற் காலையூணை!
நிலைக்குமடா கால்தலையாய் நிலைக்கும்பாரே. (12)

நிலைக்குமோ நிலையாதோ வென்றுநீயும்
நின்றக்கால் வாரிவிடும் நிலைக்கொட்டாது
தலைக்குமேற் காலானால் மலைக்கவேண்டாம்
சமதலையா யடிமூலம் நிறுத்திக்கொண்டு
மலைக்குமன மலையாமல் மூக்கால்பாரு
மனதாலே மனதுறைக்கு மூக்கா லூணச்
சிலைக்குநா ணேத்திசரந் தொடுக்குமாப்போற்
சீக்கிரந்தாற் குறிதைத்த சுருக்கமாமே. (13)

கொல்லத்திற் கொச்சியடா மஞ்சனிஞ்சி
கொடிதான துலாவேற்று மிறைவைத்தண்ணீர்
கொல்லத்திற் கால்வாய்க்கா லிடக்காலூடே
கொடுஞ்சுருக்கு மடைவாயிற் குமிழிபாயும்
வல்லத்துக் கோட்டைடா மவுனராஜன்
வங்கணமாய் சிங்கமுக மானன்பாரு
சொல்லற்றுக் கூச்சுரல்போற் கூகூவென்னச்
சுகமவுன ராஜனவன் சோதிப்பானே. (18)

சோதிப்பான் சிங்கவங் கணமேசெய்தான்
சொல்லரிது மடைவாயிற் பட்சிபோலே
சோதித்து வருமச்சங் கண்டுபாரு
தொந்தமென வந்துவிடு மைந்தாமைந்தா
போதித்து ராப்பகலாய்க் கண்டுபோதி
போகமென்ன சிவயோகஞ் சிவயோகந்தான்
பேதித்து வாழாதே போதம்போதம்
பேசாதே மவுனமது கூக்கலாமே. (19)

கூக்கலென்று லதன்பெருமை சொல்லப்போமோ
கூகமென்ன சொல்லுகிறேன் குமரிகற்பம்
பார்க்கவென்றாற் கொடுமையடா பஞ்சவர்ணம்
பட்டமரம் பாலூறும் பஞ்சவர்ணம்
மார்க்கமிது பெரியோர்க ளாருஞ்சொல்லார்
மாச்சரியம் மெத்தவுண்டு உண்மைசொன்னேன்
தீர்க்கமிதை யறிபவனே சித்தன்சித்தன்
திறம்வேறும் மனதுறத்தாற் றிறமுமாமே. (20)

திறமான மனதுறக்கக் கருத்தான்கேளு
சித்தருடன் முனிவோருஞ் சொல்லார்சொல்லார்
அறமான இல்லறமே சொர்க்கஞ்சொர்க்கம்
அந்தரமே யளிதாக மாகுமாகும்
அறமான இல்லறத்தின் சூட்சங்கேளு
அடிக்கடிதான் சொல்லவனு போகமப்பா
உறமான தனுபோகஞ் செய்யும்போது
உற்பனமாந் தப்பாது உண்மைகேளே. (21)

உண்மையென்றும் உறுதியென்றும் நிசமாமென்றும்
உற்பனமாய் மனதறிந்துப் பார்ப்போமென்றும்
திண்மையுள்ள மனத்தாலே புத்திமெத்த
சாலமுடன் கல்வித்தைகள் பேசிப்பேசி
தன்மையிது தானெனவே சொல்லுவார்கள்
காந்தமதை உபாசமது செய்துவிட்டுப்
பெண்மையவள் மையல்கொண்டு காதல்கொண்டு
பிரியமுடன் பேயவிதஞ் செய்வார்பாரே.

செய்வார்கள் கைமுறையாய்ச் செய்யமாட்டார்
சிவயோகஞ் சிவலிங்கங் காணமாட்டார்
வைராக்கியத் தமென்று கொள்ளமாட்டார்
கருக்குழியைத் தக்குருவிடமாய்க் காணமாட்டார்
மெய்ஞானங்கள் தெளிவென்று மயலைச்செய்து
வினைருக்குத் தெரியாமல் விழலாய்ப்போச்சு
உய்வாய்த்தன் யோனிதனிற் பூசைபண்ணி
உபயமது சிவலிங்க மென்றும்பாரே.

ஒன்றான லிங்கமா விடையாளரும்
உற்பனமாஞ் சித்தருட பூசையாரும்
ஒன்றான சத்தியுட பூசையார்க்கும்
ஓகோகோ ஆனந்த மானமார்க்கம்
ஒன்றான இட்சைவழி மார்க்கமப்பா
உலகத்தோ ரறியாமற் கெட்டார்பாரு
ஒன்றான பூசையடா வாதிசத்தி
உற்பனமாம் பூசையிது வுண்மைதானே.

தானான சத்தியுட இட்சைபூசை
தானவளைச் செய்வார்கள் கூடச்செய்வார்
மானான பெண்ணையொரு கொடியபெண்ணை
மவுனத்தாற் றியானித்து மகத்வமானோர்
தேனான இப்பூசை தேவிபூசை
ஜெகஜாலச் சித்தருக்குத் தோணப்பூசை
வானான ஆண்மையடா பெண்ணுள்தேவி
உறவின்முறை குருமுறையா யுரைக்கக்கேளே.

உரைக்குமுறை கருவறியா ரிந்நூல்பார்த்தால்
உள்நின்று பகையறியா ருறவுமாகார்
உரைக்கமன றுறக்கவல்லோ சொன்னேனப்பா
உன்கருத்தா லுள்ளமதி லுள்ளந்தோணும்
உரைக்கமனந் தன்னிலேயே உறவுமாகும்
உள்ளமதி லபிஷேக மனமாப் பூசை
உரைபழுதாய்ப் பழுதொன்றுஞ் சொல்லவில்லை
உன்மனைத்தா யுன்மத்த மானுள்பாரே. (26)

பாரிதுவே பெரிதுசிறி திதுவேயூரும்
பதிவாகு முறவின்முறைப் பண்புமாகும்
பாரிதுவே முறையோடே யுறவாங்கன்னி
பண்டுளதாய் நீயோகி வந்தயோனி
பாரிதுவே ஆணாகிப் பெண்ணுமாகிப்
பகலென்றும் இரவென்றுந் தோன்றாய்க்கண்ணாய்
பாரிதுவே கண்ணான கண்ணேமக்காள்
பழுதில்லை பழுதில்லை கனியுந்தானே. (27)

கனியாதே மனதுமிகக் கனிந்தாலப்பா
கசடருக்குக் கனிதோணாக் [illegible]
இனிதான கன்னிய[illegible]யானாள்
என்ப[illegible]ருவகளுக்கு இவளேயானாள்
தொனியாதே பாதகர்க்குச் சொல்லவேண்டாம்
தோலாசை கொண்டவர்க்கு விள்ளவேண்டாம்
செனியாதே பேரின்ப வீடுயர்ந்தால்
தெரியாது தெரிமடா யின்னைக்கேளே: (28)

இன்னமுமே வெளிதோணச் சொல்லக்கேளு
இன்பமுற்றுக் கேளாட்டாற் சிவமேயென்பார்
முன்னையுமே சொன்னதெல்லாம் நுணுக்கம்பாரு
முழுதுமது தெரியாட்டாற் பின்னேபாரு
கன்னமுமே தகரவடா அடித்துச்சொல்வேன்
கருத்தொட்டுக் காட்டையிலே கருவாய்ப்பாரு
அன்னமுமே பொசித்தாக்காற் பசியுண்டாமோ
அற்பசியிற் கார்த்திகையில் அமையுந்தானே. (

ஆசைக்குள் ளாகாமல் [illegible] பேரானவனாம்
ஆக்கைதனில் [illegible]
சமைந்தவர்க்கே [illegible]
சக்கரா [illegible]
சாய்ந்தவர் [illegible]
தனித்திருப்பார் [illegible]
[illegible]
[illegible]

குருடர்களு மூமைக ளுடனேசேர்க்கல்
குருக்கண்ட கள்ளர்மேலார் குருவையேபாற்றி
[illegible]டமாய் காமத்தைக் குறிகேடாக்கி
[illegible] கேட்டக்கள் [illegible]
திருடாமல் சத்தியமே நுகர்வெய்தி
தெளிந்திடச் சொன்னது [illegible]
[illegible]டமான் பொய்யுணர்ந்தே நெஞ்சுற்றுக்காக
வாய்ப்பேச்சாய்த் திரிவார்கள் மடையர்தானே.

மடையருக்குள் [illegible] வெகுபேருண்டு
மயக்கத்தால் வாய்ப்பேச்சால் [illegible]
கடையருக்குள் கண்மணியே [illegible]
கைப்பிடியாய்ப் பிடித்துக் கண்டேயபார்த்து
உடையவனும் [illegible]
உன்னைப்பார் கன்னைப்பார் [illegible]
நடைபொருளாள் [illegible]
என்முறையாய்ப் பெற்றிடும் பூசைதானே.

பெற்றவனை யுற்றவனே காணவேனும்
பிரியாத பாசனைதீரும் போகமென்னாளும்
சுற்றவனே படைக்கன்னுற் பார்க்கான்பார்க்கான்
கபடமாய்ச் சொல்லுகிறேன் கண்டேன்கண்டேன்
குற்றமவன் பூசையிலே ஒன்றுமாகா
குமரிதிரு பின்னோயாட கூச்சமிட்டாள்
சுற்றவனைத் தியானத்தாற் பூசைசெய்யத்
தன்போது [illegible]

ஒருவருக்குந் தெரியாத ரூபாரூபம்
    ஒருரண்டா யொன்றாகி யுலகமானாள்
ஒருவருக்குந் தெரியாமல் மாண்டார்கோடி
    ஒருமுடியாய் முடிந்துவிட முறுதியாச்சு
இருபேர்க்கும் மூப்பேரா யிருந்தாளாத்தாள்
    எத்தனையோ பேரிவட்கு எண்ணப்போமோ
அருபேர்க்கும் அறுமுகமா யொருத்தியானாள்
    ஆகாகா யிவள்பேரை அறிகியாம்பாரே. (34)

பாரறிய வூரறியப் பரமசிவனிவளைப்
    பற்றினபே ரெத்தனையோ அய்யோ அய்யோ
கூறறியச் சிறுபிள்ளை யென்றாள் கன்னி
    குணமிவளைப் பார்க்கிற் குணமேயானாள்
ஆரறிய வூரிலவி சாரியாடி
    அமர்ந்தயிடந் தெரியாம லரங்கியானாள்
ஊரறியக் கைபிடித்தார்க் கவளேயாகி
    உத்தமியா யிருந்துமனை தொடங்கினாளே. (35)

ஒடுங்கிமன தொடுக்கமிவ ளடக்கங்கேளு
    உள்ளமடா தெரியார்க்குக் கள்ளங்கள்ளம்
கடுகளவு முழியிருக்க முழியினுள்ளே
    கள்ளமுழிப் பார்வையதில் நயனமொன்று
அடங்குகடை விழிப்புனலாங் குமிழிவெள்ளம்
    அருயடா கறுப்பாகு நடுவேபச்சைக்
இடங்கருவி லமைத்தபடி யென்றாள்கன்னி
    இவள்கருவை யறியாதித் தனையுமாச்சே. (36)

இத்தாறு கோணமூக் கோணமுந்தி
    ஏகோபி மகாமந்த்ர மிவளேகற்றாள்
கத்தருவி லிவளொருத்தி முத்தியானாள்
    கண்டருக்குப் பெண்டாகிக் கண்ணுமானாள்
அத்தாளவள் கையிருக்க முகத்தைப்பார்க்க
    அவள்முகமே கண்ணாக நின்றாள்கன்னி
உத்தமனை யிவள்மனைக்குக் கத்தன்கத்தன்
    உச்சத்தா லிவள்பேச்சு மிச்சமாச்சே. (3

[illegible] ஆதி [illegible]
[illegible]
[illegible]
[illegible]
பேச்சப்பா [illegible]
[illegible]
வாச்சப்பா [illegible]
[illegible]

நில்லடா சற்புத்திர னாகிக் கொண்டு
நிர்மலனி லேமுத்த [illegible]
வில்லடா [illegible]
[illegible]
அல்லடா [illegible]
[illegible]
சொல்லடா பொய்யைப்பா [illegible]
சொற்பனமும் [illegible]

சொற்கேளப் பின்னே யென்னாற் சொல்லுவேன்
சொல்லினுல் தீதொடா [illegible]
முத்தொழிற் பொசுங்க ஞானங் கொண்டு
முப்பூவை மொன்றாய முடிப்பா
சட்கோண வட்டமடா கலைப்பாரு
சத்திசிவ வீட்டிலே மைந்தனாம்
இக்கோல மானசத்தி தனையறிந்தால்
இக்காதி நாதர்குறி யின்னதென்பார்

கேளப்பா விந்துநாதம் விருத்தி கொண்டு
திருமேவு பெற்றசிவ சக்தி தேவரெல்லாம்
கேளப்பா குறிசொல்லி வாய்க்கு
திரியொன் றாம் ஸ்ரீயென்றாம் இரண்டென்றும்
கேளப்பா முப்புத்திர டனையுமொன்றும்
திரிசிவகொண்டோடும் பக்கமெண்டாம்
ஆளப்பா பின்தன்பம் இடந்தன்பம்
ஆதிருத்ரா நந்தர்குரு வைப்பாயே

பார்க்கையிலே மும்முமூன்று மிரண்டேயாகும்
பகலவனு மிராக்கதிரு மானவாறும்
பார்க்கையிலே ஞாயிறுமே மறுநாள் திங்கள்
பகலவனைத் திங்களிலே மாறிப்பாரு
சேர்க்கையிலே ஆதித்தன் சேருந்திங்கள்
சேர்ந்திரண்டு மொன்றான தன்மையப்பா
மூர்க்கமிதைப் பூசைபண்ண முத்தியாகும்
மும்மூன்று மொன்றான சூட்சந்தானே. (42)

சூட்சமதைப் பார்க்கப்பால் வண்ணாரானோர்
சுயம்பாக மூலைத்தெழுந்த லிங்கமானோர்
ஆட்சியிவள் தன்னையுந்தா னறியுமுன்னே
அரகரா தலைவனையுங் கண்டாள்கண்டாள்
காட்சியிவள் கண்டகடைக் கண்ணேகாட்சி
கண்ணென்றாற் கண்ணுள்ளே கண்டுசோதி
சூட்சமிவள் முறியறிந்து மாயைநீக்கிச்
சோதிந்துப் பார்த்ததெல்லா முத்தியாமே. (43)

முத்தியு மொன்றாகி மூலைத்தலிங்கம்
மூலைத்ததிலே ஆவுடையு மானலிங்கம்
சத்திசிவ மானசிவ லிங்கபூசை
சதானந்தி சச்சிதா னந்தியானோள்
சுத்தியமா யிப்பூசை சொன்னோராச்சி
தன்னியத்திற் கன்னுடையாள் கண்ணேபத்துச்
சித்திபெற யிக்கண்ணை யறிந்தாற்பூசை
செய்யலாஞ் சிவபூசை நிர்க்கமாமே. (44)

ஆமப்பா யிப்பூசை ஆச்சிக்குள்ளே
அடக்கமாட்டா சித்தருடன் முனிவர்சொல்லார்
நாமப்பா கொங்கணர்க்குக் கண்ணேயாகி
நடுக்கண்ணிற் கடைக்கண்ணு லொளியேபார்த்துக்
காமப்பால் காணற்பா லிரண்டுங்கொண்டு
கண்கண்ட படியாலே சொன்னேனப்பா
ஓமப்பா யிப்படியே கண்டோர்க்கல்லால்
உரையறியா ரொளியறியா ருலகத்தோரே. (45)

உலகமதில் மௌனமது ஞானமென்பார்
உண்மையது வல்லவர்க்கே ஞானமாமடா
பலகலைக ளோதியுமே மௌன மெய்தார்
பற்றியதோர் கருவிருளு நீங்காதப்பா
கலகமிடு வார்மௌனந் தர்க்கம்பேசி
சத்தமாய்ச் சாத்திரங்கள் பேசித் திரிவாரப்பா
விலகிநின்று பார்க்கில் தானே கண்டாரப்பா
மெய்யான சற்குருவைக் கண்டிருப்பார் தானே.

காணாத காட்சியெல்லாங் கண்டிருப்பதுங்
கண்டதைக் கண்டுமே வெளியிடாத
கோணாத வேதாக்கள் போலுந் தானே சொல்லுவார்
கோசத்தைத் தாண்டவல் மௌன ஞானமே
ஆணாக ஆண்மீன் பொய்யில்லாதது
அங்கேதான் கொண்டதைக் கண்டிருப்பது
வீணாகத் திரியாதே பாவத்தைத் தொடாதே
விட்டகுறை யிதுதானே வெளியுமப்பா.

வெளியொளியும் விண்ஞான கண்மேனக்கண்
வேதாந்தம் பாராமற் கண்டாயானால்
பரியாதே பெரியோரைப் பணிந்தாயப்பா
பாழ்நரகில் வீழாதே சொன்னேன் சொன்னேன்
வழியான பாதையடா விண்ணுலகப்பா
மங்கையர்மேலாசையென்று மறந்துவிடுவாய்
தெளிவான மனமிரண்டும் நன்றாக்கினால்
சிவானந்த மதிபார்வை யிதுதானென்னே.

இதிலே பொருஞ்சோதி யின்னொளியில்லை
இப்பொருட்குப் பலங்காண வேறொன்றில்லை
இதிலே காட்டிடவோ தனக்கள்ளகோது
இகபரமு முண்டாகுஞ் செகத்துத்தி
இதிலே பாவங்களறுப்பார் சித்தர்
இத்தமுறை வேதாந்தத் தாயிபத்தும்
இதிலே பூரணமுங் கண்டிருக்கும்
இடமொன்றும் வாராது இடறும்பாரே.

திடமான மனதல்லோ திடந்தானப்பா
திருவான லட்சுமிப்பெண் ணூக்கமாகுள்
குடமான தன்னியத்திற் பத்தாக்கண்ணும்
கூர்விழியாங் கண்பத்து தனத்திரண்டிற்
சடமான கொங்கைக்குட் கண்தானேது
சாத்திரத்திற் பெரியோர்கள் சொல்லாரப்பா
அடமான மங்கையடா சொல்லக்கேளு
ஆகார கொங்கைதன்னிற் கண்ணைக்கேளே. (50)

கண்ணான தொருகொங்கைக் கஞ்சேகண்ணும்
கதித்தெழுந்த கொங்கைதனிற் பத்தாக்கண்ணும்
ஒண்ணான கொங்கைக்கு ஒன்றேகண்ணும்
ஒன்றுமுதல் மூன்றாக இருந்தால்நன்றாம்
கண்ணான திருகொங்கைக் கஞ்சேகண்ணாய்க்
கண்டாலு மெத்தவன்று ஆறுங்கண்ணே
பெண்ணான கொங்கைக்கே கண்தான்பத்தும்
பிரியாம லிருந்ததென்றால் முத்தியாமே. (51)

முத்தியா மிப்படிக்கண் ணைனுங்கண்டால்
முக்கியமாம் பூசைவிதி முறையுமாமே
சத்தியாஞ் சித்தியடா முறுகண்பாரு
சண்முகற்கு மமுதளித்த கொங்கைகொங்கை
புத்தியாய்க் கண்டறிவா யித்தப்பூசை
புண்ணியற்கு மெய்துமடா கர்மிக்கில்லை
உத்தியாய்ப் பாராதே குருவைக்காரு
உன்மனத்தைக் கண்டுகுரு வுபதேசிப்பார். (52)

உபதேசம் நற்குரு வாய்க்கவேணும்
உன்மனத்தா யமுறுகண்பால் கொள்ளவேணும்
உபதேசஞ் சற்குருவைக் காண்பதெப்போ
உன்தேகஞ் சத்தியமாய் வாழ்வதெப்போ
உபதேச மானதெட்டு மிரண்டும்பத்தாய்
உட்கொண்ட தப்பாலு முறுகண்பத்தாய்
உபதேச மானதிந்த முறுகண்பார்க்க
ஒருபிள்ளை பிறவாதோ கருவாய்த்தானே. 53)

கருப்பத்தி ராறப்பத்தக் கண்டேனப்பா
கைப்பத்திக் கொண்டதின்றே யிதனைப்பார்த்து
உருப்பத்திப் பத்தியையும் வைத்தாய்வைத்தாய்
உற்பத்தி கண்டுநீ குருவைப்பாரு
இருப்பத்தி சத்தியொளி சண்ணை கண்டாற்
இயானத்தி குருவாருஞ் சுருவைசொல்வான்
விருப்பத்து அதைக்கேது விணவொப்பாரு
விள்ளாதே கசடறுக்கு வெளியாகாதே.

ஆகாத பிள்ளையென்று வடிக்கத்தன்று
அத்தமுது கண்ணைநித்துண் டாகச்சேரு
வேகாத காலதலையை போதச்சொல்லு
விள்ளாதே வேதாந்த முடிவைச்சொல்லு
சாகாத தலையறிய முக்காலசொல்லு
சமூலமாய்க் காண்பதற்கு மூலஞ்சொல்லு
போகாத புனல்காட்டி மதியைக்காட்டிப்
புத்தியாய்ச் சிவசத்தி பூசைசொல்லே.

சொல்லக்கேள் வாதமுறை குட்சத்தன்னைத்
தொடுகுறியாய்ச் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
கல்லுக்குளத்தாலே பாரையுப்பைக்
கண்டிப்பைக் கண்டுமதி யுப்போடப்பா
புல்லுக்குள் ரசவித்து உண்டுபண்ணு
புத்தியா யப்பெரித்து அப்புவோடே
மல்லுக்கு வென்றோடே கைகட்டாதே
வாதுக்குச் சொல்லுகிறேன் வாதம்பாரே.

வாதத்திரத் தாலேகால் வாதமாச்சு
வாய்ப்பாச்சு பொய்யென்றால் வீறுப்போச்சு
நாதத்தில் விந்துவடா பூவிற்றுக்கு
நாக்குண்டு பேசுதற்குப் போக்கைக்கேளு
நாதத்துக் கப்பாலே ஆராயல்ல
கண்ணுக்கு மூக்குக்குச் செவிதோணுது
ஆதத்துக் கதினாலே யெல்லாந்தோணும்
சொன்னதும் தெரியாட்டாற் சும்மாபோமே

போமோதான் சூதத்தில் வேதைகம்மா
போக்கறிந்தாற் சூதமடா அந்தா அந்தா
ஆமோதா னிதினாலென் றெண்ணவேண்டாம்
அமுரியடா உப்பாலே குமரிநாதம்
வேமோதான் கோமுகத்தில் வேகம்வேகம்
வேகமா முப்புடக்குக் குடமாம்வேதை
ஓமோமோ சரக்குவகை சொல்லவில்லை
ஒருசரக்கும் வேண்டாங்கா ணுறுதியாமே. (58)

உறுதியா யெட்டுக்கு ளண்டபிண்டம்
உட்கருவும் வெளிக்கருவு மொன்றாய்க்காணும்
உறுதியடா வேதையிது வுண்மைபாரு
உட்புகுந்து கருவிடையம் பார்த்தாற்கேளு
உறுதியடா கோமுகத்தில் வாதவித்தை
உப்பாலே ஆடுமடா தொந்தங்கோடி
உறுதியடா யிதைவிட்டா லொன்றுமில்லை
உத்தமர்க்கு உள்ளாமே யுள்ளந்தானே. (59)

உள்ளபடி சாத்திரங்கள் சித்தர்சொன்னார்
உட்புகுந்து முறுகண்பார்த் தொளித்தாரப்பா
கள்ளமன்றிச் சொன்னேனு னிந்நூலிற்
கருவிடையம் பார்த்திதனைக் கண்டாலப்பா
உள்ளமதிற் கன்னியடா ஓமசத்தி
உள்மணித்தாய் மணிகாட்டி யுரைப்பாளப்பா
விள்ளவென்று விதைப்பார்க்க விள்ளப்போமோ
வெளிமேதானக் கருவிடையம் வெளியாய்த்தானே. (60)

வெளியல்லோ செவிக்குறைத்தார் சூட்சத்தாலே
விண்கண்ட தெந்தக்கண் கண்ணேகண்ணே
வெளியல்லோ செவியாலே நன்றாய்க்கேளு
வேதாந்தஞ் செவிகேட்க இன்னங்கேளு
வெளியல்லோ மூச்சென்ற காலாற்றீயை
வேகத்தால் மூட்டியல்லோ வெளியைக்கண்டாள்
வளியல்லோ வாயிருக்க நாவும்பேச
வார்த்தையென்ன புருவமையம் நாவுமாச்சே. (61)

காயாமே [illegible]
கைத்தலம் [illegible]
சாவாமே [illegible]
சக்கரம் [illegible]
பூவாமே [illegible]
புத்திக்கடல் [illegible]
ஆவாமே [illegible]
ஆலக்கட்டுக் [illegible]

அறுமுகமுடை புத்திக்கடல் [illegible]
அப்புடை [illegible]
அறுமுகமுடை சத்திவேல் [illegible]
ஆர்ச்சிய [illegible]
அறுமுகமுடை முகங்கள் [illegible]
ஆணைக்கம் பொற்குடை [illegible]
அறுமுகமுடை முகக்கண்ணாறு [illegible]
அபிவிரி வெறுக்கும் [illegible].

ஆச்சரிய மாகியுடை முகவிலாசத்
ஆகுமுடை சக்கரமும் [illegible]
பேச்சென்று பேசாமற் பேசிக்கொள்ள
பேய்மக்கள் ஒருவருக்கும் [illegible]
ஏச்சென்று பிக்ஷாமைத் தொல்லையுண்டாம்
ஏறுமயிற் [illegible] திருக்குமரனை
காச்சென்று காச்சியிடை [illegible]
கைக்குள்ளாய் [illegible] தருமையாமே.

கருவறிய வித்தாலிற் கருக்கால் [illegible]
கருத்துமைத் தாய் பராசக்தித் [illegible]
கருவறிய காமப்பால் காணாமல்
கருச்சொல்லிக் காட்டாமற் கொல்லாச் சொன்னார்
கருவறியக் கண்கொண்டு முகங்கண் பார்த்துக்
கண்டபடி கொங்கைத்தாம் கண்மேலென்று
கருவறியா பித்தைப்புண்ணீட [illegible]
கண்காட்டிக் கண்காட்டி மென்றதுவே.

கண்காட்டும் என்குருகொங் கணரே ஐயா
கருக்காட்டும் உருக்காட்டும் கண்ணேகாட்டும்
விண்காட்டும் முப்மூல வெளியுங்காட்டும்
மெய்காட்டும் கைகாட்டும் மூலர்போல
எண்காட்டும் வழியாலே யொளியைக்காட்டும்
ஏகாந்த விளையாட்டுங் குளிகைகாட்டும்
புண்காட்டிப் பொதியாதே நாலும்பூவும்
பூவரிய யென்கண்ணால் முதுகண்பூட்டே. (66)

பூட்டான கண்ணெட்டு மிரண்டேகண்ணும்
பூப்பட்டு முழுகுருடாய்த் தோணவில்லை
காட்டான பூவொன்று நந்தியாவட்டம்
கண்கண்ட பூவோடே சரிகைவெள்ளி
கூட்டான குளிகையது மூன்றுங்கூட்டிக்
குருடான கண்ணுக்கு குளிகைபோட்டு
ஆட்டான காலாட்டைக் கண்ணிற்காண
ஐயாகொங் கணரீ ரருள்செய்வீரே. (67)

அருள்செய்வீ ரென்குருவே யென்றுபோற்று
ஆகாகா அருட்கண்ணு ளருளைக்காண
அருள்செய்வார் சதானந்த குருவைக்காண
ஆச்சரியங் கண்ணாலே பார்க்கப்போமோ
அருள்செய்வார் கொங்கணர்தான் குளிகைகாட்டி
ஆடுதற்குச் சதகோடி தொந்தமாட
அருள்செய்வார் சிலம்பொலிதான் கண்டமூர்த்தி
அறுபத்து நாலுசித்து மாடலாமே. (68)

ஆடுதற்குக் கால்காட்டி மூலங்காட்டி
ஆறுவரை மேல்மூலந் தானுங்காட்டி
ஆடுதற்கு அட்டாங்க யோகங்காட்டி
அப்பாலும் வசிரிகொள்ளுங் குளிகைதாண்டி
ஆடுதற்கு அண்டம்பே ரண்டங்காட்டி
ஆனந்த வசிரிகொண்டு யேறியேறிக்
கூடுதற்கு நிர்மயமாய் நின்றசோதி
குணமறிய நிர்க்குணமாய்க் கூடுவாரே. (69)

கூடுவா ரைத்தற்றி மெய்ப்பத்தேதுற்று
குறையுடைய கடைப்பிள்ளை பாசத்தாலே
கூடுவார் பதினெட்டுப் பேர்களோடேயாக்
கோத்திரமாய் ஆத்திரமாய் பாசக்காரராக்கத்
கூடுவார் கடைக்காலைத் தாக்கத்தாலே
கோடியிலே சவ்வொடு மிகத்தானகாண
காடுவார் கல்லுபட்டல் காண்பதேதான
காதாந்தப் பூரணத்தி னுகிக்காலே.

காலான பூரணமே முதலன்றாகும்
காதமட்ட மாதர்க்க விதனைத்தேது
காலான பளிங்கூடுல் காலேவித்து
காலெட்டில் காயத்திற் குடிக்கூடும்
மானான காயத்தில் சத்திபட்டனிலே
மகாரத்தில் மாயையைத்தா வைப்பரீத்தர்
வேலான வேலுடை மைக்கேவச்சத்தி
வெற்றிமேவ லெட்டான வேலாப்பானே.

எண்டெட்டும் பூரணமாய் நின்றமேவலே
காதர்க்க வாறுமுகமாய்க் கண்டாரப்பலே
எண்டெட்டிற் காலமேலே பொன்னாகவொழுங்
காட்டினர் மூக்காலும் மேலேக்கொண்டு
மூண்டொட்டா தலமர்மேல் மாண்டுபோச்சு
முத்தியடா ஆறுமுகனார் கைவேலப்பா
ஒண்டொட்டா தமராத்த தியக்தானேபச்சை
ஓராறு மொருமுகமாய்க் காணலாக்கே.

காணவே சாரூப சாயுச்சியத்தைத்
கண்கண்ட சாருபங் கண்டேனாறுபம்
தோணவே சாருபம் வேகக்காலே
சொல்லுக்குட் டெரியாத ரூபாரூபம்
ஊணவே முதாகன்றால் மனக்கண்ணுடன்
உட்காலும் மூக்காலாய் ரூபக்காலும்
காணவே நாறேத்த சொல்லக்கேளு
காச்சியார் நெற்றியிலே கர்லேபுனே.

காலூணி வணையிலே முக்கால்காலாய்க்
கண்காணு ரூபமடா ரூபங்காணும்
காலூணி மூலத்தில் யோகம்பாரு
கருணைபுரி திருமூலர் பாதம்போற்று
நூலான சாஸ்திரங்கள் பார்த்தாலென்ன
நூறுதா முபதேசஞ் சொன்னாலென்ன
சேலான மூலருட பேரனெங்கள்
சிங்கமடா கொங்கணர்தன் செயலைப்பாரே. (74)

செயலான கொங்கணரே யெங்கள்நாயன்
சித்தான சித்தருக்குங் கீர்த்திசெய்தார்
மயலான பெண்மாயைக் கண்ணைக்குத்தி
மனமான முதுகண்ணால் மனக்கண்பூட்டி
நியமான நந்திசிவா னந்திபாதம்
நிற்குணமாய்க் கண்டறியத் தெண்டம்பண்ணி
மயமான வமுதமடா வுண்ணச்சொல்லி
மவுனத்தாற் பேர்சொல்லி வழிசொன்னாரே. (75)

வழிசொல்லு முன்னேதான் பட்டபாடு
வழியோடே சொல்லவென்றால் வெகுநாட்செல்லும்
தெளிவில்லாப் புனலாகி யன்றுகொண்டு
தேசத்தில் வாய்வீணை பேசிப்பேசி
அளியான சேற்றில்மன மழன்றேனப்பா
ஐம்பொறியாற் பரியைவிட்ட மிச்சமாகி
வெளியேறி வருகையிலே வாதவூரில்
வேதியன்போ லென்குருவும் வந்தார்பாரே. (76)

பாரப்பா அவ்வூரி லையனையன்
பண்பாம்வே தியனுந்தா யாதியென்முன்
ஆரப்பா தாயாதிப் பங்குதன்னை
ஆர்கொடுப்பா ரென்னோடே பிறந்தாருண்டோ
சீரப்பா வேதியன்று மென்னைப்பார்த்துச்
சீதனமோ உன்தேட்டு மெங்கேயென்றான்
பேரப்பா சொல்லறியே னையன்சொன்ன
பேச்சாலே பிரட்டெல்லாங் கண்டேன்பாரே. (77)

கண்டேனே [illegible]
[illegible]
பண்டேதா [illegible]
[illegible]
தொண்டேனை [illegible]
சொன்னேனே [illegible]
உண்டேனே [illegible]
உண்மையிலே [illegible]

போற்றினேன் [illegible]
பூரணமாய் [illegible]
போற்றினேன் [illegible]
பூட்டுமே [illegible]
போற்றினேன் [illegible]
போய்ப்பார்த்து [illegible]
மாற்றினேன் [illegible]
மாண்மௌனம் பார்த்தவடா பார்வையதாமே.

பார்வையிலே வெகுகருக்கு விதமுண்டாம்
பார்த்தாக்கா லருணகிரி [illegible]
பார்வையிலே யிவர்களுட பார்வையெல்லாம்
பகாரிது கதிர்மதிய [illegible] பார்வை
சேர்வையிலே குறிவையடா [illegible]
சித்தருக்குள் திருப்பதமாய் கண்டபார்வை
கூர்மையிலே கூர்மையடா முக்கண்கூர்மை
குருடனுக்கு வழிகாணுங் குறிதானப்பா.

குறியாரும் பேராரும் [illegible]
கொள்முறை [illegible] துறைகளப்பா
குறியாரும் காணகாற் கரணங்களில்லை
குற்றமில்லை மெய்ஞானம் [illegible]
அறிவாகு மூலமுக [illegible]ப்பாரு
அண்டமடா கண்டவர்க்கு [illegible]
நெறியாக ஐபஞ்சா பஞ்சப்பார்க்க
நிலைத்தவர்க்கு மூன்றமொன்று [illegible]ப்பாரே.

நிலைத்தாக்காற் காலறிந்து தீயைமூட்டு
நெருப்பாறு மயிர்ப்பால மப்பாற்சேரு
மலைத்தாக்கா லொன்றுமில்லை மனதேகண்ணாய்
மதியத்திற் காலைநீய்க் காலையூன்று
உலைத்தாக்கா லூதையிலே நந்திபற்றி
ஓகோகோ பற்பமடா கருவெயெல்லாம்
சிலைதாக்குங் கதிரோறும் லகிரிகொண்டு
சிவசிவா கால்நிலையும் வாசியாச்சே. (82)

வாசியடா கைவாசல லாடமீதில்
வதனைம்சட் கோணமுக் கோணப்பா
தேசியடா வுதையகிரி வட்டமேறிச்
சிவசிவா வென்றல்லோ மாறிமாறி
காசியடா கண்ணுக்குஞ் செவியுங்கேட்க
நாறுமது காலாகி வந்ததேசி
வீசியடா வாய்பேசி வீசும்வீசும்
வீதியிலே யறுவீதி வட்டமேறே. (83)

வட்டமடா சூரியனை சந்திரந்தி
மதியாலே யுள்ளமதில் மதியமூறும்
வட்டமடா பிரணவமே யோதாவட்டம்
மவுனமடா நாதாக்கள் சொல்லார்சொல்லார்
வட்டமடா ஆறியிற்கண் வட்டமாகி
மனக்கண்ணால் வேதாந்தம் பார்த்துமார்க்கம்
வட்டமடா துன்மார்க்கம் நன்மார்க்கந்தான்
வந்தவித மொந்தவித மந்தம்பாரே. (84)

அந்தமடா ஆதிமூக லவ்வுஞ் சவ்வாய்
அந்தகுறி யட்சரங்க ளல்லவல்ல
அந்தமடா முடிந்தவிட மறியப்போமோ
ஆதியென்ற நாதத்தால் விந்தையந்தம்
சொந்தமடா வூண்கொண்ட காயந்தன்னில்
தூலமுடன் சூட்சமுமாய் நின்றதேகம்
வந்தவித மறியாமல் மாண்டேபோனார்
மவுனமடா பிள்ளைகளே சொல்லக்கேளே. (85)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அன்[illegible]
[illegible]

எய்யாமலே [illegible]
இப்புவியும் [illegible]
கையாதிலே [illegible]
தக்க [illegible]
செய்யாதிலே [illegible]
[illegible]
ஐயாதிலே நல்திருவின் [illegible]
இனிய [illegible] யாருக்குமே.

சதாசிவமும் சத்தியும் [illegible]
சமயாதீ[illegible]
மகாவிதமா [illegible]
[illegible]
பிராணாதி நாதாந்த [illegible]
பிசகாத முக்காலம் [illegible]
சதாசிவமும் [illegible]
[illegible]

உள்ளக்கோ [illegible]
உருக்கி [illegible]
கள்ளம்பு [illegible]
களிக்குமிடக் [illegible]
உள்ளின்ப [illegible]
உத்தமனே [illegible]
[illegible]
வெளியாறு [illegible]

காலாலே நடப்பதற்குக் கண்தான் வேணும்
கண்பார்த்து நடவாட்டா லிடறுங் காலும்
நாலாலே மூன்றான காய்ச் சூட்சநாலாய்
நாட்டாரிக் கட்டெட்டாய் எட்டுமாண்டைக்
காலாலே யனுகூலம் நடந்தார் பாரு
கைக்குள்ளே காலாறுங் கபடமில்லை
சேலாலே செலுத்துகிவா னத்தியப்பா
சேர்ந்திருப்பா னென்றேகஞ் சித்தியாமே. (90)

சித்தியாம் யோகமுதல் ஞானஞ்சித்தி
செப்புதற்கு மூலமுதல் வாதஞ்சித்தி
சித்தியாஞ் சிவசத்தி பூசைசெய்யத்
திடன்மெத்தக் கெவுனத்தின் குளிகைசெய்யச்
சித்தியா மெத்தெந்தப் பூசைக்குந்தான்
செய்முறைகள் தான்தவறா தன்மைசொன்னேன்
முத்தியா மிந்நூலின் கருவைப்பார்த்து
முறையோடே செய்தாக்கால் முத்திதானே. (91)

தானென்ற இந்நூலின் வேதாந்தத்தைத்
தவறாமல் மூலமுதற் சூட்சஞ்சொன்னேன்
தேனென்ற யோகமுதல் ஞானபாதம்
தேர்ந்தமட்டுந் தெளிவாகக் கருவைச்சொன்னேன்
வானென்ற கதிர்மதியுஞ் சுழினையோடு
மந்திரங்கள் தியானத்தின் வழியுஞ்சொன்னேன்
கோனென்ற மதத்தாலே வாய்வீண்பேசம்
காய்மட்டை கிளைக்கூட்டம் கழியவென்றேனே. (92)

என்றென்று மழியாத குருவேகத்தி
யென்றென்றுங் கேட்பதற்குத் தியானஞ்சொன்னேன்
நன்றென்ற நாதாந்த முகங்கொண்ட
நாதாந்த முதுகண்ணாற் கொள்ளச்சொன்னேன்
ஒன்றென்ற சதானந்தி பூசைமார்க்கம்
உத்தமர்கள் செய்வதற்கு முறையுஞ்சொன்னேன்
அன்றென்ல அந்தமுத லாதிமூலம்
அட்சாத்தி லட்சூட்ச மறியச்சொல்லே. (93)

அறிவதற்குக் கா[illegible]
அப்புறத [illegible]
அறிவதற்கு மூக்கிய[illegible]
ஐம்பொறிகள் [illegible]
அறிவதற்கு முக்கண் [illegible]
அப்பாற் பார்ப்பதற்குக் [illegible]
அறிவதற்குப் [illegible]
ஆசாரமாமுனைக் [illegible]

முனைபார்க்கும் பார்வையின் [illegible]
மூழிகண்ணேர் [illegible]
தனையறியத் தாய்ப்பூரக் [illegible]
தன்னிடத்திற் பால்[illegible]
மனையான ஆதாரம் [illegible]
வழிதனையும் [illegible]
அனையான தாயதிபத் [illegible]
அறுகண்ணில் சாதகர் வழி[illegible]

சொன்னேனு நெடுபுலி புரக்குப்பாரு
சுற்றத்தார் புற்றினமா [illegible]
சொன்னேனு னத்தவ வினைகள் [illegible]
சுகமாகும் முலினையில் [illegible]
சொன்னேனுன் மூன் [illegible]
சூட்சமதில் வெளி [illegible]
சொன்னேனுன் சுழு [illegible]
சோதித்துச் சுருப்பாரு [illegible]

சோதியடா நாதாந்தச் சோதி [illegible]
சுருக்கமடா [illegible]
ஆதியடா விந்தான தொந்தப்பாரு
அந்தரங்கஞ் சொல்லாதே அ[illegible]
நீதியடா பேர்பாதி பொன்நாதி
நின்பங்கு மென்பங்கு [illegible]
பாதியிலே பரிபாதி சூட்சமப்பா
பக்கத்திற் சொல்லாதே பங்கையாமே.

வாங்கையிலே ருட்சமுடன் வாவாவென்றால்
மனம்வெறுக்க வையகத்திற் சீச்சீயென்பார்
நீங்காதே நீங்கவருங் காலமையா
நித்திரையிற் புத்திவரும் நிறைவுநீங்காப்
பாங்கான கொள்கையிது பூசைதன்னிற்
பழுத்தகனி கனிந்தனிழும் பண்புமாகும்
பூங்காவுங் காவடா புதையல்மெத்த
புற்றரவு சூழாமற் புத்திப்பாரே. (98)


புத்திவா றென்சொன்னேன் பின்னுஞ்சொன்னேன்
பொய்யென்று சொன்னக்கால் புத்திநாசம்
புத்திரனே சொன்னேனு னித்தநாளைப்
போற்றிப்பார் சாயுட்ச பதமுமெய்தும்
புத்தியடா சன்முகனுங் குருவாயின்று
பொதிகைமுனிக் குபதேசஞ் சொன்னபுத்தி
புத்தியடா தங்கம்போற் கொங்கணர்தான்
புத்திசொன்ன பெருமைமெத்தப் புதுமைகாணே. (99)

காணாத சன்மானும் முத்திரானும்
கயிலாசஞ் சொர்க்கமடா பதவியுண்டாம்
தோணாத சூத்திரங்கள் மூன்றான்சூட்சம்
தோணுமடா யின்னாலிற் சொன்னேன்கண்ணே
பூணாத பூணுதா லின்னானூலும்
பூவாகும் வாசமடா சுவாசத்தக்கம்
வீணாசப் போகாது தொந்தக்காதி
வேதாந்த சூத்திரத்தின் கண்தான்முற்றே. (100)

கடைப்பிள்ளை சிவயோகஞானம் 100

முற்றிற்று.

மதுரை இன்சிக்கல்சொட் சிவராஜயோகி பங்காரு சாமியார் அவர்கள் குமாரர் முத்தியாலு நாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



சிவமயம்.

ஸ்ரீகுருபாதம்

கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

கலைக்கியானம் 120

ஓமென்ற மூலகலை பதிவைத்தேற்றி
உதிபூர்வ கொங்கணவர் பதிந்தேன்கொண்டு
ஆமென்ற பூரணமாங் கலைபூரணத்தை
அறிந்துமதி மகிமையுடன் அறிவையேற்றி
நாமென்ற சுழிமுனையிற் குண்டலியையேற்றி
நாதாந்தம் மெய்ஞ்ஞானங் கண்டுமகிழ்ந்து
தாமென்ற சங்கற்ப விகற்பம்போக்கி
சகலகலைக் கியானபூரணத்தைக் கொண்டேனே.

கொண்டேனே யப்போது குருவைக்கண்டு
கொங்கணவர் மனமகிழ்ந்து வரவேயென்னைச்
சென்றேனே யங்கிருந்து அன்போடப்பால்
சேயான கடைப்பிள்ளை தெளிவாயென்னைக்
கொண்டேனே யவருடைய பாதம்போற்றிக்
குறித்துமிகத் திருவடியைப் பூசைசெய்து
மண்டலமூன் றதிலிருந்து கலைக்கியானத்தின்
வாழ்த்திருவென் றனுக்கிரகம் வழங்கினாரே.

வசனித்து அனுக்கிரக வார்த்தைபெற்று
மார்க்கமுடன் உட்கிரக பாக்கியங்கண்டு
நிசனித்த ஆதார மூலங்கொண்டு
நிலைதவறுங் கலையறிந்து முடிமேற்சென்று
இசனித்த சுழிமுனையில் நிற்கும்போது
திருவாசி வாசியென்ற கலையைக்கண்டேன்
பசனித்த கலையறிந்து மைந்தாகேளும்
பாடினேன் பன்னிரண்டு பத்துதானே.

னன்ற வாசிகலை பன்னிரண்டாய்
தானுன்னே தானெழுந்து தானே தானாய்
னன்ற உள்வெளியாய்ப் பாய்ந்துபாய்ந்து
ஒடுமுடிந்து வுலகமெல்லா முறுதிகெட்டு
னென்ற குருவருளை யறியாமற்றான்
கூற்றுவன் றன் பாசத்திற் குலைந்துபோனான்
ரன்ற சத்திசிவ கலைதானமல்
இடைக்குமனந் தனன்றுமுயி ரிறந்தார்பாரே. (3)

பா உடலுயிரை யறிந்துகொண்டு
பத்தியுட னிகபாசா தகமாய்நின்றால்
பா யின்னமொரு கருத்தைக்கேளு
கைகண்ட சித்தியடா கருணைதங்கும்
பா ஆகார மூலத்துக்கு
நிலையான பஞ்சகர்த்தான் வசமதாக
பா அறிவார்க ளறியமாட்டார்
அறுக்குறிலை பெறுவதற்கு அங்கங்கேளே. (4)

பா நாலொன்றுக் கெட்டுச்சாமம்
இருமையுட னில்லறத்தோ டிருந்துவாழ்ந்து
பா விடியவொரு சாமந்தன்னில்
ாட்டமுடன் றுயிலெழுந்து நம்மையாக
பா தன்னுலே கால்முகங்கள்
மேமுடன் சுத்திசெய்து யிருந்துகொண்டு
பா விபூதிதூ ளிதமேசெய்து
சுத்தசெப மாலைபத்தி யுடனெடுத்தே. (5)

செப மாலையை யெனவெடுத்துப்
திபிடது கையிற்பூதி தனிலிறுத்திச்
றுடன் விசிட்டு விசுவன்மைந்தா
குதியுள பிரணவத்தைச் சுகமாய்ச்சாத்திப்
புடன் பிரணவத்துள் ஸ்ரீங்கென்று
ரணமாய்க் கேசரியில் மனக்கண்சாத்தி
றுடன் ஓம்கிலியுங் கென்றேமைந்தா
ருவேறப் பதினாறு உருவேசெய்யே. (6)

உருவறிந்து ஒரைதனிலே கலைபதினாறையும்
ஒளிவிளக்காய் நிறைந்தவொளி யுடன்கண்டாலும்
கருவறிந்து ஆகாயவெளி வெளியினில்நின்று
கருணைபெற ஓங்கிலி யங்கிலியை நிறுத்தி
தெருவறிந்து ஓங்கிலி மங்கிலியை நிறுத்தி
சிவசிவா ஓங்கிலி சிங்கிலியை நிறுத்தி
குருவறிந்து செப்புகிறேன் மைந்தர்க்குந்
சீர்மையுடன் ஓங்கிலி யங்கிலியை நிறுத்தே.

வங்கென்று சோதியின் மைந்தா கேளு
மார்க்கமுடன் ஓங்கிலி மங்கிலியை நிறுத்து
எங்குநிறைந் திருந்தபஞ்ச கர்த்தாவங்கே
ஏகமாய் மயமான சொருபங்கண்டாலும்
சங்கையுடன் ஓம்சிறீங் றிங்றீங்கெங்கெனச்
சணத்திலொளி ரவிமதியைக் காணலாகும்
மங்களமாய் நிறைந்திருப்பாய் விடியச்சாமம்
மார்க்கமுடன் ருலினாமூக்கு வகையாய்ப்போமே.

வகையறிந்து ஒரையிலே மைந்தாகேளு
மகத்தான பஞ்சகர்த்தா ரவரோடொக்கத்
தகையாத ரவிமதியோ டேழுபேரும்
சங்கையுடன் தன்னொளியிற் காணலாகும்
நகையாமல் மனதடங்கி விடியச்சாமம்
நாட்டமுடன் ருலினாமூக்கு நன்மையாகத்
திகையாமற் றானிருந்து ஆறுதாரத்
தெரிசனையிற் கட்டளையாய்த் தினமுந்நோக்கே.

நோக்கமுடன் தானிருந்து மனக்கண்கொண்டு
நுண்மையுடன் ஆதாரமியாவைம்பண்ணி
வாக்குமனம் ஒன்றாக மைந்தாமைந்தா
மனதடங்கிச் சுழிமுனையில் வங்கென்றோட்டி
தாக்கிமன தறிவாலே நின்றையா
சணத்திலே சுழினைவழி தானேகாணும்
பாக்கியமாய் சுழினைவழி கண்டாஸ்மைந்தா
பத்தியுடன் வாசிசிவ யோகஞ்செய்யே.

செய்யப்பா வாசிசிவ யோகஞ்செய்யத்
　　தீர்க்கமுடன் லங்கெனமூ லத்தில்ரேசி
பய்யப்பா மூலத்திற் ரேசித்தப்பாற்
　　பாலகனே சுழிமுனைவழிக் குள்ளேநீயும்
மெய்யப்பா சிங்கென்று பூரிபூரி
　　மேன்மையப்பேர் ரேசகபூ ரகமாய்நின்றால்
பொய்யப்பா போகாது வாசிதானும்
　　பூரணமாய் உள்வெளியாய் பொருந்தும்பாரே. (11)

பாரப்பா மனம்பொருந்துமே சகபூரகமாய்ப்
　　பத்திமுத்தி யானவழி ராக்கியமாக
நேரப்பா தானிருந்து மனக்கண்கொண்டு
　　நேமமுடன் வாசிதா ரணையைசெய்யச்
சாரப்பா திருநடன மாடிநின்ற
　　சத்திசிவ கலைகள்ரெண்டுந் தன்றுட்டங்கும்
ஆரப்பா கலையறிந்து நிறுத்தப்போரார்
　　அருள்பெருகுஞ் சுழிமுனையை யழுத்திப்பாரே. (12)

அழுத்தியந்தச் சுழிமுனையைப் பார்க்கும்போது
　　அகாரமுடன் உகாரமது மகாரமூன்றும்
சுழித்தசுழி நடுமலையிற் கண்டகாட்சி
　　சொல்லுகிறேன் ஓங்கார சுத்தமாக
வழுத்துதற்கு அரிதான வடிவேல்போலே
　　மண்ணுவிண்ணும் வடுருவி வளைந்துகொண்டு
செழித்தமன துறுதியுள்ள சித்தருக்குச்
　　சிவசிவா பழம்பொருளாய் விளங்குந்தானே. (13)

தானேதான் தானவனுங் விளங்குகின்ற
　　சகலகலை பூரணஓங் காரந்தன்னைத்
தானேதான் சூரியகலை உகாரமாகும்
　　சதாபோத சுழிமுனைஓங் காரமாச்சு
தானேதான் சுழிமுனையிற் றூக்கிப்பார்த்தாற்
　　சந்திரகலை அகாரமதாய்த் தானேகாணும்
தானேதான் மூன்றுமொன்றாய்க் கண்டபோதே
　　சகலகலைக் கியானமெல்லாம் ஒன்றாப்பாரே. (14)

ஒன்றான ஓங்காரஞ் சகலத்துக்கும்
உடலுயிரும் பொருளாய வுறுதியாகி
நன்றான முப்பொருளு மொன்றாய்நின்று
நாடகமாய்த் திருநடனம் நன்றாயாட்டுங்
குன்றாத முக்குணிகை தானாகிக்
குருவான திருமூர்த்தி மூப்பானாகி
நின்றாடங் கொண்டதொரு காடுமொன்றாய்
நிறைந்ததுவும் மறைந்ததுவும் மாயந்தானே.

மாயமென்ற வாழ்க்கையிலே உபாயமாக
மைந்தனே தானிருந்து மார்க்கமாகக்
காயமென்றே கருவிகளை யறிந்துகொண்டு
கலையான ரவிமதியின் கலையைப்பார்த்து
நேயமுடன் கண்டமதி லங்கென்றாளி
நீமகனே வங்கிங்கு வங்கென்றேதான்
தாயகமாய்க் கால்மாறி நடனங்கொண்டால்
சதாபோத யோகசிவ வாழ்வுதானே.

தானான வாழ்வுசிவ யோகவாழ்வு
தன்மையுள்ள அஷ்டாங்கச் சித்தவாழ்வு
கோனான குருவருளால் தான்றனிக்
குருவான கலையறிந்து கலைமேற்கொண்டு
தேனான நவக்கிரக பூசைசெய்து
சிவசிவா இல்லறத்தைச் சுத்திபண்ணி
நானான அகமிருத்தி யேகமாக
நாட்டமுடன் பூசைமடந் தன்னுட்செல்லே.

செல்லடா பூசைமடந் தன்னுட்சென்று
சிவாவென்றே செலமெடுத்துப் புரோசித்தப்பால்
மெல்லடா வடமுகமா யிருந்துகொண்டு
மேன்மையுட னீசான முகூர்த்தங்கொண்டு
சொல்லடா சிவாயநம வென்றுசொல்லிச்
சுத்தமுடன் விபூதியைநீ கையில்வாங்கி
நில்லடா பலகையின்மேல் நிறுத்திமைந்தா
நேசமனே நவகோணம் நன்றாய்ச்செய்யே.

செய்யடா நவகோணம் நன்றாய்ச்செய்து
தீர்க்கமுட னதுமேலே விந்துசாத்தி
மெய்யடா நால்வாசல் கோட்டைசெய்து
மேன்மையுள்ள நவகோணம் நடுவைமைந்தா
கையடா தவறுமுக் கோணத்துள்ளே
கருணைபெற வட்டவிந்துக் குள்ளேபோடு
வையடா ஓம்ரீங் கென்றுசாத்திக்
மார்க்கமுட னெட்டெழுத்து வகையாய்ச்சாத்தே. (19)

சாத்தியே நவகோணந் தன்னில்மைந்தா
சங்கையுடன் நவகும்பந் தனைவாங்கிப்
போத்தியே கும்பமெல்லாம் நூலணிந்து
பூரணமாய் மணமிருத்திச் சவாதணிந்து
பாத்திபனே மாங்குழையுந் தேங்காய்சாத்திப்
பதிவாகக் கும்பமெல்லா மாடைசாத்திக்
நேத்திரத்தின் பேரொளியாய் நவகோணத்தில்
நீமகனே கும்பமெல்லாம் நிறுத்திடாயே. (20)

நிறுத்தியந்த நடுவான கும்பந்தன்னில்
நேர்மையுடன் பரித்தகடு நன்றாய்ச்செய்து
கருத்துடனே பரித்தகட்டில் மைந்தாகேளு
கருணைபெற ஓம்கிலியுங் கிறீங்கென்று
இருத்தமுடன் நடுவான கும்பந்தன்னிற்
றிருவான பரித்தகட்டை அதனுட்போட்டு
மருத்திருந்த கும்பமெல்லாஞ் சொர்ணபுட்பம்
வரிசையுடன் தானிருத்தி மலர்கள்தூவே. (21)

தூவியன்று பழுதாச வர்க்கம்வைத்துச்
சுத்தமுடன் தாம்பூலந் தேங்காய்சாத்தி
ஆவலுடன் நாலுபுறந் தீபம்வைத்து
அன்பாகச் சற்குருவைத் தியானம்பண்ணித்
தேவிபரி பூரணியே யென்றுபோற்றிச்
சிவசிவா நவகும்பந் தனைத்துமைந்தா
பாவகமாய்ப் பூசைபண்ணித் தீபதூபம்
பத்தியுடன் சோடசமாய்ப் பூசைபண்ணே. (22

பூசையென்ன மானதமாய்ப் பூசையாகும்
புத்தியுடன் மானதமாய்ப் பூசைபண்ணி
ஆசையுடன் செபதபங்கள் தியானஞ்செய்து
அருள்வளர மனதுருக அன்பாய்நீயும்
நேசமுடன் தோத்திரங்கள் நன்றாய்ச்செய்து
நிமலனுட விபூதியைத் தரித்துக்கொண்டு
பாசபிர தமையுமுதல் நவமிமட்டும்
பத்தியுடன் நவநாளும் பூசைபண்ணே.

பண்ணப்பா நவநாளும் பூசைபண்ணிப்
பரமகுரு சிர்பாதம் பணிந்துபோற்றி
விண்ணப்பா நோக்கிநவ கோணஞ்செய்து
விசையான விபூதியையெடுத்தமைத்து
உண்ணப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
உடம்பெல்லாம் ஆனிதமா யணிந்துகொண்டு
கண்ணப்பா தானுந்தி யுலகோர்க்கெல்லாம்
கருணையுடன் விபூதியைக் கடாட்சஞ்செய்யே.

செய்யப்பா விபூதியைக் கடாட்சித்தக்கால்
சிவசிவா நவக்கிரகத் தோஷந்தீரும்
கையப்பா பண்ணிவிக்குங் குணமுந்தீரும்
கஞ்சான விஷமுதலாய் நாடாதோடும்
வெய்யதொரு பிணிகளெல்லாம் வீறிட்டோடும்
விதமான நோய்களெல்லாங் கதிகெட்டோடும்
கொய்யப்பா வந்தகூற் றுவனும்போவான்
குருவான சற்குருவின் பாதம்போற்றே.

போற்றுவது குருபதத்தைப் போற்றவேணும்
பூரணமாய் வாலைபதம் பணியவேணும்
பார்த்திபனே சுழிமுனையை அறியவேணும்
மதிவான வாசியிலே பதியவேணும்
ஆத்துமத்தின் செயலறிந்து ஆறுதாரம்
அடங்குமந்த நிலையறிந்து வொடுங்கவேணும்
காத்துநிலை தனையறிந்து ஒடுங்கினக்கால்
கயிலாச தேகமடா தன்னைப்பாரே.

பாரப்பா தன்னைமிகத் தானேகண்டு
பாதாதி கேசமுதற் பார்க்கும்போது
நேரப்பா நின்றபொரு ளொன்றேசூட்சம்
நிசமான சூட்சமடா மாயாமாயம்
ஆரப்பா அறிவார்கள் மாயாரூபம்
ஆதியந்த மாய்நிறைந்த அரூபந்தானும்
மேரப்பா கொண்டுநின்ற விசுவரூபம்
மேலான சுழிமுனையில் மேவிப்பாரே. (27)

பாரடா சுழிமுனையில் மேவிப்பார்க்கப்
பராபரமாய் நின்றபராஞ் சொரூபமைந்தா
நேரடா சுழினைமுதற் றுவாதசாந்தம்
நிறைந்துநின்ற சோதியைநா னென்னசொல்வேன்
மேரடா அண்டகிரி முடியிற்சென்று
வேதாந்தத் திருநடனங் காட்சிகண்டால்
தாரடா அடிமுடியு மொன்றாய்ப்போகும்
துலங்குகின்ற சோதியொரு மாயந்தானே. (28)

மாயமென்ற மாயமடா உடைவாசம்
மனுநீதி யறியாத உடைக்குள்ளே
தாயகமாய்த் தானிருந்து தன்னைப்பார்த்துச்
சகலகலைக் கியானதிரு வாசியேறி
காயமென்ற கருவிகளை நிறுத்திமைந்தா
கருணையுட னுறுதலங் கண்டுமேவி
நேயமுடன் கலையறிந்து தன்னுள்ளேதான்
ரேசிப்பாய் பூரிப்பாய் கும்பிப்பாயே. (29)

கும்பித்து மீராறு வரைகள்தாண்டிக்
குருவான பதியறிந்தப் பதியின்மேலே
தம்பித்துச் சந்திரபுஷ் கரணிதன்னிற்
றனிருந்து தியானசிவ யோகஞ்செய்து
அம்பரத்து வெளிதேறி நடனங்கண்ட
ஆதிகுரு கொங்கணவ ரருளினாலே
தெம்பித்துச் சகலகலைக் கியானஞ்சொன்னல்
தீர்க்கமுடன் யானறிந்து திரம்பெற்றேனே. (30)

திரம்பெற்ற மகிமையைகா ணறிந்துகொண்டு
சிவசிவா யென்றகலைக் கியானத்தமைந்தோ
உரம்பெற்ற சிந்தைபணி ரண்டெட்டும்
ஒடுக்கமென்ற கலைக்கியான முறைதிறிகொண்டு
வரம்பெற்ற பெரியோர்க ளெடுத்துப்பார்த்த
வலமிடமாய் நின்றகலை வாசியேறி
சிரம்பெற்ற தெளிவதனை முறைகொண்டு
தேவிபரி பூரணியைப் பூசைபண்ணே.

பூசையென்ன மதியமுத முண்ணவேணும்
பூரணமாய்ச் சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
ஆசையுடன் வாசியிலே மனதுவைத்து
ஆதார தெரிசனையை யறியவேணும்
ஓசையுட னாதார நடனங்கண்டு
உண்மையென்ற யிடமறிந்து வொடுங்கவேணும்
பாசையென்ற பலபாஷை பதினெண்பாஷை
பயனறிந்து சாஸ்திரத்தைப் பணிந்திடாயே.

பணியவென்றாற் குருபதத்தைப் பணியவேணும்
பரமகயி லாசவரை காணவேணும்
கணியவென்றால் வாலைபதங் கனியவேண்டும்
காலான வாசியிற்சென் றேறவேணும்
மணியான மனோமணியைக் காணவேணும்
மகத்தான சுழிமுனையில் மனக்கண்சாத்தி
அணியான ஆதார சிவாலயத்தை
அங்கமுடன் பூசித்தோன் சித்தன்றானே.

சித்தருட னிந்நூலைப் பாடினனும்
சிவசிவா சத்தியிடம் செப்பினேன்யான்
சுத்தருட னவர்பார்த்து மூலர்க்கீய்ந்தார்
சுகமாக மூலர்கா லாங்கிக்கீய்ந்தார்
பத்தியுடன் காலாங்கி போகர்க்கீய்ந்தார்
பரமான போகருமென் குருவுக்கீய்ந்தார்
வெத்தியுள்ள வென்குருவும் நன்றாய்ப்பார்த்து
வேதமே வுலகமெல்லாம் நிறைந்திட்டாரே.

நிறைந்திட்டே னிந்நூலை யுலகத்துள்ளே
நோதித்து சொல்லுதற்கு மனம்வேசாது
உறைந்திட்டே னுலகமெல்லாம் நானேநானாய்
உத்தமருக் குண்மையா யுறுதியாகும்
மறைந்திட்ட தெதினாலே யெந்தன்சாபம்
மார்க்கமுடன் றிர்த்தாக்கால் வளருந்தீட்சை
சிறந்திட்ட பூசையினு லதிகமாகும்
சிவசிவா வாலைகற்பந் திறமாயுண்ணே. (35)

உண்ணப்பா வாலைபதம் பணிந்துகொண்டு
உத்தசிவ யோகமதி லுறுதியாக
நண்ணப்பா ஆதார தியானசூட்சம்
நன்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
விண்ணப்பா நோக்கிலும் கிலிஅங்கென்று
விநாயகனைத் தியானித்து அப்பால்மைந்தா
கண்ணப்பா நிறுத்திஅங் கிலிநங்கென்னக்
கருணையுடன் பிரமனுட தியானமாச்சே. (36)

ஆச்சப்பா பிரமனுட தியானம்பண்ணி
அதின்பிறகு நங்கிலி மங்கென்றோத
நீச்சப்பா மாலினுட தியானமாச்சு
நிசமாக மங்கிலி சிங்கென்றோத
மூச்சப்பா ருத்திரனுட தியானமாச்சு
மூலையிற்று சிங்கிலி வங்கென்றோத
பேச்சப்பா மயேஸ்பரத்தின் தியானமாச்சு
பெருமையுடன் வங்கிலி யங்கென்றோதே. (37)

ஓதவே சதாசிவத்தின் தியானமாச்சு
உத்தமனே அங்கிலி உங்கென்றோத
நீதமா மிரவியுட தியானமாச்சு
நிச்சயமாய் உங்கிலி அங்கென்றோதப்
பேதமிலா மதியினுட தியானமாச்சு
பிலமாக அங்கிலி மங்கென்றோதச்
சாதகமாய்ச் சுடரினுட தியானமாச்சு
சங்கையுடன் மங்கிலி ஓமென்றெண்ணே. (38)

எண்ணவே ஒளியினுட தியானமாச்சு
    என்மகனே ஓம்கிலி சிறீம்றீங்கென்று
உண்ணவே பரமவெளி தியானமாச்சு
    உறுதியுள்ள வெளியோடே வெளியாய்நின்று
நண்ணவே வெளியோடே ஒளியாய்நின்று
    நாடெல்லாம் வெளியேறிப் போகாமற்றான்
துண்ணவே உடலறிந்து கட்டிக்கொண்டு
    சோதியணி வீடதுவே துலங்குவாயே.

துலங்குமணி மண்டபமாம் புருவமத்தி
    சோதியென்ற சுழினையடா அண்டமேரு
இலங்கொளிவாய் நின்றபர மேருதன்னில்
    இச்சையுடன் சிவசிவா யோகஞ்செய்யக்
கலங்கமில்லா மாதுரதி வாலைதன்னைக்
    கருணைபெற அவள்பதத்தைப் பூசைபண்ணிப்
பலங்கனிந்த அமுதரச பானங்கொண்டாற்
    பரப்பிரம ரூபமதாய் வாழலாமே.

வாழப்பா பின்னமொரு வகைசைகேளு
    மகத்தான மாதுராதி தனக்குமைந்தா
ஆழப்பா அமுதரச பானமூட்டி
    அன்பான உபசார மகேசஞ்செய்து
மேலப்பா களபசந் தனங்கள்பூசி
    மெத்தையின்மேற் றனிருத்தி மேன்மையாகக்
காலப்பா தான்பிடித்துக் கமலக்கண்ணிற்
    கனிந்துவரு மமுதரச தேனைவாங்கே.

வாங்கிநன்றாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணி
    வளமையுடன் றன்போசிக்க இளமையாகும்.
ஓங்கிநின்ற வாசியது ஓடாதையா
    உறுதியுடன் சுழிமுனையி லுகந்துநின்று
பாங்குடனே சிவயோகம் பதிவாய்நிற்கும்
    பதிவாகக் கற்பூர தீபங்காணும்
துங்கமல மாதுராதி பழக்கத்தாலே
    புத்தியுட னென்னாளும் வாழலாமே.

ஆமப்பா யின்னமொரு பாகங்கேளு
அருள்பெருகும் மாதாதிக் கன்பாய்நீயும்
நாமப்பா சொல்லுகிறேம் நன்றாய்க்கேளு
நன்மையுடன் பாலமுது சீனிகூட்டி
ஓமப்பா நிலையறிந்து ஊட்டினைக்கால்
உண்மையென்ற மந்திரகலை பழுதமுறும்
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
சங்கையுடன் கெங்கைதனை யுண்டபோரே. (43)

உண்டபோ ரமுதரச கெங்கைதன்னை
உத்தமனே சத்தியமாய்க் கொண்டயாறுற்
கண்டபோர் தேகமது ரவிபோற்காந்தி
காணுமடா பூரணத்தின் கலையிருலே
நின்றபா ரண்டாண்டங் கண்ணிற்றோறுமே
நிசமாக வாலைமன் மதன்போலாவாய்
கொண்டதொரு அமுதரச பானத்தாலே
குடியிருப்புப் பிலத்தடா குருவைக்காரே. (44)

காரப்பா யின்னமொரு கருவைக்கேளு
கர்புடைய மாதாதி தனக்குமைந்தா
நேரப்பா பருத்திவிதைப் பாலைவாங்கி
நிசமாகச் சர்க்கரையுந் தேனுங்கூட்டிச்
சாரப்பா அதில்விட்டுப் பிசைந்துகொண்டு
சங்கையுடன் மாதுதனைக் கூட்டிமைந்தா
போரப்பா கொண்டதொரு அமுதங்கொண்டாற்
போண்டருந் சத்தியாக் கெவுனமாமே. (45)

ஆமப்பா கெவுனரச பானந்தன்னை
ஆக்கனே பதுதினமும் பூசைபண்ணி
நாமப்பா சொல்லுகிற வகிரியுட்டு
நன்மையுடன் மெதுகைதனிற் றொதுதுபோட்டுத்
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
சங்கையுடன் கைக்கரணந் தானேசெய்தாற்
காமப்பால் வடிந்தொழுகு மகத்திதனைக்
கருணையுடன் பிக்கானில் வாங்கிக்கொள்ளே. (46)

வாங்கியே காமகலைத் தன்னிலேதான்
மகத்தான சுக்கிலங்கள் அரிவைதான்
பாங்குபெறச் சேர்ந்திசைப் புணருகட்டி
பத்தியுடன் அணைதமக நிலதம்போட்டு
ஆங்காரங் கொண்டதொரு சிருக்குநவே
அதட்டுக் பார்க்கவது அசங்கம்பாகும்
இங்கான சத்துருக்கள் வசியமாகும்
திருவான வெட்கமியும் வசமேவாமே.

வசமான சத்தியடா பொன்தாய்தேவி
மகத்தான சோதியடா மாயாசூரி
நெசமான நிட்சையிலே வெளிபரப்பில்நூ
சிங்கந்தன்னின் மேலேக்கடி திரிக்கசெய்வாள்
விசமான கொடுமைகளை யகற்றிக்கொல்ல
மெய்ஞ்ஞான மானவிய யோகம்பெற்று
நிசமான பூரணமாங் கலைக்கியானத்தை
நிமைக்கிடே அந்திசந்தி நினைவாய்ப்பாரே.

பாரப்பா பதியதிக்கு நினைவாய்ப்பார்த்தாற்
பத்தியுட னுருதலம் பதிவாய்த்தோனும்
நேரப்பா ஆதார நிலையிதின்றல்
நிசமான சுழிமுனையிற் றீபங்காணும்
காரப்பா சுழினையிலே தீபங்கண்டாற்
கருணைவளர் சிவயோகங் கைக்குள்ளாகும்
சாரப்பா சிவயோகந் திருத்துகொண்டு
சதாபோத மானசுழி கண்ணைக்காணே.

காணவே யின்னமொரு கருமானங்கேள்
கருணைவளர் சந்திரகலை அகாரமாச்சு
பூணவே பானுகலை உகாரமாச்சு
பொருந்தியின்ற சுழினையிலே மகாரமாச்சு
தோணவே மூன்றுதிரு நேத்திரத்தன்னைச்
சுத்தமுடன் றான்பார்க்க யேகமாச்சு
பேணவே யேகமென்று தன்னைப்பார்த்தாற்
பிலமான ஓங்காரக் கம்பமாச்சே.

ஆச்சப்பா ஓங்காரக் கம்பந்தன்னை
ஆதிமுத லந்தம்வரை பார்க்கும்போது
பேச்சப்பா பேசுதற்கு நாவங்கேது
பிலமான மூலைங் காரத்தியதான்
மூச்சப்பா நிறைந்தகலை வாசியாகி
மூதண்ட அண்டவரை முட்டிநின்று
போச்சப்பா நாலுகலை பாழேபாய்ந்து
பொருந்துமடா பெண்கலைதான் மூலங்காணே. (51)

காணவே கலைகள்பனி ரண்டுந்தானும்
கடந்துவெளி பாயாமற் றன்னுள்ளேதான்
பூணவே வங்கென்றும் சிங்கென்றுந்தான்
புத்தியுடன் வாசிகொண்டு புருவந்தேகித்
தோணவே தானிருந்து தன்னைப்பார்த்தாற்
சுகசிவ பிராணகலை சுத்தமாகும்
ஊணவே பிராணகலை சுத்தமானல்
உடலைவிட்டு வுயிரிருந்து போகாதென்னே. (52)

போகாத புனலதுதான் மைந்தாமைந்தா
பூரணமாய் நின்றிறைகும் வாசிவாசி
சாகாத காலதுதா னென்னவென்றாற்
சதாபோத மானதொரு நாதமாகும்
வேகாத தலையதுதான் விந்துவிந்து
வேதாந்த மூலமடா யார்க்குந்தோணு
வாகாக யிதுமூன்றுந் தன்னுட்கண்டு
மகத்தான சிவயோகம் வழுமைபாரே. (53)

வலமையுடன் பூரணமாங் கலைக்கியானத்தை
மகத்தான வாக்கியமென்று மனத்துட்கொண்டு
தலைமையென்று சுழியறிந்து தன்னைப்பாரு
சதாகாலம் பூரணத்திற் சார்ந்துபாரு
இலமையிலே வலுவறிந்து கற்பங்கொள்ளு
இல்லாட்டாற் சள்ளையடா அத்தைநோக்கு
குலமறிந்து நாதமதைக் கண்டுகொண்டாற்
குழியான வாசியது குதிக்காதென்னே. (54)

குதிக்கான [illegible]
குதிபான [illegible]
மதிக்காத [illegible]
வாதிபான [illegible]
கெதிக்கான [illegible]
[illegible]
பதிக்கான [illegible]
பாமலே [illegible]

கார்க்கவே பரதிக்கல் [illegible]
கருவிலாகப் [illegible]
ஏர்க்கவே [illegible]
ஏகாந்த [illegible]
நேர்க்கவே [illegible]
தெளிவாக [illegible]
பார்க்கவே [illegible]
பத்தியுடனே [illegible] நின்றவாரே.

வாமான கழிமுனை மதியிலேற்றி
மகத்தான ஓங்கார வடிவமாக
கோரான ஓங்கார வடிவிலேதான்றும்
நிலையான ஞானமடா மோனமாகும்
கூறான நாதசத்தி விந்துதானே
குருசத்தி சிவமுடனே முவிதமாய்த்தான்றும்
பேரான உடலுயிரைக் காணுதற்கும்
பேய்க்கூத்தாய் நின்றாலும் தெரியவொட்டாதே.

பிலமான அகாரத்தை மூலத்தேகாட்டிப்
பிசகாமல் உகாரத்தை கவிழ்த்தேசு
குலமான மகாரத்தைக் கழியிலேற்று
குறையாது வாசியது நிலையில்நிற்கும்
தலமான பதியதிற் கொண்டேசேரி
தன்மையுடன் கழிமுனையிலேயுங் கொண்டுபூரி
நலமான ரண்டுக்கும் பிந்துக்கொண்டு
காட்டமுடன் ரேசகபூரகமாய்நில்லே.

நில்லென்ற நிலையேது பணமங்கேது
நிரஞ்சனமாய் நிறைகின்ற மவுனமேது
சொல்லென்ற சொல்லேது சுத்தமேது
சுத்தமென்ற வீடேது நரகமேது
வெல்லென்ற வாசிசிவ யோகமேது
வேதசாஸ்திர புராணங்களேது
அல்லென்ற அசைவேதான் காரமேது
ஆகார ஒன்றுமில்லை வெளிதானச்சே (59)

வெளியாக இன்னமொரு கருணைக்கேளு
விபரமுடன் நாற்கோணம் நன்றாய்க்கீறி
சுழியாக அதினுள்ளே விந்துபோட்டுச்
சுத்தமுட னதினுள்ளோங் காரஞ்சாத்தி
வழியாக அதினுள்ளே நங்கிலிங் கங்கென்று
மார்க்கமுட னெழுதியஞ்சன் றானணிந்து
தெளிவாக மானதமாய்ப் பூசைபண்ணிச்
செகத்தோர்க்கு யெந்திரத்தைக் கட்டிப்பாரே. (60)

பாரப்பா யெந்திரத்தைக் கட்டுமுக்காற்
பத்தியுடன் சாஸ்வதியும் நாவில்நின்று
நேரப்பா கவித்திரங்கள் பாடவைக்கும்
நிசமான தேகவச்சிர காயமாகும்
சாரப்பா சகலகலைக் ஞானந்தோற்றும்
சகலருமே வசீகரமாய்த் தானேநிற்பார்
தேரப்பா சரஸ்வதியின் கடாட்சத்தாலே
சித்திமுத்தி யாகியவன் ஜெனிப்பான்காணே. (61)

காணவே யின்னமொரு கருமானங்கேள்
கருணையுட னிருகோணம் பிறையுமிட்டுப்
பூணவே பிறையதனுள் விந்துசாத்திப்
புத்தியுடன் ஓங்கார மதனுள்ளிட்டுத்
தோணவே ஓங்காரத் துள்ளேமைந்தா
சுத்தமுடன் மங்கிலிங் மங்கென்றிட்டு
ஊணவே மானதமாய்ப் பூசைபண்ணி
உத்தமனே மானிடர்க்குக் கட்டிக்கீரே. (62)

திக்குருடன் மானிடர்க்குந் தெளிவாய்ச் சுட்டுத்
திருவாக அட்டவிதர் வண்ணமாய்த் [illegible]
மார்க்கமுடன் சக்கரம [illegible]
வரிசையாய்த் [illegible]
ஏர்க்கவே இல்லறத்தோர் பூசிக்கச் செய்ய
எல்லோர்க்குந் தாவளவாய் [illegible]
ஆர்க்குமிவன் கல்லனைய மருந்தோ [illegible]
அதிகசெல்வப் பதிமாக்கி [illegible] காமனே.

காணப்பா யின்னமொரு சூத்திரத்தைக் கேள்
கைகண்ட மூலமுக் கோணமிட்டு
ஊணப்பா ஓங்காரத் துள்ளேயேதா
உத்தமனே சிங்கிலியும் [illegible]
தாணப்பா வென்றதொரு [illegible] யென்றிட்டுத்
தன்னிலையை நோக்கியேயாய்த் [illegible]
தோணப்பா மானதமாய்ப் பூசைபண்ணிச்
சுத்தமுடன் மானிடர்க்குக் காட்டித்தேறு.

தேசப்பா யெந்திரத்தைக் கட்டுதற்கால்
தீர்க்கமுள்ள ருத்திரன்றன் கடாட்சத்தாலே
வீரப்பா கொண்டதொரு தேகமெல்லாம்
விட்டகன்று தேகாதின் விரோதமில்லாது
நேரப்பா அவளிடத்தில் ஞானஜோதி
நின்றவிதே யாமோட [illegible]
ஆரப்பா அறிவார்கள் பஞ்சசுத்தி
அவர்களுட திருவடனைக் காட்டுத்தாலே.

தானுக யின்னமொரு சித்துமார்க்கம்
தன்மையுடன் சொல்லுகிறே னுண்மையாகக்
கோனாக அறுகோணம் நன்றாய்க்கீறிக்
குறிப்புடனே நடுமையம் விந்துசாத்தி
ஊனாக விந்துவோங் காரமிட்டு
உத்தமனே ஓங்காரத் துள்ளேகேளு
நாளுக வங்கிலியங் கிட்டுக்கொண்டு
நன்மையுடன் மானதமாய்ப் பூசைபண்ணே.

பண்ணப்பா மானதமாய்ப் பூசைபண்ணிப்
    பத்தியுட னெந்திரத்தைக் கடாட்சித்தாக்கால்
விண்ணப்பா னிறைந்தமையெனும் பரியிருலே
    மெய்யின்ற தோஷமெல்லாம் விலகிகல்ல
உண்ணப்பா வாசியது உறுதியாகும்
    உத்தமனே தேகமது வலுவுண்டாகும்
கண்ணப்பா நான் துலங்கிக் கருணைதங்கும்
    கருணையுடன் சிவயோகங் கருத்தொன்றுமே. (67)

ஒன்றுடச் செய்தியைத்தான் சொல்லக்கேளு
    உத்தமனே விந்தெழுதி விந்துக்குள்ளே
நன்றுட ஓங்கார மதனுட்போட்டு
    நாட்டமுடன் ஓங்காரத் துள்ளேமைந்தா
நின்றுட அங்கிலிஉங் கென்றுசாத்தி
    நீமகனே மானதமாய்ப் பூசைபண்ணிச்
சென்றுட யெந்திரத்தை மானிடர்க்குத்
    தெளிவாகக் கட்டினதாற் றீர்க்கமாமே. (68)

தீர்க்கமென்ன சொல்லுகிறேன் மைந்தாகேளு
    திருவாகும் பராபரியின் செயலுண்டாகும்
மார்க்கமுடன் கனபவுசு மக்கள்சூழும்
    மகத்தான யோகமுடன் வாகனங்கள்
சேர்க்கைபல கழனிகல தானியங்கள்
    சேங்கன்று பசுமாடு சிலதுண்டாகும்
ஆர்க்குமே அவனிதனி லதிகமேன்மை
    அன்பான மனோன்மணியா ளருள்தன்னாலே. (69)

அருளான கருமானஞ் சொல்லக்கேளு
    அங்கமுடன் நவகோணம் நன்றாய்கீறிப்
பொருளான நடுமையம் முக்கோணத்திற்
    பூரணமாய் விந்தெழுதி விந்துக்குள்ளே
உருவான ஓங்கார மதனுட்சாத்தி
    உத்தமனே ஓங்காரத் துள்ளேகேளு
திருவான செயலதினுற் சிங்சிங்கென்று
    சித்தமுடன் தானெழுதத் தீர்க்கமாமே. (70)

திக்குமுடன் [illegible]
சிவசிவா [illegible]
மாக்கமுடைய [illegible]
வந்தசீர [illegible]
மூக்குமுள்ள [illegible]
முன்னுவி [illegible]
சேர்க்கையுள்ள [illegible]
தீருமட [illegible]

நிலைபறிய மாட்ட [illegible]
கெடுங்கா [illegible]
மலைமேறிச் [illegible]
வாழுமிடம் [illegible]
தலைகெட்ட [illegible]
தத்துவிந்தும் [illegible]
அலையாமல் [illegible]
அம்பரத்தைக் [illegible]

ஆடியதோர் பாம்புடன் [illegible]
அண்டமொடு [illegible]
பாடியதோர் தோத்திரங்கள் [illegible]
பருமணியுஞ் சங்கிலியும் [illegible]
தேடியதோர் சிவகணங்கள் [illegible]
சிலம்பொலியுங் கலகலென்னச் [illegible]
நாடியதோர் பூரணமுங் [illegible]
நன்மையுடன் காணுடமீயுமவே.

நீயென்ற நிலையத்துச் சென்றாய்ந்து
நினைப்பதுவு மறப்பதுவு மிரண்டிறந்து
மாயையென்ற மயக்கமொடு தியக்கமற்று
வஞ்சனைகள் பொய்களவு மாயமற்றுத்
தாயென்றும் பிள்ளையென்றும் பெண்டிரென்றும்
சங்கையென்ற வுறவற்றுத் தயவுமற்றுக்
காயென்றும் பழமென்று மெண்ணமற்றுக்
கருணையுடன் குளிர்ந்து அமர்ந்துவாரே.

துலங்கியதோர் பூரணமாங் கலைக்கியானத்தைச்
சொல்லறிவுக் கறியாதார்க் கியவேண்டாம்
இலங்கியதோர் சிவயோகி மவுனயோகி
இல்லறந்தோ டேவாழும் பரமயோகி
விலங்கியதோர் தபோதனருக் கியவேனும்
விடந்தனையே தருங்குறும்பர்க் கீய்ந்தாயானால்
கலங்கிமனம் தான்வெந்து மயங்குமென்று
கமலசரஸ் பதியீறியக் கடாட்சித்தேனே. (75)

மேகத்திற்கு

சித்தான மந்திரமாஞ் சித்துஞ்சொன்னேன்
சிவசிவா மூலிகையின் சித்தைக்கேளு
முத்தான மூலியடா குப்பைமேனி
முதன்மையாம் மிளகுடனே கொண்டாயானால்
சுத்தான சுரமுடனே யீளைகாசம்
அருக்காகத் திருமடா சுத்தமாக
வித்தான மூலமதில் மனதைவைத்து
வேதாந்தக் குருபதியில் மேவிச்செல்லே. (76)

செல்லப்பா பட்டையுடன் வெள்ளைப்பூடு
திறமான மிளகுடனே மூன்றுங்கூட்டிக்
கொல்லப்பா தானரைத்துக் கொண்டாயானால்
குடிலமென்ற கிரந்திமுதற் சொறிசிரங்கு
மல்லப்பா வயிற்றுவலி குன்மரோகம்
வாதபித்த இலேத்துமநோய் வருவதெல்லாம்
வெல்லுமப்பா மகோதரமும் பெருநோயெல்லாம்
விட்டகன்று போகுமென்று விளம்பினோமே. (77)

குட்டநோய்க்கு

விளம்பெறவே யின்னமொரு கருமானங்கேள்
வெள்ளெருக்கின் வேரினுட பட்டைவாங்கி
வளம்பெறவே வைடுசலின் பட்டைகூட்டி
வாட்டமுட னிருவகையு மாவதாக்கி
உளம்பெறவே வெருகடிமா தேனிற்கொள்ள
உத்தமனே பதினெட்டுக் குட்டந்தீரும்
தளம்பெறவே விஷகடிக ளெல்லாந்தீரும்
தன்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணே. (78)

பண்ணப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
பத்தியுடன் பூரணத்திற் பதிவாய்நில்லு
கண்ணப்பா நாவறிந்து மனக்கண்கொண்டு
கருணையுடன் சாஸ்திரத்தைக் கனிவாய்ப்பாரு
உண்ணப்பா வாசியிற்சென் றிருந்துகொண்டு
உத்தமனே சிவயோகம் உன்னிப்பாரு
விண்ணப்பா தானோக்கி மனக்கண்கொண்டு
வேதாந்தச் சுழிமுனையில் மேவினில்லே.

நில்லந்த நிலைதனிலே நின்றுகொண்டு
நேசமுடன் வாசியுட னிலையைப்பற்றிச்
செல்லந்தப் பூரணத்தில் நின்றுபாரு
சிவசிவா சிலம்பினுட னாதங்கேட்கும்
சொல்லந்த நாதமடா குமரிகற்பம்
குறியறிந்து கற்பமதைக் கொண்டாயானால்
உல்லந்த மானசிய சோதிருட்சம்
உறுதியுள்ள சூட்சமடா வுரைக்கொணாதே.

ஒண்ணான மனதையல்லோ காக்கவேணும்
உத்தமனே சற்குருவைக் காணவேணும்
கண்ணான வொளியல்லோ பிரமரூபம்
கற்பமுண்டு பூரணத்து ளிருக்கவேணும்
பண்ணான பலநூலைப் பார்க்கவேணும்
பரமான யோகத்திலே பணியவேணும்
விண்ணான அமுர்தத்தை யுண்ணவேணும்
வேதாந்த சாஸ்திரத்தி னுண்மைகேளே. (81)

உண்மையென்ற சிவயோகம் சொல்லக்கேளு
உறுதியுள்ள சிவகலை நாதனப்பா
வெண்மையென்று வந்ததுதான் அகாரபீடம்
வேதாந்தக் குருவிருந்தாற் சுழினைக்குள்ளே
தன்மையென்று தானிருந்த உகாரபீடம்
சார்ந்தங்கு தானிலங்கும் மகாரபீடம்
நன்மையென்ற குருபரன்றன் னொளிபோற்காணும்
நாதாந்தம் பெற்றவர்கள் சாதித்தாரே. (82)

சாதிக்கும் சிவயோகந் தன்மைகேளு
சங்கையுடன் சொல்லுகிறே னய்யாசிக்க
வேதிக்கும் அன்னமதை வயிறுயுண்ணு
வெண்ணீருங் கால்வயிறு மதுபோற்காலி
பேதிக்கும் பொருமலரும் அபானவாயிற்
பிலக்கவே யிருக்காதே ஜலத்தைமந்தா
போதிக்கும் படுக்கையடா யிடக்கைகீழாய்ப்
புறனாம லுறங்குசா தகந்தானென்னே. (83)

எண்ணப்பா விந்துதனை யிகழவேண்டாம்
எடுத்ததெல்லாம் மனதாசை கொள்ளவேண்டாம்
நண்ணப்பா அபினாக்குக் கொள்ளவேண்டாம்
நாதாந்தக் கற்பமதைக் கொள்ளும்போது
உண்ணப்பா லகிரியிலே வாழவேண்டாம்
உண்மையென்று கஞ்சாவை புணரவேண்டாம்
மூண்ணப்பா நாதகற்பங் கொண்டதெல்லாம்
மோசம்வந்து போகாம லுத்துப்பாரே. (84)

உத்திகொண்டு யிப்படியே நடந்தாயானால்
உண்மையென்ற சிவயோகம் உரைக்கும்பாரு
புத்திகொண்டு சரியையொடு கிரியையோகம்
பூரணமாய் ஞானமொடு நாலுமைந்தா
வெத்திகொண்ட சரியையென்ற குணத்தைக்கேளு
வேதாந்தத் தேகமப்பா நாதத்தாலே
மூத்திகொண்ட வாயுவுட விசையினாலே
மூன்றுலக முண்டாச்சு சரியைவாழ்வே. (85)

சரியையிலே கிரியையுட குணத்தைக்கேளு
தயவான விந்துவினாற் றேய்வும்வாய்வும்
உரிசையிலே சாதிலிங்க பீடமாச்சு
உண்மையென்ற யோகத்தி னுறுதிகேளு
வரிசையாய் விந்துவுட நாதங்கூட்டி
மகத்தான தத்துவமாய்த் தேகமாச்சு
தரிசனமாய் ஞானத்தின் கருவைக்கேளு
கருணையுள்ள கணபதியுந் தெய்வந்தானே. (86)

தானென்ற கணபதியே பஞ்சபூதம்
தன்மையுட னேபிறாயச் சின்ஞானம்
ஊனென்ற கணபதியே ஆண்பெண்ணுமி
உறுதியுடன் கடலெழோ டின்டமானார்
காணென்ற கணபதியே குருவாமென்று
தன்மையுடன் பூரணத்தைக் கண்டோரில்லை
வானென்ற கணபதியே வனமேயுமாகி
மகத்தான யோனிசால் தோற்றந்தானே.

தானென்ற ரவிமதியே சுழினைக்குள்ளே
தன்கூட்டம் சின்கூட்டம் விசையிகூட்டம்
கோனென்ற நாட்டமதைக் குறியவெண்ணிக்
குவிந்துநின்ற நாதமதாம் வாசியோகம்
வானென்ற ஞானத்தின் யோகசித்து
மகத்தான சத்தியல்லோ மேலத்திற்ற
றேனென்ற இசைநாத வடிவாய்நிற்கும்
சிவசிவா மூக்குவனி தெளிவாய்ப்பாரே.

தெளிவான யோகத்தின் குணமுஞ்சொன்னேன்
சிவசிவா மூப்புரத்தின் செயலுஞ்சொன்னேன்
ஒளிவான புருவமையத் தமருக்குள்ளே
உண்மையென்ற வாசிசிவ யோகஞ்சொன்னேன்
அழியாத பேரின்ப மோட்சஞ்சொன்னேன்
அருள்பெருகுங் கலைக்கியான கற்பஞ்சொன்னேன்
தெளியாமல் நிற்பதற்கு நிலையுஞ்சொன்னேன்
நிலையறிய ஞானபூ ரணமுஞ்சொன்னேனே.

சொன்னதொரு சூட்சமென்ன ஞானமென்ன
சுகமான வாசியென்ன யோகமென்ன
விண்ணதிலே கண்டதொரு சோதியென்ன
வேதமென்ற நாதாந்த விலாசமென்ன
ஒன்னதிலே ரண்டென்ன ஆண்பெண்ணென்ன
ஒருகோடி மந்திரத்தி லுண்மையென்ன
மன்னதிலே கண்டதெல்லாம் மாயாமாயம்
கருவறிந்து பார்த்ததெல்லாங் கதையாய்ப்போச்சே.

போச்சென்று நினையாதே தன்னைப்பாரு
பூரணமுங் காரணமும் பொருந்தியொன்றாய்
நீச்சென்ற நிலையறிந்து நீந்தினாக்கால்
நெடுந்தூரஞ் சென்றுவினை யாடலாகும்
மூச்சென்ற வாசியினால் முழங்குஞ்சத்தம்
முன்னேறிப் பாயுதடா முனைகண்வெள்ளம்
ஆச்சென்ற வெள்ளமடா இடைகாலூடே
அமந்துவருங் கெங்கையைநீ அறிவாற்கொள்ளே (91)

அறிவான அறிவதனால் முக்கண்பார்த்து
ஆதியென்ற மணியதனை அங்கையுண்டு
குறியான அரவுபட மணியைமைந்தா
குணமறிந்து மனம்பொருந்திக் கூர்மையாக
நெறியாகத் தானிருந்து நெருடினாக்கால்
நேரறிந்து சாரையொன்று கீழேபாயும்
சரியாகப் பாய்கிறதோர் வேலைபார்த்துச்
சங்கையுடன் தன்வாயா லுருஞ்சிவாங்கே. (92)

வாங்கிமிக வாசியினா லுருஞ்சிவாங்க
மகத்தான நாதமென்ற வழலைப்பாம்பு
ஒங்கியே வழியாக முனைகண்ணாலே
ஓடிவரு மந்நேர முருஞ்சிக்கொள்ளும்
பூங்கமல மாதுபதம் பணிந்துபோற்றிப்
பூரணமா யெந்நாளும் பூசித்தாக்கால்
ஆங்கெதிகொண் டெந்நாளும் வாழ்வாய்மைந்தா
அன்மான வாலைபத மறிவாய்ப்போற்றே. (93)

போத்தியே யிப்படியே மவுனஞாலம்
பூரணமாய்க் கண்டவர்க ளொருவரில்லை
வாத்தியே மவுனத்தை யாருஞ்சொல்லார்
மகத்தான குருச்சொல்ல அறியவேணும்
காத்திசையும் வெற்றிகொங் கணர்தான்வந்து
கலமான கடைப்பிள்ளை யென்றுமீய்ந்தார்
சாத்தியதோ ருபதேசப் படியேநாளும்
சங்கையுடன் ஓம்அங்டங் மங்கென்றஞ்சே. (94)

அஞ்செழுத்தும் மூன்றதிலே அடங்கிப்போச்சே
அகார மூன்றுமோங் காரமாச்சு
விஞ்செழுத்தை அம்பாக வெய்ந்தசத்தோர்
விட்டெழுத்தக் கொட்டெழுத்தும் வினைவிப்
பஞ்செழுத்தைப் பார்க்கயே கிரியாயோகம்
பார்தனிலே மேலான ஞானியாவான்
செஞ்சொல்முறை வேதமெனக் கண்டோராய
செம்மையுடன் குளிருக்கு சிவமேயென்னே.

என்னவே யிடகலைதான் அகாரமாச்சு
இன்பமுள்ள பிங்கலைதான் உகாரமாச்சு
உன்னவே சுழிமுனையது மகாரமாச்சு
உத்தமனே கண்ணொளிதான் விந்துநாதம்
முன்னமே ஆதியிலே முளைத்ததாகும்
மூவுலகத் தானதுக்கு மூலத்தையா
சொன்னபடி சுழிப்பதிக்கு பார்க்கவாறு
சோதியே சூட்சமடா சொல்லக்கேளே.

கேளப்பா கண்டதெல்லா மழிந்துபோச்சு
கேள்வியென்ன ஒளிவெளியே நிசமதாச்சு
வாளப்பா அரூபமென்ன சுழினைதாந்தி
மக்களே சுழினையிலே மனதைநிறு
வேளப்பா நிற்குணமே துவாதசாந்தம்
மெய்யான நிற்குணமே முனைசூட்சம்
ஆளப்பா நிற்குணமே ஒளிதான்தேகம்
அப்பனே சுத்திகு ஆமப்பாரே.

ஆமடா ஓங்கார வாளின்கூர்மை
அகார வேதாந்த மானதேகம்
நாமடா பூரணத்தை நாடிநாடி
நலமான சுழினையிலே நாடிப்போச்சு
ஓமடா ஓட்டம்பூ ரணத்திருட்டம்
உத்தமனே அண்டபகி ரண்டத்தாட்டு
பாமடா ஓசைபாா பறையின்நாதம்
பத்திகொண்ட சித்தமதின் மோட்சம்பாரே.

யாரப்பா மோட்சஞ்சின் மயத்தைக்கண்டாற்
பதிவான சிவயோகம் ஞானமாச்சு
தேரப்பா ஞானியென்றால் ஜடத்தைப்பேணான்
சிவசிவா ஜீவனிலை யறியமாட்டான
காரப்பா சித்தன்கற் பத்தோடொன்றிக்
கைலாச பாசமதாய்க் கருதிவாழ்வான்
நேரப்பா கற்பமதை யுண்டுதேறி
நிசமான வாசியிற்சென் றிருப்பான்றானே. (99)

தானான தானவனாய் நின்றுவாழ்வான்
சதாகோடி நாளுமொரு நாளாய்நிற்பான்
ஊனான காயாதி கற்பமெல்லாம்
உண்டுகரை யேறியவ னுறுதியாவான்
வானான அண்டபகி ரண்டமெல்லாம்
வரைகடந்து திரையகற்றி வந்துசேர்வான்
தேனான மொழியுடையா ளமுதுபானம்
தினந்தோறுங் கொண்டவனே சித்தனாமே. (100)

ஆமப்பா வாலையுட திட்சைதன்னை
அருள்பெருகச் சற்குருவி னிடமேகேட்டு
தாமப்பா தன்னிலையிற் றானேநின்று
சங்கையுடன் பூரணியைப் பூசைபண்ண
நாமப்பா அவளாகு மவள்நானாகும்
நாட்டமுட னறுபதுக்குட் சித்தியாகும்
ஓமப்பா அறுபதுக்குள் மேலேமைந்தா
ஊனுறுதி காயுறுதி உழன்றுபோமே. (101)

உழன்றுசெடம் போகாமற் காத்தோன்சித்தன்
உண்மையென்ற வாசிகண்டா லவனேயோகி
குழன்றுமனம் போகாமற் காத்தோன்ஞானி
குறியறிந்து கொண்டவனே கெவுனியாகும்
அழன்றுசெகந் தன்னைமறந் தைக்கியத்தைபேசி
அம்பரத்தைக் காணாமல் ஐயோவென்று
தழன்றுகெதி அறியாத மூடரோடே
தானிருந்து பேசாதே தன்னைக்காணே. (102)

காணப்பா பூரணமாங் கெம்பீரமான தனைத்
கருத்தாலே காண்பார்க்குக் கலைகொண்டேறி
[illegible]
[illegible]
பேணப்பா ரெண்டான்தே பின்புமந்த
பிண்டமுதல் அண்டமதை கொண்டாயானால்
பூணப்பா பொற்கமலந் தன்னிலேதான்
பூரணமா மருந்துடையர் பொருந்துவாரே.

பாரப்பா பதிபதிக்க புருவத்தேதான்
பதியான கன்னிமனைக் கன்றேலேதான்
நேரப்பா வளிதொழுந்து செக்கிதன்னை
நிசமாக அறிவாலே கொண்டாயானால்
ஆரப்பா உனக்கீடு ஆருமில்லை
அமுதாசத் தானெரிக்க ஆத்தாள்தன்னை
வீரப்பா கொண்டேறி விட்டாயானால்
விண்ணிருக்கு தேவதைக்கும் மேற்றானாரே.

மெய்யாகச் சொன்னதொன்று மெய்யும்பொய்யும்
விளங்குதடா உலகத்தி லறிவுள்மைந்தா
பொய்யாகப் போகுதடா மனிதர்வாழ்வு
பொய்யகற்றி மெய்யாக இருக்கதானால்
மையாறக் கண்டவன் மெய்யனாகும்
கண்ணறிந்து பாவமதைச் செய்யாவேண்டாம்
ஐயாகே ளறிவுவந்து பாவஞ்செய்தால்
அவன்தலையைக் காக்குமடா அறிவாய்க்கேளே.

கேளப்பா அஞ்சான வயதுதன்னிற்
கெருவமுடன் செய்ததொரு பாவமெல்லாம்
ஆளப்பா தாயிடமே சேருங்கண்டாய்
சுத்தமுடன் பத்தான வயதுதன்னில்
வேளப்பா செய்ததொரு பாவமெல்லாம்
மெய்யாகத் தகப்பனிடம் மேவும்பாரு
ஆளப்பா பதினஞ்சாம் வயதுதன்னில்
அவன்செய்பா வங்குருவைக் காருங்காரே;

காக்குமடா பதினாறு வயது தன்னிற்
கருத்துறவே செய்ததொரு பாவந்தானும்
ஏர்க்குமடா தெய்வமது காத்துக்கொள்ளும்
என்மகனே பதினாறு வயதுக்கப்பால்
தீர்க்கமுடன் செய்ததொரு பாவமெல்லாம்
சிவசிவா செய்தவனைக் காக்கும்பாரு
மார்க்கமுட னிதையறிந்து அறிவுகொண்டு
மகத்தான புத்தியினால் வாழ்வாய்பாரே. (107)

பாருமப்பா பகுத்தறிவு வந்தபோது
பாழான கொடுமைகளைச் செய்வாயானாற்
சேருமப்பா பாவமெல்லா மவனைக்காத்துச்
சீக்கிரத்தில் நரகமதைச் சேர்வானையோ
காருமப்பா சத்தியத்தைக் காக்கவேணும்
கருணையுடன் செபதவங்கள் செய்யவேணும்
நேருமப்பா நிலையறிந்து குருவைத்தேடி
நித்தியமுஞ் சுழிமுனையை நேர்ந்துநில்லே. (108)

நில்லப்பா வாசிதிரு வாசியேறி
நின்றதொரு பூரணமாங் கலைக்கியானத்திற்
செல்லப்பா சென்றிருந்து வாசியோகம்
தீர்க்கமுடன் நிலையறிந்து கொண்டாயானால்
அல்லப்பா உள்வெளியாய் நின்றவாசி
அடங்குமடா யிருதயத்தி லதுதான்போதம்
சொல்லப்பா சொல்மொழியை மறவாமற்றான்
சுருதியுடன் நாதமதில் வாழ்வாய்காணே. (109)

காணவே யின்னமொரு சூட்சங்கேளு
கருணையுடன் வாலையைநீ பூசைபண்ணி
தோணவே யெச்சாதி யானாலென்ன
சுந்தரமாய் நின்றதொரு வாலைதன்னைப்
பூணவே பூரணமாய்த் தொழுதுபோற்றிப்
புத்தியுடன் மனதுவா வடக்குகொண்டு
ஊணவே அமுதரச வர்க்கமீய்ந்து
உகந்துமன முருகிடநீ பூசைபண்ணே. (110)

பண்ணப்பா வாலைபதம் பூசைபண்ணிப்
பத்தியுடன் தானிருந்து [illegible]
பொன்னப்பா தன்[illegible] [illegible]போனதையா
பிரமா[illegible] [illegible]க்கவே
[illegible]
கண்ணப்பா சுத்தமுடன் [illegible]து
நாதாந்தப் பூரணிக்குத் தாம்பூலங்கள்
உண்ணப்பா தானிருந்து [illegible]யோக
உத்தியுடன் ஆகமதில் [illegible]வாறே.

வாங்கியே பூரணமாம் பூசைபண்ணி
மாதவமாய்ச் சிவயோக வாழ்க்கையாற்
பூங்கமல மாதுசெயல் தன்னாலத்தப்
பூரணமுங் காரணமும் பொருந்தியென்றாய்
ஓங்காரக் கம்பமதி லாதியாறல
உண்மையுடன் வெகுநாளும் உகந்துவாழ்வாய்
சாங்கமதாய்த் தினையறிந்து கழியில்லென்றுஞ்
சதாபோத மானசிவ யோகமாமே.

ஆமப்பா சிவயோகத் திருந்துகொண்டு
அருமையுடன் வாலைபதம் பூசைபண்ணிக்
காமப்பா வைராசங் கொண்டாயானாற்
கருணையுடன் நாதாந்தத் தேகமாகும்
நாமப்பா சொன்னபடி பதிந்துகொண்டு
நாதாந்தப் பூரணமாங் கலைக்கியானத்தைத்
தாமப்பா தன்னிலையிற் [illegible]
தன்மையுடன் பூசிக்கத் தன்னைப்பாரே.

தன்னைத்தா னறியாத மூடர்தானுந்
தாரணியிற் பலவேடந் தானேபூண்டு
வின்னைத்தா னறியாத மூடர்மெத்த
வேணபடி சாஸ்திரத்தை விரும்பிப்பார்த்து
உன்னைத்தா னறியாமல் அழன்றுகத்தி
ஊர்வழியே நாய்போலே உறுமிக்கொண்டு
கண்ணைத்தான் விண்ணிழந்து காக்கமாட்டார்
கழுதைகளைக் கண்டாக்கா லடித்துத்தள்ளே.

அடியறிந்து முடிமீதில் நிற்கவேணும்
ஆசைகொண்டு சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
முடியறிந்து மோனநிலை காணவேணும்
முத்திபெறச் சிவயோகத் திருக்கவேணும்
பிடியறிந்து கதிர்மதியிற் சேர்க்கவேணும்
பிங்கலையு மிடகலையுந் தெரியவேணும்
வடிவறிந்து வாலைபதங் காணவேணும்
மகத்தான சிவயோக வளமைகாணே. (115)

காணவே பூரணமாங் கலைக்கியானத்தைக்
கருத்தறியா மாந்தருக்கு ஈயவேண்டாம்
தோணவே ஆதாரஞ் சொல்லவேண்டாம்
சுத்தமுடன் வாசிநிலை காட்டவேண்டாம்
ஊணவே ஆதியந்தப் பொருளைநீயும்
உற்றிருந்து ரகசியங்கள் பேசவேண்டாம்
பூணவே தன்னறிவைத் தானேகண்டு
புத்தியுடன் சித்தமதாய்ப் பொருளைப்பாரே. (116)

பாரப்பா பொருளறிய வேணுமென்றாற்
பதிவான சற்குருவைக் காக்கவேணும்
நேரப்பா நினைவையொரு நினைவாய்வைத்து
நிலைபெறவே தலமறிந்து நீயுந்தன்முய்ச்
சாரப்பா சார்வறிந்து குருவைமேவிச்
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணி
மோரப்பா அண்டாண்ட முடிவிற்சென்று
மெய்யான அக்கினியில் மேவிநில்லே. (117)


நில்லப்பா அக்கினியே வாசமாகி
நேமமுடன் நித்தியா னுஷ்டானங்கள்
செல்லப்பா விடியவொரு சாமந்தானும்
சிவசிவா வேளைநிஷ்டை யானவேளை
நல்லப்பா அவ்வேளை தனிலெழுந்து
நாட்டமுட னாதார தியானம்பண்ணி
அல்லப்பா உதயாதி உச்சிநேரம்
அனுசரிப்பாய் சிவயோகம் அன்பாய்த்தானே. (11

தானேதான் அவனாய்ச் சிற்சிவனும்
தன்மையுடன் ஞானமதிற் சாரிவனும்
வானேதான் வெளியென மேவாவியாந்தி
மந்திரமாஞ் சாட்சத்தில் மனதுகூர்ந்து
கோனேதான் காரண அந்திசந்தி
குவியமதிற் சீக்கா சிவனிலென்று
வானேதான் காரண உறுதிபெற்று
சிறுமுக்க பட்டணத்தி லொளிக்குமுற்றே.

முத்தான பூரணமாம் கவிக்கியானத்தை
முகிலயதிந்து பன்னிரண்டு பத்துஞ்சொன்னே
பத்தான வயனதா நாதித்துக்கொண்டு
பன்னிரண்டு பத்தையும் ஞானக்கலைமத்தா
சித்தான சோதியென்று அப்பாதுக்குட்
சுருக்கிவைத்துச் சூத்திரத்தைச் சுகமாய்ப்பா
சித்தான சித்தெடுத்து வைத்திகொண்டு
சிவசிவா சிதம்பரத்திற் றெளிவாய்முற்றே.

கடைப்பிள்ளை கலைக்கியானம் 120

முற்றிற்று.



மதுரை வடக்குமாசி வீதியிலிருக்கும் பாத்திர வியா
க. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏ
பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன் துணை.

ஏழாவது

கடைப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய

ஞான தீட்சாவிதி 16.

ஆதியந்த மூங்கடந்து வெளியுந்தாண்டி
அகண்டசச்சி தானந்தத் தப்பால்ஞானம்
ஓதியந்த மாகியெங்கும் நிறைந்தே தானாய்
ஒளியான கொங்கணவர் பாதம்போற்றி
நீதியந்தம் பூரணமாந் தீட்சைதன்னை
நிச்சயமா யோதிமிரா மயத்திலுள்ளே
வீதியந்த மானஅறு கோணத்துக்கும்
விநாயகனாய் முன்னிருந்த விதியேகாப்பு.

ஆனந்த மானசிவ நந்திமூலர்
அருள்பெருகும் குருமுனிகோ ரக்கநாதர்
தானந்த மாமச்சர் கொங்கணர்க்குத்
தாயான போகரிடைக் காடரோடு
வானந்த மாகும்புண் ணாக்குச்சித்தர்
வாசமுனி கமலமுனி சண்டிகேசர்
கானந்த சுந்தரா னந்தர்பிர்மர்
கயிலாசச் சட்டைமுனி பாதந்தானே. (1)

தானென்ற கருவூரார் கொங்கணர்க்குச்
சமர்த்தான உரோமருட பாதந்தன்னை
நானென்ற ஆணவமும் மலங்கள்போக்கி
நாயடியேன் சிரத்திலுங்கள் பாதந்தானும்
வானென்ற வெளிகடந்து மவுனத்துள்ளே
வைத்துபதே சிந்தவொரு தீட்சைதன்னை
பானென்ற இரவிமதி சுழினை[illegible]
பாங்கிற [illegible]. (2)

அஞ்செழுத்தி லான மோட்சத்தன்னை
அறைகிறேன் வாசியுடைய அதிசயந்தன்னை
பிஞ்செழுத்தாய்ப் போகமதிற் பெருகிநிற்குப்
பெலமாகி புட்புரத்தில் திட்டைக்குப்
வஞ்செழுத்தாய்ப் புருவமதில் விருந்தமன்னை
மன்னமுட ஞானமது வாசிக்கு
கொஞ்செழுத்தாய் நின்றபொருள் பொழுக்கட்டாய்க்கு
குமென்ற இருள்நீக்கும் சுவாசத்தானே.

வாசமென்ற சுவாசமதாய் வந்ததெலாம்
வலமிடமாய் மாறியெழுத் தந்தத்துள்ளே
கேசமென்ற பன்னிரண்டாய்ப் பிரிந்தகாலம்
கேள்விமையால் வெட்டிசோரமவிழ்ந்து
பாசமென்ற எட்டிரண்டாய்ப் பிரிந்தகாலம்
பரமாகி அவ்வெளியிற் பாய்ந்துலாவும்
வீசமென்ற எழுத்தாலே எட்டுந்தேர்ந்து
விண்ணொளியைக் கண்ணொளியால் மேவிக்காணே

காணப்பா விதிவழியே திட்சைசொல்வேன்
கங்கென்ற நந்திகுரு நேர்த்திட்சை
பூணப்பா போகருட திட்சைசங்கம்
பொருந்துமுக மொன்றாகி ரெண்டிற்சேரு
நாணப்பா குருமுனிக்குத் திட்சையவ்வாம்
ஞானமுள்ள கொங்கணர்க்குச் சுழிமுனையாகும்
பேணப்பா சட்டைமுனி டகாரந்தானாய்ப்
பேறுபெற்றார் மூன்றுமுகந் தன்னிற்கேளே.

கேளடா கந்தர்க்கு ணகாரமாகி
இருபைதருந் தகாரமடா சண்டிகேசர்
ஆளடா கருவூரார் பகாரந்தன்னே
ஆகின்றார் காளங்கா முகத்துக்குள்ளே
வாளடா பிரமமுனி மகாரத்தன்னாய்
வாழுகின்ற ரோமரிஷி ரகாரந்தானாய்ப்
சூளடா அவ்வெளியில் அகாரஞ்சாய்ச்
சூட்சமாய் நின்றபஞ்ச முகத்துட்பாரே.

பாரப்பா அஞ்சான முகத்துக்குள்ளே
பதிந்திருந்த லகாரமடா புண்ணாக்கீசர்
நேரப்பா வகாரத்தி லிடைக்காட்டார்தான்
நேரான கோரக்கர் ழகாரதீட்சை
மாரப்பா ஆறான முகத்துக்குள்ளே
மவுனவெளி யுள்ளிறைந்த வாசனுக்குத்
தேரப்பா றகாரமடா தீட்சையாகி
செழுங்கமல முனிவரா மிளமைதானே. (7)

இளமையென்ற கயிலாச ரழுகண்ணிக்கு
எனஞ்சேர்ந்தா ளிருகுழியில் நாதமாக
பளமையென்ற ஆறுமுகச் சடாட்சரத்துள்
பதிந்திருந்தார் மும்மூன்று யறுகோணத்துள்
களமையென்ற கோளறுத்து வெளியில்நின்றார்
கண்டுகொண்டு தெரிசிப்பாய் தன்னுட்டானும்
உளமையென்ற பதினெட்டுள் ளுறவுமாக
உரைத்திட்டேன் தீட்சைபதி னெட்டுந்தானே. (8)

தானென்ற பதினெட்டுள் பதினைஞ்சொன்னேன்
சாற்றவில்லை மூவருக்குக் ககாரந்தானாய்
தேனென்ற தீட்சையடா சாங்கமெல்லாம்
திறமாக மூலருட தீட்சை கூட்டிப்
பானென்ற ரவிமதியாம் சுழிமூன்றிற்
பாயுமே அதுமூவா யிரமுஞ்சேர்ந்து
வானென்ற சுழிமுனையி லொன்றாய்க்கூடி
மாசற்ற வெளியினுள்ளே சோதிகாணே. (9)

சோதியொளி கோடியையா ரவியோகோடி
சூழ்மதி வன்னியுமோ கோடாகோடி
ஆதிபரை யாகிநின்ற ஒளியைத்தன்னுள்
ஐங்கரனைக் காணுதற்குத் தீட்சையானும்
ஓதினேன் பதினெட்டும் மூன்றுக்குள்ளே
ஒன்றான பதினெட்டைத் தெரிசிக்கத்தான்
நீதியாய்ச் சமாசமாய் மவுனந்தாக்கி
நிலைத்துநீ தெரிசிக்கக் காணுவாயே. (10)

காணுவாய் பதினெட்டின் தாயைத்தன்னைக்
காணுதற்குக் கண்டவர்கள் கண்டோமானால்
காணுவாய் சொருபத்தின் மேனிலைமையோர்
தாயுந்தன் திருவடியைக் கண்டோரையா
ஆணுவாய் மனோன்மணி மாதாவாக
ஆனதுவாய் நின்றமெய்ஞ் ஞானிமேல
பேணுவாய் பாலனைப்போல் பதினெட்டென்றுய்ப்
பேசினதால் தீட்சைவிதி யானவாறே.

வாறான தீட்சையுரைத் திட்டதாக
மனமகிழ வந்தருந் தேகிகாரி
ஆறான வரைவிதியுன் னே பதினெட்டென்றாய்
அங்கனே தாயாகக் காட்டு ஞானமோல்
பேறான தீட்சைபதி னெட்டிக்குத்தான்
பிலத்துநின்ற மூலத்தைப் பேணவப்பி
பாறான வெளிகடந்து நிலம்போனைக்குட்
பாய்ந்துவந்த குருபாதமேப் பணிந்தேனையா.

ஐயனே கடைப்பின்னே யாகிவந்து
ஆனதிறங் கேட்டதெல்லா மருளிச்செய்தாய்
ஐயனே பதினெட்டு மூலங்கேளு
குட்சியில்லை அரிபெறுத்துக் கெட்டாரென்னை
மெய்யனே அதிக்குதிக் கிங்கெங்கேதான்
விளம்புவாய் சாபமது நீக்கினைத்தா
தையனே தையலட் சாங்கமெல்லாம்
க்ஷணத்திலே காருணமையா தக்கம்புவே.

பூணவே பூசைவிதி நாற்பான்மூன்றும்
பூரணமாம் வாலையருள் கற்பகத்தின்னாய்
பூணவே யான்சொன்னேன் பூண்டுகொண்டு
புலத்தியன்றன் பதம்பணிந்து தீட்சைதன்னை
பூணவே அண்டாண்டஞ் சித்தியெல்லாம்
பொருந்திநின்றே யுன்னுக்குள் ளாடுமையா
பூணவே சிவயோக ஞானியென்னப்
பூதலமெல்லாம் வணங்கும் புனிதந்தானே.

காணப்பா தீட்சைவிதி கருவாய்ப்பார்த்துக்
கண்டுகொண்டு கரைகண்டோ ரனந்தங்கோடி.
ஆணப்பா பிறந்தல்லோ குளிகைகட்டி
அண்டாண்டங் கடைந்தவரை தாண்டியேறி
நீணப்பா நிறைந்தசிவ சோதிதன்னை
நிராமயமாய்க் கலந்துநின்றோர் கோடாகோடி.
வேணப்பா வேணபேர் தீட்சைபெற்று
வெளியேறிச் சாயம்புக்குட் பிச்சைதானே. (15)

தானேதான் சுயம்பிலிவத்து பிச்சையேந்தோர்
சதாகோடி நவகோடி கோடாகோடி
வானேதான் வெளிகடந்து வெளியிலுள்ளே
மாசற்ற பிரமமாங் கோடாகோடி
தானேதான் அலையாமற் றுட்சந்தண்டேன்
தன்னிலையு முடியறிந்தேன் கயிலாசத்தை
நானேதான் தீட்சைவிதி பதினாறுக்குள்
நாயகமாய்ச் சொல்லிவைத்தேன் தீட்சைமுற்றே. (16)

கடைப்பிள்ளை ஞான தீட்சாவிதி 16
முற்றிற்று.

கடைப்பிள்ளை ஞான சாஸ்திரங்கள் நம்மிடம் அநேகம் ஓலை ஏட்டுப் பிரதிகளிருப்பினும் தற்போது இதிற்சிலதை அச்சிட்டிருக்கிறோம் மற்றவைகள் அடுத்த பாகத்தில் வெளியிடக்கூடும்.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகாரிஷி கோத்திரம் வை. சிவகுருநாத மூப்பனாரிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

[illegible]

[illegible]

ஜெயமுனிவர் இருளப்பர்க்கருளிய

திருமந்திர ஞானம் 3[illegible]

ஆதியிலே பரப்பிரம மொன்று [illegible]
ஆதியிருந்த [illegible]
சோதிகளைக் கண்டு [illegible] காணு
[illegible]
செகியல்ல [illegible] மனைவரும்
[illegible]
பேதியா [illegible]
[illegible]
[illegible].

சித்திபெற மௌனத்தின் [illegible]
[illegible]
பத்தியுடனே [illegible]
பாதகமாம் [illegible]
சத்திவாய் [illegible]
நாளிதுக்குள் [illegible]
வெற்றிபெற சித்தர்கள் சொன்னதாலே
மேன்மைப்பார் மற்றதைநீ பார்க்கவேண்டாம் [illegible].

வீணப்பா வேதமென்றும் சாஸ்திரமென்றும்
விளம்பினோர் வயிற்றுக்கு மெய்யாய்ப்போலக்
காணப்பா அவையுற்றும் உலகத்தோர்கள்
கையாண்டு மெய்சலித்து மாண்டுபோனார்
பூணப்பா அவர்களைப்போல் நீயாகாமற்
பூரணத்தைக் காடுகிற்பாய் புகலக்கேளு
தோணப்பா வொன்றறியா மடையரெல்லாம்
சோதியிலே கண்டறிந்தோன் போலப்பேச்சே.

பேச்சப்பா பேசிமோக் குரைமயக்கிப்
பேராசை கொண்டுபோய் போற்றிநிற்கு
ஆச்சப்பா ஆச்சரிய மையன்கூத்தை
ஆகாகா வென்றெங்கும் பல்லிக்காட்டு
வீச்சப்பா வீச்சிதெனப் பணம்பறித்து
விருதாவாய்த் திரியாமே அன்னதானி
மாச்சப்பா அவர்களுடன் சேர்ந்திடாதே
மகத்தான கிலேசையக்கண் டப்பாகில்லை. (3)

அப்பனே ஆதியிலே யறிவுதன்னுள்
அரிதரிது கண்டிடுவோன் விநாயகன் முதலாம்
தப்பிதமீ தல்லவப்பா கனிபழுத்துத்
தான்கனியும் காய்போல மனக்கனிந்து
ஒப்புயர்வாம் பருவமதில் விதைவிளைத்து
உத்தமனே வளர்த்திடுவாய் பயிரைநன்றாய்க்
கொப்புகவ ரிலையுதிர்ந்து சாருமுன்னே
கொடுமையுள்ள வேடர்வெட்டு வோராமே. (4)

பார்த்திடவா யவர்களுக்கு அஞ்சிடாமற்
பரமகுரு தன்னைமனதிற் றியானஞ்செய்து
சேர்த்திடுவாய் சேனைகளாய் தாதாக்கள்
சேர்ந்திடவே வேடமுந்தி நேராதோர்கள்
பூர்த்தியடா நினைசெய்கை காட்டிப்பாரு
பூண்டிடுவாய் திக்கெல்லா மூடனைத்தை
கீர்த்தியடா நின்பெருமை சொல்லப்போமோ
நினைவொன்றிக் கெதியிதென்ன வென்றுநீகேளே. (5)

கேளடா தாய்தந்தை கூடிப்போய்நீ
கெர்ப்பத்தி லுருவான தெத்தனையாண்டு
நாளடா நீயறிந்த தொருநாளில்லை
கலமில்லா மூடருக்குச் சொல்லாதப்பா
தாளடா காலுறக்கல் லீர பூங்கொத்தாக
தன்மயத்தி லுலவிவர தெரியவரும்
வேளடா வேளைவரை நீக்கிவைமுன்
மேன்மைபெற மனம்விட்டால் மோசம்போச்சே. (6)

பேச்சப்பா [illegible]

போராக்க [illegible]

நிச்சப்பா [illegible]

[illegible]

பேச்சப்பா [illegible]

[illegible]

அச்சப்பா [illegible]

[illegible] முடிக்குந்தானே.

சொல்லப்பா அடக்கமிட மதங்காய்

சோதியிலே யடிக்கவே காண்பாய் [illegible]

நில்லப்பா அண்டகூடப் [illegible]

நித்தியமாய் [illegible]

செல்லப்பா பலவிதமாய் [illegible]

செகசோதி [illegible]

அல்லப்பா வெகு [illegible]

ஆதியந்த மில்லாத சோதிதானே.

காணவே இன்னமொரு வசியஞ்சொல்வேன்

கணபதியின் வசியமது [illegible]

தோணவே பதினெண்ண [illegible]

சொன்னோம் அதிந்திரமந்த [illegible]

பூணவே நியமித்தே தியானம்பண்ணு

பூதலத்தி [illegible]

பேணவே ஓர்மனமாய் நின்றுகொண்டு

பிசகாமல் மந்திரத்தைச் செய்யக்கேளே.

ஆதி கணபதி வசியம்.

உகந்தெளிய வசீகரத்தின் [illegible]

உத்தமனே வடதிசையை நோக்கிமைந்தா

அகந்தெளிய விபூதியுந் தனையப்பூசி

ஆனகலை யாசனமே லிருந்துகொண்டு

முகந்தெளிந்த ருத்ராட்ச மணியைவாங்கி

முத்திபெற ஆதிகண பதியைநன்றாய்ச்

செகந்தெளியச் செபிப்பதற்கு மந்திரத்தைச்

செப்புகிறேன் சிவஹ்ரீம் அங்கென்றோதே.

ஓதவா யிரத்தெண்ணூறு றுருவேசெய்தால்
உண்மையென்ற ஆதிகண பதிதா னுரைத்தார்
நீதமா யுன்னிடத்தி லின்றுரைக்கில்
நீதிநூற்த காரியங்கள் வரிசைசெய்வார்
வேதமாம் புராணமொடு சாஸ்திரங்கள்
விளங்குகின்ற மந்திரங்கள் வசியமென்று
சாதகமா யுத்தனுக்குந் தெரியச்சொன்னேன்
தன்னிலையிற் முனிநூற்கு செய்யலாமே (11)

ஆரப்பா தேவரொடு முனிவர் தானும்
அடங்காத பிசாசுமுதற் சத்துருக்கள்
ஓமப்பா மிருகமுதல் அஷ்டநாகம்
ஒடுங்காத பட்சிமுதற் சகலமெல்லாம்
தாமப்பா ஆதிகண பதியின் சூட்சம்
தன்மையுடன் இயாளிக்குத் தாலமென்றும்
காமப்பால் காணற்பால் வசியமாகக்
கருணையுடன் சகலமுமே வசியமாமே. (12)

மகாகணபதி மோகனம்.

காணவே வசீகரத்தின் முறையைச்சொன்னேன்
கணக்கான மோகனத்தின் கருவைக்கேளு
பேணவே பீற்றிசையை மோகங்கொண்டகா
பிரணவத்தால் விபூதியையுங் கைபார்த்தூக்கி
தோணவே வெண்புடோமா சைந்தெகண்டி
சுத்தமென்ற ஞானமொளி மையவாக்கி
பூணவே செபிப்பதற்கு மந்திரந்தைப்
புகலமகா கணபதியின் சூட்சந்தானே. (13)

தானென்ற சூட்சமது சொல்லக்கேளு
சங்கையுடன் தூம்ஸிரீ சிங்கென்றோதாய்
வானென்ற குருபதியில் நின்றுகொண்டு
மார்க்கமா யிரத்தெண்ணூறு றுருவேசெய்தால்
கோனென்ற விக்கினேசன் தானுமக்கு
குருவான இருதயத்திற் பிரகாசிப்பான்
ஊனென்ற இருதயத்திற் பிரகாசித்தால்
உத்தமனே சர்வமோ கனமாம்பாரே. (14)

பாரப்பா சித்துமுனிவ ரருளாலேதான்
பாருநீ [illegible] யோகத்தாலே
காரப்பா கருவிகட்கள் சகலீதமும்
கண்டபடி பரத்தில் [illegible]
கோரப்பா பிறகு முகத்து [illegible] குப்பாரு
[illegible]
வீரப்பா வெளியில் [illegible]
வேதமகா கணபதியின் விந்தைபார்த்தே.

கடலைகணபதி தர்ப்பணம்.

ஆச்சப்பா யோகத்தின் அருளைச்சொல்லேன்
ஆகமத் தர்ப்பணத்தின் பெருமைபாரு
காச்சப்பா சேர்த்திலனைச் சேர்க்கவைத்தா
கருணையுடன் விருத்தியுறத் தண்டைப்பூமி
பேச்சப்பா தாளிருத்தி பஞ்சமார்கம்
பெருமையாய்ச் சித்தமாக மனமேற்கொண்டு
மூச்சப்பா பிறந்திருக்க மனைமேற்றுசுழலில்
முன்னுமணி பார்த்திருக்கும் முறைமைக்கேளே.

கேளப்பா கடலைகண பதியின் [illegible]
இருமையுடன் [illegible] மதியென்றேதான்
வாளப்பா தாளிருத்தி வைத்தார்தேடு
மகிமையாய்ப் பிறந்தேதஞ் [illegible] அருமைசெய்தால்
வேளப்பா கடலைகணபதிதன்னைத்தா
மேன்மையுறு விதமாகில் கடலைசெய்து
ஆளப்பா உன்னிடத்தில் இருத்திக்கொண்டு
சுத்தமுடன் தர்ப்பணமும் அருள்செய்வாரே.

வாறான தர்ப்பணத்தை வெல்லவென்றால்
பக்தான அஷ்டோத்திர பிரகல்பம்
நீறான உன்னுடைய சமுகந்தன்னில்
நேர்மையுடன் தொங்கித்தர் பணமேனவாள்
பேறான வாய்புடனே நெருப்புத்தன்னில்
பிராணாமந் தயிக்கும் பெருமைபாரு
கூறான கடலைகணபதியினாலே
கூர்மையுடன் சகலமூர்த்தம் பணமாம்பாரே.

சத்திக்கணைபதி உச்சாடனம்.

பாரப்பா தம்பனத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவாமுச் சாடனத்தைச் சொல்லக்கேளு
நேரப்பா தென்றிசையை நோக்கிமைந்தா
நேர்மையாய் விபூதியையுந் தனமாய்ப்பூசி
காரப்பா கலைமானு சனமேற்கொண்டு
கருணைபெறச் சங்குமணி கையில்வாங்கிச்
சாரப்பா சத்திகணை பதியின்சூட்சம்
தன்மையுடன் ஓம்கிலியுஞ் சவ்வென்றெண்ணே. (19)

எண்ணியா யிரத்தெட்டுரு நாளுருவேசெய்ய
ஏகாந்தச் சத்திகணை பதியினாலே
உண்ணியுச்சா டனமுந்தான் மைந்தாமைந்தா
உறுதியுடன் சத்தியமா கும்பாரு
நண்ணியுச்சா டனமுந்தான் சித்தியானால்
நானிலத்தில் ஞானியடா சொல்லக்கேளு
துண்ணிமையாய்க் கண்டதெல்லாம் முச்சாடிக்கும்
நோக்குமனைக் கண்ணாற்றிற் றவனைப்பாரே. (20)

பாரப்பா ரவிதனிலே யிருந்துகொண்டு
பத்தியுடன் சிவயோகந் துதிக்கும்போது
வீரப்பா பலிதமாய்க் கொண்டநோய்கள்
விஷமுடனே பில்லிசூ னியங்களெல்லாம்
நேரப்பா உனைக்கண்டாற் காணுந்தூரநிம்
நீநிலத்திற் சகலசித்து மாடலாகும்
தேரப்பா சத்திகணை பதியினாலே
தீர்க்கமுச்சா டனமுந்தான் சித்தியாமே. (21)

வாலைக்கணைபதி ஆகிருஷ்ணம்.

சித்தியுடன் நானுமுச்சா டனத்தைச்சொன்னேன்
தீர்க்கமுள ஆகிருஷ ணத்தைக்கேளு
முத்தியுடன் வடதிசைக்கு முகமிருந்து
மோனமுடன் விபூதியுந் தனமாய்ப்பூசி
பத்தியுடன் பட்டுவஸ் திரமேற்கொண்டு
பதிவாகப் படிகமணி கையில்வாங்கிப்
புத்தியுடன் வாலைகணை பதியின்சூட்சம்
பூரணமாய் ஓம்றீயுங் கிலியென்றோதே. (22)

ஓதிடவா யிரத்தெட்டுரு வாருவேசெய்தால்
உத்தமமா மிருதஞ்சயத்தா லந்தியாகும்
நீதிடமா மிருதஞ்சயத்தான் சித்தியானால்
நினைத்தபடி யின்றவினை யாடும்பாரு
சோதியென்றே சன்றவினை யாடுதற்குச்
சொல்லுகிறேன் வாலைசன பதியினாலே
ஆதியென்ற வினைகளெல்லா மகன்றுபோகும்
அடங்காத வினைகளெல்லா மடங்கும்பாரே.

பாரான பார்தனிலே அஷ்டகர்மம்
பத்தியுடன் செய்வினை யாடும்போது
வீரான மார்தருட கருமமெல்லாம்
விட்டகன்று போகுமடா வின்னேநோக்கும்
கோசன மேவுதலக் கணேசன்கேயும்
சேர்மையுடன் குருபதியில் நின்றுபானால்
பேரான வாலைசன் பதியினாலே
பெருமையா மிருதஞ்சயத்தைப் பேணிப்பாரே.

உச்சிட்டகணபதி வித்துவேசனம்.

பாரடா மிருதஞ்சயத்தைச் சொன்னேனென்மைந்தா
பதிவாரம்வித் வேசனத்தைப் பகர்கிறேனே
காரடா தென்மேற்கு முகமிருந்து
கருணையாய் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
சாரடா வெள்ளைவஸ் திரமேற்கொண்டு
சங்கையுள்ள பவளமணி கையில்வாங்கி
கோரடா உச்சிட்ட முன்னேனுன்ருட்சம்
கோமையுடன் சொல்லுகிறேன் கினைவாய்க்காளே.

காணவே ஓம்ஸ்ரீயும் கிரியுமென்று
கருணையா யிரத்தெட்டுரு வாருவேசெய்தால்
பூணவே வித்துவே சனகதான்மைந்தா
பூரணமாய்ப் பூதலத்திற் சித்தியானால்
தோணவே யின்றவினை யாடுஞ்செய்தி
சொல்லவித்து வேசனத்தைத் தியானஞ்செய்து
பேணவே பெண்களுக்குக் கடாட்சித்தாக்கால்
பெருமையுள்ள திருநீற்றுஞ் செப்பமாமே.

கெற்பமென்ன உற்பனந்தான் சித்தியாகும்
கிருபையா யுன்காரத்தா லேதாறுளும்
உற்பனமா யுன்காரந்தொட் டையந்தால்மைந்தா
ஒன்றுபத்தாய்த் தானவளாகும் உண்மையுண்மை
விற்பனமும் விவேகமுட னிருந்துகொண்டு
வேதாந்த சற்குருவைத் தியானம்பண்ணி
அற்புதவுச் சிட்டகணை பதியைப்போற்ற
அடுத்திருக்கேதோர் காரியமுஞ் சித்தியாமே. (27)

உக்கிரகணபதி மாரணம்.

சித்தியுடன் வித்துவே சனத்தைச்சொல்லேன்
தீர்க்கமினி மாரணத்தைச் செப்பக்கேளு
பத்தியுடன் தென்கிழக்கு முகமிருந்து
பாலகனே விபூதியுந் தனமாய்ப்பூசி
வெத்தியுடன் வெள்ளையா சனமேற்கொண்டு
வேகமா மெட்டிமணி கையில்வாங்கி
முத்தியுட னுக்கிரகண பதியின்ரூட்சம்
மூர்க்கமாய் முர்ப்பியும் நசியென்றெண்ணே. (28)

என்னப்பா ஆயிரத்தெட் டுருத்தான்
இணக்கமாய்ச் செய்திடவே யென்னசொல்லேன்
நன்னப்பா மாரணந்தான் சித்தியானால்
நாடுமுன்னே சகலபினி மாண்டுபோகும்
இன்னப்பா எதிர்த்தசத் துருவின்பேரை
எடுத்தெழுதித் தியானமதா யுருச்செபித்தால்
முன்னப்பா குண்ணியவன் நோயதாவாய்
மூர்க்கமுடன் மாரணத்தை போதித்தே. (29)

ஓதியதோர் காழ்மையில் மைந்தாகேளு
உதிரமதி லக்கினிதா னுடனேபாய்ந்து
வீதியென்ற தெருத்தோறும் அவ்வாண்மட்டை
விந்தையென்ற மாரணத்தை நெஞ்சில்வைத்து
நீதியுடன் விபூதியைநீ டாவித்தாக்கால்
நேர்மையுடன் சகலபினி மாண்டுபோகும்
சோதியென்ற உக்ரகண பதியின்றுட்சம்
சத்தமுடன் மாரணத்துக் குயிருமாச்சே. (30)

மூலகணபதி பேதனம்.

ஆச்சப்பா மாரணத்தைச் சொன்னேன் மைந்தா
ஆகாதா பேதனத்தை யருளக்கேளு
காச்சப்பா வடமேற்கு முகமாய்க்கொண்டு
கருணையுடன் விபூதியுருத் தனமாய்ப்பூசி
மூச்சப்பா தானிருத்திக் குருவைப்போற்றி
முத்திபெற வேயிருந்து சலிமேற்கொண்டு
பாச்சப்பா மூலகண பதியின்சூட்சம்
பத்தியுடன் ஓம்ஸ்ரீங் ஆம் மௌவ வென்னே. (81)

என்னடா மிளகுமணி தன்னைமைந்தா
இன்பமாயி ரத்தெட்டுரு உருவேசெய்தால்
உன்னடா பேதனந்தா னதுதானாகும்
உத்தமனே அதினுடைய வித்தைகேளு
கன்னடா அதிக்கும்பே தனத்தைப்பாரு
கருத்துடனே சிவயோகத் திருக்கும்போது
நன்னடா உத்தனுட சொரூபந்தானும்
நாட்டமுடன் விதவிதமாய்த் தோணும்பாரே. (82)

பாரப்பா பாரதனிற் பகரக்கேளு
பத்தியுடன் பேதனத்தைத் தியானம்பண்ணி
நேரப்பா நின்றமனி யாளுக்கு
நீவிபூதியு மெடுத்துக் கொடுத்தாயானால்
சாரப்பா சாதோஷம் நீக்கமெல்லாம்
க்ஷணத்திலே பேதிக்கும் விருதுபோடு
தேரப்பா மூலகண பதியினாலே
தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மையாமே. (83)

அஷ்ட கணபதி.

செம்மையதாம் அஷ்டகர்ம மெட்டுக்குந்தான்
தீர்க்கமா யஷ்டகண பதியின்சூட்சம்
இம்மையதாய்ச் சொன்னடா நயந்துபாரு
எல்லோர்க்கு மிந்தவழி யிட்டாதப்பா
கொம்மையதா யஷ்டதிசைக் காசாய்நின்று
கொண்டுவினை பாடுதற்கு இதுவேசூட்சம்
தம்மையதாய்க் காணுவது சாயுஜியமாகத்
தானிருந்து அஷ்டகர்மந் தான்தானுமே. (84)

ஆமப்பா அஷ்டதிசைக் காசாய்நின்று
அருமையுள்ள சித்துவினை யாடப்பாரு
ஓமப்பா ஆதிகணை பதிதாமென்று
உறுதியாம் மகாகணை பதிதாமென்று
தாமப்பா நடனகணை பதிதாமென்று
சங்கையுள்ள சக்திகணை பதிதாமென்று
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுள்ள வாலகணை பதிதாமென்றே. (35)

ஒன்றான சிட்டகணை பதிதாமென்று
உத்தமனே உக்ரகணை பதிதாமென்று
நன்றான மூலகணை பதிதாமென்று
நாட்டமுடன் அஷ்டகணை பதிக்குமொன்றாய்க்
குன்றாத மூலமந்திர குட்சந்தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
நின்றதிம் மூலமடா ஆதிமூலம்
நிலையறிந்து ஓய்தலே அங்கங்கெங்கனே. (36)

என்னமோ சொன்னேனென் றெண்ணவேண்டாம்
இகத்துக்கும் பரத்துக்கும் இதுவேயுண்மை
முன்னமே சிலமுனிவர் மொழிந்தமார்க்கம்
முறைநூல்பல விருந்தாலு மிதனுக்கிடே
பின்னமொன்றும் வாராது செய்துபாரு
பிராமணர்க்கும் அருதிபர தேசிகட்கும்
அன்னமொடு அறுசுவைபா லமுதளிப்பாய்
அதனாலே அருளுண்டா மறிந்துபாரே. (37)

ஜெயமுனிவர் திருமந்திர ஞானம் 37
முற்றிற்று.

திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீபோகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225வது பட்டம் ஸ்ரீதெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

பரமபதி துணை.

ஒன்பதாவது

கல்லுளிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

ஞானானந்த சூஸ்திரம் 19

அப்பனே பராபரையாள் பாதங்காப்பு
அடிமுடியுங் கடுவான மூலங்காப்பு
இப்புவியில் மனோன்மணியாள் அருளேகாப்பு
ஈரெட்டி லாடுகின்ற கணேசன்காப்பு
செப்பமுள்ள என்குருவாம் கொண்டிச்சித்தர்
திருவாக்கால் கல்லுள்ளிச் சித்தனென்றே
எப்புவியுங் கீர்த்திபெறச் சொல்லிவிட்டார
இயல்பான சித்தனென்று இயம்புவாரே. (1)

இயல்பாகச் சூட்சத்தில் மோட்சஞ்சொல்வேன்
என்மகனே பொய்களவு கொலைசெய்யாதே
வயமாகக் கோபத்தைத் தள்ளிப்போடு
சந்தாம்போல் புண்ணியத்தைக் கருதிக்கொள்ளு
செயமான பெரியோர்கள் மொழிதட்டாதே
செப்பியதால் வேதமுந்தான் பாருபாரு
பயமில்லா தேயுலகில் ஞானங்கண்டு
பார்த்திருந்து அடக்கிக்கொள்வாய் பாரிற்றூனே. (2)

தானேதான் நால்வேதம் படித்துத்தேறு
சமத்துவமாய் ஓங்கார வட்டம்பாரு
கோனேதா னிநான்குந் தெரிந்தபின்பு
குண்டலியின் மூலசக்தி தோணும்பாரு
நானென்ற ஆன்மாவும் நீயேயாகும்
நன்மையுடன் பிரணவத்தை பாருங்காணும்
ஏனென்ற நிலையறியப் போனாப்பா
எண்ணரிய சோதியிலே பொருளும்பாரே. (3)

பாரேதான சுயரூபந் தெரிந்துகொண்டு
பற்றாசை யொழிக்காதார் ஞானியல்ல
தேராமற் றிரிவார்கள் ஞானியென்றும்
தேசத்தி லலைவார்கள் சித்தனென்றும்
சீரான தாய்தானும் ஒன்றேதெய்வம்
சிறப்புடனே தாய்தகப்பன் சேரும்போது
நேரான கருப்பிடித்துக் கொண்டுவந்து
நிலைத்ததோர் சுயரூபந் தெரிந்துகொள்ளே. (4)

தெரிந்துகொண்ட தெய்வமதை வணங்கவேணும்
சித்துடனே பூமியிலே யிருக்கவேணும்
அறிந்துகொண்டு சிவயோகஞ் செய்யவேணும்
அப்பனே ஆங்கார மடக்கவேணும்
பிரியமுடன் அட்டாங்க யோகந்தன்னை
பெரியோர்க ளாற்றெரிந்து கொள்ளவேணும்
சிறியதொரு மந்திரங்கற் றறியதேனும்
தெரியாம லலைவார்கள் சிலபேரப்பா. (5)

அப்பனே மோட்சத்தின் வழிதானெங்கே
அடைவாக முன்னிறந்தார் குறிப்புமெங்கே
செப்பமுள்ள குருக்களெங்கே குலங்களெங்கே
செத்தவர்கள் கூடழிந்த தேங்களெங்கே
இப்பவே யிறந்தவர்க ளெங்கேபாரு
என்மகனே கூடழிந்தால் மூச்சுப்போச்சு
ஒப்பவே யிதைவெளியா யுனக்குச்சொன்னேன்
ஓங்கார மூலவட்ட மடங்கிப்போச்சே. (6)

போச்சேதான் உயிர்போன இடமுங்காணோர்
பூவுலகில் வந்தவர்க ளிருப்புங்காணோர்
மூச்சடங்கி யிருந்தநிலை யாருங்காணோர்
முன்னிருந்த திருக்கூத்தை யாருங்காணோர்
ஆச்சுதென்று வெட்டவெளி நன்றாய்ப்பாரு
அப்பனே வேதாந்தம் வெளியாய்ப்போச்சு
பேச்சப்பா கருவமைப்பின் படியேயாகும்
பேணிப்பார் தெரியுமெல்லா லறிவாய்ப்பாரே. (7)

பாரேதான் அண்டத்தி லொளிகோடி
பரமனுட படைப்பென்பார் கோடாகோடி
கூரேதான் மண்டலத்திற் பொறிகோடி
கூட்டைவிட்டு அழிந்தார்கள் அனந்தங்கோடி
சேரேதான் வெளியொளியின் முடிவைக்கண்டு
செப்புமகன் டாகாசந் தன்னிலப்பா
நேரேதான் தெரியுமது வெளியைத்தானே
நேர்த்தியுடன் கண்டுகொள்வாய் நிலையில்நின்றே.

நின்றேதான் அஷ்டாங்க நிலையில்நில்லு
நிஷ்டையுடன் சமாதிவிட்டு நில்லேபோகாதே
அன்றேதான் அஷ்டாங்க யோகசித்தி
அதிலிருந்து மூச்சடக்கி யிருந்துகொண்டு
சென்றேதான் பார்த்தாக்கால் ஞானக்கோற்றம்
தெரிந்துகொள்வா யிதனாட்டந் திவ்வியமாக
ஒன்றேயென் றேவிருப்பா மதியார்தானும்
உலகத்தி லெட்டுமென்பர் பரிவிதாமே.

ரசகற்பூர மாத்திரை.

பரிவாச கற்பூரம் பலமொன்று
பண்பாகத் தேனதிலே சுத்திசெய்து
எரிவான சம்பழத்தின் சாற்றினாலே
இணக்கமுடன் சுருக்கிவை யிரண்டுசாமம்
தெரிவான முலைப்பாலா லிரண்டுசாமம்
தீர்க்கமாய்ச் செய்தபின்பு கல்வத்திலிட்டு
விரிவான வெண்மிளகு பலந்தானென்று
விளங்கவே சேர்த்தரைக்க வழிசொல்வேனே.
சொல்லுறவாம் சம்பழத்தின் சாற்றால்சாமம்
சுருக்காக வரைத்துப்பணிப் பயறுபோல
வெல்லுறவாய் மணிமணியா யுருட்டிக்கொண்டு
விவேகமுடன் நிழலில்வைத்து வுலரச்செய்து
நல்லுறவாய்க் குழல்தனிலே அடைத்துமே
நாதாந்தக் கடவுள்தன்னைத் தெண்டம்பண்ணி
பல்லுறவாம் வாய்வுபக்கச் சூலைக்கெல்லாம்
பார்வான குளிர்தனக்குக் கொடுப்பீர்காணே.

கொடுத்துவிடு அந்திசந்தி யிரண்டுவேளை
　　குறிப்புடனே திரிகடுகு தேனிற்றானும்
அடுத்துவரும் வாய்வுமுதற் குடைச்சலெல்லாம்
　　அணுகாமல் நீங்கிவிடும் அறிந்துபாரு
எடுத்ததொழில் தப்பாது வெகுசமர்த்து
　　எவ்விதமும் நல்லகுண மாக்குமப்பா
விடுத்தசொல்லை மனதில்வைத்துத் தெளிந்தபேர்க்கு
　　வினவியநற் பாகமது விளங்குந்தானே. (12)

நற்பாகத் துடன்செய்வா யின்னங்கேளு
　　நலமான சாதிக்காய் சாதிப்பத்திரி
பொற்பாக அதிவிடையம் கூளாத்திக்காய்
　　புகழ்பெரிய வெட்பாலை சிறுநாகப்பூ
வற்பாக லவங்கமுங்காட் டாத்திப்பூவும்
　　வளமான சினைக்கின் பட்டையோமம்
சிற்பாகச் சிங்கிகுரோ சாணிசுக்கு
　　சிதறாத புளியன்தோல் காசுகட்டி. (13)

காசுகட்டி மையூரின் கஞ்சாவித்து
　　கருகரிய பெருங்காயம் அசமதாகம்
ஆசகளில் லாதஇரு பேர்சொல்லாது
　　அடவுடனே வகைக்குவகை பலமதாகப்
பேசுகிறேன் திட்கமுடன் கேளுகேளு
　　பிரபலிக்க வுரலிலிட்டு யிடித்துநன்றாய்
பூசுகின்ற கல்வத்திற் போட்டுக்கொண்டு
　　புளிக்குமெலு மிச்சைபழச் சாற்றாலாட்டே. (14)

ஆட்டியபின் விளாவினுட பிசினிதானும்
　　அன்பாகப் பலமரைதா னதனிற்போடு
நீட்டியதோ ரபினதுகாற் பலந்தான்போடு
　　நேர்ந்தரைப்பா யொருசாமம் நிலைமையாகப்
பூட்டிவிடு லிங்கமரைப் பலந்தானப்பா
　　புனிதமுள்ள கெந்தகமு மரைப்பலந்தான்
நாட்டமுடன் தேனதனு லிரண்டுசாமம்
　　நலம்பெறவே அரைத்தபின்போர் பாகங்கேளே. (15)

சொப்பா [illegible]
[illegible]
காப்பா [illegible] டு
[illegible]
கோப்பா [illegible]
[illegible]
தாப்பா [illegible] மாக
[illegible]
[illegible] கொடுப்பீ

[illegible]


தானப்பா [illegible]
[illegible]
வேகப்பா [illegible]
விதமுடனே [illegible]
தேனப்பா [illegible] தன்னில்
சேர்க்குமிக [illegible]
பானப்பா [illegible] செய்து
பாகமாய்க் [illegible].

கற்கண்டு சர்க்கரைப்பா [illegible] கொள்வாய்
கருக்கிட்டே [illegible]
நெற்கொண்டு கோதுமை [illegible]
நீதமுடன் [illegible]
சற்குணமாய் [illegible]
சமைத்துமிகக் [illegible]
பொற்கனமாம் [illegible]
பொருவியிதைப் பக்கியமாய்ப் பார்த்துச்செய்

பார்த்தபடி சொன்னதல்லால் மறைப்பொன் றில்லை
பதறாமல் மூடமிட்டு வெந்நீர் தன்னில்
காத்துமிகத் தலைமுழுகி யசனஞ் செய்யக்
கடவுளர்தன் கிருபையினாற் சவுக்யமாகும்
சேர்த்த இந்தப் பாகமது மெத்தநன்மை
செழிப்பாகக் குணங்கொடுக்கும் தேகந் தீர்க்கு
ஏர்த்தபடி பண்டிதற்குக் கருணையாக
யெடுத்ததொழிற் பொய்யாது யினைக்கன்றானே.

கல்லுளிச்சித்தர் ஞானவைத்ய சூஸ்திரம் 19

முற்றிற்று.



உ

முருகன் துணை.

பத்தாவது

கல்லுளிச்சித்தர் பாடல்.

பிர்ம சொரூபத்தைநாடு   உடன்
கர்ம வினையோட வழிதனைத்தேடு

எட்டி பழுத்தாலுமென்ன   ஞான
ஈயாத லோபிகள் வாழ்ந்தாலுமென்ன
கட்டி வராகனிருந்தென்ன   அதைக்
காவல்கள் போட்டுநீ காத்திருந்தென்ன.   (1)

நீரிலாக் கிணறிருந்தென்ன   மனது
கோரப்படாத பிள்ளையிருந்தென்ன
ஊரிலா ஆறிருந்தென்ன   நமக்
குதவியில்லாத மனிதருறவிருந்தென்ன.   (2)

தவமது செய்தாலுமென்ன   நீ
சமத்தனென்றேபேரெடுத்தாலுமென்ன
சிவபூசை செய்தாலுமென்ன   அரன்
சேவடியை மறவாமலிருந்தாலுமென்ன.   (3)

காசிபோய் வந்தாலுமென்ன   பெரிய
கனகதண்டிகையேறித் திரிந்தாலுமென்ன
வாசியைத் தெரிந்தாலுமென்ன   நாளும்
மகாராஜனென்றுபேர் பெற்றாலுமென்ன.   (4)

புராணம் படித்தாலுமென்ன   இந்தப்
பூலோகந்தன்னில் மறைந்திருந்தென்ன
திராசுநிலை யாயிருந்தென்ன   தினம்
சிவசிவாவென்றே செபித்தாலுமென்ன.   (5)

வித்தைகள் பலபடித்தென்ன   நீ
மென்மேலுஞ் சாஸ்திரங் கற்றாலுமென்ன

சித்தர்கள் தெரிந்தாயோ பெண்ணே
சிறப்பாக வார்த்தை யுரைத்தாயோ பெண்ணே. காணும்

பெண்டாட்டி பிள்ளையிருந் தென்ன
பெரியோர்கள் பாதத்தைப் பணிந்தாயோ பெண்ணே முதிர்ந்த
அண்டாகப் போயிருந் தென்ன
அல்லாத கற்கோட்டை கட்டியிருந்தென்ன.

மாடிமேல் வீடிருந் தென்ன
வையகத் தோர்மெய்யாக வாழ்ந்தாயோ பெண்ணே இந்த
கூடிக் குலாவியிருந் தென்ன
கும்பிட்டுக் கூத்தாடித் திரிந்தாயோ பெண்ணே. கையெடுத்துக்

தாய்தந்தை தானிருந் தென்ன
இனங்களு முறவோரா யிருந்தென்ன உற்ற
நாய்போல லைந்தாயோ பெண்ணே
காமனுக்குக் காமி யொழிந்தாயோ பெண்ணே. வரும்

சரியை நடந்திடவும் வேணுங்
சகத்தினுட மாயை யொழித்திடவும் வேணும் இந்த
கிரியையைப் பார்த்தறிய வேணும்
கெட்டாத சொரூபத்தைத் தெரிந்திட வேணும். மனவாக்குக் (10)

யோகந் தெரிந்திட வேணும்
குண்டிமூல வாசலைத் திறந்திட வேணும் உனக்
பாகமது தெரியவே வேணும்
பாதமதை மறவாமல் இருந்திட வேணும். குரு (11)

கொலைகளவு நீக்கிவிட வேணும்
கொடியோ னெனும்பேயைப் போக்கிட வேணும் உலகில்
புலைகளைத் தொலைத்துவிட வேணும்
பொல்லாத மாயையை விலக்கிவிட வேணும். இன்று (12)

சோதியைக் கண்டறிய வேணும்
சுடரொளியுந் தீபத்தைப் பார்த்தறியவேணும் வேதச்
ஆதியிர் மந்தெரிய வேணும்
அன்புடன் சாஸ்திரத் தாற்றெரியவேணும். அதை (13)


ஞானநிலை தெரியவே வேணும் இதில்
நால்வேத வுண்மை தெரிந்திட வேணும்
மோனநிலை தெரியவே வேணும் யோக
முடிவான வஸ்துவை முன்தெரியவே வேணும். (14)

அட்டகரு மந்தெரிய வேணும் அதற்
காதார மானதைத் தெரியவேவேணும்
திட்டமாய் வாசிநிலை வேணும் இது
தெரிந்துகொண் டார்சித்த ராகவேவேணும். (15)

பந்தங் கடந்தவனே சித்தன் பாரில்
பஞ்சமா பாதகத்தை விட்டோனே பத்தன்
இந்தவிதந் தெரிந்தவனே சித்தன் அதி
லென்நிலைமை கண்டவனே சிவமுத்தன். (16)

கல்லுளிச்சித்தர் பாடல் 16

முற்றிற்று.



திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீ போகமகாரிஷீஸ்வர சுவாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225வது பட்டம் ஸ்ரீ தண்டாயுதபாணிரிஷீ[illegible] சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியி[illegible] யுக்தி[illegible]ஆனது.

கணபதி துணை.

பதினோராவது

கஞ்சமலைச்சித்தர் திருவாய் மலர்ந்தருளிய

கலைக்கியானம் 23

மூலவட்ட மானகுரு பாதங்காப்பு
முத்திக்கு வித்தான முதலைக்காப்பு
ஞாலவட்டத் தங்கியதி பாதங்காப்பு
நான்முகனுங் காரணனுங் குகன்காப்பு
காலவட்டக் கதிர்முனையு மிடையுங்காப்பு
கதிர்முனையுஞ் சிங்கலையும் வாசிகாப்பு
கோலவட்டக் குமரியுட பாதங்காப்பு
குருபாதம் மறவாத குணங்காப்பாமே. (1)

காப்பொன்று தப்பாக்கை காட்டிக்கண்டார்
கண்கெட்ட குருடனுக்குக் கீதமுந்தாளமும்
கோப்பொன்றும் வேண்டாப்பொய்க் குகைக்குட்செல்லக்
கூசாம லொருமனதாய் நின்றதேது
ஏப்பொன்று மில்லையப்பா வென்றன்னாவில்
என்சொல்வேன் வேதமுறை யியம்பக்கேளு
மாப்பொன்று மில்லையப்பா வகையதான
வழியொன்று மிருபாதை வழியைக்கண்டே. (2)

கண்டுகொண்டு சித்தரெல்லாம் மனதிரங்கி
கள்ளம்வைத்துக் கண்டிறந்து வெளியாய்ச்சொன்னார்
கொண்டுகொண்டு அவரவர்கள் பாஷையாலே
கொட்டினார் வெகுகோடி தேசபாஷை
விண்டுவிண்டு வெகுகோடி சாஸ்திரத்தை
விளம்பினார் கோணத்தி லிருந்துகொண்டு
பண்டுபண்டு பலநூல்கள் படித்ததெல்லாம்
பார்க்கவிரு தசசூத்திரப் பலனைப்பாரே. (3)

பலனேது ஒன்றுமில்லை பார்த்தறிந்தால்
பரமரு வெளிகாணும் பார்க்கும்போது
புலனேது ஒன்றுமில்லை பூமிதன்னிற்
புத்தியுள்ள மானிடரே புகலக்கேளு
கலனேது ஒன்றுமில்லை அமைப்பதற்குக்
கலங்காமல் மயங்காமற் கருதிப்பாரு
தலனேது பல்விடத்தி லிடமுமுண்டோ
தாயாரைத் தனிவீட்டிற் றூக்கிப்பாரே. 4)

வீட்டிலிருந் தாயிதனைக் கொஞ்சிக்கொஞ்சி
விளையாட வரவுரைத்தேன் மெய்யுள்ளோரே
நாட்டிலிருந் தாயிதனைக் கொஞ்சிக்கெஞ்சி
நலமாக இருகாலைப் பிடித்தாயானால்
எட்டிலிருந் தாயிதனை யெங்குந்தானாய்
ஏகாந்த வெளிகாண்பாய் இருளைக்காணாய்
பாட்டிலிருந் தாலென்ன பலிக்குமோடா
பாங்கான வொளிமலையிற் பாய்ந்துபாரே. (5)

பாரப்பா கண்மூக்கு மத்திக்குள்ளே
பதறாமற் பார்த்திருந்தாற் பசிதானுண்டோ
காரப்பா அடிமுடியும் நடுவுங்காணும்
கலங்காமல் நாலுமதிற் குள்ளேசேரும்
ஆரப்பா யிந்தமுறை பார்க்கப்போறார்
அருளான தாயெனக்குச் சொன்னவித்தை
தூரப்போ யலைந்தாலுஞ் சொல்வாருண்டோ,
சூட்சமிந்த வழிகண்டு தொழிலைப்பாரே. (6)

பாரப்பா வேதமுறை பதியிற்பாரு
பதினாறும் பன்னிரண்டும் அதுதான்வேதம்
மூரப்பா அஞ்செழுத்திற் பிறந்தவேதம்
முகமதன்பின் னஞ்செழுத்தின் விபரங்கேளு
வேரப்பா அ இ உ எ ஒ அஞ்சும்
விதமான வேதமென்ற தாய்தானப்பா
சாரப்பா நால்வேத மதினாலாச்சு
சத்திசிவ மென்றறிவீர் நாவினாலே. (7)

காலென்ற [illegible]
[illegible]
வாலென்று [illegible]
[illegible]
கோலென்று [illegible]
[illegible]
பாலென்ற [illegible]
பதி [illegible].

பாரப்பா ஒளிக்கப்பா [illegible]
பதிசெட்டு [illegible]
சீரப்பா [illegible]
செகமெல்லாம் [illegible]
வேரப்பா [illegible]
உன் [illegible]
காரப்பா [illegible]
கண் [illegible].

கருத்திலே [illegible]
காலென்றும் [illegible]
பொருத்திலே [illegible]
பொன்னா [illegible]
வருத்திறு [illegible]
வண்டலெல்லாம் [illegible]
குருத்தாக்குள் இலேபுகாய் [illegible]
குறியான குலைசாயுங் குன்றுப்பாரே.

இரசபதங்கம்.

குன்றான ரசபதங்கம் கூறக்கேளு
குறிப்பாகச் சொல்லுகிறேன் [illegible]
நன்றான செங்கஇப்பு [illegible]
நயப்பெறவே சட்டிக்குட் பாதியிட்டு
மன்றான குகைதனிலே கவிழ்த்துவைத்து
மணம்பெறவே ரசமதனை ஊக்கியேதான்
நின்றான மேலமித்த வெப்பிட்டேதான்
நிதானமாய் மேற்சட்டி கவிழ்த்துமூடே.

மூடியே அகண்டவொரு ஆவியின்மேலே
முயற்சியுட னெற்றியென்னத் திரைமூட்டி
நாடியே இரவுபக லெரித்தியும்
நன்றாக அறியவின் னெடுத்துப்பார்க்கத்
தேடியே மேற்சட்டி மேல்மேலிற்குத்
திறமான பதங்கமது படிகம்போலாம்
சாடியே வாலையினால் முடித்தெடுத்து
தன்மையுடன் பரணிதனி லடைத்துவையே. (12)

அடைத்திருந்த பதங்கமதைப் பனைவெல்லத்தில்
ஐக்கிசி யிடையாக வெழுதனிய
நடையிடைதன் கைகாயின் குடைச்சல்மற்ற
நலமில்லாப் பாண்டுமுதற் சூலையோடும்
தடையில்லாக் கருவியவுங் கனியிலூட்டு
தயமுறற் பார்க்கஞ்சி மிகவேயூட்டு
இடையீறி வாய்ப்பிடிக்கால் வேலைப்பட்டை
வெறுங்கிழ்வாறுங் கொப்பளிப்பா யுகந்துதானே. (13)

உகந்தவாய்ச் செந்நாரச் செப்பக்கேறு
உண்மையாய் மடமைநு யாவியதான்
இகந்தவிடா மற்படிக்குப் பலக்குதனைக்கு
இன்பமுடன் சம்பாத்தின் சாற்றிலிட்டு
புகத்தவாய் மூன்றாக சனையின்பு
புன்மையிலாத் தன்னியிலிட் டரைத்தெடுத்துச்
சுகந்தமே வெண்மையாம் பட்டைச்சாற்றால்
சேப்பமேக்குப்படும் அரைத்துப்போடே. (14)

புடமிடுவாய் செல்லிக்காய்ச் சாற்றிலப்பா
புகழ்ச்சியுட னறுபுடந் தீர்த்துப்போடு
அடவுடனே பார்த்ததனை யெடுத்துக்கொண்டு
அதிவிதமாய் வெற்றிலையின் சாற்றாலப்பா
இடமுடனே பத்துபுடந் தீர்த்தாயானால்
இன்பமதாய்க் கண்டுகொள் சிவப்புமாகும்
கடவுள்பதந் தொழுதேற்றிக் குழலில்வைத்துக்
கனத்தபித்த வாய்வுதனை யெடுத்துப்பூட்டே. (15)

எடுத்தபல சோதனைகளிக்கல் லாக்கியன்றி
 எதிர்தகருணை லெயப்புருக்கி பிளந்தமேனி
அடுத்தகலிதாரு கழிச்சலன்வக் தாசேவசம்பாசவும்
 அகன்றவி க் செக்காரக் கட்டிக்கேட்கும்
தொடுத்துவிடு மெய்ப்பான மடுத்தவேளைத்
 தொடர்க்கவிசாரா லெல்லாமுவிலை ஞானங்கள்தங்கி
சடுத்தவிட்டுத் திருக்குப்பா சாதகங்கம்
 சார்க்குடைவே விக்கெதாழிலைச் செய்வாய்நீயே.

தொழில்பார்க்குத் தகுபார் செய்துகொண்டால்
 தோற்ற பலன் காரப்பிரகிதனும்
விழியகனல் நோக்குசென்ன அரிவைக்காண்டி
 விபப்படவே மையாக மேற்றினமுல்
ஒழியாது அவிற்காதில் பார்க்கப்பா
 முதவாய் பலன்கள்பார் பேசலார்கள்
வழிவிதாக விசேஷமான முறையிற்றேர்க்கு
 வருக்கபடி பண்டிதர்கள் பார்ப்பீர்காமே. (1

பார்த்திதனை சோபான குன்றமைபோது
 பண்படவே வெப்பாறும் வெண்ணெய்பாகும்
சேர்க்காட்டி விரைத்திடச் சடியாகும்
 இக்கித்த இராட்டிலென்ற படிமதாகும்
எாத்தபடி கோமையின் கொட்டியாகும்
 இன்பமுடன் கொண்டவர்க்கு எழுமேற்றும்
சித்தமாய் தெளிக்குவார்க்கு பார்த்ததின்றால்
 தெய்வமித்தப் படிவொருவு மாகுந்தாவே. (18)

வேறு சந்தம்.

ஆகிய சொல்லே தென்றல் அடைவுடன் புகலக் கேளு
பாகிய சந்த ஞதி பண்புறுக் தயிலக் தன்னை
பூசியாய் ஸ்நானஞ் செய்ய வுற்றதோர் பிணிகள் நீங்கும்
யோகிக ளனைக்குச் சொன்ன வுத்திர மொழியித் தாமே. (19)

மொழிந்தசொற் றவறி டாமல் முனிக்குநேர் பாகங் கண்டு
அழிந்திடச் செய்யும் நோயை அகட்டியே நீக்கும் பாரு
தெளிந்திடத் தேகந் தன்னைத் திறப்படப் போற்றி நிற்கும்
ஒழிந்திடாத் தேக மென்றே வுயர்பட வுணர்வீர் தாமே. (20)


படர்ந்தது அனேக மென்று பார்ப்பது வொன்று தானே
தடமிது வேறென் றெண்ணித் தவறிடா திருத்தல் நன்று
அடவுடன் செந்தா ரத்தா லாகிடு மனந்த மார்க்கம்
சடமது தெளிவுற் றோங்கிச் சகலமும் நன்மை யாமே. (21)

நன்மையாய் நான்தான்சொன்ன நடத்தையைப் பழித்தமேலோர்
இன்பமாய்க் கண்டு தேர்ந்து யிவ்வித பாக மொப்ப
அன்புடன் செய்வோர்க் கெல்லா மதிகநற் குணம தாகும்
முன்புநாம் மொழிந்த நியாய முறையிது நிசம தாமே. (22)

முறையது சுருதி யென்று முனிவர்க ளெனக்குச் சொன்னார்
நிறைவுட னிந்நூல் யாவும் நிகழ்த்தினேன் அருமையாக
மறைபொரு ளறிய வேண்டி மாநிலத் துதித்தோர்க் கெல்லாம்
குறையிலா வனுகி டாது குணந்தருங் கனக மாமே. (23)

கஞ்சமலைச்சித்தர் கலைக்ஞானம் 23

முற்றிற்று.



மதுரை மேலமாசிவீதியிலிருக்கும் பார்த்திபனூர் கிராம முன்சீப் சொக்கலிங்கம்பிள்ளை குமாரர் நாடகஉபாத்தியாயர் சங்கிலியா பிள்ளை அவர்களிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

பனிரெண்டாவது

கஞ்சமலைச் சித்தர் பாட

பரிபூரணானந்த போதம்-சிவ
பரப்பிரம மான சதானந்த பாதம்

உரிதாம் பரம்பொருளை யுன்னு-மாய
முற்ற பிரபஞ்ச மயக்கத்தைத் தள்ளு
அரிதான சிவகாமம் விள்ளு-சிவ
னடியார்கள் பணிவிடை யன்பாகக்கொள்ளு.

துச்சமு சாலவி சாரம்-அற்ப
சுகமது துக்கமதாம் வெகுகோரம்
நிச்சய மானவி சாரம்-ஞான
நிர்மல வேதாந்த சாரமேசாரம்.

கற்பனை யாகிய ஞாலம்-அந்தக்
கரணங்க ளாலே விளைந்தவிசாலம்
சொற்பன மயிந்திர ஜாலம்-அன்று
தோன்றி விட்டாலது சூட்சானுகூலம்.

அற்பமதானப்பிர பஞ்சம்-அது
அனுசரித்தாலே யுனக்கிது கொஞ்சம்
நிற்பது நுண்மேனி நெஞ்சம்-அன்று
நிகரில்லை நிகரில்லை மெய்ஞ்ஞானக்கஞ்சம். (4)

ஆங்காரத் தால்வந்த கேடு-மூத
லாசையைக் கட்டோடே அப்பாலேபோடு
தாங்காம லானந்த வீடு-அன்று
தாக்குமதெனையக் காணக்கூடும். (5)

தத்துவக் குப்பைகளேது-இந்த
சாத்திர மான சடங்குகளேது

பத்தி யுடன்மற வாது-குரு
பாதத்தைக் கண்டாற் றெரியுமப்போது. (6)

தூராதி தூரங்க ளில்லை-அத்தைத்
தொட்டுப்பிடிக்க வென்றால்வெகு தொல்லை
காரண தேசிகன் சொல்லை-நம்பிக்
கருத்தில் நிறுத்தியுங் காணலாமெல்லை. (7)

ஆறுவத் தால்வந்த காயம்-அதில்
ஐவரிருந்து தொழில்செய்யும்-ஞாயம்
காணவ மாம்போகு மாயம்-நன்றாய்க்
கைகண்ட சூத்திரஞ் சொன்னேனுபாயம். (8)

மூட ருறவு பிடியாதே-நாரி
மோக விகாரத்தால் நீமடியாதே
ஆடம் பரம் படியாதே-ஞான
அமுதமிருக்க விஷங்குடியாதே. (9)

தானென்று வாது கூறாதே-பேசி
தர்க்கங்களிட்டுச் சளன்று சீறாதே.
ஊனென்ற பாச மாறாதே-போனால்
உன்றனை யுன்மனஞ் செத்துந்தீராதே. (10)

வந்த பொருளைத் தள்ளாதே-நீயும்
வாராததற்குவீ ணாசை கொள்ளாதே
நிந்தை வசமாய்த் துள்ளாதே-சும்மா
சித்திரம் போலிருந் தொன்றும்விள்ளாதே. (11)

தேக பாசபவ பந்தம்-அப்பொருள்
சிற்றின்ப மானது சீச்சீ துற்கந்தம்
யாகம தானவே தாந்தம்-பொருள்
பாவித்துப் பார்க்கி லுனக்கிது சொந்தம். (12)

வஞ்சிய ராசை யாகாதே-அந்த
மயக்கமானாற் கொஞ்ச மட்டிற்போகாதே
அஞ்சி யமன்கைச் சாகாதே-கெட்ட
ஆசாபாசமங் நெருப்பில் வேகாதே. (13)

கல்வி மயக்கங் கடந்து-எல்லாக்
கற்றறிவென் றொன்றுங் கசட்டைத் தொலைந்து
சொல்லொப் பிறந்தே கடந்து-இரு
ருட்சாதி ருட்சாதி வளைப்பார்த்து.

ஓடித் திரியுங் கருத்து-அதை (14)
ஓடாமற் கட்டிப் பிடித்துத் திருத்து
நாடிக் கொண்டமைப் பொருத்து-அந்த
நாதாந்த வெட்டவெளிக் குள்ளிருத்து.

சாண்வயிற் றாலலை யாதே-தேகம் (15)
சஞ்சலப் பட்டுக் கொண்டே மலையாதே
ஆணவத் தாலலை யாதே-உனக்
கானந்த முத்தி யதில்லையாதே.

அபிமானி யாகிய ஜீவன்-அவன் (16)
அஞ்ஞானத் தாலே அறிவுவன்றி போவன்
தபம்வினை தற்போதம் சார்வன்-இவை
சார்ந்து கொண்டாற்சத்தி ரூபமாவனே.

நற்குரு சொன்னதே சொல்லு-கம்பம் (17)
நாட்ட மென்றல்லவன்றி விவேகமெனில்லு
தற்சம யங்களை வென்று-உண்டு
தன்மயமாகவே தானென்று கொள்ளு.

துன்ப வின்பங்களைத் தொட்டு-அந்தத் (18)
தொந்தங்க ளெல்லாந் துருசறச் சுட்டு
பின்பு பாசத்தைக் கைவிட்டு-ஒன்று
பேசாம லந்தம் பெருமையைவிட்டு.

பேச்சிறு லென்னென்ன தோணும்-சும்மா (19)
பேசப்பேசப் பிழையல்லோ காணும்
வாச்சுதா லலப்பு மூணும்-நல்ல
மாசற்ற ஞான விசாரணைவேணும்.

அநித்திய மானது தேகம்-அதி (20)
லாசையு மொன்று லடங்காது மோகம்

தனித்திருந் தாலந்த போகம்-ஒன்று
தானாகி நிற்பது வெசியயோகம். (21)

விரும்பாசைக் கிடங்கள் கொடாதே-காய
வேதனைக் குள்ளே நீ கட்டுப்படாதே
திரும்பச் செனன மெடாதே-குரு
தேசிகன்பாதத்தி லன்பு விடாதே. (22)

கோடான கோடி தவங்கள்-அந்தக்
கோவிலைச் சுற்றிச் செபிக்குஞ் செபங்கள்
பாடான தல்லோ பலங்கள்-இது
பண்ணுமுன் னன்றுமத் துன்பமலங்கள். (23)

அந்தக் காணவி லாசம்-அதை
யாராலுந் தள்ளக்கூ டாதுபிரயாசம்
தொந்தித்து நிற்பதே பாசம்-அதிற்
றோன்றுமற் றோன்றுஞ் சுயம்பிரகாசம் (24)


நாமசொ ரூபமே சித்தி-அதை
நாடித் தெளிந்துகொண் டாலல்லோ முத்தி
நேம சொரூபமே வித்து-எங்கும்
நிட்சய மாகும் நிரந்தரவஸ்து. (25)

கஞ்சமலைச்சித்தர் பாடல் 25.

முற்றிற்று.



திருப்பழனிமலையிற் சிறப்புற்றோங்கிய ஸ்ரீபோகமகாரிஷீஸ்வர
ாமியவர்கள் ஆதீன ஆச்சிரமம் மகாகைலாச பரம்பரை 225வது
.டம் ஸ்ரீதெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிடமிருந்து
ங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

பரமபதி துணை.

பதிமூன் றவது

புலிப்பாணி முனிவர் திருவாய்மலர்ந்தருளிய

பூஜாவிதி. 50.

அத்திமுகன் றன்னையளித்த ஆதிகாப்பு
அகிலமெங்கும் நிறைந்துநின்ற அருளேகாப்பு
முத்திதரும் வேதாந்த முதலேகாப்பு
முப்புரத்தைத் தகித்தெரித்த பரமேகாப்பு
சத்தியொரு பாகம்வைத்த அரனேகாப்பு
சங்கரனே அம்பரனே சதாசுத்தி
வெத்தியாம் திகம்பரத்தின் பூசைமார்க்கம்
விளம்புகிறேன் கன்னைசுப்ட பாதங்காப்பே.

காப்பென்ற பிருதிவியி லைம்பதாகும்
கனமான அப்புதனிற் பதினெண்டாகும்
வாப்பென்ற தேயுதனில் சாலதாகும்
வளருகின்ற வாயுதனிற் பதினொந்தாகும்
தாங்கென்ற ஆகாயந் தனக்குமைந்தா
தன்மையுட னீராறு தானேயாகும்
காப்பென்ற கடையிடுந் திகம்பரத்தின்
நல்லதொகை யைம்பத்தொன் றாகுந்தானே.

ஆகமாய்ப் பாடுமுன்னே சவித்தாதி
அதன்பிறகு நவகோடி கோடாகோடி.
பாகமாய் ஆச்சதென்று பேசிக்கொண்டு
பரமசிவன் சாபமிட பாவித்தார்காண்
ஏகமாய்ச் சாபமிட்டார் வாமத்துக்கு
இயல்பான அட்சரங்கள் தீட்சைமார்க்கம்
போகமாய் உயிர்களைத்தான் வாங்கிப்போட்டார்
போட்டதனுல் நூல்களெல்லாம் பொய்யாய்ப்போச்சே

போச்சுதென்று அலையாமற் சிவனுத்தாரம்
பூட்டியே கெட்டினை லிங்கநாவில்
ஆச்சுதென்று மறைத்ததெல்லாம் அருளிச்செய்தேன்
அரகரா சாபங்கள் நிவர்த்திசெய்தேன்
மூச்சுதென்று போகாமல் முறைதப்பாமல்
முன்னேதோ பின்னேதோ வென்றெண்ணாமல்
காச்சுதென்று காச்சிவிட்டேன் உலகத்தள்ளோ
கண்டவருக் கிந்நூல்தான் சித்திமுத்தி. (4)

முத்தியிது மோட்சமிது சித்திகோடி
மூடருக்கும் வீணருக்குங் காட்டொணாது
சத்தியிது சம்புவிது ஒன்றாய்ச்சொன்னேன்
சகலநூற் கெல்லாந்தான் குருநூலப்பா
எத்தினோர் சாபத்தை நிவர்த்திசெய்து
ஏத்தினோற் தீட்சைதா னொளிநிலாகும்
புத்தியுட னிந்நூல்தா னார்க்குங்கிட்டாப்
புண்ணியருக் கிதுகிட்டும் பொருளோப்பாரே. (5)

பொருளான சாபங்கள் நிவர்த்திசெய்யப்
புகட்டினேன் சாபமது பொய்யாபோக
அருளான சிவயநம அம்உம்என்று
அப்பனே சிங்கிலீம் ஸ்ரீம்ஓம்என்றே
மருளாமல் ரம்மம்யம் ஓம்என்றேதான்
மாட்டுவாய் லட்சமுரு வேற்றினக்கால்
இருளான சாபங்கள் நிவர்த்தியாகும்
ஏகமாய்ச் சொல்லிவிட்டே னியம்பக்காணே. (6)

காணப்பா ஆறுவரை குறுக்கேகீறி
களங்கமில்லா தாறுவரை நேரேகீறி
ஆணப்பா யிருபத்தஞ் சறையுமாச்சு
அடைவான முன்னேதாறும் சூலம்போடு
தாணப்பா முதலறையில் நாலுகோணம்
தயவான நகாரமொடு அகாரங்கூட
வாணப்பா ஐயோடு உகாரந்தோனும்
வளமான லக்கமது ஐம்பதாமே. (7)

ஆமப்பா அடுத்தரையிற் பிறைதான்கோணம்
அடைவாக மகாரமொடு இகாரங்கூடத்
தாமப்பா கிலீயோடு வகாரந்தானும்
தயவான லக்கமது பதினொன்றாகும்
வாமப்பா அடுத்தறையில் முக்கோணந்தான்
வலமான சிகாரமொடு உகாரந்தானும்
காமப்பா சவ்வுடனே சகாரந்தொட்டு
கலமான லக்கமது காணுமாமே.

ஆமடா யிதனருகே அறுகோணந்தான்
அடைவான வகாரமொடு எகாரந்தானும்
தாமடா ஸ்ரீமுடனே யகாரங்கூடத்
தயவான லக்கமது பதினெட்டாகும்
வாமடா யிதனருகே வட்டம்போடு
வளமான யகாரமொடு ஓகாரந்தானும்
காமடா ஹரீயும் ஸ்ரீன் தனாட்டி
கலமான அகாரலக்க மீராறுமே.

ஆரப்பா தம்பனத்தின் மகிமைமெத்த
அப்பனே தம்பனம்போ லண்டேவித்தை
வாரப்பா அஞ்செழுத்தின் பேருஞ்சொல்வேன்
வளமான சிகாரத்தில் நகாரம்வைநீ
காரப்பா யகாரத்தில் மகாரம்வைநீ
கலமான வகாரத்தில் சிகாரம்மாட்டு
காரப்பா மகாரத்தில் வகாரம்மாட்டு
கணக்காக நகாரத்தில் யகாரமாட்டே.

மாட்டடா அஞ்செழுத்தைக் காணும்பெண்ணும்
வரைதோறும் பேசத்தை அணுகமாட்டு
வாட்டடா பேசமில்லா விட்டால்மைந்தா
வளமாகப் பலியாது பேசம்விட்டால்
ஆட்டடா அஞ்செழுத்தின் தொகைதான்கேளு
அகாரமுதல் நகாரம்வரை ஒன்பதாச்சு
கூட்டடா மகாரமென்ற மந்தனைக்குக்
கொள்அகர முதல்மகாரம் பதினொன்றாச்சே.

ஏச்சப்பா சிகாரமென்ற ருத்திரற்கு
இகாரமுதல் சிகாரம்வரை நாலதாகும்
பாச்சப்பா வகாரமென்ற மகேசனுக்குப்
பதிஅகர முதல்வகரம் பதினொன்தாச்சு
வீச்சப்பா யகாரமென்ற சதாசிவற்கு
மேல்அகரம் முதல்யகரம் யீராறாகும்
காச்சப்பா ஐம்பத்தோ ரெழுத்துந்தானாய்
கருதிநின்ற சிதம்பரற்குக் கண்தான்மூன்றே. (12)

மூன்றான நடுவணையை யெடுத்துமாறி
மூன்வரைந்த சக்கரமோ ரிருபத்தஞ்சில்
நான்றான சூலத்தி னிடைகள்தோறும்
நாயகனே றீயும்ஸ்ரீயும் என்றுமாட்டு
பான்றான சூலமுனை ஸ்ரீமம்போடு
பண்பான திரிவட்டம் பாங்காய்ச்சூட்டு
ஊன்றான உள்வட்ட மிதழ்தான்மூன்று
உத்தமனே யிருவட்ட மிதழிரெட்டே. (13)

எட்டான திரிவட்டம் என்னான்கப்பா
இதமாக நடுவட்ட முதலாம்ஆதி
கட்டான அகாரமுதல் ஒகாரமட்டும்
கனிவாக ஐம்பத்தி யொன்றுமாச்சு
இட்டான உபரேகை வாசல்நாலு
கீழ்வாசல் கணபதிக்குக் கங்குநாட்டு
நட்டான மேல்வாசல் வடுகன்பீசம்
நாயகனே வங்கென்று நாட்டிடாயே. (14)

நாட்டியே தென்வாசல் பிரிதிபீசம்
நலமாக இம்மென்று நாட்டுநாட்டு
கூட்டியே வடவாசல் மதியின்பீசம்
குணமாகச் சம்மென்று குறித்தும்போடு
ஆட்டியே உபரேகை வீதிக்குள்ளே
அடைவாக இந்திரனில் லம்மாம்பாரு
வாட்டியே அக்கினியில் ரம்மென்றப்பா
வளமாக யெமனிற்சம் மென்றுபோடே. (15)

போடவே நிருதியிலே உங்கேயாகும்
பொலிவான வருணனிலே வங்கேயாகு
சாடவே வாயுவதனில் யங்கேபோடு
சார்வான குபேரனிலே ளங்கேகாட்டு
வீடவே யீசான்யம் சங்கேசேரு
விதமான அஷ்டதிக்குப் பாலராச்சு
ஆடவே போகநடன் கடாட்சத்தாலே
அப்பனே புலிப்பாணி பாடினேனே. (16)

பாடினேன் தமிழெழுத்தில் அகாரந்தொட்டு
பண்பான னகாரத்தின் வரைக்கும்போடு
கூடியே தமிழெழுத்தில் அகாரந்தொட்டு
கொற்றவனே ஔவரையில் வரிசைப்பாரு
ஆடியே தசாக்கமென்று எழுத்தைக் கூட்டு
அப்பனே சக்கரத்திற் சுத்திப்போடு
நாடியே சக்கரத்தில் சுத்திப்போட
நலமாக யிருந்த எழுத்தமைச்சே. (17)

ஆச்சப்பா அசபையுட எழுத்தச்சம்தும்
அடைவாக மேல்வாசல் திறம்போடு
பாச்சப்பா வலமங்கு சக்திசிவம்
பண்பாக அம்மென்று பதித்துப்போடு
வாச்சப்பா யிடம்பார சக்திசிவம்
வளமாகக் கிலீமென்று குறித்துப்போடு
வீச்சப்பா வலப்பாக யிடப்பாகந்தான்
விதமான ஐயுங்கிலியும் சவ்வுமாமே. (18)

ஆமடா அம்இம்டம் ஸர்வும்மென்றே
அய்யபஞ்ச பக்ஷியிரு புறமும்போடு
வாமடா அம்சம் ஸ்ரீயும்மென்று
வளமாக மங்குடனே நசியென்றேது
தாமடா இறீம்முடனே ஸ்ரீமுங்கூட்டித்
தயவான விம்முடனே அங்கியென்று
நாமடா நவக்கிரக பீசமாச்சு
நலமான சக்கரத்திற் சுத்திப்போடே. (19)

போடப்பா சொரூபியென்ற வெழுத்துமப்பா
புகழ்தருவம் சிவியல்லோ மதனபீசம்
நாடப்பா கீழ்வாசல் மேலேயப்பா
நலமாக யீரிரண்டும் பதித்துப்போடு
கூடப்பா சிதம்பரத்தின் பூசைசெய்யக்
கூத்தாடுங் கணங்கள்முத லெல்லாமாடும்
ஆடப்பா போகருட கடாக்ஷத்தாலே
அடைவாகப் புலிப்பாணி பாடினேனே. (20)

பாடியே அகாரத்தி லுகாரமிட்டுப்
பண்பான ஓங்காரங் கொண்டுகட்டி
நாடியே அதன்கீழ மகாரமிட்டு
நலமாக வதின்மேலே றீங்காரந்தான்
கூடியே அரியெழுத்து மேலேதாக்கிக்
குணமாகச் சூலமிட்டு ஸ்ரீமம்நாட்டு
ஆடியே சிங்குவங்கு யென்றுநாட்டு
அடைவாயே காட்சாத்தைப் பதித்துப்போடே. (21)

போடுசிந்தா மணிக்குச்சி காரமிட்டு
பொங்கமுடன் மகாரமொடு யகாரம்போடு
ஆடவே அகாரமுடன் விந்தைப்போட்டு
அடைவாஞ்சக் கரத்தில்திரு வாசிசூட்டுக்
கூடச்சிந் தாமணிக்குப் பீசமாச்சு
குணமான சக்கரத்திற் பதித்துப்போடு
நாடியே போகருட கடாக்ஷத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (22)

பாடியே வலப்புருவம் அகாரம்போடு
பண்பான இடப்புருவம் ஆகாரந்தான்
நாடியே வலக்கண்ணு இகாரம்போடு
நலமான இடக்கண்ணு ஈகாரந்தான்
சாடியே வலக்காது உகாரம்போடு
சமத்தான இடக்காது ஊகாரந்தான்
வாடியே வலக்கன்னம் இரோம்ரீபோடு
வடிவான இடக்கன்னும் ஈரோம்நாட்டே. (23)

காட்டடா வலமூக்கு இல்லாவென்று
நாயகனே இடமூக்கு நல்லாவாகும்
சூட்டடா மேலுதடு ஏயைப்போடு
அடைவான கீழுதடு ஐயைப்போடு
கூட்டடா மேற்றந்தம் ஓவ்வைப்போடு
குணமான கீழ்த்தந்தம் ஔவ்வைகாட்டு
மாட்டடா நாவதிலே அம்மென்றப்பா
மணியான கண்டத்தில் அகாரமென்னே.

எண்ணவே சக்கரத்திற் பதித்தபின்பு
இதமான சாபங்கள் நிவிர்த்திசெய்து
நண்ணவே பிராணபிர திஷ்டைசெய்து
நவிலுவோம் பூசைபிசா டசமுஞ்செய்து
அண்ணவே சுகந்தபரி மளங்கள்புஷ்பம்
அடைவாக வர்ச்சித்துக் கனிகளோடு
தண்ணவே பலகாரம் பரமானக்கம்
தாம்பூலம் இளநீரும் பாலுந்தேனே,

தேனான பானக்கம் அன்னத்தோடு
தெளிவாகு மாறுசுவை வஸ்துசுத்தி
தானான சருவமும் சுத்திவைத்துத்
தயவாகப் பூசித்துத் தியானமோது
வானான கற்பூரத் தீபமேற்றி
வணங்கவே அஷ்டசித்தும் சித்தியாகும்
மானான அஷ்டசத்தி நடனஞ்செய்வாள்
வானவரும் லோகமெல்லாம் வசியமாமே.

ஆமேதான் யநமசிவ வசியமாகும்
வளமான நமசிவய தம்பனந்தான்
நாமேதான் மசிவயந மோகனந்தான்
தன்மைபெற சிவயநம மாரணந்தான்
காமேதான் வயநமசி யுச்சாடனம்
நலமான யவசிமந பேதனந்தான்
பாமேதான் நமவசிய வித்துவேஷம்
பண்பாக வசிமநய அழைப்புமாமே.

ஆமடா காரியம் வசியமாகும்
அப்பனே பித்தளைமேல் கனமேசித்தி
தாமடா பசும்பொன் காளமைப்பதாகும்
தயவான செம்புதம் பனமேசெய்யும்
வாமடா வெள்ளியம் உச்சாடிக்கும்
வளமாம்வெங் கலம்வித்து வேஷணத்தான்
போமடா யிரும்பிலே தனமேயாகும்
பொங்கமுடன் வெள்ளிமர பணைத்தானுமே. (28)

தாமென்ற தலைமந்தர் கொடியுமாவும்
தயவாகத் தான்பூசி வுலைப்போடு
ஊனென்ற முப்புரவி மதியின்பீசம்
உத்தமனே வுடன்கூட்டித் தயிலம்வாங்கி
ஆமென்ற அஷ்டகாம மெட்டெட்டுக்கும்
அடைவான தொழில்முறைக்கு மெல்லாமாகும்
நாமென்ற போகருட கடாட்சத்தாலே
நலமாகப் புலிப்பாணி பாடினேனே. (29)

பாடியே மோகனதம் பனவசியம்
பண்பான அழைப்புமுத லிவைகளுக்கும்
வாடியே ஆள்காட்டி விரலைநீளம்
வளமாகப் பெருவிரலி னகலமப்பா
சாடியே மாரணமே தனவித்வேஷம்
சார்ந்திடுமுச் சாடனங்க ளிவைகளுக்கும்
கூடியே பவுத்திரவிரல் நீளமப்பா
குணமான சிறுவிரலி னகலமாமே. (30)

ஆமடா யிரையாறு வீசமாகும்
அப்பனே பன்னிரண்டு அரைக்காலாகும்
தாமடா மூவெட்டுக் காலேயாகும்
தயவாக இதிலிரட்டி அரையேயாகும்
வாமடா யிதிலிரட்டி முழுதென்பார்கள்
வளமான கனமப்பா தெற்கனத்தான்
நாமடா வீசமது ஒருநெல்லாகும்
நலமான சிதம்பரத்தின் பூசைகாணே. (31)

வாசம்

காணப்பா [illegible] அறிவாமாகும்
கண்டபின் [illegible]
தானப்பா [illegible] யாகும்
[illegible]
வாணப்பா [illegible] யாது
[illegible]
காணப்பா [illegible] வேதனைக்தான்
[illegible] யமே.

[illegible]

காமேதான் [illegible] வசியமாகும்
[illegible]
காமேதான் [illegible] சாடனந்தான்
[illegible]
வாமேதான் [illegible] மதாகும்
[illegible]
காமேதான் [illegible] வேதனைக்தான்
[illegible]

செய்யவே [illegible] வசியமாகும்
செயலான [illegible] மோகனந்தான்
அய்யவே [illegible]
[illegible]
வையமே [illegible]
[illegible]
வையமே வெட்டுமணி வித்துவேசம்
வளமான பேதனம்வெண் முக்குத்தானே.

பலகை ஆசனம்.

தானென்ற பலாப்பலகை தம்பலத்தான்
தன்மைபெறும் மாம்பலகை மோகனந்தான்
நானென்ற வில்வமது வசியமாகும்
நல்லபேய்த் தேத்தான்பே தனமதாகும்
காணென்ற எட்டியிது வேதனைக்தான்
கண்டனியே அத்தியுமா ரணமதாகும்
வாவென்ற அழைப்புவெண் காவலாகும்
வளமாம்வெப் பாலையுச்சா டனமாம்பாரே.

பாரப்பா மல்லிகைதான் வசியமாகும்
பகாரிய முல்லைமோ கனமுமாகும்
ஆரப்பா தும்பையதுச் சாடனந்தான்
அப்பனே அரளியா இருஷணந்தான்
வாரப்பா காக்கணத்தி பிரிவுமாகும்
வளவான பேதனமு மத்தம்பூவு
நாரப்பா கடலைப்பூ மாரணந்தான்
நலமான தாமரைதம் பனந்தானே. (36)

பட்டு வஸ்திரம்.

ஆமப்பா செம்பட்டு வசியமாகும்
அப்பனே மஞ்சளது மோகனந்தான்
நாமப்பா பச்சையுந்தம் பனமதாகும்
நலமான வெள்ளையது பேதனந்தான்
காமப்பா கழுதைநிறம் வேடணந்தான்
கண்மணியுச் சாடனந்தான் பஞ்சவர்ணம்
வாமப்பா ஆந்தைவர்ணம் அழைப்பதாகும்
வளமான கறுப்புமா ரணமாங்கேளே. (37)

ஓமகுண்டம்.

கேளப்பா மணலில்நவ கோணமாகக்
கீற்ப்போட்டு மணலாலே கட்டிக்கொண்டு
வாளப்பா கிழக்குமுகம் பார்வையாக
வளமான மணலாலே பரப்பிக்கொண்டு
ஆளப்பா நவகோணம் நடுவேமைந்தா
அப்பனே சாண்டிகளுஞ் சதுரந்தோண்டி
நாளப்பா சமுத்துவகை சொல்லக்கேளு
நலமான அரசினொடு மாவின்சுப்பி. (38)

சுப்பென்ற புங்கினொடு அத்திக்கொம்பு
சொல்வெட்டி வேர்விழா பிச்சியோடு
அப்பென்ற ஆலுடன்மல் லிகையின்சுப்பி
அப்பனே நெல்லிசுப்பி நவ்வல்சுப்பி
கப்பென்ற ஆத்திசுப்பி யிலுப்பைசுப்பி
கண்மணியே பேயத்திச் சுப்பிலோடு
நப்பென்ற கடுகுரோ கணியுங்கூட
நலமான பெருக்கினொடு கள்ளிக்கொம்பே. (39)

கொம்பப்பா ஞானா மனத்துக்காரும்
  கொழுதான வெட்டவெளி மனோமனத்துக்காரும்
கம்பான கொம்பதனிற் பதித்துமிகவே வாய்
  கம்பமெனவிட் டெல்லையற் றிருக்கச்சொன்னேன்
அம்பான சிதம்பரத்தின் நடனக்காணா
  அம்பலமே பூசைவிதி கையாய்ச் சொன்னேன்
வம்பான யோகருட விதமுமதுவுமல்
  வளர்சக்தி சிதம்பரத்தின் பூசையாமே.

மூலமந்திரம்.

வசியம்-ஓம் யகமசிவ அரிஓம் ஐயும்கிலியும் சுவாகா.
தம்பனம்-ஓம் கமசிவய ஐயும்கிலியும் சவ்வும் சுவாகா.
மோகனம்-ஓம் மசிவயக கிலியும் சவ்வும் ஸ்ரீயும் சுவாகா.
மாரணம்-ஓம் சிவயகம சவ்வும் ஸ்ரீயும் அரிஓம் சுவாகா.
உச்சாடனம்-ஓம் வயகமசி ஸ்ரீயும் அரிஓம் ஐயும் சுவாகா.
பேதனம்-ஓம் யவசிமக அரிஓம் ஸ்ரீயும் சவ்வும் சுவாகா.
வித்துவேஷணம்-ஓம் கமசிவய ஐயும் கிலியும் ஸ்ரீயும் சுவாகா.
அழைப்பு-ஓம் வசிகமய ஸ்ரீயும் சவ்வும் கிலியும் சுவாகா.

பகவதி தியானம்.

பாரப்பா இன்னமொரு பிட்சைசார்க்கும்
  பத்தியுள்ள பாலகனே சொல்லக்கேளு
கேளப்பா பகவதியாள் தியானத்தன்னை
  சேர்வையுடன் சொல்லுகிறேன் விசமதாகத்
சாரப்பா தன்சார்பு விலேவிலின்று
  சங்கையுடன் ஓம்ஸ்ரீம் ஆய் உங்கென்றேதான்
காரப்பா புருவமதிக் கமலத்தேதி
  கருணையுட னுயிர்த்தெழுந்த னருளேவசெய்யே. (41)
செய்யடா மானதமா யுருவேசெய்யத்
  திருவுருவாய் நின்றபக வதியாள் தானும்
மெய்யடா வுனதிடமாய் நடனஞ்செய்வாள்
  மெய்ஞ்ஞானக் கருணைவிழிக் கண்ணாற்பாத்துக்
கையடா கூப்பியடி பணிந்துகொண்டு
  கருணையா தேவதா பகவதியாவென்று
வையடா அமுதரச பானம்வைத்து
  மார்க்கமுள்ள ராஜராஜேஸ் பரியேயென்னே. (42)

என்னம்மா ராஜராஜேஸ் வரியேயென்று
ஏகசிரா மயமாகத் தியானம்பண்ணிக்
கன்னம்மா கமலாயி மந்திரரூபி
கமலசித்த ரூபிசிவ சோதித்தாயே
முன்னம்மா நீயிருந்து யென்னைக்காத்து
முத்தியுடன் நினைத்தபடி சுத்தமாகப்
பன்னம்மா பிரசமய மென்றுநீயும்
பதிவாக விதிபூசையைநீ தரித்துக்கொள்ளே. (43)

கொள்ளடா விபூதியை தியானம்பண்ணிக்
கூசாமல் நெற்றியிலே அணிந்துகொண்டு
நில்லடா வுன்சமூகங் கண்டோர்க்கெல்லாம்
நீங்காத பாவமெல்லாம் நீங்கிப்போகும்
சொல்லடா உன்வசனம் நன்மையாகும்
சோதிதிரு பகவதியாள் சுருக்கிறுலே
அல்லடா உன்மனதை நோகப்பண்ணும்
அவர்கள்குடி செந்தியிலே அழுந்தும்பாரே. (44)

பாரப்பா பகவதிசென் றிருக்கும்காடு
பாதாள மலையாள நடுகாடாகும்
காரப்பா மலையாள நடுகாடையா
கண்மூக்கு மத்தியென்ற வுச்சிவட்டம்
நேரப்பா வுச்சிவட்ட மலையாளத்தில்
நிலையான பகவதியை யார்தான்காண்பார்
ஆரப்பா அறிவார்க ளாருமில்லை
அந்தமலை யுச்சியடி வாரம்பாரே. (45)

பாரப்பா உச்சியடி வாரமான
பதிவான மலையாள பகவதிதன்பீசம்
நேரப்பா சொல்லுகிறேன் ஸ்ரீம்றீங்கென்று
நிலையான மலையாளத் துருவமீதில்
சாரப்பா சார்ந்துமங்க அடிவாரத்தில்
சந்திரனைச் சூரியனிற் சாரப்பண்ணிக்
காரப்பா அக்கினிகொண் டெரியேறிக்
கண்ணாரியக் கண்ணுறத் தியானம்பண்ணே. (46)

பண்ணப்பா பகலதனைத் தியானம்பண்ணப்
　　பாஞான கேசரியிற் பனிசெண்றேதான்
உண்ணப்பா நிறைந்திருக் கண்ணிற்றேனும்
　　உத்திதரு மவ்வொளியில் நின்றுபாரு
மண்ணப்பா குளித்தமலை பாளத்தன்னில்
　　மக்களே வெகுநிதிகள் காணலாகும்
எண்ணப்பா அதனில்வெகு சோதிகாணும்
　　எங்ஙனுமங்ஙன் ரூகவேளி நின்றுபாரே.

நின்றுமிகப் பார்க்கையிலே மைந்தாமைந்தா
　　நிசமாக வருளோடு பொருளுங்கண்டேன்
அண்டரொடு முனிவர்களும் ரிஷிகள்சித்தர்
　　அநேகவிதம் விதவிதமா யங்கேகண்டேன்
பண்டுடைய வேதமொடு சாஸ்திரங்கள்
　　பலவிதமாய் நின்றுவிளை யாடல்கண்டேன்
கண்டதொரு காட்சியெல்லா மங்கேகண்டேன்
　　கலந்துவெளி வெளியான கருக்கண்டேனே.

கருக்கண்டு கருவறிந்து உண்ணும்போது
　　கருவுருவாய் நின்றதொரு நாதங்கண்டேன்
உருக்கொண்டு நின்றதொரு நாதந்தானும்
　　ஓமுடிந்து நின்றவிடம் பார்க்கும்போது
திருக்கண்டு ஆடியது முடிந்ததப்பா
　　சிவசிவா வென்னசொல்வேன் வெளிதானுச்ச
மருக்கொண்டு நின்றவெளி தன்னைக்கேளு
　　மகத்தான அண்டவெளி உச்சிதானே.

உச்சியென்ற மூலமடா ஆர்தான்காண்பார்
　　உண்மையென்ற ரகசியத்தை வெளியிடாதே
பட்சியென்ற பட்சியடா அண்டாண்டம்
　　பாய்ந்துநின்ற மத்தியடா புருவமத்தி
குச்சியென்ற கோலதனு ளாய்ந்துபார்க்கக்
　　கொடிமுடிக்கும் அடிப்படைக்கும் மிச்சமாச்ச
உச்சமென்ற மாளிகையில் நின்றுபார்த்தால்
　　ஓங்காரக் கம்பதுணி மிச்சமாச்சே.

ஆச்சப்பா மிச்சமதாய் நின்றமிச்சம்
அண்டமென்ற அறினையிலே நின்றுபார்த்தேன்
காச்சப்பா கம்பநுனி மிச்சம்பார்த்தால்
கம்பநுனி கற்பூர தீபம்போலே
பேச்சப்பா பேசாத சோதியாச்சு
பிரணவமாய் நின்றதொரு சோதித்தாயே
மூச்சப்பா நிறைந்ததிரு வாசியாலே
முனைகண்டு கம்பமதி லேறினேனே. (51)

ஏறினேன் சவுதகிரி வட்டமேறி
யேகாந்த வெளியொளியைப் பார்த்துமைந்தா
மீறினேன் அகாரமதிற் செயல்தன்னாலே
மின்னொளியி னமுர்தரச பாணங்கொண்டு
தேறினேன் சாகாத கால்மேல்நின்று
தெளிந்துகொண்டு போகாத புனலைக்கண்டு
ஆறினேன் வேகாத தலையைக்கொண்டு
அடங்கினே னெப்பொழுது அடங்கினேனே. (52)

புலிப்பாணி முனிவர் பூஜாவிதி 50
முற்றிற்று.

சாப்டூர் அரமனையார் களஞ்சியத்தில் வசிக்கும் கணபதிப்பா தேசியவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை.

ப தி ஜ லா வ து

கௌசிக முனிவர் திருவாய் மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் 30.

ஓங்காரக் கழிமுனையி லொளிவுமாகி
ஒன்றாகி யிரண்டாகி யுலகமாகி
றீங்காரப் பெருவெளியா யணுவதாகி
நிரந்தரமா யருவுருவா யல்லாதாகி
ஆங்கார மத்தனித நிலையதாகி
அற்றதுவும் உற்றதுவும் பெற்றதாகி
ஸ்ரீங்கார நடுவணைமூச் சுடருமாகிச்
சித்தான வஸ்துதனைச் சிந்தைசெய்வாம். (1)

அகாரமல்லோ கருவுடனே சித்துமாச்சு
அகாரமல்லோ அன்னையொடு தந்தையாச்சு
அகாரமல்லோ ஆடுகிற வித்தையாச்சு
அகாரமல்லோ கண்காணு தெட்டதாச்சு
அகாரமல்லோ மதியுடனே விதியுமாச்சு
அகாரமல்லோ அகண்டபர வெளியுமாச்சு
அகாரமல்லோ குருவுடனே சீடனாச்சு
அகாரமடா வுபதேசப் பொருளுமாச்சே! (2)

ஆச்சப்பா அகாரமுட னுகாரமாகி
அருளொளியா யிருந்ததே ஆக்காளாத்தாள்
பேச்சப்பா வயதுபத்து னென்னையீன்றாள்
போரான ராசிகன்னி விண்மீன்சோதி
நீச்சப்பா பூர்வமெனுந் தசயிதன்னில்
நிராமயத்தின் பேருரைத்து மெய்னயமைந்து
மூச்சப்பா ஆதியென்ற பொருளதாகி
முழங்குகின்ற மூலமந்திரஞ்சொன்னாளே, (3)

சொன்னபதி சென்றிருக்கு வாழ்க்கையப்பா
சுத்தத்த மங்கொண்டு ஞாத்த தாறுபாரை
இன்னமென்றிச் சார்ந்திருக்க வேண்டிக்கொண்டேன்
இணங்காதா லவர்களையுஞ் சுட்டுவிட்டு
அன்னையின்றன் சந்ததியக் குலத்தைதின்றேன்
அதன்மேலென் னுடன்பேசப் பனிரண்டாண்டு
நன்மையாய்ச் சென்றன்பு பேசாப்பேச்சை
நவின்றுமப் பொருள்கண்டு யறிவென்பாரோ. (4)

பாரடா ஆம்மெனடளம் மென்றேணித்தைப்
பகருதற்கு ஆண்டுபத்தி மூன்றேயானால்
சேரடா மற்றசொற் சொல்வதெப்போ
தென்றுமின் றெரிந்துகொண்ட வுண்மையாலே
நேரடா பதியாறுங் கண்டுகொண்டேன்
நிலையாகப் பதிமூன்று கோணத்துள்ளே
சீரடா வெனதன்னை யிருந்தருட்சம்
செப்பவென்றா லெட்டாத பொருளிதாமே. (5)

ஆமப்பா தாயவளும் வளருப்வீட்டில்
ஆறோடு புருவமையத் தேகமாக
தாமப்பா தலமாறு சரோருகத்திற்
சதிராகப் பதியுடனே நடனந்தானும்
தோமப்பா வென்றுநிங் காலைக்கண்டேன்
சொரூபமூட னடமாடுங் காலைச்சொல்ல
நாமப்பா மாசற்ற சூரியாதி
நடனவொலி யானதையுந் தெரிந்துகொள்ளே. (6)

கொள்வதென்ன கேள்நீட்டி மடக்குங்காலின்
குறிப்பறிந்து தூய்மையிலை தனிலேநின்று
கள்ளமன்றிக் கால்திறக்குந் திறவுகோலைக்
கண்டுகொண்டாற் பூரணத்தின் புதுமைகாணும்
தெள்ளமுத வெள்ளமது பழமையாகிச்
சிந்துமடா வாறுதலத் துள்ளேமீறி
வள்ளஞ்செல் விதமிரண்டு கரையுஞ்செல்லும்
வகைகண்டு பதினெட்டுப் பேருந்தானே. (7)

தானான சுயமாகி யறுமூன்றாகித்
தன்மையருட் புனலதனிற் படிந்திட்டாரே
வேறான மூவர்களு மொன்றேயாகும்
வெளிதோறு தெளர்கலையு மேச்சுப்போட்டார்
காறான விட்டகுறை மார்க்கங்கண்ட
நல்லவர்க்குச் சாபமதை நிவர்த்தி செய்ய
வாறான அக்காரத்தைத் தியானிவென்று
வழுத்தினோர் மந்திரோப தேசமென்னே.

என்னசொல்வேன் பெரியோர்க்குப் பெருமையாச்சு
இதையறியா மாந்தர்களுக் கழிவுண்டாச்சு
முன்னமே பதினெண்பேர் சொன்னதாலே
முற்றுமுணர்ந் தேசோதி நிலையிலேறு
கன்னியமாய் மனதொருமை யாகக்கண்டேன்
நற்செம்பு தங்கமொடு வெள்ளையிதே
சொன்னநீர் கலையாச்சு பற்பமாச்சு
சோதிசெய வுற்றிடவே மெய்யென்றேற்பே.

ஒப்பிடவே மூன்றுமொரு வொன்றதாச்சு
உற்றபேச் செல்லாமல் கொடுங்கிப்போச்சு
அப்பனே லகிரியென்ற புராணியேறி
அப்பாற்செல் பொய்நீங்கி மெய்யேயாச்சு
செப்பாதே செகத்தோர்க்குத் தெரிந்தாற்போச்சு
செயலான சொல்லதுவும் பொய்யாய்ப்போச்சு
தப்பாதே நாற்பார்க்கத் தெளிவதாச்சு
தன்மூச்சால் மூச்சற்ற விடத்தைக்காணே. (

காணவே மூக்காதுந் தப்பிடாது
கணக்காக அஷ்டசித்தி யிதனாலாகும்
தோணவிந்த ஞானியாக் கொன்றுமில்லை
சந்தமுட னெட்டிரண்டு மறிந்துபாரு
காணமற்ற ஞானியா மடையரோடே
நாடிநீ கூடாமல் முத்திசித்தி
பேணவே வாலைபதி மூன்றுள்ளாகப்
பெருமையுடன் மதியமுத மங்கேயுண்டே. (1

உண்டிருப்பா யதனைவிட்டு மாயைதன்னில்
உழன்றுபொருள் தேடிநர கினில்வீழாதே
கண்டிடுவா யிந்நாட்பூ ரணத்திற்சேர்க்கும்
கதிர்தியுந் தருகும்பன் மூன்றுங்கோணம்
விண்டிடுவா யெட்டிரண்டும் விதியமைப்பும்
விட்டகுறை யுந்தோனும் நடுபன்மூன்றில்
பண்டான மலங்கழிய மும்முறைக்காற்
பவமகன்று முத்தியிலே சித்திக்கே. (12)

கேளப்பா பன்மூன்று புதியிலுள்ளே
செடிபார்த்து காவுணர்ந்து பூரணத்தை
மீளப்பா பொங்காமற் காத்தாயானால்
விதமான காணமுடி யொளியேவீசும்
வேளப்பா கோடிமதி கதிருந்தோனும்
மேவியதோர் சோதியதைக் காணக்கூசும்
நாளப்பா லுதயகதி ரிளமைவீசும்
நாடிப்பார் சொரூபசித்தி மெய்யுமாமே. (13)

மெய்யான மண்டலமுங் குருவுமாக
மேவியந்தச் சோதியதந் துலங்கும்பாரு
செய்யாமற் றயங்காதே சத்தியஞ்சொன்னேன்
சிந்தையசிற்றுந் தின்னமொரு கருவைக்கேளு
வைபவமாய்ச் சொல்லுகிறேன் சேர்க்கையாக
வளமான நாதமதை முன்னேதானும்
மெய்யப்பா வாங்கிமதி யுப்பினோடு
மேவுபொரி காசமிந்த மூன்றுமொன்றே. (14)

ஒன்றான இடைதசநா தத்தினோடு
உற்றபுமு ரும்பமுச்சார் பலந்தான்கெந்தி
நன்றான வேழுதனுற் கண்டேன்வேதை
ரகசியமீ தெனைப்பெற்றான் மெச்சிக்கொண்டான்
வென்றியித னுடனிந்த் கோபஞ்சேர
விதமான கருவெட்டு மறைக்கும்போது
கன்றுடனே பசுச்சேருந் தன்மைபோலக்
கனவேந்தன் சார்துளிவிட் டேற்றுவாயே. (15)

ஏற்றசாக் கிரபத்தி நாலுஞ்சாரும்
இனைகமதியாற் பாவனை [illegible] யாவிக்கலை
போற்றவா யிருபத்து மாகிமுனோர்
பூரணத்திற் சேர்த் துவிடு விரைந்தில்லை
சாற்றியதை காமிய மக்கத்திடாதே
காணினுப் பயனுக்குக் கன்றாய்கேளு
காற்றிரயாய் மனமாயச் சாக்கையோதி
கன்மமிலா வேனம்பத்துக் கருவென்னே.

என்னவெட்டு நன்றாகே சக்ரங்கண்டு
இயல்பான மனத்தேகதிப் பாருபாரு
நன்மையிக்க நாற்பாக்கள் குருவுபாக்க
நாடுமேமா சுவாக்க அறுமேராக்க
தன்மையா பவுணமல்லே மனவெல்லாக்க—
தனையமேன அறிவினு குறிவாப்பாற்றி
ஒன்றிடவே அதிநேமடா சரியாதிகம்
உற்றுமனக் குளிக்கூத்து சோக்கைதக்காமே.

காணவே அங்கேயுனக் கழகதிப்பார்
காரணமா குமிறாவி யில்லைப்பா
தோணவே சொருபமது வொன்றேயாகும்
சக்கெழுக்கு விருபத்தி யொன்பதாகும்
பூணவே அருட்கண்ணுற் றுட்சம்பாரு
புகலான வானத்ததி லக்கத்துக்கண்டு
மாணவனே ஆச்சரிய மைம்பத்தொன்று
மகத்தான யிருபத்தி யொன்றதாமே.

ஆமப்பா சிவலிங்க மானமூலம்
அலைவற்ற தேகமதற் கெல்லாமாதி
தாமப்பா யிரண்டொன்று சயம்புஸ்தானம்
தற்பரத்தி லிருபத்தெட் டெழும்பாரு
நாமப்பா நவசித்த சரியைசித்தி
நலமான மண்ணுயம்னின் மூணுமூலம்
வாமப்பா மற்றதில்லை யிதனின்மூலம்
வளமான நவமூலஞ் சயம்புதானே.

சயம்பதுவே முன்னின்று முடிந்தபேச்சு
சூட்சமெனும் மூலமதே யெல்லாமாச்சு
வயமான முப்பொருளோர் வடிவமாச்சு
வல்லவிடர் தண்ணமுத கற்பமாச்சு
பயனறியார் தமக்கிதுவே நரகமாச்சு
பாலமடா மயிர்ப்பாலம் நெருப்பாறாச்சு
நயமான பதியறியக் கதியுண்டாச்சு (20)
நாட்டிலே பேச்சொன்றும் பேசொண்ணாதே.

ஒண்ணாது பேச்சதனால் மோசமாகும்
உற்றமூச் சடக்கியுட் கருவைத்தொட்டு
அண்ணலெனுங் குருவோடு மூலந்தொட்டு
ஆச்சென்று தொட்டவிடம் பொன்னாமென்று
வண்ணமுடன் குருசொன்னார் யானுஞ்சொன்னேன்
மண்டலத்தில் மற்றவர்க்கு விண்டிடாதே
விண்ணமிலா பூரணத்தின் காலைப்பாரு (21)
மேலான வழிசூட்ட வெட்டும்பாரே.

வெட்டியே எட்டிரண்டால் விக்ளைதக்கட்டு
விளங்கவே கால்நூல்சொற் கருவைப்பாரு
எட்டுதிரு வெழுமசபை யேழுக்குள்ளே
ஈசனுடன் சத்தியிரண் டேகம்பாரு
வெட்டவெளி கண்டதொரு சித்தர்மெச்ச
விளம்புகிறேன் மறைப்புவித்தை தீர்க்கமாகத்
திட்டமுடன் மாதளம்பூ மலரும்பத்து (22)
செப்பும்பூ வாதியேக போகந்தானே.

தானான பூவும்பேய்ப் பீர்க்கன்மூலம்
தனிசித்தா மணக்குரசம் காலுஞ்சேர்த்து
வேணான சமவிடையா யரைத்துவாங்கி
வையமதில் மணாளனுமே யிறந்தபோது
மானான மாதரூங் கண்ணீரோடு
வகையுண்ணாப் பானுடன்மூற் கருவுஞ்சேர்த்து
கோனாக அதன்பின்பு மறைத்துவாங்கி (23)
குளியாலை யஞ்சுபத்தும் வருத்துப்போட்டே

போட்டுப்பே ரண்டவெண்ணெய் யேழுங்கூட்டிப்
புகலான யிருட்டறையிற் கலந்துத்தூரில்
நாட்டமுடன் மத்திக்கும் போதுசொல்வேன்
நான்முகத்தோன் சொன்னநால் வேதமொன்றாய்
தேட்டமுடன் கண்டறியா வெழுத்ததான
சிறந்தமொழி யேகமென்ப தாமையூமை
வாட்டமில்லா அன்னியே மத்தித்தாக்கால்
வருகிறஞ்செம் மைப்பிர்ம வித்தையாமே. (24)

வித்தையாம் மாதுமா தளம்பூவாலே
வேண்டிமுன் மறைத்ததையும் வெளியாய்ச்சொன்னாள்
நித்தனாய்ச் சுகாநுபவ மிதிலேகாணும்
நினைவாகக் கருமையைச் சிமிழில்வைத்துச்
சத்திபதம் தியானித்துச் சரீரத்துள்ளே
தானுமறைந் திருசுழியு மொன்றாய்நின்ற
பத்தியாய் நந்திருந் நாசிமூலம்
பார்த்தம்மா வென்றுபல விதமாய்ப்போற்றே. (25)

போற்றியே கருவிருந்த சிமிழைப்பாரு
புகழான சிமிழ்விழிக்குந் தோற்றுதப்பா
சாற்றிடுவேன் சிமிழ்தோணத் தியானந்தன்னைத்
தானேழு வெழுமசபை யிலங்கிநின்று
வீற்றிருக்கும் ஸிரிமாவே லக்ஷிமாவென்று
வேண்டியபி மாமதிமா வாவாவென்றே
மாற்றமிலா கிரிகைசித்தி வாதசித்தி
வாவென்று யேழுதரஞ் சொல்லிப்பாரே. (26)

பார்த்திடவே சிமிழுனக்குத் தோணுமெய்யாய்ப்
பண்பான கடிகையே மூக்குள்தானும்
நேர்த்தியுட னிதையறிந்து கருவாமையை
நீதிலதம் பணவிடைதான் புருவமையம்
சேர்த்தியுடன் திலதமிடப் புவியிலுள்ளோர்
தேடியுனைப் பார்த்தாலும் யாருங்காணார்
பூர்த்தியாம் வெளிகண்டோ ருன்னைக்காண்பார்
புகழான குருவருளாற் பலிதந்தானே. (27)


தானான நிலைதமிடப் பசாசபூதம்
தண்ணிரவும் பகலுனக்குக் கண்ணிற்றோனும்
வேறான பல்லோர்வாழ் கூட்டந்தன்னில்
வேணபடி சென்றுசத்த மிட்டாலுந்தான்
கோனான வுன்றனையு மொருவர்காணார்
குறிப்பறிவாய் நந்திகுரு மூலர்மைந்தா
வானான கருவூரார் செய்தவித்தை
மகிழ்வாய்ச்செய் யோகியடா சித்தனாமே. (28)

ஆமப்பா சிவயோகிக் கிம்மைவேணும்
அவனிதனில் மானிடர்க்கு யியந்திடாதே
நேமப்பா சித்தர்க்குச் சித்ததாமும்
நீதமுள போகர்மன மறிந்ததாகும்
தாமப்பா பூரணத்தோ டுள்ளந்தானாய்த்
தராதலத்தில் மூவேழுந் தெரியலாகும்
நீமப்பா பிரகாசிக்குஞ் சத்திருபம்
நிலையான மூப்பாழுக் கப்பால்நீயே. (29)

நீயறிந்து நிற்குணத்தின் குறியைக்காண
நிராமயமே குருவாய்முன் பாகத்தோன்றித்
தூயவெளி நிர்த்தனத்தைத் தோணச்செய்வார்
சுத்தபிர்ம சற்குணமும் நீயேயாவாய்
தாயகமா யட்டசித்தி மெய்யிற்காணும்
தானவனே நீயாகிச் சுகிர்தனாவாய்
சேயனே யிந்நூல்தான் மெய்மையாகும்
சேகரமாய்க் கண்டறிவா யிதுமுற்றே. (30)

கௌசிகமுனிவர் ஞானசூஸ்திரம் 30
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த வத்திராயிருப்பு அ. மு. பாண்டியம் பிள்ளையவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

முருகன் துணை.

பதினைந்தாவது

மிருகண்ட மகரிஷி திருவாய்மலர்ந்தருளிய

மெய்ஞ்ஞானம் 30.

ஆதிபர மானகுரு பாதந்தன்னை
அனுதினமு மனதிருத்தி பருவைப்போற்றிச்
சோதியாம் மெய்ஞ்ஞான முணர்த்துனைக்குஞ்
சொல்லுமொரு காரணசற் குருவையண்டி
நீதியுட னென்னாளுங் காத்துநின்று
நினைவுகெட் டுனைப்புகழ்ந்து மகிழ்ந்திடாமற்
சேதியொன்று செப்புமுனே பணிவாய்ச்செய்து
தேசிகற்குப் பத்திமிரண் டாண்டுதொண்டே. (1

தொண்டுசெய் திடப்பின்னே காட்சாத்தின்
ஐயப்பொருளீ தென்றுசித்தி முத்தியோடு
பண்டுபரி வாசியுமூன் றக்கரத்திற்
பற்றியதோ ரெட்டிரண்டே தாகுமென்றும்
கண்டுகொள்நீ யென்றுகலை நாலுக்குந்தான்
கணக்கான வழிதுறையு முபதேசிப்பார்
அண்டமித மாயிரத்தெட் டானபீட
மானதிரு வாசிதனைப் போற்றிநில்லே. (2

நில்லப்பா மானதமாய்ப் பூசைசெய்து
நிலைபுருவ மத்தியொளி யறிந்தால்ஞானம்
வெல்லப்பா ஆசையென்ற பாசந்தன்னை
விலக்கிடவே நின்மனதும் பாதத்தைப்பற்றும்
அல்லப்பா வாசிதனை மூலத்தூறு
அப்பவல்லோ பரவெளியைப் பற்றுமாசை
செல்லய்யா பலவழியும் பார்த்தாயானால்
சிலம்பொலியின் நாதமதுந் தோற்றலாச்சே. (3

ஆச்சப்பா ரேசகத்தை முதன்மையாக
 அறிந்துகொண்டு பூரகத்தைப் போற்றியில்லு
பேச்சப்பா கும்பகத்தை யுணர்ந்துபாரு
 புகழுறுதி யுண்மையிடந் தன்னைக்கேளு
நீச்சப்பா பழுகுவது கடினமெத்த
 நேர்மைசொன்னால் மூன்றிலுட நிறைத்தைக்கேளு
வாச்சப்பா குணங்குறிமூன் றுக்குஞ்சொன்னால்
 வகையாவி யுடல்பொருளைத் தத்தஞ்செய்யே. (4)

செய்யவுட லுயிருமா ரென்றுபாரு
 சிறப்பாகும் பொருளுடலுற் றுருமாரு
பையவே நின்றகுரு பாத்திலேடு
 பகருமா தாரமென்ற வாறும்பாரு
வையத்தே விழியொழியும் வெளியிலேடு
 வீரான காலடங்கி நடனஞ்செய்யும்
துய்யமணி யானதொரு கருவிபாரு
 சுத்தசித் தாந்தமே தாந்தந்தானே. (5)

தானென்ற மூத்தர்களுக் கிரண்டுமொன்றே
 தன்மையுடன் நாதவொளி கண்டால்மைந்தா
நானென்ற வகம்போச்சு மாயைபோச்சு
 நாதாந்தக் களஞ்சியமாம் வாமபூசை
வேனென்று கும்பித்து வுள்ளேரேசி
 விளங்குமொளி கீதமொடு நாதங்கேட்கும்
பானென்று மூன்றறிய மனமடங்கும்
 பார்த்திடுவா யின்னமொரு சூட்சங்கேளே. (6)

கேளப்பா மனந்தானே புத்தியோடு
 கெடியான வாங்காரஞ் சித்தமாச்சு
வாளப்பா கதிர்மதியு மண்டபிண்டம்
 வகையாக மனந்தானீ சுரியுமீசன்
நீளப்பா மாயைமெய்ஞ் ஞானமாச்சு
 நிலையான வாசிபா பிர்மத்தோடு
கோளப்பா வன்றிமனம் விந்துநாதம்
 குணமான ரூபத்தோ டரூபமென்னே. (7)

என்னவே நிலைநிறுத்தி காற்றையின்றும்
இயல்புமனை முகித்தொழிக்க யானவாறும்
இன்னவகை யென்றுமேகேள் குருவைக்காணும்
இதையறிந்து வங்கென்று மூன்றேரேசி
நன்னயமாய்ச் சிங்கென்று மூன்றேபூரி
நாடியே அங்கென்று மூன்றேகும்பி
சொன்னயமாய் அம்உம்ஓம் சிம்மம்மென்று
சிந்தைதனிற் றேதிரானஞ் செய்குவாயே.

செய்துநடு நாடிக்கண் பிராணையேற்றச்
சிறப்பாக அம்உம்சிம் வங்லம்மென்று
பையவே ஓம்ஐயும் ஸ்ரீயும்சவ்வும்
பாவாசி வாலையாம் பரைசிவாவென்
றய்யவே ரேசகம் மூப்பத்திரண்டு
அயமான பூரகம்பதி னறநாகும்
வையமாய்க் கும்பகமும் அறுபானன்காறு
வகையாகப் பிராணயங் குருவைக்கேளே.

கேளப்பா பத்தென்ற நாடிதானும்
கெடியான நாலியையாய்ப் பிலைமுதிக்க
நாளப்பா யோகமென்ற நிலையைப்பற்றி
நன்மையுடன் கன்னிமற விடமறிந்து
வாளப்பா வாமமென்ற பூசைசெய்து
வந்தான கருவறிந்தால் யோகமச்ச
நீளப்பா அம்உம்மும் வங்யாமமே
நெறியான பலசிமை யென்றுதானே. (1

தானாக வைந்தெழுத்தை மாற்றவேணும்
தன்மையுட னிடகலையிற் சிவவங்யங்க
தானுமங் ஓம்கம பவஷியென்று
சத்தான சிகாரமதை யறியவேணும்
தானாகச் சுழிமுனைக்கு ஓம்மங்கங்யம்
சதாவங்சிங் ஓம்சிவாய நமவென்று
தானாக நகாரமதை யறியவேணும்
சதானந்த சுழிமுனையி லெனிவைப்பாரே. (11

பாரப்பா பவளபச்சை நீலத்தோடு
பசுமையுடன் வெண்மையென்றவைந்தினோடு
சேரப்பா கதிரவன்ற னுதயம்போலச்
சேகரமா மொளியென்னக் காந்திகாணும்
நேரப்பா பிறர்கையிற் கொடுத்தபொன்னை
நினைவுடனே பன்முறையா யிட்டல்போலத்
தேறப்பா வைந்துருவொன் றானமூலம் (12)
தெரிசிக்கத் தீங்கில்லா தருளதாமே.

அருளான வன்னிகதிர் மதியுங்கூடி
அசைவறவொன் றாய்நிற்கப் பூரணந்தான்
வெருளாம லறிபவனே முத்தனாவான்
விதமுறைத்தோன் குருவென்னு மாசானாகும்
இருளகற்றுங் கிரணவொளி யுதிக்கும்பாரு
இதமாயி ரத்தெட்டின் மேலாங்கற்பம்
பொருளான தறிந்துண்போன் யோகியாகும் (13)
புகழான காலறிந்தோன் சித்தனாமே.

ஆமப்பா சாகாத காலினோடு
அருளான வேகாத தலையறிந்து
நாமப்பா கூடியே புனலைக்கண்டு
நன்றாக வுண்டுசற் குருவைப்போற்று
தாமப்பா மூன்றையுந்தான் தனக்குள்ளாகத்
தானறிய லட்சியத்தைத் தெளிந்துபாரு
சேமப்பா வாகாத தொன்றுமில்லை (14)
நிகரில்லாச் சித்தான பொருளாம்பாரே.

பாரப்பா சிறிதுபெரி தின்பமென்னப்
பற்றிவரு கின்றதுமுக் காலமென்ன
சாரப்பா சத்தோடு சித்தானந்தம்
சடமான பொருளதுவு முயிர்தானென்ன
வேரப்பா வித்துமா மானதென்ன
வேண்டியதோர் பஞ்சலோ கந்தானென்ன
நேரப்பா வெட்டுடனே ரெண்டுமென்ன (15)
நிலையான ரகசியமாம் விந்தைக்கட்டே.

கட்டியே கபாடி யொளியைப்பாரு
கண்மேனை தன்னுடனே சுழியைப்பாரு
வட்டமென்ற வோங்காரந் தன்னைப்பாரு
மகிமையுள்ள பஞ்சவெழுத் ததனைப்பாரு
கெட்டிவித்தை விட்டிடாக் கட்டுகட்டு
கேசரமா யகாரமுகத் திலிருந்துநோக்கு
விட்டிடா தேவித்தை விட்டாற்போச்சு
வேலியனை நீகயிற்றாற் கட்டுத்தானே.

தானான நான்றுடனே வைக்கைதச்சேரு
தயங்காதே யெட்டுடனே யிரண்டைச்சேரு
வேனான பத்தோடு வொன்றைச்சேரு
வேறன்றிச் சேர்த்துமே யோகமாகக்
கோனான துவாதசாந் தத்திற்சேர்த்தால்
குணமான சுழிமுனைக்கா தாரந்தானும்
வானான தீட்சைபத்தும் தெளிவாய்க்கேளு
வழங்கொளியாம் பூரணத்தைக் கண்டுநோக்கே. (

நோக்கிடுவாய் கொங்கணர்சொற் கடைக்காண்டத்தை
நுண்ணறிவாய்க் கண்டுகொள்வாய் பூசைதீட்சை
பாக்கியம்பால் பழஞ்சீனி தேன்கற்கண்டு
பஞ்சசுவை யுண்டதுபோ லக்காணும்
வாக்கியமாய் குருமந்திர மமுதந்தன்னில்
வகையாக யோசனைதம் பலவுஞ்சென்றார்
தேக்கியதோர் கால்தலைபா ளியங்காது
தேடிவிழி செவிநாசி யறிந்துகூடே. (1

கூடியே கண்டம்வித் தரியைக்கண்டு
குலவுபுரு வத்தினடு வெளியைப்பாரு
நாடியண்ட வெளிதோறு மதிலிருந்து
நான்குதிசை யானதும் நன்றாய்ப்பாரு
ஓடிஅண்டத் தின்முனைகுண் டலியைப்பாரு
உத்தமொரு மூலவா தாரம்பாரு
தேடியே மூலவட்டக் காத்திலேறு
தெளிவான சடாட்சரத்தின் மகிமைபாரே. (19

மகிமையா மரியயன்றன் னெழுத்தைக்கண்டால்
வழியான வோங்காரக் கம்பங்காணும்
அகிலத்தில் மாண்பருக்கு வாசிதானும்
அறிந்திடுவாய் யங்ஙென்றே தியானி
பகிர்ந்திடுவாய் ஓம்அங் கென்றேறாதனி
பதிவிலே அங்கங்கட் சாக்கைதர்நீட்டி
வகிர்ந்திடுவாய் பாழ்வெளியிற் பொன்னும்பச்சை
வாடிடாப் பிங்கலையின் சுழிமையச்சுத்தே. (20)

சத்தியே சக்திகம்ப மதனைப்பாரு
சருக்காக ஓங்காரஞ் சிரம்பமென்று
நித்தமே யம்மமென் றேநிலைக்கு
நின்மலமா மூலமெனுந் தலத்தைநாட்டி
கத்தியே பஞ்சகோண மேலேவட்டம்
நாவிதழிட் டக்கரத்தை யமைப்பாய்போடு
புத்தியுடன் வாசிபிரா ணயஞ்செய்ய.
புகல்மூல கணேசனவல் லபையுங்காணே. (21)

காணப்பா அத்திவெனு மூலம்பார்க்க
காரியமாஞ் சித்தெல்லா மதின்மேலாகும்
தோணப்பா பிருதிவியுஞ் சுவாதிஷ்டானம்
சொல்திறம்பொன் னாற்கோண மிதழ்நானாறு
வேணப்பா வாசிவைத்து ஓம்கம்மென்று
வினையமுடன் பிராணயஞ் செய்பகன்று
பூணப்பா சதுர்முகன்நா மகளின்தோற்றம்
புனிதமுடன் காடோறும் சித்தனுமே. (22)

ஆமப்பா கடனபார பரியின்பூசை
அனுதினமு மந்திசந்தி யினைவாய்ச்செய்யே
தாமப்பா பிரமதிறம் பசுமையாகும்
தாரணியில் மாந்தரிதை யறியார்காணே
ஓமப்பா மணியான பூரகந்தான்
உற்றபிறை வட்டமிதழ் பத்தேமாயன்
வாமப்பா மாலான பூரகந்தான்
மஞ்சுநிறம் லட்சுமியும் மாலுமாச்சே. (23)

ஆச்சமை ததிமேவி யருளென்காந்தி
அமைப்பான புரிவட்டம் வாசிந்தி
நிச்சப்பா சுகதியா லம்பொசித்து
நிலையாக நம்வம்மம் உம்மென்றேதான்
பேச்சப்பா பிராணாய வரிசையாகும்
பிராணனை யதியாசன் முன்னேதோன்றி
மாச்சலிவ சகலித்து முனைர்க்கிவைப்பார்
மனத்தான நிலையெல்லாம் வாசமதர்ச்சே.

வசமாக மனம்பத்தி கத்திசெய்து
மகிழ்வான இயானமதை புரியவேணும்
வசமாக உணர்வுபற்றி யதற்றுப்பின்பு
வல்லியன் திரிகோண வட்டமேலே
வசமாகப் பன்னிரண் டிதழ்காணிற்கும்
வரைகடந்த ருத்திரன் ருத் திரிதாவுன்றன்
வசமாக அம்உம்ஞம் ஆம்மென்றேற்று
மஞ்சனே வாசியொடு சேசியாமே. (

ஆதரவா யறிவிக்கும் ருத்திரன்றன்
அவனுருவுஞ் சரிகாயம் பகைமேலம்
நீதமுட னுகதாஞ் சுழுத்திவிடு
நினைவான அறிவுக்குள் லிங்கபிடம்
போதமீ தன்றிவ றேதுமுண்டோ
புகல்பிரிக்க வொண்ணாச்சின் மயமதொன்று
காதலைவன் செயலறிக்கற் சித்தன்முத்தன்
நன்மையுடன் ரிஷிமுனியென் றுரைக்கலாமே. (2

உரைக்கலாம் விசுத்தியது கோணமாகும்
உற்றதிறங் கறுப்புமேல் வட்டந்தன்னில்
உரைக்கலா மிவெட்டு மிதழேயாகும்
உண்மையவெல் பரன்மயோல் பரிதாய்ரூபம்
உரைக்கலாம் அம்உம்ஓம் வம்யம்மென்னை
உத்தமனே காடைக்கி யோகஞ்செய்ய
உரைக்கலாம் தாய்க்கதிகன் தந்தைகாந்தி
உயர்வாகும் நம்பினேர்க் கருளுண்டாமே. (27


உண்டாகும் சகலசித்தி காயசித்தி
ஓகோநா தாக்கள் தெரிசனை கிடைக்கும்
கண்டேனே வினையாடக் காயசித்தி
கருணையென்ற ஆக்கினை சக்ரவட்டம்
பண்டிரண்டா மிசமாகும் நிறங்கறுப்பு
பருதியா மாயவனுக் கிரகந்தோற்றம்
விண்டுஇம்டம் ஓம்ஆம் என்றுமேவி
வினையமுடன் லட்சியத்தால் யோகஞ்செய்யே. (28)

செய்யவே சதாசிவத்தின் தோற்றங்கண்டு
தெரிசிப்பாய் மனோன்மணியா மாத்தாள்சத்தி
வெய்யவன்ற னொளிகோடி போலத்தோற்றும்
மிக்கிரண்டு மொன்றாய்ச்சேர் புருவம்பாரு
கையாது அவ்விடந்தா னுதிபீடம்
நலமான சதாசிவத்தி னொளியைக்காணப்
பையவப்பா கண்கூசும் பார்க்கப்போகா
பாலைமுத்தி தனிற்றுவா தசமதாமே. (29)

ஆமப்பா முத்தியுட னஷ்டசித்தும்
அடிமுடியென் றுரைப்பதற்கு வழியுமாகும்
காமப்பா விட்டெழுத்துந் தொட்டெழுத்தும்
நலமாக விடாதெழுத்துங் குருவைக்கேளு
தாமப்பா ஆதாரக் கருவைக்கேளு
தன்மனதி னுறுதியதே மாயைவெல்லும்
தேமப்பா அம்பலத்தை முன்னேகாண
சிற்றம்ப லம்போற்ற அறிவுண்டாமே. (30)

அறிதான தேசிகன்றன் வாசியான
அம்பலமாஞ் சித்தறிந்தா லகண்டசோதி
அறிவான அம்பரையும் உம்பான்றன்
அருள்வடிவ மாகவங்கே உதயமாவார்
அறிவான அம்பலத்தின் புதுமைதோணும்
அடிமுடியாம் புருவமையத் தொளிவுங்காணும்
அறிவான அம்பலமு மாயிருங்கண்டு
அறியாத முத்தனுமா யிருப்பாய்முற்றே. (31)

மிருகண்டர் மெய்ஞ்ஞானம் 30 முற்றிற்று.



குருவே துணை.

ப தி ற் று வ து

குருராஜர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான ரத்நருபாணம் 5

அகார வெனுமெழுத்தாய் நின்றதுவேபோற்றி
ஐயனெனு மெல்லையண்ட ஞாயனுக்கேபோற்றி
திரிபுரையாய்ச் சகலமுமாய் நின்றவற்கேபோற்றி
செகசால மளித்தாளு மத்தனுக்கேபோற்றி
ஒருபொருளாய் மலமொழித்து நிறைந்தவற்கேபோற்றி
யோகமெனும் பலவிதமாம் புணர்ப்பவற்கேபோற்றி
கருவறுக்கு ஞானியாய்நின்ற தெய்வமவற்கேபோற்றி
காசினியி லெனையாடு மலரடிக்கும்போற்றி.

வேறு சந்தம்

ஒன்றாகிப் பலவாகி உருவமாகி
உண்மையுமாய் வெளியாகி புறமுமாகி
நன்றாகித் தீதாகித் தூரமாகி
நாதமெனும் போதமாகி நிலையுமாகி
பொன்றுவதாய் நிசமாகி யதுவுமாகிப்
புகலுவதாய்ப் புகலாத பொருளுமாகிக்
குன்றாத பேரின்ப வீட்டையீன்ற
குருவருளை யெவரறியுங் குறிக்கலாமே.

சொல்லரி தெனச்சொன்ன ஆசானையா
துயரமெனும் விஷப்பாம்பைக் கடிவதெப்போ
வல்லபமா மாணவங்கள் கெடுவதெப்போ
மகத்தான மனக்குரங்கு மடிவதெப்போ
எல்லையில்லாப் பெருவெளியி லிருப்பதெப்போ
இச்சையெனுங் கானல்வெள்ள மிறப்பதெப்போ
கல்பிதமாஞ் செகசாலந் தெரிவதெப்போ
சுகமான சுகத்திலின்பஞ் சொல்லுவீரே.

அருள்பெறவே வணங்கிநின்று கேட்டமைந்த
அரிதரிது ஞானவழி அறிவதற்கும்
பெரிதுபெரி தந்ஞானக் காணற்காட்டைப்
பிரிவுசெய்து நீக்கரிது பெரியோராலும்
குருவருளா லப்பொருளைப் பக்குவமாய்க்காணக்
குணக்குறியாம் பெரியோர்க்கே பாமயுகந்தெரியும்
தெரிபொருளைத் தெரியவென்று நாமுமன்றலாக
செகத்திலே குருவருளாற் செப்பக்கேளே. (4)

பூசைசெய்யுங் கிரியைவிதம் நூற்றெட்டப்பா
பொருந்துசித்தி மனைப்போயின் புலைபாட்டாச்சு
பாசையிலே பதினெட்டு எனைமையென்றும்
பாட்டல்லால் வேறேதும் பழகிநாகேனும்
பேசையிலே பலகோடி நூல்கள்கற்றும் . .
பிறக்குபல சமையங்கள் பிணக்கதாச்சு
ஆசையுள்ள தந்திரவித்தை அனேகங்கோடி
அத்தனையும் விசம்பார்க்க அகந்தைதானே. (5)

தாயகமா யுலகமெல்லாம் மயக்கஞ்செய்யும்
சல்லியத்தின் மகிமைமெத்தச் சாற்றப்போமோ
ஆயிமனங் கூர்ந்தறிவில் விழலாமப்பா
அறிந்தவர்க்கு மசகமப்பா யகிலசத்தி
நேயமுட னிவையெல்லாம் பிறவியென்றே
திண்ணையமா யஷ்டாங்க யோகந்தன்னுள்
வாயுவுட யோகவித மொன்பதாறு
மனமடைந்த யோகவித மொன்பதாறே. (6)

விறான ஆசையெல்லாம் நீக்கிமேலாய்
மேலான யோகவிதந் தெரிந்துநாடிப்
பேறான குருவருளாற் பழக்கமாகிப்
பிணக்கறவே மனம்வாழப் பேச்சுநீக்கி
கூறாத பொருள்தனைக் கூடலாகும்
குருவருளை யல்லாது கூடலாமோ
வாறான யோகவிதம் நூற்றெட்டுக்கும்
வகைதெரிய நாமுரைப்போம் மகிழ்ந்துகேளே. , (7)

ஆதார மொன்றுக்கு விதமாறாக
  ஐயாறு விண்ணகளில் அறிவட்டப்பா
வாதாலே குண்டலிக்கு மொட்டுவிதமப்பா
  வகையொன்றாக் கலக்கநித்தி மறிக்கலாகும்
ஆதாலே இதமாகுண் டலிசேர் சோமன்
  சகலமைகெபால் நிற்றனிக்க சித்திகோடி
ஆதால வாசமம குண்டலியுஞ் சேர்க்கும்
  அலங்குவித வமயாறக் கலிக்கப்பாமகனே.

அடக்கமுள்ள மூப்பதுக்கு வெட்டிவிதமைந்தா
  ஐயனுடை இருக்கைக்கு அதிகேதாவிதானும்
ஒடுக்கமுள்ள அமுதமுண்ணும் யோகவிதம்ரெண்டாம்
  உத்தமர்க்கே யல்லாம லுனக்குக்கோகிடைக்கும்
கிடைத்துடனே அமுதமுண்டு வெகுகோடிகாலம்
  தேகமழியா திருக்க இளமதிவளரும்
மடக்கம்வரத் தெரியாமற் காயசித்தியென்பார்
  மலமறுக்கா வுனசடத்தை மதிக்குமவர்தானே. (9)

செத்தியென்னும் விழிபார்க்கி லகிலமெல்லாமுருகும்
  கேத்திமெத்த கேத்திமெத்த கிசைகண்டன்பார்வை
புத்தியுள்ள சீமான்க ளறிந்ததிக்கப்பாதை
  புலையழிந்த பாதையிற் புத்திகெட்டுமலைப்பார்
சத்தியமாய் மனத்தையுன்னிப் பார்க்குமவகையறியார்
  தன்மையைப் பின்தொடரச் சற்குருவென்றலைவார்
சித்திரையில் லாதவிடங் காணுமதுபாரார்
  நினைவழிந்தாற் சித்திமெத்த நிர்க்குணமாம்பாரே. (10)

மேலான பரஞ்சுடரைப் பார்க்கவேசித்தர்
  விசித்திரமா மூலகமெல்லாஞ் சணைப்பொழுதிலப்பா
மாலான மனிதரோடு மாடுபட்சிருகம்
  மாங்கல்லாய்க் கெடுத்திடலாம் மாங்கல்லையுயிராம்
நாலிரண்டு சித்தியது நயக்தெரியலாகும்
  நாடிநின்று குருபாதம் நாமறியலாகும்
கால்மேலுந் தலைகீழும் நடப்பதுவுந்தெரியும்
  காரணசற் குருவருளாற் கண்டவர்க்கேநேசமே. (11)

யோகமென்றாற் றிரிந்தலைவார் வகையறியாமாக்கர்
யுகங்கோடி தவஞ்செய்தோர் யோகநெறிசேர்வார்
போகஞ்செய் கருமத்தரும் யோகமறியவரோ
புத்திகெட்ட மாந்தர்களும் யோகமறியவரோ
தேகமதி லடையோகந் துன்பமற்றதொழிலாம்
சித்தமற்ற யோகமதாற் சித்திமெத்தப்பெறலாம்
மோகமற்ற பெரியவரே தூயவருஞ்சித்தர்
மூடமற்ற தூயவரே யோகிகளாஞ்சித்தர். (12)

வெளியாக யோகவிதம் விரித்துரைத்தோமானால்
மேலான பெரியோர்கள் சாபமெத்தப்பலிக்கும்
களிகூறச் செகசாலம் யோகவிதமனைத்தும்
கருதாம லுரைப்பவர்வாய் கனலெழுந்துருமும்
பளியாக பூமிமட்டும் நரகமதிலுழல்வார்
பஞ்சபா தகச்சென்ம மெடுத்தொளியாய்ப்பாவம்
தெளியாத மூடருக்கு உண்மைதனைச்செப்பார்
திரமுடைய மனத்தனுக்குச் செப்புவர்கல்லோரே. (13)

கற்பமுண்டு மருந்துமுண்டு சாதகமுமுண்டு
கருத்தொடுங்குந் தந்திரமு மந்திரமுமுண்டு
உப்புடனே புளிப்புவிட்டாற் காயமதுபிலமாம்
உற்றநடு வனைதிரமாம் யோகமதுதிரமாம்
மெய்ப்புடனே யிந்தவகை யிற்கில்நெறியென்பார்
வீணான வுடம்பைநம்பி மெய்யுணர்வுண்டாமோ
சர்ப்பனையாய்க் குடிகெடுக்குங் குருக்கள்தனைநம்பி
சளக்கான பிறவியிலே சாதுவரோநல்லோர். (14)

ஏதப்பா ஆசையெனும் பேய்கள்பிடித்தலைந்தால்
எவரப்பா யோகத்தி லின்பமுற்றுவுணர்வார்
வாதப்பா பெரிதாகிச் சாஸ்திரங்கள்கற்று
வழியான பேர்தனையும் மயக்கிவிப்பார்புல்லோர்
சூதப்பா பெரிதாச்சு வாய்பகட்டுமாச்சு
சூத்திரதனை யினிக்கிரம்பும் தூர்த்தகுருவாச்சு
ஏதப்பா யினியுலகில் வாய்பேசலாமோ
எல்லாரும் ஞானம்வந்து யிறந்துகெட்டவாறே. (15)

ஆசாரத் தொழிலாகி சோம்பிருக்குந்தெய்வம்
அநுசரித்துப் பலமிருகம் அறுத்துப்பெலியூட்டிக்
கூசாமல் நிர்வாணச் செபமுருவேசெபித்து
குறியாய்த்தன் னுடற்கிழித்து காபெலியேகொடுத்
மாசான அஷ்டகர்மம் விளையாடுஞ்சக்கரம்
மாச்சலெனத் தனமனத்தை மாய்த்தலையமாக்கிப்
பேசாமற் கணப்பொழுதி னுலகமெல்லாம்பேயாய்ப்
பிதற்றிவிக்கும் மாயைசித்தி யோசவொருதனையோ.

சித்தியென்றால் மருந்தவமாய் மருவியலையாதே
ஜெகத்தைதயெல்லாங் கெடுத்திடலாம்கொடிக்குமுன்
புத்தியுள்ள நல்லோர்க்குப் பூசைசெபம்வேண்டாம் [திர
புவனமதிற் கடைப்பேயா பொய்யுறவுவேண்டாம்
சத்தியமாய்ப் பலகோடி சித்திகள்செய்திடலாம்
சாதிதநாற் செகத்தோர்க்குச் சத்துருவாய்முடியும்
நித்தமுமே பழிபாவக் கொடுமைபயம்வேண்டாம்
நீதியுள்ள நல்லோர்க்கு நினைக்கிடிற்சித்தியுமே. (1

பேசரிது சித்திகள்தான் காண்மறைக்குமுடிவு
போரளி தவஞ்செய்தோர் சித்திகளைப்பெறுவார்
ஆசில்லா மனத்தவர்க்கே சித்திகள்வந்தெய்தும்
அகந்தைப்பேய் பிடித்தவர்க்குச் சித்தியணுகிடுமோ
பாசமுள்ள மனத்தவரே சித்திகள்பெற்றதனால்
பலபேர்க்குந் தீங்குசெய்து படுகாயில்வீழ்வார்
வேசையர்போல் தனைப்பகட்டிப் பெருமைசெயுங்கயவர்
மேவியசித் தியுங்கொடிதாய் மேலோர்க்குநகையே.

சித்தியினால் மயங்கினவர் சீவன்முத்தியடையார்
சீவன்முத்தி யடைந்தாலும் செடந்தின்முத்தியடையா
புத்தியுடன் செடத்தின்முத்தி பெற்றவர்தானெனினும்
பிறர்தனக்கு மெய்ஞ்ஞானம் போதனைசெய்தறியார்
சித்தியுடன் பிறர்தனக்குப் போதனையாலவரைச்
சீவன்முத்தி கொடுத்தளைத்த திறமுடையாரெனினும்
எத்தனைசா தகமிருக்குஞ் செத்தவிடத்திருக்க
எவராலும் முடியாது விருப்பதுவுமெளிதே. (19)

கிட்டாத ஞானவெளி யிட்டுவந்தபெருமை
    கிடையாத மதுபானங் கிடைத்தவரோ பெரியோர்
கட்டாத மதயானை கட்டினரோ யோகர்
    கசப்பில்லாப் படைக்கலங்கள் கட்டினரோ சூரர்
எட்டாத கனியதனைப் புசித்தவரோ சித்தர்
    எழுதாத மறைப்பொருளி னியல்பறிந்தோர் புலவர்
மட்டில்லாச் செல்வங்க ளறிந்தவர் பூசகரும்
    வாய்ப்பேச்சி னாலேதுவும் வருவதுண்டோ யலன்றான்.

பெருமையுள்ள நூற்றெட்டுக் கிரியைவிதந் தனக்கும்
    பிணிப்பறுத்த நூற்றெட்டு யோகவிதந் தனக்கும்
அருமையுள்ள தந்த்ரவித்தைச் சல்லியங்கள் தனக்கும்
    ஆதியாம் பரைபொருத்தி யாட்டுவள்மாய்மாலம்
தெரிபொருளாய்த் திரிபுரையை வணங்கியநல்லோரைத்
    திரிலோகஞ் செயித்தவர்கள் செகசாலந்தெரிந்தோர்
குருவருளாற் பூசைவிதி தெரிந்தபரம்பரையைக்
    கூசாமற் றெளிந்தவரே கூடுவர்மெய்ஞ்ஞானம். (21)

ஆத்தாளை யறியாத பூசையென்ன பூசை
    அம்பிகையைக் காணாத காட்சியென்ன காட்சி
பார்த்தாலும் பசியுண்டோ பாவிகள்கோலம்
    பாதகர்க்குக் கிடைத்திடுமோ பராபரையாள்சேவை
வாழ்த்தியென்ன பூசைசெய்யச் சக்கரந்தானென்ன
    மனோன்மணியைப் பூசைசெய்ய மனோலயமேகோவில்
சாத்திரங்கள் கோடிகற்றும் சாம்பவியைக்காணார்
    தாயையல்லாற் பூசையுண்டோ சண்டாளர்தனக்கே.

அகிலாண்டம் பலகோடி யவட்குமொருகோணம்
    அப்படியே காற்பத்தி முக்கோணம் அடைந்தாயி
புகழான மாலயனும் ருத்திரன்மாதவரும்
    பூரணியை யல்லாமற் பூசையும்வேறறியார்
உகந்தவளைப் பூசைசெய்யத் திரிதேவர்முனிவோர்
    ஓகோகோ பலகோடி யுகந்தோறும்பணிந்தார்
சகலமுமாய் நின்றவள்தன் கோலமெவரறிவார்
    தன்னையறி யாதவனைத் தான்கெடுப்பாள்நீலி. (23)

வேறு.

பேசாதே மகனேநீ உலகந்தன்னிற்
பேசினாற் பேயருக்கும் பெரியபேய்கள்
ஆசைகொண்ட பேய்களுடன் பேசலாமோ
அவர்செயலை வினைவே யறிவாயப்பா
வாசனைக ளறிந்துகெட்ட பேய்கள்கூடி
மாதங்கி திருவடியை வணங்கிப்போற்றார்
நேசமதில் திரிபுரையை வணங்கிஞான
நித்தம்வினைப் பத்தருக்காம் நிசமாய்ப்பாரே.

பாரப்பா மனோலயவோங் காரமவள்பீடம்
பாதசக்தி குடியிருந்தாள் சிங்காசனத்திற்
காரப்பா வுன்னைவிட்டு நீங்காமற்காளி
கடந்துவிட்டா லவளாலுங் காணவரிதாகும்
சேரப்பா அவள்பதத்தி லுன்னறிவுவந்தாற்
செகசாலந் தெரியாதோ சிவன்முத்திபுறம்போ
ஆரப்பா ஆத்தாள்தன் திருக்கூத்துக்காண்பார்
ஆச்சரிய மாச்சரிய மவளுடைமாய்மாலம்.

* சட்டையில்லாப் பாதகர்க்குக் கிட்டுவளோதாய்தான்
சாத்திரப்பேய் கற்றவர்க்குக் கிட்டுவளோசமர்த்தி
மட்டில்லாக் காமுகர்க்குக் கிட்டுவளோவம்பி
வல்லமைசெய் மூடரிடம் வருந்துவளோதிருடி
பட்டமரம் பால்சொரியும் பழிகாரியினைந்தால்
பச்சைமரம் பாழாகும் பத்தினிதான்கெடுத்தால்
சட்டகண்டு குதித்திடுமே சீவியதிகாரம்
துரைமகனைக் காணாத அபாரமெங்கேதிரும். (2

கட்டளைகள் படியாதே வீப்புகள்பேசாதே
நானென்றுஞ் சதந்தரங்கள் கனவில்நினையாதே
கிட்டநின்று பேசாதே சபைதனிற்செல்லாதே
கேடுகெட்ட வடலைநம்பி இடைபொருள்சொல்லாதே
தெட்டியுண்ணும் புசிப்பாலே வுண்மைகள்சொல்லாதே
தேசமதில் மருந்துவமாய்ச் சித்திகள்பண்ணாதே
எட்டிமரக் கனிதனைப்போல் உதவிகள்செய்யாதே
எத்தனைதா னறிந்தாலுஞ் செத்தவர்போற்றிரியே. (27

நீபிழைக்க வகையறியாய் பிறர்தனக்கே துலையப்பாய்
நிலையாத பெருங்கடலில் நிலைப்பார்களோ மூடர்
வாய்ப்பகட்டிற் பொருள்பறிக்கச் சீவன்முத்தியாமோ
மனக்கசட்டை அறியார்க்கு மெய்மதங்களாமோ
பேய்ப்பகட்டித் திரிந்தாப்போற் றிரிவதென்ன ஞாயம்
பேருலகில் ஞானமல்லால் பிழைக்கவகையில்லையோ
தாய்பகட்டி யறியாமற் றனையறிந்தோமென்றால்
சதுராயுகம் வெகுகோடி சாருவரோ கரையில். (28)

வெள்ளோலை தனையெழுதிக் குவித்ததினாலென்ன
விகடமுள்ள சாஸ்திரங்கள் கற்றதினாலென்ன
உள்ளமனக் கசடறியார் ஞானியாகுவரோ
ஐவண்சடத்தைப் பகுத்தறியார் யோகிகளாகுவரோ
கள்ளருந்தித் திகைப்பார் தன்மனதே கள்ளு
காரணிதன் னுருவறிந்தார் கள்ளீளவே கள்ளு
துள்ளான மனக்குரங்கு தானறும்வகையறியார்
தொல்லுலகிற் சித்தரெனச் சொல்லுவது நெறியோ. (29)

பாழென்பார் பரையென்பார் பாழறியாமாந்தர்
பாழேது பரையேது பரைகடமேது
கோளான மனமல்லோ பாழாகிக்கெடுக்கும்
குறித்தமன மாயையதே கூர்த்தபரையாகும்
தான்தனிலே தாயுமவள் தானிருந்தாளானால்
தனிப்பாழாய் நின்றதிலே தாக்குமிடமேது
பாழ்தனிலே தாயிருந்தால் தாயையெவரறிவார்
பாரேது விண்ணேது பகரவகையேதே. (30)

ஏகவெளி கோடிமதி யெந்தாய்க்கும்வீடு
எண்ணொண்ணாச் சூரியன்போ லெந்தாய்தன்கோலம்
மோகமுள்ள பாதகர்க்குப் பாழ்போலகாணும்
முத்தியில்லா அவத்தருக்கு மறைவள்முழுநீலி
சோகமற்று ஆசையற்றுத் துயரமெல்லாந்தீர்த்து
தொல்லுலகிற் பிறவியெல்லாந் துன்பமெனப்பயந்து
தாகமுள்ள நல்லோர்க்கே தாயும்வெளிப்படுவாள்
சற்குருவா லறிபவர்க்கே தாயும்வெளிப்படுவாள். (31)

தன்னையறிந்த பெரியவர்க்கு வித்தைவிளக்கந்தெரியும்
　சாந்தகுணம் பொறுத்தவர்க்கே சாந்திநிலைதெரியும்
பின்னுறவில் லாதவர்க்கே சங்கைமுறைதெரியும்
　பேதங்கள் வெறுத்தவர்க்குப் பேருணர்வுந்தெரியும்
அன்னையுமுந் தந்தையுங் கலந்தவிடம் பதியாம்
　அப்பதியைப் பார்ப்பதற்கு ஆருரைப்பார்வித்தை
உன்னிநின்ற பதங்களைப் போகவுந்தக்காமோ
　ஒப்பாது மனக்கசடு என்னபொருள்காணே. (40)

வானாவின் வாயிலுழல் மண்டூகம்போலும்
　வருங்கருடன் வாயதனில் மருளரவம்போலும்
கோளான உலகாசை தனக்குமப்பாலப்பாய்ந்து
　குறிகள்சக்குந் தவறுமற்றுக் குருவருளோடு
பாளான உலகிலுள்ளோர் தனைத்துமெத்தக்கேடாய்ப்
　பழிப்பதற்கு வெட்காமற் பரம்பொருளைப் பெரிதாய்த்
தேனான இச்சையுற்று மருவுமனக்கெதிர்க்கா
　சித்தமுரு வொன்றாகச் சேர்ந்திருப்பார்நல்லோர். (41)

வித்தையப்பா இரண்டுகருக் காணியாவதுபோல்
　உள்ளமதி வெள்ளையும் உடைந்திடாவகையால்
எத்தமுள்ள கற்பனையா மிச்சைபலவாகி
　எண்ணமொடு துயராகி வெளியதுபெரிதாகி
பார்த்ததெல்லாந் தனதாகிப் பந்தமுங்கற்பனையாய்ப்
　பாசமுமாய் ஆசையுமாய்ப் பண்புமிகுதாகி
வார்த்தைபல போகிவுலகமயல்மிசமாய்
　மறந்தாலும் மறக்கவொண்ணா வல்வினையாய்நிலைக்கும். ()

சாந்தியென்ன வேறுமோ பேதமெல்லாம்நீங்கிச்
　சத்துவமாங் குணமாகித் தன்னருளைப்பார்த்தால்
மாந்தர்மனம் நயமாகும் மனோலயமேநிசமாம்
　மறந்தாலும் பேரின்ப மார்க்கவழிதெரியும்
சேர்ந்தமனக் கசடறுக்குஞ் சிவத்தியானமாமோ
　செகமெல்லாந் திரிந்தலைந்து சித்திசெய்தாலாமோ
சாந்தமனத் துயரமற்ற பெரும்பதியைநோக்கிக்
　கண்டாலும் உரைப்பதுவுங் கடினவித்தைதானே. (43)

ஓடவுமொட்டாது பிடி கொடுக்கவுமொட்டாது
ஒளியாது காமப்பேய் உலுக்கருக்கப்பிடித்தால்
வாடுவது மகிழ்ச்செருக் காமக்கோட்டாலே
மடிவதுவும் பிறப்பதுவும் காமக்கோட்டாலே
பாடுவதேன் படிப்பதுவேன் ஆசையெல்லாம்மனதில்
குணமான மூவரைப்போற் சிவனைப்போல்
திருக்கெடுத்த வெத்தனை யவதாரங்கள் (53)
செய்திடலாம் நிலையறிந்த பெரியோர்தானே.

தானவனே யென்குருவே புசுண்டநாதா
தாரணியி லுயிர்களுட னண்டமெல்லாம்
தோணவே மும்மூர்த்தி தோற்றுமென்றீர்
துடியான பிரமத்தி லடங்குமென்றீர்
கோனவனே யின்னுந்தா னண்டமெல்லாம்
குறிப்புடனே படைக்கும்வகை குறிப்புச்சொன்னீர்
தானவனே மதாவுனக்குச் சொன்னீரையா (54)
தலந்தனிலே வாசியது சாற்றுவீரே.

சாற்றுகிறே னென்மகனே வாசிநாதா
சத்தியமா யண்டமதிற் செல்லும்போது
போற்றுகிற வக்கினியும் பிரவேசித்துப்
புலன்களைத்துஞ் சேர்த்துநிறைப் போதமாகும்
மாற்றிலையு மதிகமடா வுன்றன்தேகம்
மைந்தனே யபுருப மாகுமப்பா
வாற்றியே நிழல்சாயை யற்றுப்போகும் (55)
வலுத்ததடா காயசித்தி யாச்சுபாரே.

ஆச்சென்ற வரூபமய மானபோது
அஷ்டமா சித்திவகை யெட்டுமாகும்
மூச்சொன்றி லடங்கிப்போம் பிரமத்தாலே
முன்னலியும் பின்னலியு மொன்றாய்ப்போகும்
காச்சென்ற காச்சிவிடு மௌனங்கண்டு
கலைமாறி நின்றிடுமே கனகபீடம்
நீச்சொன்ற மில்லையடா வுன்னைக்கண்டால்
நிலைத்ததடா சமாதியென்ற மார்க்கந்தானே. (56)

மார்க்கமுடன் தவசிலே யறியாமற்றான்
மனந்தளர்ந்து திரிவார்கள் லோகத்தோர்கள்
ஏர்க்கமுடன் முப்பதுக்குள் மௌனங்கண்டு
இளவயதா யிருப்பார்கள் பெரியோர்மைந்தா
காக்கவே சற்குருவின் பாதங்கண்டு
கருணையுட னவர்பதத்தை வணங்கிப்போற்றி
தீர்க்கமுடன் பிரமத்தில் மனந்தான்செல்லச்
சிவனுக்குஞ் சிவனா யிருக்கலாமே. (57)

இருக்கலாஞ் செடிபூடு கற்பமில்லை
ஏகாந்த மானதொரு பிரமந்தன்னில்
உருக்கியே மனதடங்கிப் பார்க்கும்போது
உத்தமனே கர்ப்பத்துக் குறுதியாச்சு
மருக்கியே திரியாமல் மதம்பேசாமல்
வண்டரோ டிணங்கியடா மருவிடாமல்
குருக்கியே கோளரிடஞ் சேர்ந்திடாமற்
குருபாதங் கண்டுமிகப் பணிந்துபாரே. (58)

பாரென்ற சொன்னமெய்ஞ் ஞானமூர்த்தி
பரத்தினுட வடிமுடியும் பகர்ந்துசொல்லும்
சீரென்ற சொற்பனங்கள் பேதமாகத்
திடப்படவே காணுமிடந் தீர்க்கஞ்சொல்லும்
காரென்ற மனம்பிறந்த இடந்தான்சொல்லும்
கதிர்மதியுஞ் சுத்திவரு மார்க்கஞ்சொல்லும்
வைரென்றும் பிறந்தவிடந் தலந்தான்சொல்லும்
உத்தமனே பிறந்தவகை யியம்புவாயே. (59)

ை சொல்லுகிறேன் மகனே கேளு
கத்தான பிரமத்தின் பாதந்தன்னில்
முன்சொன்ன காப்புமின்னி
த்தமனே ரவிமதியுஞ் சத்தியாகும்
டா வாசியுந்தான் சுழிமுனின்று
ர்க்கமுடன் சுழுத்தியுள்ளே மனந்தாஞ்செல்லும்
ர சுழுத்தியென் றிருக்குப்பேரு (60)
ண்டோர் கண்கொள்ளப் போதந்தானே.

ன்ற பளுபட மதிகங்காணும்
னுடைய தேகத்தோர் மின்னுங்காட்டும்
ன்ற பெண்ணைப்போ லுன்னைக்கட்டி
டத்தமனே சையோகஞ் செய்தாற்போலே
ான்று மயக்கிவைக்குஞ் சுழுத்தியாலே
சித்திப்புப் போலேயுங் குகிலைகாட்டும்
மன்ற குருவருளைப் பணிந்துகொண்டு (61)
குறிப்பறிந்து பூரணத்தின் நிலையைப்பாரே.

ாத சமுத்திரமே சுழுத்தியாச்சு
நின்றிலங்கும் வாசியைத்தான் வெளியிற்சேரு
பாமக் கிளியைப் படியேசேரு
சத்தியமாய் ரவிமதியைக் கூடச்சேர்த்து
பாம லேகபார பரனையென்று
மனதடங்கி யண்டவுச்சி தன்னைப்பார்க்க
யாது மனந்தானும் பரத்திற்சென்று (62)
ஆகாச வீதிவெளி யாட்டும்பாரே.

ட்டுமடா ஆசையற்று ரோசமற்று
அன்னைசுற்றந் தனைமறந்து அகண்டமேவும்
ட்டுமடா நவத்துவா ரங்கள் தன்னைப்
பொறிகளைந்துஞ் சேருமடா புனிதமாகக்
ட்டிலென்ன காட்டிலென்ன மௌனங்கண்டாற்
காமதேனுங் கற்பகமு முனக்கேசித்திப்
ட்டிலையுந் தீபம்வைத்தாற் பிரகாசிக்கும் (63)
வெளியேறி ஞானதீபம் விழலாய்ப்போமே.

போகுமடா புத்திசித்த மொன்றதாகி
புசண்டரென்று பேரெடுத்தப் புலவர்தங்களில்
ஆருமடா வடகாசி மைந்தனென்றும்
அருமையாங் கன்னியுட புதல்வனென்றும்
நாகுமடா வைந்துபேர் தன்னிலேதான்
நாட்டமுடன் முன்பிறந்தேன் காண்மைந்தா
வாருமடா சாண்முழுத்திற் காட்சிபார்க்க
வல்லவுந்தான் யீஸ்பாறு வென்றார்பாரே. (64)

பாரப்பா வென்குலந்தான் சொல்லக்கேளு
பார்தனிலே பாமனுட விந்துவாலே
ஆரப்பா பிறந்துவிட்டோடா மைந்துபேரும்
ஆகாச வண்டமதை யளித்தேசென்றேன்
நேரப்பா வெகுகோடி காலம்வாழ்ந்தேன்
நிஷ்டையிலே மனந்தவாக இருந்துகொண்டேன்
வீரப்பா பேசுவார்கள் லோகத்தோர்கள்
விட்டவிடந் தொட்டவிடம் விரும்பிக்காணே. (65)

காணப்பா சாதிகுல மெங்கட்கில்லை
கருத்துடனே யென்குலந்தக் கிலமையாகும்
தோணப்பா தோணுமற் சாதிபேதந்
சொல்லுவான் புத்திகெட்டு முருண்டபோலான்
வீணப்பா பிர்மத்தி லாதிகாலம்
வீரமுடன் பிறந்ததடா வுயிர்களெல்லாம்
காணப்பா அப்படியே யுதித்தேன்முன்னே
நன்றாக வுதித்தவிடம் நாடினேனே. (66)

நாடியே வுதித்தவிட மறியாத்தோடம்
நடுவாக வந்தவிட மறியாத்தோடம்
கூடியே பிறந்தவிடங் காணாத்தோடம்
குருபானை நிந்தனைகள் செய்ததோடம்
வாடியே வன்தோடே சோரத்தோடம்
வம்பரோ டிணங்கியே திரிந்ததோடம்
கூடியே யுறவற்று யிருந்ததோடம்
கும்பிடுங்கற் சிப்பியையும் அறியான்பாவி. (67)

றியாத பாவிகட்கு ஞானமேது
ஆறுமுகன் சொன்னதொரு நூலைப்பாரு
ரியாதை யாகவுந்தான் சொல்லவில்லை
பராக்கிரமர் தன்னுடைய நூலைப்பாரு
ரிவாகச் சித்தர்சொன்ன நூல்களெல்லாம்
விறுக மறைப்பாகச் சொன்னாரையா
றியான அண்டமதை வெளிதந்தேவிட்டார்
கூறினார் வெள்ளையாய்க் குற்றந்தானே. (68)

நத்தமது வையாம,லண்டத்தேகிக்
கூறுத மந்திரங்கள் குறிப்பைப்பார்த்துச்
சித்தம்வைத்து அக்கினிசத்தி யுச்சிக்காலம்
தேவனுக்குப் பூசைசெய்து தெளிவுபெற்றுச்
நத்தமது வையாமற் றனதன்பாலே
குருபாதை நோக்கியடா தவமேசெய்து
பத்தாளை வைத்துமிகப் பார்க்கும்போது
பாரபரையுங் கைவசமா யாகுவாளே. (69)

ஆகுமே அக்கினிசத்தி யுச்சியென்றால்
அப்பனே ரவிமதியுஞ் சுடர்மூன்றாகும்
ஏகுவாய் மூன்றுமொன்றாய்ப் பின்னலாகி;
இருந்திடவே பிரமத்தின் நிலையதாகும்
போகுமே நீசெய்த கர்மமெல்லாம்
புவனைதிரி சூலியுட கிருபையாலே
வாகுமே வழியோடே நடந்தாயானால்
வாலையுந்தான் கனவில்நடஞ் செய்வாள்பாரே. (70)

பாரப்பா வாலையுக்கா ளிருக்கவீடு
பாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
ஆரடா அண்டத்தின் கொடுமுடியினோடே
அண்டத்தைப் பத்தியடா விழுதுபோல
கோடா கரம்பதுதான் பொருந்திநிற்கும்
நிலையான வக்கினியின் மத்திதன்னில்
வீடடா அறுவழியே அருள்தான்பாய்ந்து
விண்ணுலகி லென்றுமிழைச் சொல்லுவாளே. (71)

சொல்லுவா ரனந்தமறை வேதமெல்லாம்
சுருதியடா முடிந்தெழுந்த பிரமந்தாலே
வெல்லுவார் தன்னையறிந்த பெரியோரெல்லாம்
வீராண்மை பேசார்கள் மௌனமாக
அல்லுபக லற்றதொரு பிரமந்தன்னை
யாரறிவா ருலகத்தி லறியமாட்டார்
சொல்லடங்கு மிடந்தன்னையுங் கண்டுபோற்றிச்
சூத்திரமாய்க் கல்லுப்பு வாங்குவாங்கே. (72)

வாங்கியே அண்டத்தில் மூனைசேர்த்து
வளமாக வுப்பிலையும் பிசறிமைந்தா
தாங்கியே திருகுகள்ளிக் குள்ளே வைத்துத்
தமர்வாயைத் தான்மூடிச் சாயந்தீர்த்து
ஓங்கியே திங்களுந்தான் மூன்றுசென்றால்
உத்தமனே கள்ளியைத்தான் றரித்துக்கொண்டு
சாங்கமினிச் செய்யாமற் சிமையன்றுந்து
சத்தியமாய்ச் செய்தபின்பு உலர்த்திப்பாரே. (73)


பாரப்பா வுலர்ந்தபின்பு வெடுத்துமைந்தா
பத்தியுடன் கெஜபுடத்திற் போட்டுப்பாரு
ஆரப்பா ஆறவைத்து வெடுக்கும்போது
அருணனிற மாயிருக்குஞ் செந்தூரந்தான்
நேரப்பா அணுப்போலே சாக்குக்கெல்லாம்
நிட்சயமாய்ப் பூசியுந்தான் புடத்திற்போடு
வீரப்பா நீறுமடா நவலோகந்தான்
வேதையென்ற வித்தையது கைக்குள்ளாச்சே. (74)

ஆச்சப்பா வுடம்பிலுள்ள வியாதியெல்லாம்
அணுப்போலே வுண்டிடவே பறந்துபோகும்
வாச்சப்பா தேகசித்தி யதிகமாச்சு
வஸ்துவுடன் கூடியுந்தான் வாழலாச்சு
மூச்சப்பா தலையின்டங் கொடியுமாவும்
முக்கியமாய் வாங்கியதைத் தயிலம்வாங்கு
ஏச்சப்பா திரியாதே கூடன்சேர்த்து
இன்பமுடன் வஸ்துவையும் பூசைசெய்யே. (75)


ஊறீஓம்றீ சொல்லியிலே தொட்டுக்காட்டு
    ஆமடா காட்டையிலே தெரியாவிட்டால்
குரியாகக் கூட்டிப்போய்க் கைகொக்கொண்டு
    குறிப்பாகத் தீர்க்கக்காற் குணமாய்ச்சொல்லு
அரிஓம்தா னப்படியே தெரியாவிட்டால்
    அப்பனே யினிமேற்றான் சொல்லக்கேளு
விரிவான நாவேற்றி யம்மைப்பூட்டு
    விதமாக வலம்பார்க்க வெய்துகாட்டே. (80

புகண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் 80

முற்றிற்று.



மதுரை சிவஞானதீபச்சபை காரியதரிசி ம. அழகர்சாமிபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.



உ

பரமபதி துணை.

இருபத்தோராவது

புசுண்ட மகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

ஞான காவியம் 33.

கணபதியே அடியாகி யகிலமாகிக்
காரணத்தின் குருவாகிக் காட்சியாகிக்
குணபதியே கொங்கையின்றாள் வெள்ளைஞானக்
குருநிலையா யருள்விளங்குங் கொம்பேஞானக்
கனவிலையும் நினைவிலையும் ஒளியாய்நின்ற
காரணத்தின் வடிவாகிக் கருத்துள்ளாகிப்
பணியரவம் பூண்டசிவ வாசிநேர்மை
பாடுகிறேன் காவியத்தா னெண்ணிப்பாரே.

நூல்.

எண்ணியெண்ணிக் காவியத்தை யெடுத்துப்பாரு
எங்கோங் காமசிந்தை யிதுவேநோக்கும்
பண்ணிபண்ணி பலகுட்டி போட்டாலென்ன
பதியானைக் குட்டியொரு குட்டியாமோ
சண்ணிசண்ணி யிந்நூலை நன்றாய்ப்பாரு
சக்கரமு மக்கரமும் சுஷுணைத்திற்றோன்றும்
தண்ணிதண்ணி யென்றலைந்தாற் றாகம்போமோ (1)
சாஸ்திரத்தி லேபுகட்டித் தள்ளியேறே.

புகட்டினான் தசதீட்சை மகிமைதன்னைப்
பூரணப்பா லெனக்களித்து அகண்டந்தோறும்
சகட்டினான் சகலசித்து மாடச்சொன்னான்
சந்திரபுஷ் கரணிதனில் தானஞ்சொன்னான்
பகட்டினா னுலகமெல்லாம் முக்கோணத்திற்
பரஞான சிவயோகம் பண்பாய்ச்சொன்னான்
அகட்டினா னவர்களை நீன்றாளம்மன் (2)
அந்தருமை சொல்லினி யடிதான்கேளே.

கேளப்பா பிசனொரு காலந்தன்னிற்
　　கிருபையுடன் சபைகூடி யிருக்கும்போது
வாளப்பா மாலயன்றன் முகத்தைநோக்கி
　　வந்தவா றெவ்வகையோ சென்றதேதோ
கோளப்பா ஜெயகால லயத்தானெங்கே
　　குருநமசி வாயமெங்கே நீங்களெங்கே
ஆளப்பா ஐவர்களு மொடுக்கமெங்கே
　　அறிந்தெனக்கு யின்னதென யுரைசெய்வீரே. (3)

இன்னவகை யீசரவர் கேட்கும்போது
　　எல்லோரும் வாய்மூடி யிருந்தாரப்போ
சொன்னவகை தனையறிந்து மார்க்கண்டேயன்
　　சொல்லுவான் குழந்தையவன் கலகலென்ன
அன்னைதனை முகம்பார்த்து மாலைநோக்கி
　　அரிகரி யீசர்மொழிக் குறைநீர்சொல்வீர்
பின்னைவகை யாருரைப்பார் மாயைமூர்த்தி
　　பேசாம லிருந்துவிட்டா லொழிவாரெங்கே (4)

எங்கையென்று மார்க்கண்ட னெடுத்துச்சொல்ல
　　என்னசொல்வா ரேகவெளிச் சிவனைநோக்கி
கங்கைதனைப் பூண்டோனே கடவுளோனே
　　காரணமே பூரணமே கண்மணியின்மனே
சங்கையினி யேதறிவேன் மகுடச்சோதி
　　சந்திரனைப் பூண்டிருந்து தவம்பெற்றோனே
மங்கையிடப் பாகம்வைத்த மகுடத்தோனே
　　மகாமுனிகள் ரிஷிகள்சித்தர் அறிவார்காணே. (5).

அறிவார்கள் ரிஷிகள்சித்தர் முனிவோரையா
　　ஆரகாா அதுசுருக்கோ ளாரென்றாக்கால்
பொறியாகப் புசுண்டமுனி சொல்வாரையா
　　போயழைக்கக் கோளாறு வசிஷ்டராகும்
நெறியாக இவ்வகைதா னறிவேனையா
　　நிலைத்தமொழி புசுண்டரல்லால் மற்றோர்சொல்லார்
புரிவாரு மிவ்வளவென் றுரைத்தார்மாயன்
　　பொருள்ஞானக் கடவுளப்போ மகிழ்ச்சிபூண்டார். (6)

மகிழ்ச்சியுடன் மார்க்கண்டா வாராய்கண்ணே
வரலாறு நீயெனமா யறிவாய்சொல்லாய்
சாட்சியுடன் கருதிப்பார் யுகங்கள்தோறும்
சூட்சமிந்த மாலோன்றன் வயிற்றிற்சேர்வேன்
அகட்சியுடன் ஆலிலைமே லிருப்பானையா
அப்போது இவரிடத்தி லெல்லாஞாயம்
இகழ்ச்சியுட னிவர்க்குப்பின் னெவரோகாணேன்
இவ்வார்த்தை நானறிவே னவரைக்கேளீர். (௭)

கேளுமென்றான் மார்க்கண்டன் சிவன்தானப்போ
கிருபையுட னிவ்வளவு மறியாயோடா
ஆளுகின்ற யீசனுமா மறியோமிந்த
அருமைதனை யேயறிந்தா யருமைப்பிள்ளாய்
காளகண்டர் மாயோனைச் சொல்லீரென்றார்
கருவேது நீயறிந்த வாறுமேது
பாளுகின்ற முப்பாழுந் தாண்டிநின்ற
பாஞான சின்மயமின் பகர்ந்திடீரே. (௮)

பரமான பரமகயி லாசவாசா
பார்த்திருப்போ மாலிலைமேற் பள்ளியாகி
தாமான புசண்டமுனி யந்தவேளை
சக்கரத்தைப் பிரளொட்டார் தவத்தினாலே
தாமாக வெவ்வாறு திரும்பப்போவார்
சூட்சமதை நாமறிவோம் பின்னேதோதான்
வாமான வாமளித்த ஞானவாழ்வே
வசிஷ்டர்போ யழைத்துவரத் தகுமென்றாரே. (௯)

தகுமென்ற வார்த்தைதனை யறிந்துயீசர்
தவமான வசிஷ்டரேநீர் புசண்டர்ஜாகை
அகமகிழ வங்கேகி யவர்க்குரைத்து
அவரையிங்கு சபைக்கழைத்து வருவாயென்ன
ஜெகமான ஜெகமுழுது மாண்டஜோதி
திருவடிக்கே நமஸ்கரித்துத் திரும்பினார்பின்
உகமானந் தனையறிந்தும் அரனார்சொன்ன (௰)
உளவுகண்டார் புசண்டரெனுங் காகந்தானே

காகமென்ற வேஷமதாய் விருட்சமீதிற்
காத்திருந்தார் வசிஷ்டர்யாக் கண்டார்நாதன்
ஏகமதா யொட்டான வசிஷ்டரேநீர்
எங்குவந்தீர் வாருமென்று இடமுமீயத்
தாகமுடன் யிசனும்மை யழைக்கச்சொன்னார்
சங்கதியைத் தங்களிடஞ் சாற்றவந்தேன்
பாகமுடன் எட்டான விபரந்தன்னைப்
பார்த்துமெய்ஞ் ஞானபொரு ளருள்பெற்றாரே. (11)

பெற்றீரோ வென்றுரைத்தீர் வசிஷ்டரேநீர்
பிறந்திறந்து எட்டுநாங்காற் பிறந்துவந்தீர்
சத்தான சத்துகளு மடங்குங்காலம்
சக்கரமுந் திரும்விட்டாற் சமையம்வேறாம்
சித்தான பஞ்சவர்க ளொடுங்கும்போது
சேரவே ரிஷிமுனிவர் சித்தரோடு
முத்தாகப் பஞ்செழுத்தி லொடுக்கமாவார்
முத்துமணிக் கொடியின்றாள் முளைத்திட்டீரே. (12)

முளைத்திட்ட ரித்தோடே யெட்டுவிசைவந்தீர்
முறையிட்ட ரிவ்வண்ணம் பெருமைபெற்றீர்
களைத்திட்டுப் போகாதீர் சொல்லக்கேளும்
கண்டமதில் விஷம்பூண்டார்க் கனுவவென்ன
இளைத்திட்டுப் போனக்கால் மறந்துபோவார்
இளர்நான்கு யுகந்தோறு மிந்தச்செய்கை
பிழைத்திட்டுப் போவமென்று லங்கேபோவோம்
பேய்பிடித்தோர் வார்த்தைசொல நீர்வந்தீரே. (18)

வந்தீரே வசிஷ்டரேநீ ரின்னங்கேளு
வளமைநான் சொல்லிவந்தேன் வேஷம்நீங்கி
இந்தமா மரக்கொம்பி லிருந்தேனிப்போ
இதுவேளை யெவ்வளவோ ஜனமோகானும்
அந்தமோ ஆதியோ யிரண்டுங்கா
ணவர்களெல்லாம் ரிஷியோகி சித்தரானார்
சந்தேக முமக்குரைக்கப் போகாதையா
சாமிக்கே சொல்லுமையா யிதோவந்தேனே; (14)

தேனே யென்றுரைத்த வாறுகொண்டு
வசிஷ்டருமே வாயுலக்கு சாயுர்பின்னி
தேனே முனிநாதா சதானந்தரும்
எழுந்திருந்து சனகாதி முனிவர்வந்தார்
நந்தனே யாயிருவருங் கடவுள்நாதா
மாமுனிவன் வாவெடுக்கப் புசுண்டர்சொல்வார்
தனைசெய் யிப்பாலே வந்தேனையா
சிவசிவா யிவ்வதென்று செப்பிடீரே. (15)

சப்புமென்ற புசுண்டமுனி முகத்தைநோக்கிச்
சிவன்மகிழ்ந்து யேதுமொழி செப்புவார்கேள்
காப்புமென்ற யுகமாறிப் பிறளுங்காலம்
குருமகி வர்யமெங்கே பார்த்தானெங்கே
யப்புமென்ற பஞ்சகனத் தேவரெங்கே
அயன்மாலும் சிவன்மூவ ரடக்குமெங்கே
ஒப்புமிந்த யுகமாறிப் பிறந்ததெங்கே
ஓகோகோ முனிநாதா வுரைசெய்வீரே. (16)

உரையென்றீ ருன்றனுக்குப் புத்திபோச்சு
உம்மோடே சேர்ந்தவர்க்கும் மதிகள்போச்சு
பரையென்றால் பரைநாடி யிலக்கமாட்டீர்
பரமசிவன் தானுமென்றும் பேரும்பெற்றீர்
இரையென்றால் வாய்திறந்த பட்சிபோலே
எல்லோரு மப்படிக்கே இறந்திட்டார்கள்
திரையென்ற வார்த்தைதனைச் சொன்னேனானால்
திசங்கொள்ளா தந்தரங்கம் திசங்கொள்ளாதே. (17)

கொள்ளாமற் போவதுண்டோ மவுனயோகி
கோடியிலே உனைப்போலே ரிஷியோகாணேன்
உள்ளாக ரிஷியொருவ ரில்லாவிட்டால்
யுகவார்த்தை யாருரைப்பார் யானுங்காணேன்
விள்ளாமற் றீராத முனிவர்கள் [illegible]
மெய்ஞ்ஞானப் பரமபுருக்ஷ அருள்[illegible]ஞ்ஞானி
தள்ளாமற் சபையிலுள்ளோ ரெல்லோர்கேட்கச்
சாற்றிடீர் முனிநாதா சாற்றீடீரே. (18)

சாற்றுகிறே னுள்ளபடி யுகங்கள்தோறும்
　　தமக்குவந்து சொல்லுவதே தவமாய்ப்போச்சு
மாற்றுகிறேன் சூக்ஷத்தின்முன் னுரைத்துப்போனேன்
　　வாதாட்ட மெனக்காச்சு இனியென்சொல்வேன்
சேற்றிலே நாட்டியதோர் கம்பம்போலத்
　　திரும்பினது போலாச்சு யுகங்கள்தோறும்
ஆற்றுகிறே னந்தமது அரும்போது
　　அரகரா அங்கோரம் நடக்கைகேளே. (19)

கேளப்பா நடந்ததைச் சிவமேயுண்மை
　　கெடியாகச் சக்கரங்கள் திரும்பும்போது
பாளப்பா நசநாதம் மவுனம்பாயும்
　　பாமான மவுனமது பரத்திற்சாடும்
ஏளப்பா அடுக்குகளும் இடிந்துவீழும்
　　இருந்தசதா சிவமோடி மணியில்மீளும்
ஊளப்பா யிதுகோளு மெவருஞ்சொல்வார்
　　ஓகோகோ அண்டமெல்லாங் கவிழ்ந்துபோமே. (20)

கவிழ்ந்துபோ மப்போது அடியேனங்கே
　　கருத்துவைத்துத் தியானமொரு தியானமுண்டு
தவிழ்ந்துபோங் காமைப்போ லிறுக்குவேன்யான்
　　சமையமதி லக்கினிபோல் லஸ்தம்பங்காணும்
சிவந்தவர்ணம் நிலவுரு வடர்விட்டோடும்
　　சிவசிவா அக்கினிபோற் கொழுந்துவீசும்
நவந்து ஆதி னருகேதான் சென்றுநிற்பேன்
　　நகாரமுத லஞ்செழுத்து வரக்காண்பேனே. (21)

காண்பேனே நகாரமது மகாரம்புக்கும்
　　கருத்தான மகாரமது சிகாரம்புக்கும்
தேண்பேனே சிகாரமது வகாரம்புக்கும்
　　சிவசிவா வகாரமது யகாரம்புக்கும்
கோண்பேனே யகாரமது சுடரிற்புக்கும்
　　குருவான சுடரோடி மணியிற்புக்கும்
நாண்பான பணியோடி பரத்திற்புக்கும்
　　நற்பரந்தான் சிவம்புக்குஞ் சிவத்தைக்கேளே. (22)

கேளப்பா சிவமோடி அண்டம்பாயும்
இருபையா வண்டமது திரும்பிப்பாயும்
கோளப்பா அண்டமது கம்பத்தூன் தான்
குருவான தசதீட்சை யொன்றுமாச்சு
மீளப்பா ஸ்தம்பமது விளங்குஞ்செய்கை
மேலுமில்லை கீழுமில்லை யானுங்கண்டேன்
ஆளப்பா நரைத்தார டேறுவோனே
அன்னாளோ வா யின்னாளோ அறிந்திலேனே. (23)

அறிந்திலே னென்றுரைத்த புசண்டமூர்த்தி
அரகரா உன்போலே முனியார்கண்டோன்
தெரிந்திலே னென்றுரைத்தால் மனங்கேளாது
சிவனையந்து கேட்கவும்நீ யொளிக்கவேண்டாம்
பொருந்திலேன் பூருவத்தில் நடந்தசெய்கை
பூரணத்தா னுள்ளபடி புகழ்ந்துசொல்லும்
பரிந்திலேன் மிகப்பரிந்து கேட்டேனையா
பழமுனியே கிழமுனியே பயன்சொல்வீரே. (24)

பழமுனிவ னென்றுரைத்தீர் கடவுளாரே
பருத்திபஸ் தம்பத்தைப் பலுங்ககேளும்
குழவுடனே ஸ்தம்பத்தில் யானும்போவேன்
கோகோகோ சக்கரமும் பிரண்டுபோகும்
தழும்பணியச் சாகரங்க ளங்குந்தாலுஞ்
சத்தசா காம்பிரண்டு யெங்குப்பாழாய்
அழகுடைய மாதொருத்தி ஸ்தம்பத்துள்ளாய்
அரகரா கண்ணாடி லீலைதானே. (25)

லீலைபோற் காணுமுகம் போலேகாணும்
நிலைபார்த்தால் புருடரைப்போற் றிருப்பிக்காணும்
ஆலைபோற் சுழன்றுடுங் கம்பத்துள்ளே
அரகரா சக்கரங்க ளாறுங்காணும்
வாலைபோற் காணுமையா பின்னேபார்த்தால்
மகத்தான அண்டமது கோர்வைகாணுஞ்
சேலைபோ லண்டமதிற் சிவந்தான்வீசும்
சிவத்திலே அரகரா பாழுங்காணே. (26)

பாத்திலே மணிபிறக்கும் மணியினுள்ளே
    பரப்நிற்குஞ் சுடர்வீசும் யிப்பாற்கேளு
நிரத்திலே சடமதனில் யகாரங்காணும்
    நிசஉயமாம் யகாரமதில் வகாரங்காணும்
வரத்திலே வகாரமதிற் சிகாரங்காணும்
    வரும்போலே சிகாரத்தில் மகாரங்காணும்
நரத்திலே மகாரத்தில் நகாரங்காணும்
    நன்றாகப் பூமியப்போ பிறந்ததன்றே. (2

பிறந்ததையா யிவ்வளவு மெங்கேயென்றால்
    பெண்ணொருத்தி தாணையிலே நின்றகோலம்
சுறந்தையயா யிவ்வளவும் அந்தமாது
    சூட்சமதே அல்லாது வேறொன்றில்லை
கறந்ததையா உலகமெல்லாம் காமப்பாலைக்
    காலடியிற் காக்கவைத்து சகலஜெந்தும்
இருந்ததையா யிவ்வளவுஞ் செய்தமாது
    எங்கையென்று னுன்னிடத்தி லிருந்தாள்கன்னி. (2

இடப்பாக மிருந்தவளு மிவளேமூலம்
    இருவருக்கும் நடுவான திவளேமூலம்
தொடக்காக நின்றவளு மிவளேமூலம்
    சூட்சமெல்லாங் கற்றுணர்ந்த திவளேமூலம்
அடக்காக அடக்கத்துங் கிவளேமூலம்
    ஐவருக்குங் குருமூல மாதிமூலம்
கடக்கோடிக் கொப்பதனில் நின்றாமூலம்
    கன்னியவள் சிறுவாலை கன்னிதானே. (2

கன்னியிவ ளொன்றுரைத்தார் புசண்டமூர்த்தி
    கர்த்தனைப்போ மனதுசந்தே கசங்கினார்பின்
மண்ணுள்ள தேவர்களும் பிறப்பித்திந்த
    மார்க்கத்தி லிருப்பதுவோ மவுனப்பெண்ணே
உன்னிதமா யுன்கருணை யெங்கேகாண்போம்
    ஓகோகோ ஐவருந்தான் வணங்கினார்கள்
கொன்னியவள் வாக்குரைக்காள் சிவமேகன்னி
    கொலுமுகத்தில் நால்வரும்போய் வணங்கினாரே. (30

ணங்கியவர் வாய்புதைத்து நின்றார்பின்னே
　　மாதுசவி யாவிலியோ வசவித்தார்கள்
ணங்கினார் தேவரொடு முனிவர்தாமும்
　　மற்றுமுள்ள தேவர்களும் ரிஷிகள்தாமும்
ணங்கினா ரஷ்டகெஜக் கிரியெட்டும்
　　வாரிதியுஞ் சேடனுமா லயனுமூவர்
ணங்கினார் மிகவணங்கித் தொழுதாரப்போ
　　வாலையவள் மெய்ஞ்ஞானம் அருளிய்வாளே. (31)


ருளிய்வாள் கம்பமணியை மாலைபூண்டாள்
　　அகரா இன்மயத்தின் நிறைபூதி
பொருளிவா ளவரவர்க்கு ளவல்சொல்லிப்
　　பொன்றாக பல்வுயிர்க்கைக் இடங்கள்வேறாய்த்
தெருளிவாள் சிவயோகந் தெளிவதற்குச்
　　செயனாறி யாகவல்லோ தெரியவேண்டித்
இருளிவாள் தாயான சிறியவாலை
　　சிவசிவா சூட்சம்பூ ருவந்தான்பாரே. (32)

பூருவத்தில் நடந்ததை இதுதானென்று
　　புகன்றுவிட்டுப் புசண்டருந்தான் பதிக்குச்சென்றார்
காரணத்தி லேவருந்தே விந்தஞானங்
　　கமபமணி வாலைகொலுக் கூட்டமப்பா
காரணத்தில் நின்றிலங்கும் மவுனவாலை
　　காட்டினார் சிவராஜ யோகஞ்சேரு
ஆரணத்தி பூரணத்தி யருள்மெய்ஞ்ஞானி
　　ஆதிசக்தி வேதமுத்தி யருள்சொல்வாளே. (33)

புசண்டர் ஞான காவியம் 33

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகாரிஷி
கோத்திரம் குருவமூப்பனார் மகன் வைகுண்ட மூப்பனாரிடமிருந்து
வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

திருச்சிற்றம்பலம்.

இருபத்திரண்டாவது

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

ஞானோபநிடதம் 32.

ஆதியெனை யீன்றகுரு பாதங்காப்பு
    அத்துவிதப் பிரணவத்தி னருளே காப்பு
நீதியா மருட ஞானம்பெற்ற
    நிர்மலமாஞ் சித்தருட பாதங்காப்பு
சோதியெனப் பாடிவைத்தேன் முப்பான்ரெண்டில்
    துரியாதீதப்பொருளைத் துலக்கமாகத்
நீதியில்லாக் குணமுண்டவ பிள்ளையாருல்
    சீவசைவைக்கியமது தெரியுந்தானே. (1)

தானென்ற குருவினுப தேசத்தாலே
    தனுகரண வித்தையெல்லாந் தவறுண்டேபோம்
வானென்ற அனுபவ ஞானமுண்டாம்
    மனுநெறி யோகத்தின் வாழ்க்கையெய்தும்
நானென்ற பிரபஞ்ச வுற்பத்திக்கு
    நாதாதி தக்யானம் நன்றாயெய்தும்
கோனென்ற கொங்கணவர் தனக்குச்சொன்ன
    குறிப்பான யோகமிதைக் கூர்ந்துபாரே. (2)

பாருநீ பிரமமிலை யார்தான்சொல்வார்
    பதமில்லை யாதெனினும் பயமில்லை
சேருமிந்தப் பிரமாணந் தானுணர்ந்து
    தெரிவிக்கப் படாதருளிற் சிவசொருபம்
ஊருகின்ற காலத்திர யங்களாலே
    உபாதிக்கப் பாதத்துவ முற்பத்திக்கும்
சாருமிந்த வுபாதான காரணத்தின்
    சம்பந்த மில்லாத சாட்சிதானே. (3)

சாட்சிசத்தா யதிதகுறை நீதமாகிச்
சட்கமனத் தாலறியத் தகாதுயாரும்
சாட்சியதே யேதுசா தனமுங் கள்ளிச்
சகலவிக்கிரி யாமியதாய்ச் சர்வபூத
சாட்சியினை யிவ்வளவவ் வளவாமென்று
தனைக்குறித்து நிர்ணயிக்கத் தகாதுயோகம்
சாட்சியதே ஞாதுர்ஞான ஞேயரூபஞ்
சத்தாதிபிர மாதிகளைத் தானேசொல்வாம். (௪)

சொல்லுமெனக் கேட்கெந்த மாறைக்காலுன்
தூலகா ரணப்பிராங் துரியாதிதம்
அல்லுமல்ல பகலுமல்ல நிஷ்களங்கம்
ஹம்சோகம் அசபாமந் திரத்தியானம்.
செல்லுமன னோநாசனென் றபிமானிக்கும்
சித்தவிர்த்தி நிரோதகமாம் யோகத்தாலே
வெல்லறிஞர் பலபோக விர்த்தியோகி
விவேகதியா றுதிகளே மேலாம்பிர்மம். (௫)

பிர்மகோத் ராதிஞானேந் திரியமைந்தும்
பேசுகர்ம வாக்காதியிந் திரியமைந்தும்
கர்மமெனுஞ் சத்தாதி விடயமைந்தும்
காறுதி நானகுபிரா ணுதியைந்தும்
வர்மமிவை யிருபத்தி னன்குங்கூடி
வருந்தூல சரீரவிராட் டெனவேசொல்லும்
தர்மவைத்து சாக்கிராபி மானிவிஸ்வன்
தனக்குவமை யாங்கிரியா சத்திதானே. (௬)

சத்தியுடன் ரசோகுணந்தான் நேத்திரத்தானம்
தனிப்போக மிதனோடே சார்ந்தவான்மா
வெற்றிபெறும் ஜீவாத்மா அகாராக்ஷ
விகார ஜீவனிதை விராட்டென்பார்கள்
வித்தையெனு மவித்தையிலே பிரதிவிம்பம்
விசாலமிந்தத் தூலசூக்ம விருத்தியாச்சு
தத்துவாசி வாக்கியசோ தனையினாலே
தான்கடந்து சூட்சமத்திற் சார்ந்துகொள்ளே. (௭)

கொள்ளடா ஞானேந்திரி யங்களைந்து
கூடினது கர்மேந்திரி யங்களைந்து
தள்ளடா பிராணாதி வாயுவைந்து
சார்வான மனப்புத்தி தானிரண்டு
விள்ளடா பதினேழு தத்துவங்கள்
விர்த்தியெனுஞ் சூட்சுமமா மிரண்யகர்ப்பத்
துள்ளவழி மானிசை தன்பனாகும்
சொற்பனா வத்தையெனச் சொல்லுநூலே.

நூலான சாத்மிகமா மகங்காரத்துள்
நுழைந்தவித்யா சக்தியல்லோ நுணுக்கமாச்சு
காலான கண்டமெனுந் தானத்துள்ளே
கலந்திருக்கும் போகமல்லோ விச்சாபோகம்
நாலான ஆன்மாவே அந்திரான்மா
ஞாயமிந்தப் படியறிந்தா லாகாரமாச்சு
தூலமெனுஞ் சூட்சுமத்தைக் கடந்துநின்று
சொல்லுகிறேன் காரணத்தின் சுயம்புதானே. (9)

தானவ்யாக் கிருதமெனுஞ் சரீரத்துக்குத்
தானமதே இருதயமா ஞானசத்தி
வானமதே அகங்காரம் வித்தையாகி
வருஞ்சுழுத்தி யபிமானி பிராக்யனாகும்
கோனிதற்கு ஆனந்த போகமாகுங்
கூடுகின்ற ஆன்மாவே பரமான்மாவாம்
கானிதற்கு பரமான்மா ஜீவனிந்தக்
காரணமே மகாரமெனக் கண்டுகொள்ளே. (10)

கொள்ளுமிந்தப் பொருள்தானே சத்துமல்ல
கூறுன வசத்துமல்ல கூர்மையல்ல
-ன்னுநிரா மயமல்ல சர்வமயமல்ல
உற்றுப்பார் மூன்றெழுத்தும் ஏகமாச்சு
ர்னுகின்ற பொருளல்ல தள்ளாதல்ல
தானப்பிர மயிக்யஞ்சத் தானமுத்தி
ர்னுமிந்தப் படிதானே வேதபாடம்
-விசாரணையாற் சமாதிசெய்ய விட்டுப்போமே. (11)

ட்டுப்போம் சமுசார வியாபாரங்கள்
விடயசுக இச்சைவைத்தால் விவேகம்போச்சு
ாட்டுவிட லாகாது ஞானமார்க்கம்
துரியமிலை நன்றாகத் தோன்றுமட்டும்
ட்டுகின்ற பரியந்தம் சுருதிலாக்கியந்
தெண்ணமெனுந் தியானத்தா லெய்தும்முத்தி
ட்டுகின்ற ஜீவாத்வமா தனக்கில்லாமற்
சமாதியுற்றால் நாமதுவே சாக்ஷாத்காரம். (12)

ாக்ஷாதி பிரமத்தால் பூர்வகர்மம்
தத்வாதி வாசனைகள் தானேபோகும்
க்ஷாதி பிராந்தியெனும் மாயாசத்தி
தொடராமற் சேர்வதுவே சொரூபஞானம்
க்ஷையிறைப் பிரமாண்டம் பிண்டண்டங்கள்
சிருஷ்டிமுதல் யாவற்றுந் தெரியும்நன்றாய்
ாக்ஷியென்னு மேகவஸ்து வொன்றல்லாமற்
காண்பதெல்லாம் வியர்த்தமெனக் கண்டுகொள்ளே. ()

கண்டுபார் மூடமெனு மஞ்ஞானிக்குக்
காணாது ஜீவான்மா பரமான்மாவும்
தொண்டுபண்ணி குருமுகத்தில் விசேடமாகச்
சுருதியெனும் வேதாந்த மப்பியாசித்து
உண்டுமனு பவஞானங் கிர்த்தியாகிர்த்தியம்
யோகிதனக் கேதேனுந் தேவையில்லை
விண்டுசொல்வோம் நதிகடக்க வோடமல்லால்
விஷயத்தாற் சாதனங்கள் வீணுமென்றே. (14)

வீணல்லோ சாதனப்பிர யோஜனங்கள்
மெய்ஞ்ஞான அபரோட்சம் வந்தபோது
வீணல்லோ வேதபா டத்தினிச்சை
வியோமபரி பூரணத்தில் மேவிநின்றால்
வீணல்லோ இருட்டறையிற் பொருளைக்காண
விளக்கதனை மறந்தவன்கை விடுதல்போலும்
வீணல்லோ தியானதா ரணைகளெல்லாம்
மெய்ப்பிரகா சிக்கும்வரை வேணுந்தானே. (15)

வேணுமென்றா லெள்ளுக்கு ளெண்ணெய்போலும்
வித்தினிடத் தடங்கிநின்ற விருட்சம்போலும்
காணுகின்ற பூவினுறை வாசம்போலும்
கன்றாவின் பாலினுள்ள நெய்யைப்போலும்
தோணுமயில் முட்டையின்மேல் வர்ணம்போலும்
தூலமதிற் சூட்சமந்தான் துலங்கிநிற்கும்
ஆணுவத்தாற் சாதனத்தை மறந்தாயானால்
அபரோட்ச ஞானமுத்தி யரிதுதானே. (16

அரிதில்லை பிரமவியா கிருதஜீவ
னைக்கியமெனுஞ் சத்யான மப்யாசித்துச்
சுருதியிற் றன்மனமாம் யானை தன்னைச்
சுருக்கிட்டுச் சிக்கெனவே துறையிற்கட்டிக்
குருவுரைத்த சிரவணத்தின் படியேநின்றால்
குதியாது பிரபஞ்ச கோட்டிற்றானும்
திரிவதில்லை திரிந்தாலும் மதமேறாது
ஜீவவை ராக்யமெனுந் திரமிதாமே, (17

திரமென்ன ஹடயோகம் மந்த்ராதிகம்
திருசியருள் யாதிகளை தியானமாகும்
சாரமென்ன சாக்ரசுத்தா வஸ்தைசூன்யம்
சாதனையே சமாதியெனத் தானேயாகும்
வரமென்ன விபரீத விர்த்திமார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்
அரமென்ன இதையறிந்தால் யோகியாவான்
அஞ்ஞான மவிடத்தி லேறுநாதென்னே. (18

என்னவே அஞ்ஞானி யுலகாசாரத்
திச்சையினாற் றர்மார்த்த வியாபாரங்கள்
முன்னமே செய்ததின்பின் மானமானால்
மோட்சமதற் கனுபவத்தின் மொழிகேட்பீரால்
வில்லமதா யாங்கார பஞ்சபூத
விடயவுபா திகளாலே மேவிக்கொண்டு
தன்னிமையா யிபெய்கசரீ சந்தோடொத்துச்
சுதாகாலம் போக்குவரத் தாகுந்தானே. (19)

தானித்தப் படியாகச் சிவமெல்லாம
சகசிரா ரத்மையைக் கண்டோர்கள்
ஏனித்தக் கூறிப்பே னத்திறமில்
இந்திரியாதி குணங்களெல்லாம் வியாபிக்கும்போர்
வானித்து போனபொலிக்கு வைராக்கியபோகும்
வர்த்திக்கு மஞ்ஞானம் மாற்றிவேண்டி
ஞானித்தப் பிரமவுபா சனையைப்பற்றி
நாட்டமாய்த்தேர் மனித்தையெல்லாம் நாசமாச்சே. (20)

ஆச்சப்பா எத்தனையோ கோடிகாலம்
அந்தந்தப் பிரளயத்துக் கருவாய்நின்றேன்
மூச்சப்பா வோடவில்லை பிரமநித்த
முத்திபெற்றேன் பிரமாண்ட முடிவிற்சென்றேன்
கூச்சப்பா வற்றபிர்ம சாக்ஷாத்காரம்
குருபாத மாகியகோ சாமாய்நின்றேன்
பேச்சப்பா சராசரங்க ளுதிக்கும்போது
பின்னுமந்தப் புசுண்டனெனப் பேர்கொண்டேனே. (21)

பேர்கொண்டேன் சொரூபசித்தி யனேகம்பெற்றேன்
பெரியோர்கள் தங்களுக்குப் பிரியமானேன்
மேர்கண்டே னாயிரத்தெட் டண்டங்கட
வீதியெல்லா மோர்நொடிக்குள் விரைந்துசென்றேன்
தார்கண்டேன் பிருதிவியின் கூறுகண்டேன்
சாத்திரவே தங்கள்வெகு சார்புங்கண்டேன்
ஊர்கண்டேன் மூவர்பிறப் பேழுங்கண்டேன்
ஓகோகோ விதுவெல்லாம் யோகத்தாட்டே. (22)

யோகத்தின் சாலம்ப நிராலம்பந்தான்
உரைத்தாரே பெரியோர்க ளிரண்டாமென்று
ஆகமத்தின் படியாலே சாலம்பந்தான்
அநித்தியமல்ல நித்தியமென் றறையலாகும்
சோகத்தைப் போக்கிவிடும் நிராலம்பந்தான்
சூன்யவழிப் பிராயமதே சொரூபமுத்தி
மோகசித்த விருத்திகளைச் சுத்தம்பண்ணி
மும்மூட்ச பிர்ம்மயிக்கிய மோட்சமென்னே. (23)

மோட்சசாம்பி ராச்சியத்தில் மனஞ்செல்லாத
மூடர்களுக் கபமோட்சம் மொழியலாகா
சூட்சமறிந் தாலவனுங் குருசந்தானம்
சொரூபலட்ச ணத்தெரியச் சொல்லலாகும்
தாட்சியில்லை சாதனை சதுட்டயத்திற்
சட்சேநத்தி யாகாதா நிதமாகும்
மூச்சலையப் படுவதல்லோ பிரமநிட்டை
முலைவிந்து களாநீத மொழியலாமே. (24

மொழிவதிலே அகாரமெனும் பிரணவத்தின்
மோனபிரா ணதியபேத நாதமாக்கு
தெளியமிக்க ஓங்காரத் தொனிவிடாமற்
சிற்சகனத் தேயமாய்ச் சேர்க்கவேனும்
ஒளிதானே நிராலம்பம் நிர்விசேடம்
உத்கிருஷ்ட பரமபத வியபகாரஸ்தன்
வெளியோடே வெளிசேர்ந்தால் வஸ்துமாச்சு
விநோதசத்தி யாதியெலாம் விருத்தமாச்சே. (25

விருத்தமா மறுதியெனும் பிரார்த்வகர்மம்
விஷயாதி பிரபஞ்ச விஷமமெல்லாம்
ஒருத்தனை யோகியென்பா னவனுருடன்
உலகமெலாந் தானவ னுண்மையாகும்
நிறுத்தவென் றால் காசிகாக் கிரகமாண்மா
நிலைபுருவ மத்தியிலே நிஷ்டையாகிக்
கருத்தழிந்து நின்றவிடம் சாக்ஷாத்காரம்
கண்மூக்கு மத்தியிலே கண்டபாரே. (26

பார்ப்பதற்கு நீண்டதுவாய்க் குறுகிவட்டம்
பரிதிமதி யுதயமெனப் பளிங்காகாசம்
தாப்பதற்கு மூன்றுசுழி பின்னையிற்கும்
சாக்கிரத்தி னடையாளந் தாக்கிப்பாரு
சேர்ப்பதற்குச் சுழிமுனையென் றிதற்குநாமம்
திரிகோணக் குண்டலியே சிவசொரூபம்
காப்பதற்கு நடுநாடி யூடேசென்று
கால்நிறுத்திப் பிடரிவழி கண்ணைப்பாரே. (27

கண்ணான பிடரிமுது கோரோத்திரம்
காலூட்டிப் பார்த்தாலே தலைமேலாகும்
விண்ணான பெருவெளிக்கு ளிணக்கிற்றான்
விரோசனமாம் நிராலம்ப மெனத்தான் சொல்லும்
ஊண்ணான யோகமல்லோ இந்தவித்தை
உபதேசம் பெற்றவர்க்கே உண்மையாகும்
அண்ணாந்து பார்த்திருந்தால் வருமோ ஞானம் (28)
அசபாமந் திரத்யானம் அறைகிறேனே.

அறைகிறேன் அசபையெனும் பிராணன்மாவை
அகண்டபரா பரத்தினவன்னோ டைக்கியஞ்செய்ய
குறையில்லை ஓங்கார மூலவட்டக்
குண்டலியாய் நின்றிடத்திற் குறுகித்தான்
நிறைகிறேன் நாசிகா ரந்த்ரவாயு
நீங்காம லேகமாய் நிர்ணயித்துப்
பறைகிறே னட்சரசா தனமுந்தன்னிம் (29)
பந்தமற்ற மகாமோட்சப் பதிபெற்றேனே.


பதிபுருவத் தடிமுனைக்கீ ழண்ணாக்கெனும்
பவளநிறம் போன்றிருக்குந் திரிகோணந்தான்
அதிபெறுசின் முத்திரையுபஸ்த சகத்தியாலே
சுபாவசா தனையினால் மவுனமாச்சு
விதிவிதித பிராரத்துவ கர்மமேபோச்சு
விடயயோ கத்தினிச்சை விட்டுப்போச்சு
மதியெனுமோர் வாயுவது அமிர்தமாச்சு (30)
வஸ்துவேத காரணமா மகிமையாச்சே.

மகிமையென்ற யோகசா தனையினாலே
மகாகாச நிருவிகற்ப வாழ்க்கையாச்சு
அகமகமென் றனவத்தை நீக்கலாச்சு
அத்துவித பிரமசித்தா னந்தகாரம்
சகளாதி தங்கடந்து களாதீதத்தில்
சாதித்தேன் தன்மயமாய்ச் சார்ந்துபோச்சு
பகலிருளில் லாதவெளிக் கப்பாலாச்சு (31)
பந்தமற்ற மகாமோக்ஷ பதம்பெற்றேனே.

பெற்றதனைச் சொல்லிவிட்டேன் வடநூல்பாஷை
பிரித்துமுப்பத் திரண்டினிலே பிரமஞானம்
தத்துவத்தைச் சொல்லிவைத்தேன் யோகியானால்
சாதனைசெய் வானறிவான் சைதன்னியத்தில்
முத்தியடை வானதிலே நிர்த்தஞ்செய்வான்
முப்பூரட்டத் துவமறிந்த மூர்த்தியாவான்
நித்தியமெனு முபநிடதப் பொருள்தான்சொல்லும்
நிலவாத்தால் யோகநிஷ்டை நிறைந்துமுற்றே. (௩௨)

ஞண்டர் முமோருபநிடதம் ௩௨

முற்றிற்று.



ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சாலிமகாரிஷி
கோத்திரம் குருவமூப்பனார் குமாரர் மாமுண்டிமூப்பனாரிடமிருந்து
வாங்கியஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை

இருபத்திமூன்றுவது

புசுண்ட மகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

ஞானசூஸ்திரம் 19.

ன்னுமே உப்புக் கட்டின் பருவத்தைச் சொல்லக் கேளு
ன்னுமே சுர்ப்பா னென்ற மகைனு தேங்காய் மட்டும்
தென்னுமே அமுரி தானும் சிறந்தொரு படியே வார்த்து
ன்றுமே கலக்கிக் கிண்டி உருகவே ரவியில் வையே. (1)

வைத்ததோர் குளம்புக் குள்ளே மாட்டிற மருந்து கேளு
கைத்ததோர் உப்பு ரெண்டு கடியதோர் காரம் ரெண்டு
பைத்ததோர் காரத் தின்பின் பரிவுடன் சூடனூடு
றுத்ததோர் வகையொன் றுக்கு அரைப்பலம் பொடித்துப் போடே

போட்டதை யொன்றாய்க் கிண்டி புகழ்பெற ரவியில் வைத்து
மாட்டது அமுரி தானும் வளமதாய்ப் படிய தொன்று
சுட்டது வுலர்ந்த பின்பு மீரஞ்சு தரமே வார்த்து
கூட்டது மெழுகு போலே கொடுஞ் சில்லும் ரெண்டாயுஞ் செய்தே

செய்திடுஞ் சில்லுக் கொன்று சிறந்தொரு வோட்டில் வைத்துக்
கைத்திடுங் கட்டி யானுங் கல்லுப்புப் பதிப்பா யப்பா
வைத்திடு மேலே நீயும் மறுசில்லுப் போட்டு மூடி
தைத்திடும் சீலை சுத்தி தனிப்புடம் போட்டிடாயே. (4)

போட்டபின் உப்பை வாங்கிப் புகழ்பெற வுருக்கிப் பாரு
ஆட்டபின் தெரிந்து தானுல் அப்பனே நீதான் கேளு
கூட்டிபின் வில்லை ரெண்டும் கோரோ அமுரி யாலே
தாட்டிபின் வில்லை செய்து தனியுப்பு வைத்துப் போடே. (5)

போடுநீ உப்புக் கட்டு போகாது இய்க்கே அப்பா
நீடுநீ உறுகும் உப்பு நீட்டின தெல்லாங் கொல்லும்

ஆகுமே வாதவித்தை அறுபத்து நாலுங் கட்டும்
தேடுமே யல்ல வென்றாற் சேர்ந்துடன் தேறி யேறே. (6)

ஏறலாம் உப்பைத் தொட்டு னவிநாசக யெவர்க்கு மப்பா
கூறலா மென்றான் தாயுங் கூறுமீத வென்று மீசன்
மாறலாம் பொன்னே யாகும் மகாசித்தி காய மாகும்
தேறலாம் போதங் கண்டு செயமாகுங் காணுங் காணே. (7)

காணிந்த உப்பு வேணைதக் கடியதோர் பமை தொன்று
பூணிந்த சாயங் கல்தான் புகழுறு காரங் கல்தான்
தோணிந்த வெண்டிக் கொக்கரி சுகம்படக் கெந்தி கூட்டி
ஆணிந்த முன்றைத் தானும் அமுரியா லரைத்து வையே. (8)

வைத்திட்ட வுப்பை முறை வைத்துநீ யுருக்கும் போது
கைத்திட்ட அரைத்த முன்று காட்டிநீ வாங்கு வாங்கு
தைத்திட்ட காரம் போடு தன்மையா மட்டுந் தானே
இத்திட்ட உப்புத் தானும் அடுத்திட மயனமாமே. (9)

மயனமா முப்புத் தன்னை வளர்த்திடு மால்தேவிக்கு
மயனமா முப்புத் தன்னை வளர்த்திடும் வீரத் துக்கு
மயனமா முப்புத் தன்னை வளர்த்திடு கெவுரி மேலே
மயனமா முப்புத் தன்னை வளர்த்துநீ சிலைக்குக் கட்டே. (10)

கட்டிய காலை யுந்தான் கனலிமேல வாட்டு வாட்டு
அட்டியா யுருகி யுன்னை அப்பனே மணியாய் நிற்கும்
இட்டியே யமைந்த மற்ற யிசைந்து பத்துஞ் சாகும்
மட்டியே கெவுரி யட்ட வளமிது சத்துக் காணே. (11)

காணென்ற உப்பு வெண்ண சவளிக்க நாகஞ் சாகும்
காணென்ற உப்பு வெண்ண கவளிக்க வீயஞ் சாகும்
காணென்ற உப்பு வெண்ண கவளிக்க மைந்தா கேளு
காணென்ற உப்பு வெண்ண கவளிக்கக் கண்ணாந் தானே. (12)

வேறு.

தானென்ற உப்பாகுங் குருவாற்கேளு
சாற்றுகிறேன் சூதத்தைத் தலைதாக்காமற்
தானென்ற உப்பொன்று சூதம்நாலும்
கட்டியப்பா முலைப்பாலிற் கலந்தூட்டு

வென்றவ நற் பூரணத்தை புரண்டையாக்கவே
உறவான வாசகத்தைக் கொள்ளுதி
வென்று வழிமிதிலே புடக்கைப்போட்டு
வாக்கியே புனைத்துமின் கைக்குழூதே. (13)

மலையிலே மிகைடபோத மணியோகத்து
நடுக்க வெங்கிக் கொருத்தானுங் கு
வலையிலே வெகுசனத்து மேலாகுதண்ணாம்
வெண்கலமும் மிதுக்கமும் நநிதுமாகும்
எலையிலே வெருகொடி வித்தையாகும்
பசபாச வெள்ளியிட்டால் வெள்ளியாகும்
பாதையிலே பொன்னிட்டால் பொன்னேயாகும்
பொற்கொடிக்கு ரசமித புகன்றவாறே. (14)

வேறு.

ரியே கட்ட வென்றால் ஒன்றிலு மாகா தப்பா
ரியே புளியுமுப்பும் உடனேதா கூடிக் கொல்லும
ரியே கொண்டு தானும் ஓடலா மாட்டலாகும்
ரியே முறைமூர்த்தி யுரைத்தவைந் தூறும் பாரே. (15)

நீ உப்பைக் கட்டப் பகருவேன் பாருன் னோர்க்காய்
நீ பிணங்கள் சுண்ணம் நேராக வெள்ளை கூட்டிக்
நீ வெள்ளை வார்த்துத் தாக்கியே அரைத்துக் கட்டி
பதி புதிப் போடு கொடுவெள்ளைச் சுண்ணமாமே. (16)

ணத்திற் பாதி தண்ணீர் கூட்டியே ஆதத் தன்னை
லுமே அரைத்துக் கொண்டு வகையான உப்புக் குள்ளே
ளிட்டுப் பிரட்டிக் காச்சி பாச்சியே குகையில் வைத்தே
ளிட்டு வைது தைது கண்விட்டு ஆடும் பாரே. (17)

க்கூடு பெரிக்குங் குப்பி வாய்தனைத் திறந்து பின்னை
டியே சலாகை போடும் பருவமாம் பாரு பாரு
க்கூடு சிகப்ப தானாற் சுந்நிலை அவிந்துப் போடு
த்திய செந்தூரத் தாற் புகட்டிய முறையைக் கேளே. (18)

றுநீ நவலோகத் திற் கெடிசகலம் சி
ழுநீ உபா சத்தின் மட்டுமை
ருநீ கல்லும் செங்கல் தாட்
றுநீ யினியென் சொல்வேன்

புசுண்டர் ஞான சூ



உ

குமரன் துணை.

இருபத்திநான்காவது

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

ஞானக்குறள் 16.

சின்மயத்தைப் போற்றிச் சிவராஜ யோகத்தில்
நன்மைபராபரைத்தை நாடு. (1)

அண்ட முடிமீதி லங்கி ரவிமதியைக்
கண்டுதரி சித்தாற் கதி. (2)

வலமிடமாய் நின்றமதிரவியை மாறி
விலகா தடியினிற்பின் வீடு. (3)

அறுபத்து நால்யோக மவ்வளவுந் தள்ளி
யொருபொழுது மூண்டுநிலை யோர். (4)

உலகமே மாயமென வுன்மனதிற் கண்டு
நலமாக நாதனடி நப்பு. (5)

சித்தர் பதினெண்மர் செய்கையிற் றேன்றுந
அத்தனரு ளும்புசுண்டன் யான். (6)

சொன்னே னறிந்து சுகமா யுலகோருக்
கென்னாளும் வாழ்கவென்றே யான். (7)

கண்ணுண் மணியாகிக் காரணமாய் நின்றான்
மண்ணுறு முயிர்பதியு மாறு. (8)

விண்டேனே ஞானம் வெளியாக முப்பத்தி
ரண்டி லறிவீர் நலம். (9)

நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாய் நிற்க
ஆத்துமத்தி லானந்த மகம். (10)

உலகி லறிந்தோ ரொருவரு மாவர்
பலதினை வைவிட்டுநீ பார். (11)

கண்டோருஞ் சொல்லார் கருத்தாற் பெரியோரைத்
தொண்டுசெய்து பெற்ற சுகம். (12)

ஆதியிற் சொன்னவுப ரண்ட மதையெடுத்து
மாதுசிவன் பூசைசெய்து வை. (13)

முப்பொருளைச் சுட்டு முழுதுமே நீருக்கித்
தப்பாம லுண்டுநிலை சார். (14)


யோகமுடன் கற்ப முறைத்தேனீ ரெட்டுக்
வேகமுடன் கண்டுணரு வீர். (15)

வாசிமுனை மைந்தா மருவு மிரமத்தில்
மோசம்வரா தென்குறள் முற்றும். (16)

புசுண்டர் ஞானக்குறள் 16

முற்றிற்று.

புசுண்டமகாரிஷி ஞான சாஸ்திரங்கள் நம்மிடம் அனேகம் நூலே ஏட்டுப்பிரதிகளிருக்கிறது அவைகளை அடுத்த பதிப்பில் அச்சிட்டு வெளியிடக்கூடும்.



சதுரகிரி மாஜூற்று இராமகிரி சாமியாரிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.



உ

கடவுள் துணை.

இருபத்தைத்தாவது

வகுளிநாதரென்னும்

மௌனச்சித்தர்ஞானம் 8

சொல்லவொண்ணு விராட்பிரம வஸ்துவாகி
சுத்தசின் மயமாகிச் சோதியாகி
அல்லலிலா அடியாகி நடுவுமாகி
அந்தமுமாய் அறிவுமாய் அகிலமாகி
வெல்லுதற்கு மரிதாகி யின்றுமாகி
விண்வெளியப்புவுமாய் விளங்குகின்ற
நல்லதொரு மவுனசித்தாய் நாடுகின்ற
நாதாந்த மேருமணியான் பாதங்காப்பே.

வணங்குதற்கு எட்டிரெண்டும் அறியவேணும்
மகத்தான வித்தைதவிறு சிவயோகிக்காம்
இணங்குதற்குக் குருவேணும் வில்லாவிட்டால்
என்றால்தா னின்றலா மெட்டுக்குள்ளே
குணங்காமற் சொல்லிவைத்தேன் அகாரபீசம்
கூடுகின்ற உகாரமல்லோ சத்திபீசம்
அணங்கிறைக்குத் தானுமாத்தாரிசனன்று
ஆச்சரியம் அகாரத்தி லடங்கிப்போச்சே. (1)

அடங்குகின்ற மகாரமல்லோ மவுனதிட்சை
ஆதாரங் கடந்துநின்ற தனுவுக்குக்கில்
சடந்தனைக்கொண் டாகாசங் கலந்துபோச்சு
தாரகப்பிர் மக்கியானம் சார்வதாச்சு
இடந்தேறிப் பார்த்தக்கா லிதுவேமுத்தி
தூலமதைப் பார்ப்பவர்க்குச் சொரூபமில்லை
குடந்தனக்கு வாகாசம் நிராகாசத்தைக்
கூட்டுகின்ற தன்மையல்லோ கொழுகிப்பாரே. (2)

பாப்பா என்மகனே மகாரகுட்சம்
பலித்தாக்கால் யோகியென்றே பகரலாகும்
சேரப்பா அகாரத்தில் உகாரங்கூட்டு
சிகாரத்தில் வகாரத்தைச் சேர்த்துப்போடு
நேரப்பா அரியெழுத்துக் குயிர்தான்சிவன்
நின்றவிடம் நகாரத்தில் மூலங்காணும்
பேரப்பா உகாரமென்ற பிரணவத்தாற்
பேச்சான சிவகலை பிறக்குந்தானே. (3)

தானென்ற மூலத்தில் வாசியாட்டம்
சதாசிவனார் பீடமதிற் புக்கித்தானால்
ஊனென்ற சடம்போச்சு கற்பூரதேகம்
உந்தனுக்கு வாச்சுதடா யீசன்வாழ்க்கை
நானென்ற ஆணவத்தை நீக்கவென்றால்
நகாரமென்ற நிமலனி வேரைத்தறு
பாவென்ற அகாரமுனை வடுதாக்கு
பனிரண்டுக் குள்ளடங்கிப் பதிவுள்ளாச்சே. (4)

உள்ளாகச் சிகாரவன்னி பத்திற்கொண்டால்
ஓடாமற் பிரணவம்வந் தொட்டிக்கொள்ளும்
தள்ளாமல் ஓரெழுத்து மகாரமப்பா
சகஸ்திரத்தெண் மலர்க்குள்ளாய்ச் சார்ந்துகொள்ளும்
விள்ளாதே மேற்கொண்டால் துவாதசாந்தம்
வெட்டவெளிக் குள்ளான ஞானமாச்சு
துள்ளாட்டம் ஏதுமில்லை புருவமையச்
சுழிக்குள்ளோ ரெழுத்தறிந்தால் துரியமாச்சே. (5)


துரியமென்ற வகாரத்தை மாறியேற்றச்
சுடரான சிகாரமதே சோதியாகும்
அரியெழுத்துக் குள்ளாக உருத்தாநிற்கும்
ஐந்தெழுத்தும் ஆறெழுத்தி லடங்கிநிற்கும்
எரியெழுத்தைப் பற்றிநின்றால் ஈஊஏஓம்
எட்டெழுத்தும் விட்டெழுத்துக் கேறுதையா
குறியிருக்கும் இடத்திலொரு வகையதாகக்
குற்றெழுத்தைப் போற்றிவிட்டாற் குருவிதாச்சே (6)

குருவிருக்கும் இடந்தானே புருவமையம்
கூடும்வகைக் கண்டானே சிவமதாச்சு
திருவிருக்கும் மவுனத்தி லிருந்தமார்க்கம்
செயல்காட்டிச் சொல்வதற்கே அறிவே ஆசான்
தருவிருக்குஞ் சொற்படிநீ நடந்துகொண்டால்
தானவனே தானாகித் தனியனாவான்
வுருவெடுத்தா லாவதென்ன பலனேவிந்து
ஒன்பதுநெற் பிரமாணம் ஊடுதாக்கே. (7)

தாக்கப்பா யிடக்கண்விலக் கண்ணுஞ்சேரும்
சச்சிதா னந்தவன்னி தானேயாகும்
மூக்கிமேலே ஓடாது அந்தம்பாரார்
முத்திவென்ன நெற்றிக்கண் உள்ளேநிற்கும்
நாக்கிமேலே பூரியரி யாதுண்டோ
நாவில்லொன்று மூவில்ரெண்டு ஞானயோகம்
பாக்கியங்கள் செய்வதற்கு மகாதீட்சை
பலிக்குமடா யிருநான்கு பாடல்முற்றே. (8)

மௌனச்சித்தர் ஞானம் 8

முற்றிற்று.



ஸ்ரீவில்லிபுத்தூர் வாழைக்குளம் ஒத்தத்தெரு வெங்கடாசலம் ஐயரவர்களிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பராசக்தி துணை.

இருபத்தியொருவது

வகுளிநாதரென்னும்

மௌனச் சித்தர் பாடல்.

குறவஞ்சிப்பா.

ஆதிபெருஞ் சோதிதனை யனுதினமும்பாடி
ஐயர்பதந் தேடிக்கொண் டருள்பெறவேபாடி
சோதியெனும் மனோன்மணியா ளருளதனைப்பெற்றுச்
சுகருடைய பாதமதை மனந்தனிலேயுற்று. (1)

ஆங்காரந் தனையடக்கி யருள்நிலையைநோக்கி
அரியபுல னைங்களெல்லாம் அறிவுமனதாக்கி
பாங்காகப் பெரியோர்கள் பாதமதுபணிவோம்
பத்தியொடு யோகநிஷ்டை நித்தியமும்புரிவோம். (2)

பேய்க்குணத்தைச் சுட்டலவோ பிரமநிலைகண்டோம்
பிரமபதி தான்கடந்து சுழிமுனையுட்கொண்டோம்
நாய்போலே அலையாமல் நாமிருந்தோம்தவசில்
நல்லதொரு ஆங்காரம் மடக்கிமிகப்பவுசாய். (3

வஞ்சகமாம் வாழ்வைநம்பிச் சஞ்சலங்களடையோம்
மகத்தான மகரிஷிகள் பதங்காணச்சடையோம்
பஞ்சமா பாதகரை யொருநாளும்பாரோம்
பாவவினை பற்றறுத்தோர் சிநேகிதங்கள்மறவோம். (4)

ஆயிரம்பேர் சித்தருடன் அனுதினமும்பாடி
ஆனந்தத் திருநடன மாடுவமேகூடி
தாயியுமை மனோன்மணியாள் எனக்குசொன்னசித்தைத்
தானறிந்து நடந்துகொள்வோம் பெரியோரையடுத்தே.

நிலையைக்கண்டு கொள்வதற்கு நினைந்துருகிவாடி
நிர்மலமா யையன்பதம் தினந்தினமுந்தேடி

கலையறிந்து வாசியையுங் கட்டுடனேபிடித்தோம்
கனலெழுப்பி மூலமதைச் சுகமுடனேபடித்தோம். (6)

ஊணுறக்கம் நீக்கியல்லோ யோகநிஷ்டைபுரிந்தோம்
உற்றாரைப் பற்றறுத்து மலைகுகையிலிருந்தோம்
காணுதற்கு மெட்டாத பரவெளியைக்கண்டோம்
கற்பமது சாப்பிட்டு உடல்வளர்த்துக்கொண்டோம். 7

தந்தைதாயார் சுற்றமொடு தளர்ந்துறவாடோம்
தவநிலையைப் பெற்றுணாச் செய்கைதனைத்தேடோம்
விந்தையுடன் ஞானமதை மேன்பாடாய்த்தெரிந்தோம்
மேலான பரவெளியி னருளதனையறிந்தோம். (8)

நாசிநுனி வழியதனில் நாட்டமதைத்தெரிந்தோம்
நல்லதொரு மூலவட்டம் சுழினையதையறிந்தோம்
வாசியேற்ற வகையறிந்து ஆசைகளையறுப்போம்
வையகத்தின் செய்கைதன்னை வழுவாமல்மறுப்போம்.

சத்திசக்ர பீடமேறிச் சுத்தவெளியைக்கண்டோம்
சகலமும்பரவெளியென்றெண்ணிமனமதனிற்கொண்டோம்
சித்திபெற்ற முத்தர்களை யெத்தினமுமறிவோம்
சிவகலை யின்னதென்று நாட்டமுடன்தெரிவோம். (10)

தொண்ணூற்றாறுதத்துவத்து மாத்தனங்கைக்கொண்டோம்
ஐயபர வெளிதனிலே ஐயர்பதங்கண்டோம்
விண்ணுளது இன்னதென்று அறிந்துகொண்டேன்யானே
மேலான பரவெளியி னொளிவைக்கண்டுதானே. (11)

நானென்ற ஆணவத்தை நயந்தறுத்துவிடுத்தேன்
நன்மைபெற்றுக் குகைதனிலே வாழ்ந்திருக்கவடுத்தேன்
தானென்ற செருவமதைத் தணிந்துவிட்டுவந்தோம்
தவமேதான் கெதியென்று சாவுழியிலுகந்தோம். (12)

மௌனச்சித்தர் பாடல் முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் வாழைக்குளம் வெங்கடாசலமைய ரவர்களி
டம்வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது

உ

திருச்சிற்றம்பலம்.

இருபத்தியேழாவது

சுத்தமகாமுனி திருவாய் மலர்ந்தருளிய

ஞானசூத்திரம் 14.

உண்மையெனும் பொருளாய்க்கண் மணியதாகி
யொளிவாகி மன்றும்மின் னொன்றுமாகி
ஒண்மையெனும் சித்தர்முத்தர்க் குரியதாகி
உற்றசுழி முனையில்முச் சுடருமாகி
வண்மையெனும் ஆதார மூலமாகி
மாசற்ற பிரணவத்தின் சொரூபமாகி
பெண்மையெனும் வடிவாகிச் சிவனாகிப்
போரான மௌனகுரு பாதங்காப்பே. (1)

அதிதான மார்க்கருக்கு ஞானமார்க்கம்
அறைகிறேன் நிறைநிறையா யோர்ந்துபாரு
சரியையென்ற படிகடந்தால் கிரியைசேர்க்கும்
தன்மையாய் கிரியைவிட்டால் யோகமாகும்
விரிவான யோகம்விட்டுச் சென்றால்ஞானம்
வினையமுடன் கண்டறிந்தால் முத்தியாகும்
தெரிவாய்நீ மெய்ஞ்ஞான போதந்தன்னைச்
செப்புகிறேன் புலனதனைப் பாத்திற்சேரே. (2)

சேரப்பா கருவான முடியின்மீது
சென்றேவெண் டாமரையின் பீடங்கண்டு
காரப்பா மனம்வேறு வழிசெல்லாமல்
கனகமய மானபூ ரணத்தைநாடி
ஆரப்பா காண்போர்க்கு மவுனமாச்சு
அடுத்திடவே யோகமது போதமாச்சு
நேரப்பா தலைமங்கும் வாசிசெல்லும்
நிலையான நாதவொலி கேட்குந்தானே. (3)

தானான வுருவல்லோ சத்திபாச்சு
　தனியான வம்பலந்தான் சொரூபமாச்சு
வேனான உருவருவு மற்றதாயி
　விளங்குகின்ற முச்சுடரின் ரூபமாகி
வானான பரையுடனே சதாசிவன்றான்
　வானவெளி தனில்வாட்டு வன்னிதோன்றி
தேனான அதிலிருந்து மனந்தான்தோன்றிச்
　சித்தான அண்டபிண்ட மறிவாய்பாரே. (4)

அறிவல்லோ மெய்ஞ்ஞானக் கருவதாகும்
　அஞ்ஞானம் தவிர்க்கவென்று லறிவுவேணும்
அறிவாலே சுழிமுனையைக் காணவேணும்
　அன்னையென்ற வாலைபதம் பணியவேணும்
அறிவாலே ரூபதத்தைப் போற்றவேணும்
　அண்டமுடி மீதிற்சென் றேறவேணும்
அறிவாலே சோதிதனை யறியவேணும்
　அதன்பின்பு முத்தியென்ற பேச்சுண்டாச்சே. (5)

உண்டான பூமிதான் பூசனுமாச்சு
　உற்றபுனல் விட்டுனுவென் றுறுதியாச்சு
பண்டான அக்கினிசங் காரனாச்சு
　பலமுடைய வாயுவல்லோ மயேசனாச்சு
கண்டான வெளிசதா சிவனுமாச்சு
　கருவான பூதமல்லோ வுருவதாச்சு
தொண்டான தொழில்புரிந்தால் பெரியோர்தானும்
　சூட்சமதைச் சொல்லுதற்கு அஞ்சுவாரே. (6)

அஞ்சுவா ரிதையறியா வீணர்தானும்
　அநேகசித் தறிவனென வெளிகிளம்பி
பஞ்சுபொதி யானதொந்தி வயிர்பிழைக்கப்
　பாசாங்கு மேசெய்து மயங்கச்செய்வான்
கெஞ்சுவான் பல்லெல்லாம் வெளியேதோணக்
　கெம்பீர மானசொல்லை நம்பிடாமல்
பிஞ்சுகா யாகிபழுங் கனிரசம்போல்
　பேதமுள்ள மனத்தனையு முருகச்செய்யே. (7)

செய்தபின்பு தனியாய்ப்பூ ரணத்தைப்பாரு
சேட்டைசெய்யுந் தத்துவங்க ளொடுக்கம்பாரு
உய்யவே மனந்தன்னை யறிவிற்சேரு
உற்றுநின்ற வொளிகாணத் திடந்தான்வேணும்
வையமிசை பிங்கலைதா னிரவியாகும்
மகத்தான விடகலையும் மதிதானாகும்
துய்யவோங் காரமதன் மத்திநிற்கும்
சுத்தகலை யிரண்டொன்றாய்ச் சேரும்போதே. (8)

போதப்பா விட்டகுறை விந்திறேலே
புகழுடைய ஞானம்வந் தெய்தும்பாரு
நீதப்பா மதியமுத மதனையுண்ணு
நேரான வழியைவிட்டால் வருத்தங்காணும்
ஓதப்பா விண்ணமுதம் விந்தாற்சிந்தும்
உற்றவிடங் கண்டாலே யிட்டமப்பா
சேதமதாய்ப் போங்கவிட்டா லொன்றுமில்லை
திடமாகக் கண்டுண்டு தெளிந்துபாரே. (9)

பாரப்பா மனந்தானே யறிவிற்கூடப்
பஞ்சபூ தங்களுந் தெளிக்கும்பாரு
சீரப்பா பொய்யைவிட்டு மெய்யைப்பற்றச்
செங்கதிரோன் மதிகோடி யொளியுமாகும்
நேரப்பா சொல்நிலையும் நினைப்புமற்று
நிலையான வமுதமது மதியில்வீழும்
சேரப்பா மாளாத வழியிற்சேர்க்குந்
தியங்காதே பூரணத்தைக் கண்டுசெல்லே. (10)

செல்லப்பா வுரைக்கவொண்ணாச் சொரூபமாகிச்
சுத்தமொடு மவுனமா யரூபமாகி
சொல்லப்பா பகலிரவு மற்றதாகித்
துரியாதீ தத்தினிலே நடனமாகி
வல்லதொரு பரையுடனே பானுமாகி
மகத்தான நிர்க்குணமாய் நின்றசத்தி
நில்லப்பா சதாசிவன்றா னுலகமாச்சு
நேரான கருக்குருவைப் பொருந்திப்பாரே. (11)

பொருதியதோர் மேகநாதக் குளிகைதன்னைப்
புகழ்ச்சியுட னேவுரைப்பேன் பெரியோர்முன்பு
கருதியதோர் வெண்காரம் சாதிலிங்கம்
கனமான சிவதைவேர் வசம்புசுக்கு
நிருதியதோர் இந்துப்பு வாய்விளங்கம்
நேரான ஓமமொடு பெருங்காயந்தான்
விருதியதோர் காட்டாமணக்கன்வேரும்
வினையமுடன் றானெடுப்பாய்பலமொன்றாமே. (12)

பலமொன்றாய்ப் பார்த்தெடுத்துக் கல்வத்திட்டுப்
பண்பான மைபோல அரைத்தெடுத்துப்
பெலமான சிரக்கிடைவேர் வாளந்தூக்கிப்
பிரியமுடன் சம்பளத்தின் சாற்றிலே
கலனைக விடாமலேநன் றாயாட்டிக்
கண்ணிலிடும் மைபோல வானபின்பு
நலமாக வழித்தெடுத்துக் குன்றியைப்போல்
நயனமென வுருட்டியொரு குழலில்வையே. (13)

குழலில்வைத் தாதிபரை தியானஞ்செய்து
குறிப்பறிந்து குளிகையொன் றிரண்டளிக்க
விழலான குன்மமொடு குளிர்சுரங்கள்
விதியயிற்றி லேயிருக்கு மிரைகள்யாதும்
உழலான பித்தநீர் சோகைப்பாண்டு
உற்றவித சுயரோகம் வயிர்வலித்தல்
தழலான அசீரணம்பல் கனத்தநோயைத்
தப்பாமல் நீக்கிவிடுந் தனித்துப்பாரே. (14)

ஞானமுனிவர் ஞான சூஸ்திரம் 14 முற்றிற்று.

மூன்றாம் பாகம்

சம்பூரணம்.

மதுரை திண்டுக்கல்ரோட் சிவராஜயோகி பங்காருசாமியார் அவர்கள் குமாரர் சாமியார் குருசாமிநாயுடு அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.